# மன ஊஞ்சல்

மலரன்னை



# மன ஊஞ்சல்

மலரன்னை

மன ஊஞ்சல் (நாவல்)/ மலரன்னை/ முதற்பதிப்பு: மார்கழி 2022/ ©மலரன்னை/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 188/ விலை: 800.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Mana Oonjal (Novel) / Malaranai/ First Edition: December 2022/ ©Malaranai/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 188/Price: 800.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-624-5881-57-4

ஜீவநதி வெளியீடு - 237

# என்னுரை

வாசக நேயர்களுக்கு வணக்கம். புனைவிலக்கியப் பணியின் மூலம் என்னால் எழுத்துருவாக்கம் செய்யப்பட்டு வெளிவரும் “மன ஊஞ்சல்” எனும் இந்நாவல் எனது பதின்மூன்றாவது வெளியீடும் ஐந்தாவது நாவலுமாகும். இந்த நாவலை நான் எழுதி முடிப்பதற்கு ஏறத்தாழ ஐந்து வருடங்கள் சென்றிருக்கின்றன. எத்தனையோ தடங்கல்களை எதிர்கொண்டு இந்நாவல் உருவாகியிருக்கிறது. எனினும் இதனை உங்கள் முன் சமர்ப்பிக்கும் இத்தருணத்தில் என் மனதில் தோன்றும் நிறைவுடன் கூடிய மகிழ்ச்சி அளப்பரியது.

குயிலினி என்ற பெண்ணின் வாழ்க்கையை மையமாக வைத்து புனையப்பட்டது இந்நாவல்.

குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிய தந்தை, குடும்பச் சுமையைத் தாங்க முடியாமல் தத்தளிக்கும் தாய், வறுமை நிலையை சகிக்க முடியாத தங்கை என பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் வாழும் குயிலினி, வறுமையிலிருந்து மீண்டெழுந்து தன் குடும்பத்தை உய்ய வைக்கும் மனப்பக்குவம் இன்றைய இளம் பராயத்தினருக்கு ஒரு முன் உதாரணமாக அமையும் என்பது எனது எதிர்பார்ப்பு.

இந்நாவலில் சித்திரிக்கப்படும் பெண் பாத்திரங்கள் அத்தனையும் வெவ்வேறு குணவியல்புகளைக் கொண்டவர்களாய் இருப்பதனால், அவர்களது செயற்பாடுகள் சமூகத்துக்கு நேர்மறை யாகவோ அல்லது எதிர்மறையாகவோ எடுத்துக்காட்டாக அமையு மென்பதில் சந்தேகமில்லை.

இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்தாலும், அறியாப் பருவத்தில் அவளது உள்ளத்தில் ஆழவேரூன்றிய காதல், கற்பனை

களை மட்டும் வளர்த்து விட்டதே தவிர காலம் செய்த கோலம் அவளைத் தனிமரமாக்கி விட்டது.

பணமும் பதவியும் பாசத்தைக் குறுக்கறுத்து பண்பில்லா மனிதமனத்தை எப்படியெல்லாம் நேர்மாறாக சிந்தித்து செயற்பட வைக்கும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதன் விளைவுதான் நிறைவேறாத காதலால் எதிர்த்திசையில் பயணித்தாலும் கதாநாயகனால் தனது காதலியின் நெஞ்சத்து ஊஞ்சலில் நிம்மதி யாகப்பள்ளி கொள்ள முடிகிறது.

புள்ளிகள் அமைத்தாயிற்று. இனி அவற்றை இணைத்து பக்கத்தைப் புரட்ட வேண்டியது உங்களது பொறுப்பு.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்நாவலை அச்சமைத்து, அட்டைப்படத்தினையும் அழகுற வடிவமைத்த மைந்தன் பரணீதரனுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி

திருமதி.அற்புதராணி காசிலிங்கம்
991, இராஜவீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

# மன ஊஞ்சல்

முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கு ......

அதிகாலை வேளையில் முருகன் சன்னிதியிலிருந்து புறப்பட்ட அந்தப் பாடல் வரிகள் இருளைக் கிழித்துக் கொண்டே அந்தக் கிராமத்து வாழ் மக்களைத் துயிலெழுப்புகிறது. இதமான குளிர்காற்றில் தழுவுதலால் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக் கிடந்த பரமசிவம் சட்டென்று கண்விழித்து சுற்றாடலை ஒரு தரம் நோட்டம் விடுகிறார். அவரையறியாமலே வாய் சிவ சிவ என இறைநாமத்தை உச்சரிக்கிறது.

சேவல் கூவுவதை அவதானித்தவர் தனது சகதர்மினியை அழைக்கிறார்.

“இஞ்சாரும் செல்லம் கோழி கூவீட்டுது. விடிஞ்சு போச்சுது எழும்புமன்.”

“இந்த மனுசன் கண்முளிச்சாக் காணும். மற்றவையை நித்திரை கொள்ள விடாது உடன எழுப்பிப்போடும்.”

வாய்க்குள் முணுமுணுத்தவாறு எழும்பியவள் படுக்கையைச் சுருட்டி வைத்து விட்டு வெளியே வந்தாள். பூமி மாதா இருட்போர்வையை மெது மெதுவாக விலத்திக்கொண்டிருந்தாள்.

“ஏனப்பாஅவசரப்பட்டு இப்ப என்னை எழுப்பின நீங்கள் இன்னும் சரியாய் விடியேல்ல.”.

கணவனை அலுத்துக் கொண்டாள்

என்ன ... இன்னும் விடியேல்லையோ.. அங்கை பாரும் கிழக்கால வானம்சிவந்து கொண்டு வருகுது.

சொல்லிக்கொண்டே வாயில் புகையும் சுருட்டுடன் அவர் தனது காலைக்கடனை முடிக்கச்சென்றார்.

“உண்மையில இந்த மனுசனுக்கு ஏதோ பிடிச்சுத்தான் இருக்குது” புறுபுறுத்தவாறே செல்லம் கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

அவளும் முகம் கழுவி வர பொழுதும் பொல பொலவென விடிந்து கொண்டிருந்தது.

திருநீற்றை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டவள் மனமுருகி

இறைவனை வேண்டிக்கொண்டாள்.

"தெய்வமே இந்தப் பெட்டைக் குஞ்சுகள் மூன்றையும் நான் என்னென்று வளர்த்து ஆளாக்கப்போறன். இந்த மனுசனுக்கோ ஒருவித மான பொறுப்பும் இல்லாமல் திரியுது. ஆண்டவனே நீ தான் எங்களை காப்பாற்ற வேணும்."

மனமுருகிப் பிராத்தித்தவளின் கண்களில் கண்ணீர் கோடிட்டது. கைகளால் கண்களைத் துடைத்தவாறு அடுப்படிக்குள் நுழைந்தாள்.

அங்கே... அவளது மூத்த மகள் குயிலினி அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள். "அம்மா நீங்கள் போய் பாலைக் கறந்து கொண்டு வாங்கோ. நான் பாத்திரங்களை கழுவி வைக்கிறன்."

மகளின் பொறுப்பான குணம் கண்டு அவளது நெஞ்சம் நெகிழ்ந்தது. புருஷன் தான் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டாலும் பிள்ளையாவது அனுசரணையாக நடந்து கொள்கிறாளே என்ற நிறைவுடன் பால் கறக்கப் போனாள்.

பாலைக் கறந்து கொண்டு திரும்பியபோது, குயிலி தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள். அடுப்பில் தண்ணீர் கொதித்து ஆவியாகிக் கொண்டி ருந்தது. செல்லம் தான் கொண்டு வந்த பாலை ஏற்கனவே குயிலி கழுவி வைத்திருந்த இருபோத்தல்களிலும் ஊற்றி வைத்து விட்டு மிகுதியைச் சட்டியில் ஊற்றிக் காய்ச்சினாள்.

காலையில் இரு வீடுகளுக்கு அரை அரைப் போத்தல் பாலும் மாலையிலும் இரு பகுதிக்குக் கொடுத்து அதில் வரும் காசு தான் பற்றாக்குறை நிவர்த்திக்குஅவளுக்கு பக்கபலமாக இருந்து வருகிறது.தவிர பரமசிவத்தார் தனது சம்பளத்தில் பாதி தொகையைத் தான் அவளுக்குக் காட்டுவார். மிகுதி அவரது தனிப்பட்ட செலவுகளுக்குப் போய்விடும்.

அம்மா கலந்து தந்த தேநீரை குடித்த குயிலி தான் சிறிது நேரம் படிக்கப் போவதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

"தங்கச்சியவையை ஒருக்கா எழுப்பிவிடு பிள்ளை..."

அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க அவள் தனது தங்கையரான மகிழினியையும் புகழினியையும் துயிலெழுப்பி விட்டாள்.

"மகிழ் புகழ் எழும்புங்கோ பள்ளிகூடத்துக்கு நேரம் போகுது"

கடும் பிரயத்தனத்தின் பின் அவர்களை எழுப்பி அனுப்பி விட்டு குயிலி படிக்கத்தொடங்கினாள். அன்றைய தினம் அவளது விஞ்ஞான ஆசிரியை வகுப்பில் பரீட்சை ஒன்று வைக்கப்போவதாக சொல்லி யிருந்தாள்.

அடுப்படியில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

"எந்த நாளும் புட்டையே அவிச்சுக் கொட்டினால்... மனிசன் என்னென்று சாப்பிடுறது."

இது அப்பாவின் வாதம்

"நீங்கள் உங்கட சம்பளத்தை முழுசாக் கொண்டந்து தந்தியெண்டால் நானும் வித விதமாய் தோசை, இட்டலி எண்டு வாய்க்கு இதமாய் செய்து தரலாம். ஒரு மனச்சாட்சி இல்லாமல் நீங்கள் அரைவாசிச் சம்பளத்தை அமுக்கிப் போட்டு மீதியை தந்தா... நான் என்ன செய்யிறது... என்னால செய்ய முடிஞ்சது இது தான்".

"வர வர உனக்கு வாய் நீண்டு போச்சுது. எதுக்கெடுத்தாலும் உந்தச்சாட்டு தான் சொல்லுறாய்".

அப்பா அம்மாவுடன் நீ நான் என்று கதைக்கத்தொடங்கினால் வாக்குவாதம் முற்றிப்போய்விட்டதென்பது அர்த்தம். குயிலி அவசரமாக எழுந்து ஓடினாள். அப்பாவை சமாதானப்படுத்தினாள்.

"சம்பளம் வந்த உடன அம்மா உளுத்தம்பருப்பு வாங்கி நீங்கள் கேட்கிறதைச் செய்து தருவா. இப்ப ... பேசாமல் சாப்பிடுங்கோ அப்பா."

சுமாதானப்படுத்திய மகளின் தலையை கோதி விட்டு தனது அனுசரணையைத் தெரிவித்தவர் மகள் எடுத்துக் கொடுத்த உணவுத் தட்டை வாங்கிக் கொண்டார். அப்பா சகஜநிலைக்குத் திரும்பிவிட்டதில் அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது. அத்துடன் படிப்பை நிறுத்திவிட்டு குளிப்பதற்குப் போனாள். அங்கு மகிழினியும் புகழினியும் கிணற்றடியில் நின்று தண்ணீரை ஒருவருக்கொருவர் எற்றி விளையாடிக்கொண்டிருந்தனர்.

"உங்கள் இரண்டு பேரையும் அப்பா தேடினவர்".

குயிலி சொன்னது தான் தாமதம் இருவரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். குயிலி கிணற்று நீரை அள்ளி தேகத்தில் ஊற்றினாள். சில்லென்ற நீர் பட்டதும் மேனி புல்லரித்தது. தொடர்ந்து அள்ளி ஊற்றவும் குளிர் தணிந்தது. பாடத்திலுள்ள சில சொற்பதங்களை மனனஞ் செய்தவாறே குளித்து முடித்தாள்.

"மாமி குயிலினி ஸ்கூலுக்குப் போட்டாவோ?"

அவளுடைய வகுப்பு மாணவி மாலாவின் குரல் கேட்டது.

"இல்லைப்பிள்ளை இப்ப தான் வெளிக்கிடுறா."

தொடந்து அம்மாவின் குரலும் காதில் விழுந்தது.

"இந்தப் பிசாசுகள் இரண்டுக்கும் தலை பின்னி விட்டதால தான் எனக்கு நேரம்போனது". தனது தலைமயிரை வாரிக்கொண்டே தங்கை மாரைத் திட்டினாள். மளமளவென இரண்டு வாய் பிட்டை அள்ளிப் போட்டுக் கொண்டு பாடசாலைக்குப் புறப்பட்டு விட்டாள். மாலாவும் அவளும் இணைந்து நடந்தனர்.

செல்லம் அடுப்படியைச் சாத்திவிட்டு பசுவையும் கன்றையும் மேய்வதற்காக அவிழ்த்துக் கட்டப் போனாள். அவளுடைய மனதில் பலதரப்பட்ட யோசனைகள் துளிர்விட்டுக் கொண்டிருந்தன.

***

செல்லம் என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படுகின்ற செல்வமலர் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது தந்தை ஒரு விவசாயி. எக்காலத்திலும் வீட்டில் நெல் நவதானியங்களுக்குக் குறை விராது. வருடம் முழுவதும் ஒன்று மாறி ஒன்றாக ஏதாவது பயிரை அறு வடை செய்து கொண்டேயிருப்பார் கனகலிங்கம். அதுதான் செல்லத்தின் அப்பா. அம்மாவும் அக்காவும் அறுவடையாகி வரும் தானியங்களை உரலில் இட்டுக்குற்றி பதப்படுத்தி விதவிதமாக உணவுவகைகளைத் தயாரித்து வைக்க அதை ரசித்து ருசிப்பதுதான் செல்லத்துக்குரிய பொழுது போக்காக அமைந்து விட்டது. சிட்டுக்குருவியாக செல்லம் அந்த வீட்டில் சிறகடித்தாள்.

அப்பா எள் அறுவடை செய்து சிறுகூடையில் போட்டு தாய் அறையில் இருக்கும் கோற்காலியில் வைத்துவிடுவார். கோற்காலியில் இருக்கும் பெரிய கூடையில் எப்போதும் நெல் இருந்து கொண்டே யிருக்கும். தேவை ஏற்படும் போது கோற்காலியில் ஏறிநின்று கடகத்தினுள் நெல்லை நிரப்பி எடுத்து வருவாள் சின்னக்கா. அம்மாவும் பெரியக்காவு மாக எள்ளை எடுத்து விளக்கி காயவைப்பார்கள்.நன்றாக காய்ந்தவுடன் பனங்கட்டியும் போட்டு இடித்து உருண்டைகளாக்கி மண் பானைக்குள் வைத்து மூடி வைப்பார்கள். பிறகென்ன... செல்லத்துக்கு சின்னப்பசி வந்துவிட்டால் எள்ளுருண்டை தான் ஈடுகொடுக்கும்.

நான்கு பெண்பிள்ளைகளைப் பெற்றுவிட்ட செல்லத்தின் அம்மாவுக்கோ..

ஆண்பிள்ளைக்கான சோட்டை இருக்கத்தான் செய்ததாம். அப்பாவும் அம்மாவுமாக கதிர்காமத்துக் கந்தனிடம் கால்நடையாகப் போய் வேண்டி வரம் கேட்டு வந்தார்களாம். அதன்பின் அம்மாவின் வயிற்றில் ஒரு கரு உருவாகி அது ஆண்பிள்ளையாகப் பிறந்ததாம். குமரனின் அருளால் கிடைத்த பிள்ளைக்கு குமரேசன் என்று பெயரிட்டார்களாம். மூன்று வயதானவுடன் அந்தப்பிள்ளையை கதிர்காமத்திற்குக் கூட்டி வந்து மொட்டை போடுவதாக நேர்த்தி வேறு வைத்திருந்தாளாம் அம்மா. திடீரென்று வந்த காய்ச்சலினால் குமரேசன் இறந்து போய்விட்டதாக அம்மா சொல்லக் கேள்வி. செல்லத்துக்கு பெரிய ஞாபகம் ஒன்றும் இல்லை. அம்மா தலையில் அடித்துக் கொண்டு அழுதகாட்சி சாடையாக நினைவில் இருக்கிறது. அவ்வளவு தான்.

அதன் பிறகு அம்மா கோவிலுக்குப் போவதில்லை திருநீறு அணிவதுமில்லை. கடவுள் இருக்கிறார் என்று சொன்னால் அவளே பத்திரகாளியாக மாறிவிடுவாள் தனக்குக் கொள்ளி போடப்பிள்ளை இல்லை என்று புலம்பிக் கொண்டிருப்பாள்.

தம்பி இல்லாததால் கடைக்குட்டி என்ற அந்தஸ்து செல்லத்துக்கு

கிடைத்துவிட்டது. அப்பாவானாலும் சரி மற்றவர்களும் சரி அவளை வேலை செய்ய விடமாட்டார்கள் அவர்களுடைய அரவணைப்பு அவளுக்கு சற்று பிடிவாத குணத்தை ஏற்படுத்திவிட்டதென்றே சொல்லலாம். சிறிது கண்ணைக் கசக்கினால் காணும் கேட்டதெல்லாம் கிடைத்து விடும்.

ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது செல்லம் பெரிய மனுஷியாகி விட்டாள். அத்தோடு பாடசாலைப் படிப்பும் நின்று விட்டது. அக்காமார் மூவருக்கும் திருமாணமாகி விட்டது. அப்பா தன் சேமிப்பின் பெரும் தொகையை அக்காமாருக்கு சீதனமாகக் கொடுத்து நல்ல வரன்களாகப் பார்த்து திருமணமும் செய்து வைத்தார். செல்லத்துக்கென மீதமாயிருந்தது அம்மாவின் தாலிக்கொடி மட்டும் தான். செல்லத்துக்கும் பதினெட்டு வயதாகிவிட்டது. அக்காமார் திருமணமாகிப் போனதன் பின் அம்மாவுக்கு உதவி செய்யவேண்டிய கட்டாயம் செல்லத்துக்கு ஏற் பட்டது. அவளுக்கோ சமையல் செய்யப் பிடிக்காது. அலுத்துக்கொண்டே அம்மாவுக்கு தொட்டாட்டு வேலைகளைச் செய்துகொடுப்பாள்.

“செல்லம் உனக்கும் கல்யாண வயசு வந்திட்டுது. எக்கணம் கலியாணம் செய்து புருஷன் வீட்டுக்குப் போனால் சமைக்கத் தெரிஞ்சிருக்க வேணுமெல்லே பிள்ளை. நீ சமைச்சுப் பழகவேணும்.”

அம்மா அறிவுரை சொல்லுவாள்

செல்லம் அவளது பேச்சை காதில் வாங்கிக் கொள்ளமாட்டாள். ஒருவாறு அப்பா அலைந்து திரிந்து ஒரு மாப்பிள்ளையைத் தேடிவிட்டார். மாப்பிள்ளைக்கு பெற்றோர் சகோதரங்கள் கிடையாதாம்.அது ஒன்றே செல்லத்துக்கு சற்று நிம்மதியைத் தந்தது. மாமியார் வீட்டிற்குப் போனால் சமையல் தெரியாது என்று சொல்ல முடியுமா?

ஆசிரியரான மாப்பிள்ளைக்கு சாவகச்சேரியில் முதுசமாக வீடு வளவு பனந்தோட்டம் எல்லாம் இருந்தது. அம்மா தனது இருபத்திஐந்து பவுண் தாலிக்கொடியை அழித்து செல்லத்துக்கு வேண்டிய நகைகளைச் செய்து கொடுத்தாள். ஒரு நல்ல நாளில் பரமசிவம் செல்லத்தின் கழுத்தில் தாலியைக் கட்டி அவளைத் தன் மனையாள் ஆக்கிக் கொண்டார்.

செல்லம் சாவகச்சேரிக்கு வந்து கணவனுடன் வாழத்தொடங் கினாள். ஆரம்பநாட்களில் செல்லம் சமைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டாள். பரமசிவம் ஒண்டிக்கட்டையாக வாழ்ந்தவர். ஆதலால் அவருக்கு சமையல் அத்துப்படியாக இருந்தது. மனைவிக்கு பக்குவங்களை இதமாகச் சொல்லிக் கொடுத்தார். செல்லமும் அதை லாவகமாக பிடித்துக் கொண்டாள்.

ஆனால் ஒரு விடயம் திருமணமாகும் போது பரமசிவம் தனக்கு குடிப்பழக்கம் அறவேகிடையாது என்று சொல்லி செல்லம் குடும்பத் தினரை ஏமாற்றி விட்டார். நாளடைவில் அது சிறிது சிறிதாக வெளிப்

*பட்டு... இப்போது குடிகாரன் என்ற நாமத்தையே விலைக்கு வாங்கி விட்டார்.*

*ஒரு சமயம் செல்லம் வீட்டிற்குப் போயிருந்த போது பெரியக்கா கேட்டாள். "என்னடி செல்லம் சாவகச்சேரி சட்டம்பியார் நல்லாய் குடிச்சுவெறிக்கிறார் எண்டு கேள்விப்பட்டன். மெய்தானே..."*

*"சீச்சீ... இல்லையக்கா. உனக்கு ஆர் சொன்னது?"*

*மழுப்பிவிட்டாள் செல்லம் தனக்குரிய தலையெழுத்தை எண்ணி ஏன் மற்றவர்கள் புழுங்க வேண்டும்.. என மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.*

*அம்மாவும் அப்பாவும் பெரியக்காவுக்கு சீதனம் கொடுத்த வீட்டில் தான் கடைசிவரையும் வாழ்ந்து கண்ணை மூடிக்கொண்டார்கள். சீவிய உரித்து வைத்து எழுதிக் கொடுத்திருந்ததால் அவர்கள் உயிரோடு இருக்கும் வரை அக்காவினால் அந்த வீட்டை விற்கமுடியவில்லை. அவர்களில் காலம் முடிந்ததும் அக்கா தனக்குத் தந்த வீட்டையும் வளவையும் விற்றுக் கொண்டு போய் கொழும்பில் வத்தளையில் ஒரு சொந்த வீடும் வாங்கி விட்டாள். சும்மா சொல்லக்கூடாது. அத்தானும் நல்ல உழைப்பாளி தான். தேவையில்லாத கெட்ட பழக்கம் எதுவும் கிடையாது ஒரு கம்பனியில் எழுதுவினைஞராக இருந்து கொண்டே உழைப்பால் முன்னேறியவர். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் தான். ஒன்று ஆண் மற்றது பெண் சௌகரியமான வாழ்க்கை பெரியக்காவுக்கு அமைந்து விட்டது.*

*சின்னக்காவின் கணவர் ஒரு மில் முதலாளி. நீர்கொழும்பில் சொந்த வீடு வளவுடன் ஐஸ்வரியமான வாழ்க்கை அவர்களுடையது. ஒரேஒரு பையன் தான் வாரிசு. அவளும் தனக்கு கொடுத்த தென்னந்தோட்டத்தை விற்றுக் கொண்டு போய் நீர்கொழும்பிலேயே முதலீடு செய்து விட்டாள்.*

*ஆசையக்காவின் பாடும் பரவாயில்லை. அவளது கணவர் ஓர் ஆசிரியர். அப்பா தான் செய்து வந்த வயற்காணியை அவளுக்கு தான் கொடுத்திருந்தார். அத்தான் ஆசிரியராக இருந்தாலும் காலா காலத்துக்கு வயலை விதைத்து அறுவடை செய்ய தவறுவதில்லை. அப்பாவின் காலத்தில் இருந்ததைப் போல் இல்லாவிட்டாலும் கால போகத்தில் நெல்லும் சிறுபோகத்தில் உழுந்து, பயறு, எள் என்று அறுவடை செய்து கொண்டிருந்தார்கள். அவள் மட்டும் தான் ஊரோடு இருக்கிறாள். செல்லம் அடிக்கடி ஆசையக்காவிடம் போய் வருவாள். அவளும் அரிசி தானியங்கள் எதுவானாலும் கை நிறைய தங்கைக்குக் கொடுத்து விடுவாள். அவளுடைய குடும்பமும் ஆண் ஒன்று பெண் ஒன்று என்ற வரையறைக்குள் நின்று கொண்டது.*

*அவளது எண்ணங்களை கலைத்தவாறு திடீரென கைக் கயிற்றை இழுத்துக் கொண்டு பசு ஓட கயிறு அவளது காலை சுற்றித் தடம் போட நிலைகுலைந்தவளாய் கீழே விழுந்தாள் செல்லம்...*

*"ஐயோ! அம்மா!"*

***

அவளது அவலக் குரலைக் கேட்க அங்கு எவருமில்லை. ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழுந்தாள் செல்லம். கயிறு உரஞ்சியதால் கணுக்காலடியில் சிறிது உராய்வுக் காயம். அதில் ஏற்பட்ட எரிச்சலை சிறிது நேரம் நின்று சமாளித்துக் கொண்டவளாய் பசுவையும் கன்றையும் தேடும் முயற்சியில் ஈடுபட்டாள்.

தூரத்தில் அவளது பசு பனம்பழம் ஒன்றை வாயினால் பிரித்து சுவைத்துக் கொண்டிருக்க கன்று தாயின் மடியில் இடித்து பாலைக் குடித்துக் கொண்டிருந்தது. மெதுவாகப்போய் பசுவைப் பிடித்து புல் இருக்குமிடமாய்ப் பார்த்துக் கட்டினாள். கன்றையும் பிறிதொரு இடத்தில் கட்டிவிட்டு வீட்டிக்குப் புறப்பட்டாள்.

பனங்காணிக்கை பனம்பழம் விழத்துவங்கீட்டுது. பிள்ளையள் பள்ளியால வர பனங்கொட்டையளை எடுத்து ஒரு இடத்தில குவிக்கச் சொல்லவேணும். மனதுக்குள் நினைத்துக் கொண்டு கிணற்றடியில் போய் கால்கழுவி விட்டு வந்தாள். தண்ணீர் பட்டதும் காலில் ஏற்பட்ட புண் எரியத் தொடங்கியது. வீட்டுக்குள் போய் வேப்பெண்ணெய்ப் போத்தலை எடுத்து வந்து திண்ணைக் குந்தில் ஆறஅமர இருந்து கொண்டவள் எண்ணெயைத் தொட்டுகாயத்திற்கு போட்டாள்.

“என்னெண அத்தாச்சி கறி வாங்கப் போகேல்லையே?” பரம சிவத்தாரின் ஒன்றுவிட்ட தங்கையான கமலம் கேட்டுக் கொண்டே வந்தாள்.

“இல்லையெண மச்சாள். முட்டை கிடக்குது. இண்டையான் பாட்டுக்குச் சமாளிப்பம்”.

மாதச் சம்பளத்திற்கான நாள் கிட்டிவிட்டது. செல்லத்தின் பாடு பணத்திற்குத் திண்டாட்டம் அதைப் புரிந்து கொள்ளாமல் கமலம் பேசினாள்.

“எக்கணம் கறி வேண்டிச் சமைக்காட்டி அண்ணர் எரிஞ்சு விழப் போறார். அதை விடு. அத்தாச்சி உதென்னென காலில எண்ணெய் தடவி வைச்சிருக்கிறாய்?”

“அதென மச்சாள் நான் பசு மாட்டை மேயக் கட்டக் கொண்டு போனநான். அது... கயித்தை இழுத்துக் கொண்டு ஓட காலில கயிறு சிக்கி உரஞ்சித் தள்ளிப் போட்டுது”.

“உது உரஞ்சல் காயம். லேசில மாறாது. காயத்தில தண்ணி கிண்ணி பட விட்டிடாதையெண அத்தாச்சி. கவனம் நான் கறி வேண்டப் போறன்.வரட்டே?”

சொல்லிக்கொண்டே புறப்பட்டுப் போனாள் கமலம்.

செல்லம் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

இண்டைக்கு இருபதாம் திகதி ஆச்சுது. இது வரைக்கும் ஒரு மாதிரி ஒப்பேத்திப்போட்டன். வீட்டில சாமான் சக்கட்டுகளும் எல்லாம் பத்தறுந்து போச்சுது. மனிசன் இண்டைக்கு சம்பளத்தோட வருகுதோ இல்லையோ முருகா நீ தான் காப்பாத்த வேணும்.

செல்லம் அடுப்பை மூட்டி உலையை வைத்தாள். கையிருப்பில் இருந்த அரிசியை உலையில் போட்டாள். அதே சமயம் கொதித்த உலைதண்ணீரில் சிறிதளவை எடுத்து தேநீர் போட்டுக் குடித்து கொதிக்கும் வயிற்றின் பசியை அடக்கிக் கொண்டாள்.

அரிசியும் குறைவாய் இருக்குது. புட்டுக்கிடந்தால் மதிய உணவுக்கு கலந்து சாப்பிடலாம் எண்ணியவள் பிட்டை எடுத்து மூடி வைத்தாள். கறிமுருங்கை இலையைப் பிடுங்கி வந்து உருவி அதைச் சுண்டலாக்கி முட்டையில் ஒரு குழம்பும் வைத்தாள்.

சமையலும் முடிய மகிழினியும் புகழினியும் பாடசாலை விட்டு வீடு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கால் முகம் அலம்பி வருவதற்குள் செல்லம் கஞ்சிகளனி எடுத்துப்போய் பசுவுக்கும் கன்றுக்கும் வைத்து விட்டு வந்துவிட்டாள். பிள்ளைகள் இருவரையும் அழைத்து உணவு பரிமாறி விட்டு களையாற திண்ணையில் வந்து சரிந்தவள் சிறிது கண்ணயர்ந்து போனாள்.

“அம்மா அம்மா . . . ”

பாடசாலையால் வந்த குயிலி அம்மாவை உலுப்பி எழுப்பினாள். செல்லம் திடுக்கிட்டு எழுந்தவள் மகளுக்கு உணவு பரிமாற குசினிக்குப் போனாள். பின்னால் வந்த குயிலி , காலையில் தான் மீதம் வைத்தவிட்டுப் போன உணவு அப்படியே இருப்பதைக் கண்டு கொதித்தெழுந்தாள்.

“இதென்னம்மா உங்கட வேலை. காலமை நீங்கள் சாப்பிடாமல் என்ன செய்த நீங்கள்? இப்பிடியே பசி கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும். வருத்தம் எல்லே வந்திடப்போகுது”.

கடிந்து கொண்ட மகளைச் சமாதானப்படுத்தினாள் செல்லம்.

“காலமையில பால்த்தேத்தண்ணி குடிக்கிறது . . . பசியே எடுக்கு தில்லையடி பிள்ளை.. ”

மனமறிந்து பொய் சொல்லி மகளைச் சமாளித்தாள்..

“என்னம்மா பானைக்குள்ள சோறு கொஞ்சம் தான் இருக்கு”

“அப்பாவுக்கு மேலால எடுத்து போட்டு வைச்சிட்டன் தங்கச்சியவை சாப்பிட்டிட்டினம். இனி. . . நீயும் நானும் தானே. ”

சொல்லிக்கொண்டே மகளுக்கு தட்டில் உணவை போட்டாள்

“அம்மா முழுச்சோற்றையும் எனக்குப் போட்டால் . . . உங்களுக்கு?”

“எனக்கு காலையான் புட்டும் கிடக்குது. கலந்து போட்டுச்

*சாப்பிடுவன். நீ சாப்பிடு பிள்ளை”.*

*“உதுக்குத் தான் நீங்கள் காலையில சாப்பிடாமல் வைச்சிருக்கிறியள் இப்ப எனக்கு விளங்கீட்டுது”.*

*“இல்லை பிள்ளை எனக்கு இண்டைக்குப் பசிக்கவே இல்லை.”.*

*“தடார்...”*

*சத்தம் கேட்டு வீட்டிலிருந்த அனைவரும் முற்றத்துக்கு விரைந்தனர் அங்கே... பரமசிவம் தள்ளாடியவாறு நின்றுகொண்டிருந்தார். அவரது சைக்கிள் தரையில் கிடந்தது. ஓடோடி வந்த குயிலி அப்பாவைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துப் போனாள். மகிழினியும் புகழினியும் வெருண்டு போய் நின்றுகொண்டிருந்தனர். செல்லம் விரக்தியின் விளிம்பில்...*

*“என்னையேன் பிடிக்கிறாய் விடன் எனக்கென்ன வெறியே”?*

*“சைக்கிளைப்போல.... நீங்களும் விழுந்திட்டியளென்றால்....” துணிந்து பதிலளித்தாள் குயிலி.*

*வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு உள்ளே சென்றார் பரமசிவம். செல்லமும் குயிலியும் அடுப்படிக்குள் காத்திருந்தனர்.*

*வெகுநேரம் கழிந்து நெற்றியில் திருநீற்றுக்குறியுடன் உள்ளே வந்தார் பரமசிவம். கீழே அமர்ந்து கொண்டவரிடம் தட்டை நீட்டினாள். செல்லம், தட்டைக்கையில் வாங்கியவர் சிறிது நேரம் அதனை உற்றுப்பார்த்தார்.*

*மௌனமாக செல்லமும் குயிலியும் அவரது செய்கையைப் பார்த்தவாறு இருந்தனர்.*

*“சீ... இந்த முட்டையை ஆர் தின்னுவான்?” சொல்லிக்கொண்டே அவிந்த முழுமுட்டையை எடுத்து வெளியே எறிந்தார். அங்கே... முற்றத்தில் நின்ற கோழி...அது தன்னுடைய முட்டை என்பதையும் பொருட்படுத்தாது வாயினால் கொத்திக்கொண்டு ஓடியது. மற்றைய கோழிகள் அதைக் கலைத்துக் கொண்டு ஓட கோழிகளுக்குள் ஒரே சண்டை.*

*மகிழினியும் புகழினியும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க தடார் என்ற சத்தத்துடன் சோற்று கோப்பை சுழன்று வந்து அவர்கள் பக்கத்தில் விழுந்தது. சோற்றுப்பருக்கைகள் நிலத்தில் சிதறிக் கிடந்தன. பரமசிவம் வெளியே வந்தார்.*

*இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த செல்லம் பத்திரகாளியாக மாறினாள்.*

*“நீயும் ஒரு மனிசனா...? பிள்ளையளுக்கு வஞ்சிச்சு நான் உனக்கு சாப்பாடு போட்டு வைக்க... அதை ஒருத்தரின்ரை வயித்திலயும் போக விடாமல்... மண்ணுக்கை வீசுறியே... நீயும் ஒரு சட்டம்பியா...”*

*சற்றும் இதனை எதிர்பபார்க்காத பரமசிவம் பரமசாதுவாகி படுக்கையில் போய் விழுந்தார். அவரது போதை தெளிந்தது.*

***

குயிலிக்கு இப்போதெல்லாம் மனம் ஒரு நிலையில் இல்லை. அப்பாவின் விட்டேத்தியான போக்கும் அம்மா படும் கஷ்டமும் எல்லாம் அவளது மனதில் வேரூன்றி ஆழ்ந்த வேதனையைத் தோற்றுவித்தது. ஆசையப்பாவும் ஒரு வாத்தியார் தானே. அவர் பாடசாலையால் வந்ததும் வயலுக்குப் போய் எத்தனை கரிசனையாகக் கவனித்து நெல் அறுவடை செய்கிறார். அவர்கள் வீட்டில்த்தான் எவ்வளவு மகிழ்ச்சி தாண்டவமாடு கிறது. எங்களுடைய அப்பா குடித்துவிட்டு வந்தால் வீட்டில் என்ன நடக்கப்போகிறதோ என எண்ணி எண்ணியே ஏங்கி காலத்தைக் கழிக்க வேண்டிருக்கிறது. அம்மா பாவம். சில வேளைகளில் சரியாகச் சாப்பிடுவது மில்லை. பிள்ளைகளுக்கு வேண்டும் என நினைத்து தனது சாப்பாட்டையே ஒதுக்கி வைக்கிறாள். அம்மா இல்லாவிட்டால் தான் இந்த அப்பாவோடு எங்களால் காலம் தள்ளவே முடியாது. இனிமேல் நான் அம்மாவைக் கூடிய அக்கறையோடு பார்த்துக் கொள்ளவேண்டும்.

டீரிங்! டிரிங்! டிரிங்! கேட்ட சைக்கிள் சத்தம் அவளது சிந்தனையைச் சிதைக்க வாசல்புறம் எட்டிப் பார்த்தாள்.

அட ரகு அத்தான் “வாங்கோவன் உள்ளுக்கு”

கமலம் மாமியின் மகன் சைக்கிளில் நின்றவாறே அழைத்தான்.

“குயிலி மாமி எங்கை?”

“ஏன் மாமியோடை தான் கதைப்பியளோ.எங்களோட கதைக்க மாட்டியளோ?”

குயிலியின் குதர்க்கமான கேள்வி அவனுக்க வியப்பைத் தந்தது.

“இல்லை... அம்மா பனங்காய்ப் பனியாரம் தந்து விட்டவ மாமி வீட்டில இல்லையே?”

“அம்மா பால் கறந்து கொண்டிருக்கிறா.”

“அப்ப... இந்தாரும்”

ஒரு பொறியை எடுத்து நீட்டியவாறே சொன்னான் ரகு.

“படலையடியில வைச்சுத் தந்தா... வாங்கமாட்டம். வீட்டக்குள்ள கொண்டு வந்து தந்தாத்தான் நாங்கள் வாங்குவமாக்கும்”

“வர வர... எமக்கு வாயாடிக் குணம் கூடிப் போச்சு”

சைக்கிளை படலையில் சாத்திவிட்டு இறங்கி உள்ளே வந்தான், ரகு. இதற்கிடையில் பாற் செம்புடன் வந்தாள், செல்லம்.

“ஏதோ சலனம் கேட்டுது. அததுான் ஆரெண்டு பாத்தநான். எங்கட ரகு. வா ராசா வா. என்ன சங்கதி?”

“ஒண்டுமில்ல மாமி. அம்மா இந்த பனியாரத்தை உ ட வீட்டில

குடத்து விடச் சொன்னவ. அதுதான் கொண்ட வந்ததநான்."

"குயிலி! தம்பிக்கு ஒரு கதிரை எடுத்துப்போடு பிள்ளை. இருக்கட்டம்"

சொல்லிக் கொண்டெ செல்லம் அடுப்படிக்குள் நுழைந்தாள். அதற்கிடையில் குயிலி வந்து˙அம்மா! நீங்கள் போய் அதட்தானுடன் கதைச்சுக் கொதண்டு இருங்கொ. நான் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்: என்ற கூறினாள்.

செல்லம் வந்து ரகுவுடன் கதைத்துக் கொண்டிருந்தான். ஒரு நொடியில் குயிலி கையில் தேநீருடன் அங்கு வந்தவள். அதை ரகுவிடம் நீட்ட முற்பட்டபோது, செல்லம் எழுந்து வந்து மகளிடம் வாங்கி ரகுவிடம் கொடுத்தாள்.

"குடி ராசா"

ரகு தேநீரை ருசித்துவிட்டு குயிலியைப் பாராட்டினான்.

"மாமி ! குயிலி நல்லாத்தான் தேத்தண்ணி போட்டிருக்கிறா. எல்லாம் உங்கட றெயினிங் தானோ..."

குயிலி வெட்கத்துடன் சிரித்தாள். அவளது மனதில் "சில்"லென ஒரு நெருடல்.

"பொம்பிளைப்பிள்ளை எல்லாம் பழகத்தானே வேணும்"

செல்லம் அடக்கத்துடன் கூறினாள்.

"எங்கை மாமாவைக் காணியல்ல"

ரகு மாமனாரைத் தேடினான்.

"உங்கை பின் விறாந்தையில காற்றுப் பிடிக்க படுத்திருக்கிறார். நித்திரையாக்கும். இல்லையெண்டால் இப்ப எழும்பி வந்திருப்பார்."

"சரி மாமி நான் போட்டு வாறன். தேத்தண்ணிக்கு தாங்க்ஸ்"

குயிலியைப் பார்த்துக் கூறி விட்டுப் புறப்பட்டான். என்றுமில்லாத வாறு குயிலிக்கு ரகு தன்னைப் பாராட்டியதும், நன்றி சொன்னதும் ஒருவித, கிளுகிளுப்பைத் தோற்றுவித்தது. உள்ளூர மகிழ்ந்து போன்ன. இதற்கிடையில் செல்லம் மகளுக்கு குரல் கொடுத்தாள்.

"என்னம்மா..."

"இவளவை மகீழம் புகழும் பனை வளவுக்கை விறகு பொறுக்கிக் கொண்டு வாறனெண்டு போனவளவை இன்னு் காணேல்ல. ஒருக்கா எட்டிப் பார் பிள்ளை!

குயிலினி பனை வளவை நோக்கி நடந்தாள்.

வளவுக்குள் மகிழினி புகழினியைக் காணவில்லை. குயிலி வளவு

முழுவதும் தேடினாள். வளவிற்குள் பனைகளின் கீழ் விறகுகள் விழுந்தது விழுந்தபடி கிடந்தது. தெற்குப்புற ஒழுங்கையிலிருந்து அவர்களது குரல்கள் கேட்டன. கிட்டப்போய் பார்த்தான். அவர்கள் இருவரும் ஒழுங்கையில் கோடு "கீறி றைட்டோ றோங்" விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர் மகிழினி பார்த்து நிற்க புகழினி கண்களை மூடியவாறு றைட்டோ என்று கேட்டுக்கொண்டே பாய்ந்துகொண்டு இருந்தாள். குயிலினிக்கு வந்த ஆத்திரத்தில் போனபோக்கில் முதலில் புகழினிக்கு தலையில் ஒரு குட்டு வைத்தாள். அவள் ஐயோ! ஏன்று வாய் திறப்பதற்குள் மகிழினிக்கும் ஒன்று வைத்தாள்.

"உங்கள் இரண்டு பேரையும் அம்மா என்னத்துக்கு அனுப்பினவா?"

"அக்கா! நாங்கள் கொஞ்ச நேரம் விளையாடிப்போட்டு விறகு பொறுக்க தான் இருந்தம்." மகிழினி சிணுங்கியவாறு சொன்னாள்.

மூவருமாக வளவிற்குள் சிதறிக் கிடந்த விறகுகளை பொறுக்கி அடுக்கிக்கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். குயிலி சொன்னாள்.

"வானம் இருண்டு கிடக்குது. மழை வந்தாலும் விறகை குசினித் தாழ்வாரத்தில வைப்பம்."

வைத்துவிட்டு எல்லோரும் முகம் கழுவ போனார்கள். பின் விறாந்தையில் அப்பாவைக் காணாத குயிலி அம்மாவிடம் கேட்டாள்.

"அம்மா! அப்பா எங்கே?"

"வேற எங்கே அவர் பின்னேரத் தாகம் தீர்க்கப் போயிருக்கிறார்."

"எக்கணம் இண்டைக்கு மனுசன் நிறை வெறியோட தான் வரும். வந்து... என்னென்ன பிரச்சனையை கிளப்பப் போகுதோ!...அப்பனே முருகா நீ தான் எனக்கு தஞ்சம்."

அம்மா சொல்லி அங்கலாய்த்தாள். நித்தம் நித்தம் போதையில் வந்து தகராறு பண்ணினால் யாரால் தான் பொறுத்து கொள்ள முடியும். குயிலினி தனக்குள் ஒரு முடிவு எடுத்து கொண்டாள். இனி அப்பாவோடு துணிந்து நேருக்கு நேர் கதைத்து விட வேண்டியது தான்.

இரவு வேளைகளில் வீட்டில் அப்பாவின் கூச்சலும் சண்டையும் விடிந்ததும் அயலவர்கள் அவர்களைப் பார்வையால் துளைக்கும் போது என்னவாய்க் கூசுகிறது உடம்பு. போதையில் மூழ்கி கிடக்கும் அப்பாவிற்கு இது எங்கே தெரியப் போகிறது?.

"நாய் கூட எம்மைத் துரத்தும் போது நாங்கள் ஓட ஓட விரட்டிக் கொண்டே இருக்குமாம். துணிந்து நின்று திரும்பிப் பார்த்தாலே அது பயந்து திரும்பி ஓடத் தொடங்கி விடுமாம். இன்றைக்கு நானும் இந்த பிரச் சனைக்கு ஒரு முடிவு எடுக்கத் தான் வேணும். அம்மா பாவம் பயந்து ஒடுங்கிப் போய் கிடப்பாள். ம்... இருந்தாலும் போதையில் இருக்கும்

போது நாங்கள் கூறுவது காதில் விழுமா? என்பதும் கேள்விக்குறிதான். ஏதற்கும் பொறுமையாய் இருந்து பொழுது விடிந்ததும் அப்பா சுயநினைவுடன் இருக்கும் போது தன்மையாய் புத்தி சொல்லி பார்த்து விடுவோம்" என்ற ஒரு தீர்க்கமான முடிவுடன் படிப்பதற்காகப் புத்தகத்தை எடுத்துப் புரட்டத் தொடங்கினாள்.

***

அன்று சனிக்கிழமை. மகிழினியும் புகழினியும் இன்னமும் படுக்கையால் எழும்பவில்லை. மற்றைய மூவரும் வழமைபோல் பொழுது புலர்ந்தும் எழும்பி தத்தம் வேலைகளைச் செய்யத் தொடங்கினர்.

அப்பா வேப்பம் குச்சினால் பல்லைத் தீட்டியவாறு முன் கிடுகு வேலியிலுள்ள கறையான்களைத் தட்டிக் கொண்டிருந்தார். அதைக் கவனித்த குயிலிக்கு சற்று நிம்மதியாயிருந்தது. அடுப்படியில் அம்மா தேநீர் ஊற்றிக்கொண்டிருந்தாள். அங்கு வந்த குயிலி "அம்மா தேத்தண்ணியைத் தாங்கோ. நான் அப்பாவிட்டைக் குடுக்கிறேன்" என்று சொல்லி விட்டு தேநீர்க்கோப்பையுடன் அப்பாவைத் தேடிப் போனாள்.

முகம் கழுவி விட்டு  வந்த பரமசிவம் திருநீற்றினால் நெற்றியில் மூன்றுகுறி வைத்து நீண்ட நேரம் கண்களை மூடி சுவாமிப் படங்களின் முன் நின்று வேண்டுதலை முடித்துக்கொண்டு வந்தார். அவர் திண்ணைக்குந்தில் அமர்ந்து கொண்டதும் குயிலி அவரிடம் தேநீர் கொடுத்து விட்டு அருகிலேயே அமர்ந்து கொண்டாள்.

"என்ன குயிலி ஆற அமர வந்து இருக்கிறாய் இண்டைக்கு படிக்கிறதுக்கு ஒண்டுமில்லையோ"

கேட்ட பரம சிவத்தை ஏறிட்டுப் பார்த்தாள் குயிலி.

"அப்பா! நான் உங்களிட்டை ஒண்டு கேக்கட்டோ?"

"கேக்கிறதுக்கென்ன.....கேளன்"

"அப்பா! இவ்வளவு நேரம் நீங்கள் சுவாமிப் படத்துக்கு முன்னால நிண்டு என்னத்தை நினைச்சு வேண்டினநீங்கள்?"

சற்றும் எதிர்பாராத இந்தக்கேள்விக்கு பதில் கூறமுடியாதவராய் ஒருகணம் திகைத்துப் போனார் பரமசிவம். பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவராய் பதிலளித்தார்.

"என்ரை பிள்ளையள் நல்லாய்ப்படிக்க வேணும். நல்லாய் இருக்க வேணும் என்று தான் வேண்டிக் கொள்ளுற நான் தினமும்".

"உண்மையைச் சொல்லுங்கோப்பா. உங்களுக்கு அந்த ஆசை இருக்கு தென்றால்... அதுக்கு அனுசரனையாய் நீங்கள் என்ன செய்யுறியள்?"

"இதென்ன பிள்ளை உன்ரை கேள்வி. நான் உழைச்சு உங்களைக்

காப்பாத்துறன். அதுக்கு மேல என்ன செய்யிறது?".

"அப்பா! உங்கட மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கோ. நாங்கள் படிகிறதுக்கு ஏற்ற சூழலை நீங்கள் அமைச்சுத் தந்திருக்கிறியளோ. அல்லாட்டில் படிக்கிறதுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கித் தந்த நீங்களோ?"

குயிலியின் கேள்வி பரமசிவத்தின் நெஞ்சில் ஈட்டியால் குத்துவது போல் இருந்தது.

"இதென்ன பிள்ளை உன்ரை கதை. படிக்கிறதுக்குத் தேவையானதை கொம்மா வாங்கித் தாறாதானே. அது யாருடைய உழைப்பு. அப்பாவின்ரை தானே".

மகளைச் சாந்தப்படுத்த முற்பட்டு தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

"அம்மாவிட்டை காசு இருந்தாத்தானே நாங்கள் அவவிட்டை துணிஞ்சு ஒரு பொருளை வாங்கித்தாங்கோ எண்டு கேக்கலாம்."

"ஏன் அவவிட்டை நான் குடுக்கிற காசை என்ன செய்யிறா ஊதாரித்தனமாக செலவழிக்கிறாவோ?"

"அவ ஒண்டும் ஊதாரித்தனமாய் செலவழிக்கேல்ல. நீங்கள் குடுக்கிற சொற்பக்காசில அவ சாப்பாட்டுச் செலவுக்கே காணாமல் திண்டாடுறதை நான்தான் நேரில பாக்கிறனே!"

மகளின் சாமாத்தியமான பேச்சைக் கேட்க அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. சமாளிக்க முற்பட்டார்.

"ஏன் நான் குடுக்கிற காசுபோதாதெண்டால்......கொம்மா என்னட்டைக் கேட்டால் குடுத்திட்டுப் போறன் ஏன் அவ கேட்கிறதில்லை?".

"சும்மா சமாளிக்காதையுங்கோ அப்பா. அம்மா உங்களிட்டைக் காசு கேட்டா... அண்டைக்கு வீட்டில பிரளயம் தான். நீங்கள் வாயில வந்ததை யெல்லாம் சொல்லி பத்தாக்குறைக்கு அவவை அடிக்கவும் போவீங்கள்".

பதிலேதும் பேச முடியாமல் பரமசிவம் கூனிக்குறுகி அமர்ந் திருந்தார்.

அடுப்படிக்குள் இருந்தாவாறே செல்லம் குரல் கொடுத்தாள்.

"குயிலி! உதென்ன பழக்கம். கொப்பரோட சரிக்குசரி நியாயம் பிளக்கிறாய்".

"நீங்கள் சும்மாயிருங்கோ அம்மா. எனக்கு இண்டைக்கு ஒரு நியாயம் கிடைக்கவேணும். அப்பா தினமும் குடிச்சுப் போட்டு வந்து வீட்டில சண்டைப் பிடிச்சுக் கொண்டிருந்தால் நாங்கள் என்னெண்டு படிக்கிறது. நீங்களே சொல்லுங்கோப்பா. நீங்கள் செய்யிறது சரியா?"

தகப்பனை போட்டு உலுப்பினாள் குயிலி. மௌனத்தை தழுவு வதைத் தவிர வேறு வழி இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. போதையில் அவர் இருந்திருந்தால் இத்தறுதிக்கு அவளை அடித்து அத்துடன் செல்லத்தையும் வம்புக்கிழுத்து அட்டகாசம் பண்ணியிருப்பார். அவரது மனத்தில் முன்தினம் பாடசாலையில் நடந்த நிகழ்வு ஒன்று நிழலாக வந்து பொறி தட்டியது.

ஆரம்ப பாடசாலை ஒன்றின் ஆசிரியர் அவர். அவர் கற்பிக்கும் பாடசாலையில்த் தான் மகிழினியும் புகழினியும் படிக்கிறார்கள். நேற்று பரமசிவம் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்குப் பாடம் எடுத்துக் கொண்டி ருந்தார். அப்போது அருகிலிருந்த வகுப்பிலிருந்து கந்தசாமி மாஸ்டரின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

கணக்குப் பிழை எடுத்தவை எல்லாம் எழும்பி நில்லுங்கோ.

“என்ன மகிழினி உனக்கும் பிழையே. வீட்டில என்ன செய்யிறநீ. கொப்பரிட்டைக் கேட்டுப் படிக்கிறேல்லையே. அது சரி. கொப்பர் குடிச்சுப்போட்டு மப்பில கிடந்து அலட்டுவர். நீ என்னெண்டு கேட்டுப் படிக்கிறது?”

“இல்லை சேர். எனக்கு அந்தக் கணக்கு விளங்கேல்ல”.

“விளங்காட்டி வந்து என்னட்டைக் கேக்கிறது தானே. அதை விட்டிட்டு…”

“விளங்கேல்ல எண்டு சொல்லிட்டு உப்பிடி இருந்தால்…. என்னெண்டு ஸ்கொலர்ஷிப் சோதினை பாஸ் பண்ணப் போறாய்”?

மகிழினி ஐந்தாம் வகுப்பில் படிப்பது அப்போதுதான் அவருக்கு ஞாபகம் வந்தது. இன்றைக்கு வீட்டுக்குப் போனதும் அவளைக் கூப்பிட்டு கணக்குச் சொல்லிக் கொடுக்க வேணும். மனதுக்குள் நினைத்ததோடு சரி. பிறகு அந்த எண்ணமே அவருக்கு வரவில்லை.

“ஏன்னப்பா பேசாமல் இருக்கிறீங்கள். சொல்லுங்கோவன்?”

குயிலி அவரை விடவில்லை

ஒருவர் நம்மை மிரட்டினால் அடங்கிப் போகவேண்டும். இல்லையேல் அவரைக் கடந்து பாய வேண்டும். இதில் இரண்டாவது யுக்தியை இப்போது பிரயோகப்படுத்தினார் பரமசிவம்..

“இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறாய்? கொம்மா உன்னைத் தூண்டி விட்டிட்டு அங்கை இருந்து வேடிக்கை பாக்கிறாவோ? நல்லாய் இருக்குது உங்கட போக்கு?”

குயிலி விடவில்லை.

“இப்ப அம்மாவை ஏன் இழுக்கிறியள். நீங்கள்தானே சொன்னநீங்கள்.

*நாங்கள் நல்லாய் படிக்க வேணும். நல்லாய் இருக்க வேணும் எண்டதுக் காகத்தான் கடவுளைக் கும்பிடுறன் எண்டு சொல்லி. கும்பிட்டா மட்டும் போதுமே? அதுக்கு உண்டான முயற்சி எடுக்க வேண்டாமோ. நான் சொல்லுறது சரி தானே அப்பா".*

*"நீங்கள் முயற்சி எடுத்து நல்லாய்ப் படித்தால் முன்னுக்கு வரலாம். அதைத் தானே நானும் சொல்லுறன்."*

*"அப்பா! நாங்கள் நல்லாய்த்தான் முயற்சி செய்து படிக்கிறம் அதுக்குத் தேவையான வசதிகளை நீங்கள் செய்து தரவேண்டுமென்று தான் எதிர்பார்க்கிறம். ஒரு சின்னக்கதை சொல்லுறன் கேளுங்கோ.ஒருத்தன் சரியான பசியோட கடவுளை வேண்டிக் கொண்டிருந்தானாம். என்னுடைய பசியைத் தீர்த்து வையும் என்று. அப்பிடியே இருந்தால் சாப்பாடு கிடைக்குமோ. எழும்பிப் போய் ஏதாவது முயற்சி செய்தால்த் தான் உணவு கிடைக்கும். அந்த உண்மையை அவன் உணரவேணும் அப்பா! அந்த நிலைமையில தான் நீங்களும் இருக்கிறியள்."*

*பதிநான்கு வயதுமகளின் பகுத்தறிவையும் சாமாத்தியமான பேச்சையும் கேட்டு வியந்து நின்றார் பரமசிவம். ஏன் செல்லத்துக்குக் கூட மகளின் அறிவு பூர்வமான கருத்துக்கள் ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது.*

***

*பரமசிவத்துக்குள் இத்தனை நாளும் உறங்கிக்கடந்த மனச்சாட்சி குயிலியின் கூர்மையான வார்த்தைகளால் குத்தி குதறப்பட்டு மெது மெதுவாக விழிப்படையத் தொடங்கியது. அவர் வீட்டில் இருக்கும் வேளைகளில் பிள்ளைகள் மீது அக்கறை காட்டுவது அவர்களைக் கண்டிப்பது போன்ற செயல்கள் செல்லத்துக்கும் சிறிது ஆறுதலைத் தந்தது. அதற்கும் மேலாக அப்பாவைப் பிள்ளைகள் கனம் பண்ணி நடந்து கொள்வது அவளுக்கு மனநிறைவை ஏற்படுத்தியது.எதையோ யோசித்துக் கொண்டிருப்பார். குயிலி அம்மாவுக்கு ஒரு உத்தரவு போட்டிருந்தாள். மாலை வேளையில் தேனீர் கலக்கும் போது கொஞ்சப்பாலை மீதமாக வைத்திருந்து பொழுது கருகும் நேரத்தில் அப்பாவுக்கு சுடச்சுட ஒரு கப் தேநீர் கொடுக்க வேண்டுமென்பது அவளது வேண்டுகோள். செல்லம் தேநீரை ஊற்றிக்கொண்டிருக்க குயிலி வந்து அதை வாங்கிக் கொண்டு போனாள்.*

*"அப்பா!.."*

*மகளின் குரல் அவரை கற்பனை உலகிலிருந்து விடுவித்து இவ்வுலகிற்கு கொண்டு வந்தது.*

*"என்னம்மா?.."*

*குரலில் சுரத்தில்லாமல் இருப்பதைக் கண்ட குயிலிக்கு மனதில் சிறு சஞ்சலம்.*

“இந்தோங்கோப்பா தேத்தண்ணி. குடியுங்கோப்பா.”

மகள் நீட்டிய தேநீரை வாங்கி ஒரு குழந்தையைப் போல் ஆர்வத்துடன் பருகினார். குயிலி அருகில் இருந்து கொண்டாள்.

“ஏனப்பா தனிய இருந்து யோசிக்கிறியள். ஏங்கையாலும் வெளியில போட்டு வரலாம் தானே.”

“எனக்கு வெளியில போக விருப்பமில்லை பிள்ளை”.

“அதுதான் ஏன் என்று சொல்லுங்கோவன்?”

ஒரு குழந்தையாக மாறி விட்ட பரமசிவம் தன் மனதில் உள்ளத்தை அப்படியே மகளிடம் கொட்டிவிட்டார்.

“வெளியில வெளிக்கிட்டால்... என்ரை பழைய கூட்டாளியள் என்னை விடுறாங்கள் இல்லை. பரமு வாவன் எப்பன் வாயை நனைச்சிட்டு போகலாம் எண்டு சொல்லிக் கூப்பிறாங்கள். அவங்கள் அப்பிடிக் கூப்பிட்டதும் என்ரை மனமும் தடுமாறுது. ஏத்தனை வருசமாய் என்னில ஊறிப் போன பழக்கம். அதுதான்... அவங்களைச் சந்திக்க விருப்பமில்ல. வீட்டோடயே இருக்கிறன்”.

“அப்பா உண்மையிலேயே நீங்கள் ஒரு மனிதம் உள்ள மனிசன்தான். உப்பிடியான மனஉறுதி யாருக்கு வரும். உங்களை அப்பா வாய்ப் பெற நாங்கள் குடுத்துவைச்சிருக்க வேணும். ஆனால்...’’

இடை நிறுத்தினாள் குயிலி.

“என்ன பிள்ளை?. ஏதோ சொல்ல வந்திட்டு .... விட்டிட்டாய்.”

“அது வந்து... அப்பா நீங்கள் வேறை மாதிரியான பொழுது போக்குகளில் ஈடுபட்டால்... உங்களுக்கும் உற்சாகம் வரும்.உங்கட தடுமாறுற மனத்தையும் வெல்ல முடியும்.”

பரமசிவத்துக்கு தந்தைக்கு உபதேசம் செய்த முருகப்பெருமான் நினைவில் வந்து போனார். “என்ன பிள்ளை. அதை என்னெண்டு தான் சொல்லன் பாப்பம்”.

“அப்பா! நான் கிணத்தடியில அஞ்சாறு மிளகாய்க் கன்று நட்டு வைச்சிருக்கிறன். தினமும் காலையில குளிக்கேக்க அதுக்குத் தண்ணி விடுவன். அது ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து வாறதைப் பாக்க எனக்கு எவ்வளவோ சந்தோசம் உண்டாகும். இப்ப அந்த மரங்கள் பூத்து சில பூக்களில் பிஞ்சும் விட்டிருக்கு. இதில இரட்டிப்பு சந்தோசம் என்னெண்டா...வாற கிழமையில இருந்து அம்மா பச்சை மிளகாய் வாங்கத் தேவையில்ல. அந்தக் காசும் எங்களுக்கு மிச்சமாகுது. இல்லையா அப்பா!”

பரமசிவத்துக்கு மகளின் நோக்கம் புரிந்தது. ஆதரவாக அவளது தலையைத் தடவிவிட்டார்.

"சரியம்மா. எல்லாம் பிறகு யோசிப்பம். இப்ப நீங்கள் எல்லாரும் போய்ப் படியுங்கோ. கொம்மா விளக்குக் கொழுத்திப்போட்டா.".

"அப்பா!"

இளையவள் புகழினி அவரிடம் ஓடி வந்தாள்.

"அப்பா! வாயைத் திறவுங்கோ."

அவள் கைக்குள் எதையோ பொத்தி வைத்திருந்தாள். பரமசிவம் மகளின் பாசப் பிணைப்பில் திளைத்தவராய் வாயைத் திறக்க அவள் ஒரு நெல்லிக்காயை வாய்க்குள் போட்டு விட்டு சாப்பிடுங்கோ என்றாள்.

அவர் ஒரு வாய் கடித்துவிட்டு சீ... கசக்குது என்று சொல்லி முகத்தைச் சுளித்தார். "கைப்பாய் இருந்தாலும் சாப்பிட்டுப்போட்டு தண்ணியைக் குடிச்சீங்களென்டால் அது இனிக்கும்."

இப்படியெல்லாம் பிள்ளைகளோடு பொழுதை இனிமையாய்க் கழிக்காமல் போதையில் மெய் மறந்து கிடந்தேனே.

தன்னைத் தானே நொந்து கொண்டவர் மகிழினியைக் கூப்பிட்டு பாடங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

"வடிவாய்க் கேட்டுப் படி. பள்ளிக்கூடத்தில போய் கந்தசாமி மாஸ்டரிட்டைத் திட்டு வாங்காதை" என்று சொல்லி காதில் ஒருமுறுக்கு முறுக்கினார்.

மகிழினி அக்காவைப் பார்த்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. குயிலி அவளுக்குத் தட்டிக் கொடுத்தாள்.

"எங்களுக்குப் பாடம் சொல்லித்தர ஒருத்தரும் இல்லையே என்று எத்தனை நாள் ஏங்கியிருப்பம். இப்ப.... அப்பா சொல்லித் தாறார். சும்மா அழுகிறதை விட்டிட்டு வடிவாய்ப் கேட்டுப்படி."

குயிலியும் அப்பாவிடம் ஏதோ சந்தேகம் கேட்டாள். பிள்ளைகள் மூவரையும் படிக்க விட்டு விட்டு பரமசிவம் வெளி விறாந்தையை நோக்கிப் போனார். அங்கே... செல்லம் வாசற்படியில் குந்தியிருந்து வானத்தை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள். குரலைக் கனைத்தபடி வந்து அவளருகில் அமர்ந்து கொண்டார்.

கணவன் திருந்தியிருந்தாலும் வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிவிடுமோ என்ற பதற்றம் அவளுக்கு இன்னமும் இருந்து கொண்டுதான் இருந்தது. கனிவான குரலில் அவர் மனைவிடம் வினவினார்.

"என்ன செல்லம் வானத்தைப் பார்த்து என்ன யோசிக்கிறீர்?"

"நான் என்னத்தை யோசிக்கப் போறன். இந்த மூண்டு பெண் பிள்ளையளையும் வளர்த்து ஆளாக்கி எப்பிடிக் கரை சேர்க்கப் போறம்? எண்டு தான் யோசிச்சநான்."

“ம்.. விட்டுத்தள்ளும் எல்லாம் நடக்க வேண்டிய காலத்தில தானாக நடக்கும். நீர் ஏன் இப்ப வீணாய் யோசிச்சு மூளையைக் குழப்புறீர்?”

“அவள் பிள்ளை குயிலி சொன்னது போல நாங்களும் பிரயாசை எடுத்தாத் தானே எந்தக் காரியத்தையும் செய்யலாம்.”

“இப்ப என்ன செய்ய வேணுமெண்டு நீர் நினைக்கிறீர்?”

“அம்மா! நித்திரை வருகுது”.

புகழினி கொட்டாவி ஒன்றை வெளிப் படுத்தியவாறு தனது நிலையை அம்மாவுக்குப் புலப்படுத்தினாள். செல்லம்எழுந்து அடுப் படியை நோக்கி நடந்தாள்.

***

அன்று வெள்ளிக்கிழமை. வானம் மப்பும் மந்தாரமாக இருண்டு கிடந்தது செல்லம் அடுப்படி விறாந்தையில் குந்தியிருந்து பனங்காய் களைப் பிரித்து அவற்றின் தோலை உரித்து ஒருபாத்திரத்தில்அடுக்கி வைத்திருந்தாள். ஒவ்வொரு பனம்கொட்டைகளையும் பிரித்தெடுத்து அதிலுள்ள களியைக் கறந்து பிறிதொரு பாத்திரத்தில் சேர்ப்பதில் மும்முரமாயிருந்த வேளை..

“செல்லம் செல்லம்.”.

வாசலில் குரல் கேட்டதும் கையை உதறிவிட்டு வெளியேவந்து எட்டிப்பார்த்தாள்.

“ஆசையக்கா! வாக்கா வா என்ன? இந்தப் பக்கம்”

தனது ஆச்சரியத்தை வெளியிட்டவள் ஓடோடிப் போய் கைகளைக் கழுவி விட்டு வந்தாள்.

“ஏனக்கா தனியவே வந்தநீ.ஒரு பிள்ளையை எண்டாலும் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமே”.

“பிள்ளையள் பள்ளிக்கூடம் போட்டுதுகள். நான் ஒருக்கா போய் எட்டிப்பார்த்திட்டு வருவம் எண்டு நினைச்சன். வந்திட்டன்”.

தான் கொண்டு வந்த சுமையை இறக்கி வைத்தவாறே சொன்னாள். ஒரு கதிரையை எடுத்துப் போட்ட செல்லம் “இதில இரக்கா. நல்லாய்க் களைச்சுப்போனாய். குடிக்கிறதுக்கு ஏதும்கொண்டு வாறன் ”அக்காவைக் கண்ட பூரிப்பில் அடுப்படிக்கு ஓடினாள் செல்லம். மிகுதியாகக் கிடந்த பாலில் தேநீர் தயாரித்து இரண்டே நிமிடத்தில் கொண்டு வந்து அக்காவிடம் நீட்டினாள்.

“முதல்ல இதைக் குடியக்கா. குடிச்சிட்டு ஆறுதலாய்க் கதைப்பம்”.

“ஏனக்கா? இந்தச் சுமையையும் காவிக் கொண்டு வெளிக்கிட்டநீ. நான் நாளைக்கு உன்னட்ட வரத்தான் இருந்தநான்”

“இதென்ன செல்லம் உன்னுடைய கதை. தங்கை வீட்டை வாறநான் வெறுங்கையோடயே வாறது.?”

உடன் பிறப்புகள் இருவரும் ஒருவருக்கொருவர் உருகியவாறு கதைத்துக் கொண்டிருந்தனர். ஆசையக்கா கால் முகம் கழுவி வருவதாகச் சொல்லி கிணற்றடிக்குப் போனாள். போய்விட்டு வந்தவள் ஆச்சரியத் துடன் சொன்னாள்.

“என்ன செல்லம் கிணற்றடியயெல்லாம் வாழை நட்டு நல்ல குளுமையாய்க் கிடக்குது”.

“ஓமக்கா பிள்ளையளும் தேப்பனும் அஞ்சாறு வாழைக்குட்டியள் நட்டவை. ஊட்டுக்கை தென்னம்பிள்ளையும் நட்டுக் கிடக்கு. இறைக்கேக்க எல்லாத்துக்கும் போகுமெல்லே.”

“அது சரி. இது ஆற்றை யோசினை. உன்ரை மனிசனுக்குத் தான் உப்பிடியான யோசினை வராதே. இப்பவும் தண்ணி போடுறாரோ?”

“இல்லையக்கா. ம் எல்லாம் என்ரை மூத்தவள் குயிலிக்குத்தான் அந்தப் புண்ணியம் போய்ச் சேரும். பிள்ளை நயமாய் சொல்லி ஒருபடியா அந்தாளைத் திருத்திப் போட்டாள். இப்பதானக்கா கொஞ்ச நாளாய் நான் நிம்மதியாய் இருக்கிறன்.”

“மெய்யாத் தானே சொல்லுறாய் செல்லம். உன்னாணை எனக்குக் கேக்க சந்தோசமாய் இருக்குதடி செல்லம்”.

சொல்லும்போதே அவளது நாத்தளுதளுத்தது.

“அக்காவை ரெண்டு பேருக்கும் உன்னை நினைச்சுத்தான் கவலை. இனி இதைக் கேள்விப்பட்டால்.... நல்ல சந்தோசப்படுவினம்”.

“எங்களில என்னக்கா கிடக்கு. எல்லாம் அந்த முருகப் பெருமானு டைய திருவிளையாடல் தான்”.

கைகளைக் கூப்பியவாறே தன்னடக்கத்துடன் சொன்னாள். செல்லம்

“அக்கா உந்தத்திண்ணையில எப்பனுக்கு இரக்கா. நான் இந்தக் களியை கறந்து முடிக்கிறன். நான் இண்டைக்குப் பின்னேரம் பனங்காயில பணியாரம் சுட்டுக்கொண்டு வெள்ளண வெளிக்கிடுவம் எண்டெல்லோ நினைச்சுக் கொண்டிருந்தன்”.

“இப்ப அதுக்கென்ன நீ சுட்டுத்தாவன். நான் கொண்டுபோய் பிள்ளையளுக்குக் குடுக்கிறன்.”

இருவருக்கும் நேரம் போனதே தெரியவில்லை. இருவரும் தங்களுக் குரிய இட்டல் இடைஞ்சல்களை மற்றவருக்குக் கூறி மன ஆறுதலைத் தேடிக் கொண்டனர். எவ்வளவு அந்நியோன்யமான குடும்பமாய் இருந்தாலும் சில மனத்தாங்கல்களும் இருக்கத்தானே செய்யும். வள்ளுவர்

வாசுகி வாழ்ந்த காலமல்லவே இது.

மகிழினியும் புகழினியும் அப்பாவுடனேயே சைக்கிளில் வீடு திரும்பிவிட்டார்கள். பிள்ளைகளுக்கு ஆசையம்மாவைக் கண்டதில் உற்சாகம். எப்போதும் பரமசிவம் மச்சாள்மாரைக் கண்டதும் மிகவும் மரியாதையாக நடந்து கொள்ளுவார். அவருடைய ஆதிக்கம் எல்லாம் செல்லத்துடன் மட்டும்தான்.

"மகிழ்! புகழ் இஞ்சை வந்து பாருங்கோ ஆர் வந்திருக்கிறதெண்டு".

தனது மகிழ்ச்சியைப் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொண்டாள், செல்லம் பிள்ளைகள் இருவரும் ஓடி வந்து ஆசையாம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர். அவளும் அவர்களை உச்சிமோந்து தழுவிக் கொண்டாள்.

"செல்லம் ! அக்கா சாப்பிட்டிட்டாவோ?"

இது பரமசிவம்.

"இல்லையப்பா."

"ஏன் இவ்வளவு நேரத்துக்கும் சாப்பாட்டைக் குடுக்காமல் இருந்தநீர்?" இது தான் பரமசிவத்தாரின் உபசரிப்பு.

"செல்லம் கேட்டது தான். நான்தான் ஆறுதலாய்ச் சாப்பிடுவம். பிள்ளையளும் பள்ளியால வரட்டுக்கும் எண்டு சொன்னநான்.."

அவளும் மைத்துனரிடம் நாசூக்காகப் பதிலளித்தாள்.

குயிலினி பாடசாலையால் வந்ததும் அனைவரும் உணவருந்தினர். உணவருந்திய கையுடனேயே செல்லம் அடுப்பை மூட்டி எண்ணெய்ச் சட்டியை வைத்துவிட்டாள். செல்லம் மாவை அளவாக எடுத்து கொதிக்கும் எண்ணெய்க்குள் போட மறுபுறத்தில் ஆசையக்கா வெந்த பணியாரங்களை எடுத்துக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் வேலை முடிந்தது.

"ஆசையம்மா! ஏன் அக்காவைக் கூட்டிக் கொண்டு வரயில்லை? குயிலியின் கேள்விக்கு அவள் பதில் சொல்ல வாயெடுக்குமுன் மற்ற இருவரும் ஓடிவந்து "ஆசையம்மா! நாளைக்கு பள்ளிக்கூடம் இல்லைத் தானே. நாங்களும் உங்களோடு வரப் போறம். எங்களையும் கூட்டிக் கொண்டு போங்கோ".

"செல்லம் பிள்ளையள் ஆசைப்படுகினம். நான் கூட்டிக்கொண்டு போகட்டே?" ஆசையக்கா செல்லத்திடம் அனுமதி கேட்டாள்.

"இல்லையக்கா மகிழினிக்கு ஸ்கொலசிப் கிட்டிட்டுது. அவள் சனி ஞாயிறு வகுப்புக்கு போறவள். பிறகு சோதனை முடியவிட்டு அவை ரெண்டு பேரையும் கூட்டிக்கொண்டு வாறனே".

செல்லம் பிள்ளைகளைத் திரும்பிப் பார்த்த பார்வையில அவர்கள் அடங்கிப் போனார்கள். மாலை நேரத்தோடு பால் கறந்து தேநீர் தயாரித்துக் குடித்ததும் ஆசையக்கா புறப்பட்டு விட்டாள். குயிலி ஆசையம்மாவை வழியனுப்பி விட்டு வருவதாகச் சொன்ன போது பரமசிவம் அவளைத் தடுத்து விட்டார்.

*"இஞ்சாரும் செல்லம் அவள் ஒரு வயசுப்பிள்ளையை ஏன் அனுப்புவான். நானும் சின்னவளுமாய்ப் போய் மச்சாளை பஸ் ஏத்திவிட்டு வாறமே."*

குயிலிக்கு தான் போக முடியவில்லையே என்ற ஏக்கத்தை விட அப்பா தன் மீது கொண்டிருக்கும் கரிசனையை நினைத்து திருப்தியா யிருந்தது.

செல்லமும் சும்மா விடவில்லை. அக்காவுக்கு ஏட்டிக்குப் போட்டி யாய் ஒரு சுமையை ஏற்றி விட்டிருந்தாள். தான் புதிதாகப் போட்ட பனாட்டு புழுக்கொடியல் என ஒரு மூட்டையோடு பனங்காய் பணி யாரத்தையும் சேர்த்துக் கொடுத்தனுப்பியதில் அவளுக்கும் ஒரு நிறைவு கிடைத்தது.

பொதியை பரமசிவம் சைக்கிள் கரியரில் வைத்து உருட்டிக்கொண்டு நடக்கத் தொடங்கினார். செல்லமும் மூத்த பெண்கள் இருவருமாய் ஒழுங் கையில் நின்று கையசைத்து ஆசையம்மாவை வழியனுப்பி வைத்தனர்.

***

செல்லம் மகிழைக் கூப்பிட்டு அவளிடம் ஒரு பார்சலைக் கொடுத்தாள். *"மகிழ் இதைக் கொண்டு போய் கமலம் மாமி வீட்ட குடுத்திட்டு வா பிள்ளை". "அம்மா அவையின்ரை நாய் பொல்லாதது கடிக்க வரும்".* சிணுங்கினாள் மகிழினி. அவளது சிணுங்கலைக் கேட்டு குயிலி அவ்விடத்துக்கு வந்தாள்.

*"என்னம்மா மகிழ் சிணுங்குகிறாள்?"*

*"பிள்ளை குயிலி... இதில ஆசையம்மா கொண்டு வந்த வடையும் கொஞ்ச பனங்காய் பணியாரமும் இருக்கு. ஒருக்கா உதிலை எட்டி கமலமாமி வீட்ட குடுத்திட்டு வாவன்."*

சரியம்மா என்று சொல்லி விட்டு குயிலி புறப்பட மகிழ் தானும் வருவதாகக் கூறி அவள் பின்னால் போனாள். கமலம் மாமியின் வீட்டுப் படலையைத் திறக்க முற்பட்ட போது குரைத்தவாறே பாய்ந்தோடி வந்த நாயைக் கண்டு இருவருமே திடுக்கிட்டுப் போயினர்.

*"ஜிம்மி இஞ்சை வா".*

ரகுவின் அதட்டல் குரல் கேட்டதும் தான் இருவருக்கும் தான் சற்று ஆறுதல் ஏற்பட்டது.

வெளியே வந்து எட்டிப் பார்த்த ரகுவிடம் பார்சலைக் கொடுக்க முற்பட்டாள் குயிலி. அவன் வாங்க மறுத்து விட்டான்.

"நீங்கள் மட்டும் வாசலுக்கை வைச்சுத் தந்தா வாங்கமட்டியள். நாங்கள் மட்டும் என்னவாம் வீட்டுக்குள்ள வந்து தந்தாத்தான் வாங்குவம்."

சீண்டிய ரகுவைப் பார்த்து குயிலி சிரித்தவாறே சொன்னாள்.

"நாயைப் பிடிச்சு கட்டினாத்தான் நாங்கள் வளவுக்கை வருவம்."

அவளது வேண்டுதலை ஏற்றுக் கொண்டவனாய் ரகு ஜிம்மியைப் பிடித்து கட்டுவதற்காக இழுத்துக் கொண்டு போனான்.

மகிழ் அக்காவின் சட்டையைப் பிடித்துக் கொண்டு பதுங்கியவாறே அவளுடன் உள்ளே போனாள். கமலம் ஆட்டுக் கல்லில் உழுந்து அரைத்துக் கொண்டிருந்தாள். குயிலி பார்சலை மேசைமீது வைத்து விட்டு அவளண்டை போனவள் கூறினாள்.

"மாமி விடுங்கோ. நான் அரைக்கிறன். நீங்கள் தள்ளி விடுங்கோ." கமலத்துக்கு மருமகளின் செய்கை பிடித்திருந்தது. குயிலி இரு கைகளாலும் குளவியைப் பொத்திப் பிடித்து உருட்ட ஒரு நொடியில் உழுந்து அரைக்கப் பட்டு விட்டது. கமலம் ஆட்டுக்கல்லை கழுவிவிட்டு எழுந்து வந்தவள் ரகுவை அழைத்தாள்.

"இவளவைக்கு உங்கினை மரத்திலை பாத்து நல்ல கொய்யாப்பழமா புடுங்கிக் கொண்டு வந்து குடு ராசா".

"மாமி தேவகி மச்சாள் எங்கை? காணயில்ல?"

"அவள் பிள்ளை டியூசனுக்கு டவுணுக்குப் போயிருக்கிறாள். ஏ.எல் எண்டால் ஏதோ பெரிய படிப்பாமே. அதுக்கு டியூசனுக்குப் போய் படிச்சாத்தான் பாஸ் பண்ணலாம் எண்டு சொல்லிச்சினம்.எனக்கொண்டும் தெரியாது".

மூன்றாம் வகுப்பு வரை படித்த கமலத்திற்கு படிப்பைப் பற்றிய விளக்கம் அதிகமில்லாமலிருப்பது ஒன்றும் ஆச்சரியமல்லவே. ரகு கொண்டு வந்த கொய்யாப்பழங்களை வாங்கி ஒரு பையில் போட்டு மகிழிடம் நீட்டினாள் கமலம். அவள் வெருண்டுபோய் அதை வாங்க மறுத்தாள். குயிலி அவளை அதட்டினாள்.

"மகிழ்! மாமி தாறதை வாங்கன். பெரியாக்கள் தந்தா இரண்டு கையாலையும் வாங்கிப் போட்டு நன்றி சொல்லவேணும்என்று அம்மா சொல்லித் தந்ததை மறந்து போனியோ.... என்ன!"

"குயிலி! அவள் சின்னப்பிள்ளை தானே ஏன் வெருட்டுறீர்?"

ரகு அவளுக்குப் பரிந்துரைத்தபோது குயிலி வாய்விட்டுச் சிரித்தாள்.

"ரகு அத்தான்! நீங்கள் டியூசனுக்குப் போறநீங்களெல்லே. நீங்கள்

சோதினை எடுத்தப்பிறகு அந்த நோட்டுகள் எல்லாத்தையும் பத்திரமாய் வைச்சு என்னட்டைத் தாங்கோ. என்ன…''

“அதை ஏனடி பிள்ளை உனக்கு..?”

மாமி வினவ குயிலி பதிலளித்தாள்

“மாமி! எங்கட கஸ்டம் உங்களுக்குத் தெரியும் தானே ,எனக்கு டியூசனுக்கு போய்ப்படிக்க வசதியில்லை. அத்தான் இந்த வருசம் சோதினை எடுத்திட்டால்… அவருக்கும் அந்த நோட்ஸ் தேவைவராது. நான் எண்டாலும் படிக்கலாம் தானே எண்டிட்டுத்தான் கேட்டநான்”.

அவளது சமயோகித புத்தியை எண்ணி மனதுக்குள் வியந்தாள் கமலம்.

“குயிலி! நான் மற்ஸ்க்கும் சயன்ஸ்க்கும் மட்டும் தான் ரியூசனுக்குப் போறநான். சரி நான் பக்குவமாய் வைச்சுத்தாறனே.”

“சரியத்தான். நீங்கள் இப்பவே ஊக்கமாய்ப் படியுங்கோ. பேந்து றிசல்ற் வந்தப்பிறகு யோசிச்சு பலனில்லை”

“இவ பெரிய மனுசி சொல்லுறா” என தாயைப் பார்த்து கண்களைச் சிமிட்டிவிட்டு ரகுசொன்னான்

“சரியம்மா தாயே உம்முடைய அறிவுரைப்படியே செய்கிறேன்”

அவனது கிண்டலைப் பார்த்து அனைவரும் சிரித்தனர். அப்போது தான் குயிலி அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். திடீரென அவனது முகத்தில் ஒரு கவர்ச்சி இழையோடியிருந்தது. அவனது நாசிக்கும், உதட்டிற்குமிடையே மீசை அரும்பி, கோடிட்டிருந்தது. முன்பெல்லாம் பரட்டையாயிருந்த அவனது கேசம் சுருள்சுருளாய் நெற்றியில் புரண்டு கொண்டிருந்ததில் அவனது முகத்தோற்றம் மெருகூட்டப்பட்டிருந்தது என்பதுதான் நிஜம் என்பதை அவள் உள்ளூர உணர்ந்து கொண்டாள். ஒரு கணப் பார்வையில் அவனது கண்களைத் தரிசித்ததில் அவளையறியாமலே அவளது பார்வை தாழ்ந்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டவளாய் , குயிலி அவர்களிடமிருந்து விடை பெற்றாள்.

“மாமி! நாங்கள் வந்து கன நேரமாச்சு. அம்மா தேடப்போறா போட்டுவாறம்.” என்று பரபரப்புடன் கூறியவள் கண்களைச் சுழற்றி ஓர் பார்வையை வீசி ரகுவிடமும் விடை பெற்றுக் கொண்டாள்.

“பாத்தியே குயிலியை வீட்டுக் கஸ்டம் தெரிந்த பிள்ளை”

மாமியின் குரல் போய்க்கொண்டிருந்த குயிலியின் காதுகளிலும் விழத்தான் செய்தது. ஓட்டமும் நடையுமாக இருவரும் வீடுநோக்கி விரைந்தனர்.

ஒழுங்கையில் நின்றவாறே அப்பா வளவின் முன் கிடுகு வேலியில்

ஏறியிருந்த கறையானைத் தட்டிக் கொண்டிருந்தார். அப்பாவின் அக்கறையான செய்கையை எண்ணி அகமகிழ்ந்தவளாய் குயிலி அவரிடம் பேச்சுக் கொடுத்தாள்.

“என்னப்பா வேலியிலை கறையான் ஏறியிட்டுதோ?”

“அதையேன் கேட்கிறாய்? உங்கைபார் கிடுகெல்லாத்தையும் அரிச்சு ஓட்டையாக்கிப் போட்டுது. குயிலி! கோழியைக் கூப்பிட்டு விடு பிள்ளை, உந்தக் கறையானைத் தின்னட்டும்.”

“பா!..பா!!..பா!!!”

குயிலியின் அழைப்பைக் கேட்டு ஓடி வந்த தாய்க்கோழி குஞ்சு களைக் கூட்டி உணவளித்தது. “கொக்!..கொக்!!..கொக்!!!..”

***

காலம் எவருடைய கட்டளைக்காகவும் காத்திருப்பதில்லை . அது தன் போக்கில் நகர்ந்து கொண்டிருக்க வருடம் ஒன்றும் ஓடி மறைந்தது. பரமசிவம் குடும்பத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. குயிலி பத்தாம் வகுப்புக்கு முன்னேறிய போது அவள் வயதுக்கு வந்துவிட்டாள். கமலம் மாமியும் சுந்தரலிங்கம் மாமாவும் முன் நின்று அவளுக்கு தண்ணி வார்த்தார்கள். ஆசையக்காவும் குடும்பத்தோடு வந்திருந்தாள். மூத்த அக்காமார் இருவரும் வருவதற்கு வசதியில்லை எனக் கூறி சிறிது தொகை பணம் அனுப்பிவைத்திருந்தார்கள். கமலம் மாமி தங்களது அன்பளிப்பாக ஒரு தங்கச்சங்கிலியை குயிலியின் கழுத்தில் போட்டு விட்டாள். பரமசிவமும் செல்லமும் தங்களால் மகளுக்கு எதுவித அணிகலனையும் போட முடியவில்லையே என்ற தவிப்புடன் இருந்தனர். எதுவித ஆடம்பர மு்மின்றி இந்த இரண்டு குடும்பங்களுடனும் குயிலியின் பூப்புனித நீராட்டு விழா இனிதே நடந்தேறியது. குயிலிக்கு ஒரு சிறு மனக்குறை இருக்கத்தான் செய்தது. அவளுடைய அத்தான் ரகு மட்டும் அந்த நிகழ்வில் பங்கு கொள்ளவில்லையே என்பதுதான் அவளது குறை.

பொதுவாக மனித மனத்தின் இயல்பே அதுதான். அதனால்தானோ என்னவோ மனத்தை குரங்குக்கு ஒப்பிடுகிறார்கள் போலும். கமலமாமி வீட்டிற்கு போகும்போது ரகுவிற்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு போனாள். அது குயிலியின் மனத்துக்கு ஓரளவு திருப்தியைத் தந்தாலும் மனதில் ஒரு மூலையில் சிறு நெருடல் இருக்கத்தான் செய்தது.

ரகு இப்போது க.பொ.த.உயர்தரத்தில் கணிதப்பிரிவில் படித்துக் கொண்டிருக்கிறான். குயிலி அடுத்த வருடம் க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதப் போகிறாள். அவன் இப்பொழுதெல்லாம் அவர்களது வீட்டுக்கு வருவதில்லை . குயிலியும் போனால் பாடசாலை வந்தால் வீடு என்று அந்த குறுகிய வட்டத்துக்குள்ளேயே நடமாடி வருகிறாள். காரணம் அம்மா விதித்திருக்கும் கட்டுப்பாடு தான். எப்போதாவது தங்கைமாருடன்

*பனை வளவிற்கு போய் வருவாள். வீட்டுக்குள்ளேயே வளைய வந்து அவளுக்கு அலுப்பு தட்டிவிட்டது. எனவே ஒரு நாள் அம்மாவிடம் கேட்டாள்.*

*"அம்மா! நான் மாமி வீட்டுக்கு ஒருக்கா போயிட்டு வரவேணும். புகழையும் கூட்டிக்கொண்டு போட்டு வரட்டே?"*

*"சீச்சீ! நீ அங்கையெல்லாம் முன்னை மாதிரி கண்டபாட்டுக்கு போக ஏலாது. நீ ஒரு குமர்ப்பிள்ளை. ஒரு வயசுப்பெடியன் இருக்கிற வீட்டுக்கு போகவே கூடாது. இப்ப அங்கை உனக்கு என்ன அலுவல். தெரியாமத்தான் கேக்கிறன்.. சொல்லு."*

*அம்மாவின் கேள்வி குயிலிக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.*

*"ரகு அத்தான் தான் படிச்சநோட்ஸ் எல்லாத்தையும் எடுத்து வைக்கிறன் எண்டு முந்தி சொன்னவர். அந்த நோட்ஸ் இப்ப எனக்கு படிக்கிறதுக்கு வேணும்."*

*"பூ.... உதுதானே விசயம். நான் மச்சாள் வீட்டை போகேக்க அவையிட்டைக் கேட்டு வாங்கிக் கொண்டந்து தாறன். இப்ப நீ அடக்க ஒடுக்கமாய் வீட்டோட இருக்கிற வழியைப் பார்."*

*அம்மா கண்டிப்புடன் கூறிய விதம் அவளுக்குப் பிடிக்கவில்லை.*

*எல்லாப்பிள்ளையளும் டியூசனுக்குப் போகினம். என்னை மட்டும் வீட்டிலையே இருந்தபடி எண்டால்... நான் என்னெண்டு படிக்கிறது?*

*மகளின் முகம் சுருங்கிப்போவதை அவதானித்த செல்லம் அவளை அரவணைக்கும் தோரணையில் கூறினாள்.*

*"குயிலி ! இங்கை பார் பிள்ள. எங்கட வீட்டுக் கஸ்டம் உனக்குத் தெரிஞ்சது தானே. அப்பா கொண்டு வாற சம்பளக்காசு எங்கட சீவியத் துக்கே மட்டுமட்டாக் கிடக்கு. காசு செலவழிச்சு உனக்கு டியூசன் குடுக்க எங்களால ஏலாது. நீ தெரியாத பாடங்களை அப்பாவிடம் கேட்டுப்படி. என்ன"*

*அம்மாவின் ஆதங்கம் அவளுக்கும் புரிந்தது.*

*"அதுக்குத் தானம்மா நான் முன்னமே ரகு அத்தானிட்ட கேட்டு வைச்ச நான். அவர் படிச்சு முடிய நோட்ஸ்களை பக்குவமாய் வைச்சு எனக்கத் தாங்கோ எண்டு. அவரும் தாறனெண்டு சொன்னவர். மாமிக்கும் தெரியும்."*

*"சரியெடி பிள்ளை. நான் போய் அவையிட்டை கேட்டு வாங்கிவந்து தாறன். நீ கவனமாய்ப் படிச்சு சோதினையை பாஸ் பண்ணிப் போடு. ஏன்ன விளங்குதே?"*

*குயிலி தலையை மட்டும் ஆட்டினாள்.*

மறுநாள் பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தபோது அம்மா குயிலிக்கு கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருந்தாள். நீண்ட நேரமாக குயிலி அந்தக்கொப்பிகளை புரட்டிக் கொண்டிருந்ததைக் கண்டு அம்மா குரல் கொடுத்தாள்.

"குயிலி! பசிவயிற்றோட இருந்து மினக்கெடாம முதல்ல போய் கால் முகம் கழுவிப்போட்டு வந்து சாப்பிட்டிட்டுப் போய் இருந்து உதுகளைப் பார்."

"சரியம்மா" என்று குரல் கொடுத்தவாறே குயிலி எழுந்துபோனாள்.

செல்லம் பிள்ளைகள் மூவருக்கும் உணவைப் பரிமாறிவிட்டு பரமசிவத்தாருக்காகக் காத்திருந்தாள்.

"அம்மா! இண்டைக்கு அப்பாவை இன்னும் காணேல்ல".

குயிலி ஆதங்கத்துடன் கேட்க செல்லம் பதிலிறுத்தாள்.

"கொப்பரோட படிப்பிக்கிற ஒரு மாஸ்டர் வீட்டில இண்டைக்கு பிறந்தநாள் பார்ட்டியாம். அதுக்குப் போயிட்டுத்தான் வருவனெண்டு சொன்னவர்".

"அப்ப... அப்பா அங்கை சாப்பிட்டிட்டுத் தானே வருவார். நீங்களும் சாப்பாட்டைப் போட்டுச் சாப்பிடுங்கோவன்".

"அதெப்படிப் பிள்ளை நான் சாப்பிடுறது. சிலவேளை அவர் அங்கை சாப்பிடாமல் பட்டினியோட வந்தால்..."

குறுக்கறுத்தாள் குயிலி.

"அவர் வந்தால் அவருக்கும் சோற்றைப் போட்டுக் கொடுக்கலாம் தானே. இப்ப நீங்கள் சாப்பிடுங்கோ. அம்மா! நான் சொல்லுறதைக் கேளுங்கோ."

செல்லத்தின் மனதில் திண்டாட்டம். மகளின் பேச்சைக் கேட்பதா? கணவரின் வருகைக்காகக் காத்திருப்பதா? என அவள் சிந்திக்க முற்பட்ட போது ... சடாரென படலையடியில் ஒரு பாரிய சத்தம். அனைவரும். திடுக்கிட்டவர்களாய் படலையை நோக்கி விரைந்தனர்.

படலைக்கு வெளியே...

சைக்கிள் பாட்டமாய் விழுந்து கிடக்க ... அதன்மேல் பரமசிவம் தலைகுப்புற விழுந்து கிடந்தார். நாக்கை வெளியே நீட்டியவாறு வாயிலிருந்து நுரை தள்ளிக் கிடந்தவரைக் கண்ணுற்ற மாத்திரத்திலேயே செல்லம் தலையில் கைவைத்தவாறு அவலக்குரல் எழுப்பினாள்.

"ஐயோ! ஏன்ரை மனுசன்"

"சத்தம் போடாதையுங்கோ அம்மா. அப்பாவுக்கு ஒன்றுமில்லை. வாங்கோ எல்லாருமாச் சேர்ந்து தூக்குவம்."

*சொல்லிக் கொண்டே குயிலி தலையைப் பிடித்துத் தூக்க மற்றவர்கள் மூவருமாகச் சேர்ந்து பெரும் பிரயத்தனத்துடன் அவரை விறாந்தையில் கொண்டு வந்து கிடத்தினார்கள். குயிலி ஓடோடிப் போய் தண்ணீர் செம்பை எடுத்து வந்து அவரது முகத்தில் அடித்தாள்.. அவளுக்கு தெளிந்தது மயக்கமல்ல. போதை என்பதை ஒரு நொடியில் புரிந்து கொண்டாள் செல்லம்.*

***

*மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டதை உணர்த்து கொண்டது செல்லம் மட்டுமல்ல. பிள்ளைகள் மூவரும் கூடத்தான். கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் வரை மதுவை நாடாது மனக்கட்டுப் பாட்டுடன் வாழ்ந்து வந்த வரை ஒரே நாளில் பிறந்த நாள் விருந்து என்று அழைத்து அவரை மதுவுக்கு அடிமையாக்கிவிட்டார்கள். அவருடைய சக ஆசிரியர்களும் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதை செல்லம் முழுமனதாக நம்பினாள்.*

*பாழ்பட்டுப் போவாங்கள். அவங்கள் நல்லாயிருப்பாங்களே. பார் நான் சொன்னனெண்டு. என்ரை வயித்தெரிச்சல் அவங்களை குறுக்கால தான் கொண்டு போகும்.*

*செல்லத்தின் வாயிலிருந்து ஆற்றாமையுடன் ஆவேசமான வார்த்தை கள் வெளி வரத் தொடங்கின. குயிலிக்கு அம்மாவின் செய்கை பிடிக்க வில்லை.*

*“நீங்கள் சும்மா இருங்கோம்மா. அவை வார்த்துக் குடுத்தால் இவருக்கு மதி எங்க போனது. அவங்கள் என்ன பால்ப்போச்சியிலையா விட்டு பருக்கினவங்கள். இவர் நான் குடிக்கிறதில்லை என்று ஒரு வார்த்தை சொல்லி மறுத்திருக்கலாம் தானே.”*

*“சரியாய்ச் சொன்னீங்களக்கா”*

*மகிழ் அக்காவுக்கு ஒத்தூதினாள். செல்லத்தின் நிலைமை தர்ம சங்கடமாகி விட்டது. பல்லைக் கடித்துக் கொண்டாள்.*

*“இண்டைக்கு வரட்டுக்கும் மனுசன். ரெண்டில ஒண்டு கேட்டு விடுறன்.” கறுவிக் கொண்டாள்.*

*பரமசிவத்தார் பரமசாதுவாக பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தார். வந்ததும் நேற்றைய தினம் எதுவுமே நடவாதது போல பதுங்கியவாறு கிணற்றடிக்குப் போய் கால் முகம் கழுவி வந்தவர் நெற்றியில் மூன்று திருநீற்றுக் குறிகளுடன் சாப்பிடுவதற்காக அடுப்படிக்குள் நுழைந்தார். செல்லமும் வழமைபோல் அவருக்கு உணவைப் பரிமாறினாள். அவளது மனம் குறுகுறுத்த போதும் சாப்பிடும் போது கதையைத் துவங்குவது உகந்ததல்ல என உள்மனம் எச்சரித்தது. சாப்பிட்டு முடியும் வரை காத்திருந்தாள்.*

“ஏனப்பா விருந்துக்கு போனமா சாப்பிட்டமா என்று வாறதுக்கு... கண் மண் தெரியாம குடிச்ச நீங்கள். பத்தாக்குறைக்கு வீட்டு வாசலில வந்து விழுந்தும் போனியள். அதுவே றோட்டிலையாயிருந்தால் கதி என்னவாயிருக்கும். வடிவாய் யோசிச்சு பாருங்கோ ஒருக்கா”.

பரமசிவத்துக்கு செல்லத்தின் கண்களை எதிர்நோக்க திராணி யில்லை. எங்கோ பார்வையை அலையவிட்டவாறு மனைவியிடம் மண்டியிட்டார்.

“இஞ்சாரும் செல்லம்! உண்மையாத்தான் சொல்லுறன். நான் உதொண்டும் எனக்கு வேண்டாமென்டிட்டுத் தான் இருந்த நான். உவன் கந்தசாமியும் சிவரியும் தான் ஊத்திக்கொண்டு வந்து வைச்சு என்னைக் குடிக்கச் சொல்லி வற்புறுத்தினவங்கள். அவங்களின்ரை தொல்லையால தான் நான் குடிக்க வேண்டி வந்திட்டுது. உண்ணானை செல்லம் இனி நான் குடிக்கமாட்டன். இது உன்மேல சத்தியம்”.

அம்மாவின் தலையில் தொட்டு அப்பா சத்தியம் பண்ணுவதைப் பார்த்து பெண்கள் மூவரும் மனம் குளிர்ந்து போயினர். அவர்கள் மறைத்திருந்து அவரகளது உரையாடலை ஒட்டுக்கேட்டதை பரமசிவமோ செல்லமோ அறியவில்லை. சந்தர்ப்ப வசத்தால்த்தான் பரமசிவம் குடித்திருக்கிறார் என எண்ணி செல்லமும் சற்று அமைதியடைந்தாள். ஆனால் அலை பாயும் குரங்கு மனதை அடக்கியாளும் திறன் பரமசிவத்திற்கு கிடையாது என்பதை அந்தப் பேதை அறிந்தாளில்லை.

காலையில் சகஜமாக அப்பாவிடம் முகம் கொடுத்துப் பேசத்தவறிய குயிலியும் தங்கைமாரும் மாலையில் அவருடன் கலகலப்பாகப் பேசி மகிழ்ந்தனர். இந்த உலகத்தில் ஒருவன் மனமாரத்திருந்தி நடக்க முற்பட்டாலும் கூட அவனைப் பாழுங்கிணற்றுக்குள் தள்ளிவிழுத்தக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மறுக்கமுடியாத உண்மை. அந்த வகையில் சிவராசா மாஸ்டரும் ஒருவர்.

தன்னுடன் தினமும் வந்து கூடிக்குலவி குடித்துத்திரிந்த பரமசிவம் மாஸ்டர் திருந்தி நல்லதொரு குடும்பஸ்தனாக வாழ்வது அவரது மனதுக்குப் பொறுக்கவில்லை. எனவேதான் அவரை அன்று நடந்த பார்ட்டியில் மடக்கி குடிக்க வைத்துவிட்டார்.

மாலை வேளைகளில் பரமசிவம் பனை வளவுக்குப் போய் வருவது வழக்கமாகிவிட்டிருந்தது. மகிழும் புகழும் கூடவே போவார்கள். பனங்காய்க் காலமது. எல்லோருமாகச் சேர்ந்து பனம் விதைகளைப் பொறுக்கி ஓர் இடத்தில் குவிப்பார்கள். வீட்டுக்குத் திரும்பும் போது பனை மரங்களிலிருந்து விழுந்த கங்குமட்டைகளை இரு கைகளிலும் வரிசையாக அடுக்கிக் கொண்டு வருவார்கள். குயிலி அந்த மட்டைகளை வாங்கி வீட்டின் பின் விறாந்தையில் ஒரு மூலையில் அடுக்கி வைப்பாள். பரமசிவம் வளவிற்குள் இருக்கும் மா பலா முருங்கை மரங்களைத் தடவி அவற்றி

லிருக்கும் பிரயோசனங்களை எடுத்து வருவார். அநேகமாக பலாக் குழைகளை மாட்டுக்கு தீவனமாகக் கொண் வருவது வழக்கம்.

அன்றும் அப்படித்தான். கையில் ஒரு முருங்கைக்காய் கட்டுடன் வந்தவர் செல்லத்தை அழைத்து அவளிடம் கொடுத்தார். செல்லமும் அதனை ஆவலுடன் வாங்கிக் கொண்டு உள்ளே போனாள்.

நாளைக்கு வெள்ளிக்கிழமை. முருங்கைக்காய்க்கு பலாக் கொட்டை யும் போட்டு ஒரு கறியும் வைச்சு ஒரு மிளகு ரசமும் வைச்சு விட்டால் போதும். எல்லாரும் விரும்பிச் சாப்பிடுவினம். நினைத்துக் கொண்ட மாத்திரத்தில் நிம்மதிப் பெருமூச்சு ஒன்று வெளியாகியது. வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

பரமசிவம் வீட்டின் முன் வாசற்படிக்கட்டில் அமர்ந்திருந்து ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது பார்வையில் எதற்காகவோ ஏங்கும் தவனம் தோன்றியதை அவதானித்தவள் உள்ளே போனாள். போனவள் திரும்பி வந்தபோது கையில் சுடச்சுட தேநீர் ஆவி பறந்து கொண்டிருந்தது.

“களைச்சுப் போனியளாக்கும். இந்தாங்கோ இதைக்குடியுங்கோ”.

கணவனிடம் நீட்டினாள். அவரும் இரு கைகளையும் நீட்டி வாங்கியவர் ஆவலடன் சுவைத்துக் குடிக்கத் தொடங்கினார். செல்லம் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.தேநீரைப் பருகிவிட்டு பாத்திரத்தை அருகில் வைத்தவர் கூறினார்.

“இஞ்சாரும் செல்லம் ! இண்டு ஒரே சோர்வாய் இருந்துது. நீர் தந்த தேத்தண்ணியைக் குடிச்சதும் தான் எப்பன் தென்பாயிருக்குது”.

“நல்லாய்த்தானே இருந்த நீங்கள். அண்டைக்கு அந்த நாசமறுப் பாங்கள் எதையோ ஊத்தித் தந்தப் பிறகுதான் உங்களுக்கு உந்தச் சோர்வும் களையும் வந்தது. இனியெண்டாலும் உவங்களுக்குப் பின்னால போய் எடு படாமலிருந்தியளெண்டால் போதும்”.

மனதில் தோன்றியதை அப்படியே கொட்டிவிட்டாள். கொட்டிய பின் அவளது மனதில் சிறிது அமைதி தோன்றியது. புரமசிவம் அவளது கண்களை நேராகச் சந்திக்க திராணியற்றவராய் வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்.

மேற்கு வானில் மாலைக்கதிரவன் மெதுமெதுவாகப் புதைந்து முற்றாக மறைந்து விட்டான். பூமி மாதா இருட்போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்ளத் தொடங்கினாள். செல்லம் எழுந்து போய் வீட்டிற்கு விளக்கேற்றிவிட்டு வந்தாள். குயிலி கன்றுக்குட்டியைப் பிடித்து கட்டி விட்டு வர பசு “ம்மா!” என அவலக்குரல் எழுப்பியது. குயிலி அதன் முகத்தை தடவி விட்டாள்.

“உன்னுடைய பிள்ளை பக்கத்தில தான் இருக்குது. நீ கத்தாத“

அவள் கூறியது விளங்கியது போல பசுவும் தனது தலையை ஆட்டியது. குயிலி தங்கைமார் இருவரையும் அழைத்து வந்து படிப்பதற்காக மூவரும் மேசை முன் அமர்ந்து கொண்டனர்.

***

காலை நேரம் பத்து மணி இருக்கும். ஏல்லோரும் பாடசாலைக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். செல்லம் பசுமாட்டை அவிழ்த்துக் கொண்டு போய் மேயக் கட்டிவிட்டு வந்தவள் அசதியுடன் அடுப்படித் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். உடல் அசதி மட்டும் அவளை ஆட்கொள்ளவில்லை. மனச்சஞ்சலம் அவளைக் குடைந்து கொண்டிருந் தது. அவள் தன் மனக்குறைகளை யாரிடம் போய் முறையிடுவது.... மனதுக்குள்ளேயே போட்டு குடைந்து கொண்டிருந்தாள்.

போன வாரம் ஆசையக்காவின் இளையமகளுக்கு தண்ணி வார்ப்பு நடந்தது. செல்லம் குடும்பத்தினருடன் விழாவிற்குப் போயிருந்தாள். பெரியக்காவும் கொழும்பிலிருந்து பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். செல்லம் தனது அக்காவின் வீட்டுக்காரியம் என்பதால் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்து கொண்டிருந்தாள். குயிலியும் அம்மாவுடன் கூட ஒத்தாசையாக நின்றிருந்தாள். மகிழ் ,புகழ் அங்கு வந்திருந்த சிறுவர்களுடன் சேர்ந்து ஓடியாடி விளையாடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஏதோ அலுவலாக அவ்விடத்துக்கு வந்த பெரியக்கா செல்லத்திடம் வினாவினாள்.

“இஞ்சார் செல்லம்! எங்கை உன்ரை கழுத்தில கொடியைக் காணல்ல...”

சிறிது தயங்கிய செல்லம் வாய்க்குள் முணுமுணுத்தாள்.

“அது வந்து ... அடைவில இருக்குதக்கா”

பெரியக்கா உருத்திரகாளியாக மாறினாள்.

“ஏன் கொடியை அடைவு வைச்ச நீ. இப்படி நல்ல காரியங்கள் நடக்கேக்க கழுத்தில கொடியில்லாமல் நிக்கிறது எங்களுக்குத் தான் வெட்கக்கேடு. கொடி இல்லையெண்டால் நீ வராமலேயே வீட்டிலை இருந்திருக்கலாம். இஞ்சை வந்து எங்களை பரிசு கெடுக்கிறதுதான் மிச்சம்.”

பொரிந்து தள்ளிவிட்டுப் போய்விட்டாள். குயிலி திடுக்கிட்ட வளாய் அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் நீர் பளிச்சிட்டதை அவதானித்தவளுக்கு பெரியம்மா மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஏழைகளை இந்தச் சமுகம் கிள்ளுக் கீரையாக மதிக்கும் என்பதை அவள் உணர்ந்திருக்கிறாள். ஆனால்.... கூடப்பிறந்த சகோதரமே இப்படி எள்ளி

*நகையாடி இழிவுபடுத்துவதை இன்றுதான் நேரில் அனுபவித்திருக்கிறாள்.. அவளுக்கு மனமே சரியில்லை. எந்தவித உற்சாகமுமில்லாமல் நிகழ்வில் ஒதுங்கி நின்று பங்கேற்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. அம்மாவின் மனச்சங்கடம் அவளுள் எதிரொலித்தது.*

*நிகழ்வு முடிந்து வீடு திரும்பியதும் குயிலி செல்லத்தைப் போட்டு உலுப்பினாள்.*

*“ஏன் அம்மா உங்கட தாலிக்கொடியை அடைவு வைச்ச நீங்கள்?”*

*“இல்லாமையால தான்.”*

*விரக்தியுடன் வந்தது பதில்.*

*“என்ன? அப்படி கஸ்டம் வந்தது உங்களுக்கு?”*

*“எப்ப எனக்கு கஸ்டமில்லாமல் வாழ்ந்திருக்கிறன். கொப்பர் சம்பளத்தில பாதிக்கு மேல குடிச்சிட்டு மீதியைத் தான் எனக்கு காட்டுவார். இந்தக் குஞ்சுகள் மூன்றையும் நான் பட்டினி போட ஏலுமோ? கொப்பரிட்டைக் கேட்டால் உழைக்கிறதெல்லாத்தையும் கொண்டந்து உனக்குத்தான் கொட்டுறன் என்று சொல்லுவார். நான் என்ன செய்ய.... நாலு வருசத்துக்கு முன்னால சோமர் பகுதி இந்தப் பசுவை விக்கப் போகினமாம் என்று அறிஞ்சு.... அதை வாங்கினாலாவது என்ரை பஞ்சம் தீரும் என்று யோசிச்சன். என்னட்ட எங்கால காசு. சீக்கிரமாய் மீட்டிடலாமெண்டு தான் நினைச்சு தாலிக்கொடியை அடைவுவைச்சுப் போட்டு இந்த லெட்சுமிப் பசுவை வாங்கினன். அதனால பிள்ளைகளின்ரை வயிற்றுப்பசியை போக்க முடிஞ்சுதே தவிர பணத்தைச் சேகரித்து அடைவை மீள முடியாமல் போயிட்டுது.”*

*தலையைக் குனிந்து கொண்டாள் செல்லம்.*

*அம்மாவின் நிலையை எண்ணி ஆதங்கப்படுவதை விட்டுவிட்டு ஆக்கபூர்வமாக எதையாவது செய்ய வேண்டும் என அந்தப் பிஞ்சு உள்ளம் கங்கணம் கட்டிக் கொண்டது. இதை அறிந்திடாத செல்லம் எப்படியாவது மிச்சம் பிடித்து தாலிக்கொடியை மீட்டிட வேண்டும் என உறுதி பூண்டாள். சென்ற வருடம் நாம்பன் கன்றை விற்றபோது அந்தப்பணத்தில் வட்டியைக் கட்டி முதலிலும் சிறிது தொகையைக் கொடுத்திட்டாள். ஊருக்குள் இருந்த மலாயன் பென்சனியர் சோமரிடம் தான் அடைவு சிக்கியிருந்தது.*

*தீவிரமாகச் சிந்தித்த செல்வம் ஒரு முடிவுக்கு வந்தாள். அவரும் இப்ப குடிக்கிறதை விட்டபடியால மாதம் ஒரு ஐம்பது ரூபாயாவது மிச்சம் பிடிக்கலாம். ஆனால் அப்பிடி மிச்சம் பிடித்து பணத்தைச் சேர்த்து அடைவை எடுப்பதானால் ஒரு வருடமாவது செல்லும். அந்த ஒரு வருடத்துக்கும் வட்டி வேறு வளர்ந்து விடுமே. என்னதான் செய்யலாமென சிந்தித்தவளுக்கு சீட்டுக்கார சின்னம்மாக்காவின் நினைவு வந்து பொறி தட்டியது. ஆ... அதுதான் சரி அவவிட்டை ஒரு சீட்டைப் போடுவம்.*

*ஏலம் குறைஞ்சு வரும் போது சீட்டை எடுத்தால் அடைவை மீளலாம். இதைத் தவிர வேறு வழியே இல்லை.*

*குழம்பிக் கிடந்த மனம் ஒரு நிலைக்கு வந்தது. இருந்த போதிலும் அவளது மனத்தின் ஒரு மூலையில் சிறு நமைச்சல் இருக்கத்தான் செய்தது. ஆசையக்காவின்ரை மகளின்ரை தண்ணிவாப்புக்கு பெரியக்காவும் சின்னாக்காவும் வந்து நின்று சிறப்பித்தது மட்டுமல்லாமல் இருவரும் ஆளுக்கொரு நகையாக அள்ளிக் கொடுத்திச்சினம். என்ரை பிள்ளை சாமத்தியப்பட்டதும் அறிவிக்க... ஆளுக்கு நூறு ரூபா காசை அனுப்பிப் போட்டு இருந்திட்டினம். என்னதான் தங்கச்சி என்ற உறவிருந்தாலும் நான் ஏழைதானே. அதனால தான் என்னை உதாசீனப்படுத்தி நடக்கினம். இது குயிலிக்கு நல்லாய் விளங்கிப் போச்சுது. மற்றதுகள் இரண்டு பேரும் சின்னாக்கள் தானே. அதுகளுக்கு விளங்கேல்ல. ஆனால் ஆசையக்காவைக் குறை சொல்லேலாது. அவதான் எங்களோட இஷ்டமாய் நடந்து கொள்ளுறவ . அவவுக்காகத்தானே நாங்களும் எல்லாருமாய்ப் போய் நின்று பாடுபட்ட நாங்கள். மற்றவை எப்பிடியும் போகட்டும். நமக்கென்ன. விட்டுத்தள்ளு.*

*அங்கலாய்த்த மனம் ஒரு முடிவுக்கு வந்தது. என்னட்ட ஒன்றுமில்லா விட்டாலும் இந்தப் பிள்ளைகளை வடிவாய் படிப்பீச்சு விடவேணும். கங்கணம் கட்டிய மனத்தின் சுமை குறைந்து லேசாகியது.*

*“அத்தாச்சி! சந்தைக்கு வாறியேணை”*

*கமலம் மச்சாளின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தவள் தன்னை சுதாகரித்துக் கொண்டாள்.*

*“இல்லையெண மச்சாள். முருங்கைக்காய் கிடக்குது. சமைப்ப மெண்டு பாக்கிறன்”.*

*“அண்ணருக்கு மச்சம் வேண்டாமே?”*

*“வெறி போட்டாத்தான் மச்சம் இல்லையெண்டா பிரச்சினை கிளம்பும். இப்ப கொஞ்சம் சாதுவாயிருக்கிறார். எப்ப பிறகும் அந்தப் பழக்கம் தலை தூக்குமோ எண்டு பயமாயிருக்குதெண மச்சாள்.”*

*“நீ கவலைப்படாதையெண அத்தாச்சி. பிள்ளையள் வளந்திட்டா ளவையெல்லே. இனி மனுசன் அடங்கியிடும்.”*

*“என்னவோ மச்சாள். நான் அந்த முருகனிட்டத்தான் என்ரை மனப்பாரத்தை இறக்கி வைச்சிட்டு இருக்கிறன் . அவர் தான் துணை.”*

*கை கூப்பி கண்களை மூடி அந்த முருகப்பெருமானை மனக்கண்ணில் வைத்துப் பூசித்துக் கொண்டவளிடம் விடை பெற்றாள் கமலம்.*

*“நேரத்துக்குப் போனாத்தான் ஏதும் நல்லாய் வேண்டலாம். நான் வாறணென அத்தாச்சி.”*

***

பாலனும் பஞ்சமும் பத்து வருசம் என்று சொல்லுவார்கள். செல்லம் விசயத்தில் அது உண்மையாகிக் கொண்டு வருகிறது

மாலை வேளைகளில் குயிலி தன் தங்கைமார்களையும் உதவிக்கு அழைத்து கிணற்றடியை அண்டிய பகுதியில் வீட்டுத் தோட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தாள். அப்பாவும் அவளுக்கு அனுசரணையாக நடந்து கொண்டார். பாடசாலை நண்பிகள் மூலம் நல்ல விதைகளைப் பெற்று அவற்றைப் பயிரிட்டு நீரூற்றி வளர்த்தாள். லட்சுமிப் பசுவின் எருவில் பயிர்கள் சேட்டமாக வளர்ந்ததுடன் நல்ல பயனையும் தரத் தொடங்கின. வீட்டுத் தேவை போக எஞ்சியவற்றை காலையில் அப்பா பாடசாலைக்குப் போகும் போது கொடுத்து விடுவாள். அவரும் ஒழுங்கை முனைப்பிலிருந்த கடையில் கொடுத்து விடுவார். அந்தப்பணம் குயிலியின் உண்டியலுக்குப் போய்விடும்.

பரமசிவத்துக்கு இப்போது பயிர்ச்செய்கையில் நாட்டம் வந்து விட்டது. வாழைக்குட்டிகளை வளவிற்குள் நட்டு அதற்கு நீர் பாய்ச்சத் தொடங்கினார். நேரம் கிடைக்கும் போது செல்லமும் அவர்களுக்கு உதவியாக இருந்தாள். வாழைப்பாத்திகளில் முளைத்திருக்கும் புல் லட்சுமிப் பசுவிற்கு வயிற்றை நிரப்பியது. லட்சுமி சுரந்தபால் அவர்களின் வயிற்றுக்கு ஆதாரமானது.

பரமசிவம் இப்போது முற்றாக மாறிவிட்டார். சுறுசுறுப்பாக ஒரு நல்ல மனிதனாக அவர் நடமாடத் தொடங்கியிருந்தார். முன்பெல்லாம் பிள்ளைகள் அவருக்குக் கிட்ட நெருங்குவதற்குத் தயங்குவார்கள். ஆனால் .... இப்போது நிலமை முற்றாக மாறிவிட்டது. எதற்கெடுத்தாலும் அப்பாவிடம் தான் போய் ஆலோசனை கேட்பார்கள். அவரும் தானுண்டு தன் வேலை வீடு என்று அந்த வட்டத்துக்குள்ளேயே சுழலத் தொடங்கியிருந்தார்.

காலம் கனிந்து வர குயிலிக்கும் ஓ.எல். பரீட்சை நெருங்கிவிட்டது. செல்லம் அவளை இப்போது வீட்டில் எந்த வேலையும் செய்ய விடுவதில்லை. தங்கைமாரும் அவளுக்கு எதுவித இடைஞ்சலும் கொடுப்பதில்லை. குயிலியும் தன்னால் இயன்றவரை படிப்பில் கவனம் செலுத்தினாள். ஏதும் ஐயம் ஏற்படுமிடத்து அப்பாவை நாடுவாள். அவரும் சிரத்தையுடன் அவளது சந்தேகத்தை தீர்த்துவைப்பார்.

ஒருவாறு பரீட்சையும் நடந்து முடிந்துவிட்டது.குயிலி சிறைக் கூடத்தில் இருந்து விடுபட்டது போன்றதோர் உணர்வில் திளைத்துப் போனாள். சமையலுக்கு ஒத்தாசை செய்து அம்மாவின் வேலைப்பளுவைக் குறைத்தாள். வீட்டுத் தோட்டத்தை எட்டிப்பார்த்து ரசித்தாள். அப்பா புதிது புதிதாக ஏதோ கன்றுகள் எல்லாம் நாட்டி வைத்திருந்தார். தண்ணீரை அள்ளி இறைத்து இளம்பயிர்களைக் குளிரச் செய்தாள்.

இருந்தாற்போல் அவளுக்கு வீட்டை விட்டு வெளியே எங்காவது போய்வர வேண்டும் என்ற குறுகுறுப்பு ஏற்பட்டது. அம்மாவின் அனுமதி கேட்டாள்.

"அம்மா! தேவகி மச்சாளைப் பார்த்துக் கன காலமாகீட்டுது.. வாங்கோவன் ஒருக்கா போய் பாத்திட்டு வருவம்."

செல்லத்தினால் மகளது பேச்சைத் தட்ட முடியவில்லை. ஒரு நாள் மாலை அவளை மாமி வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அவர்கள் போனபோது கமலம் வீட்டில் இருக்கவில்லை. தேவகி மட்டும் தனியே இருந்தாள். அவர்களைக் கண்டதும் அவளுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. அன்புடன் மாமியாரையும் மச்சாள் குயிலியையும் வரவேற்று உபசரித்தாள்.

"மச்சாள்! இந்த வருசம் ஏ.எல் சோதினை எடுக்கிறீங்களோ?"

குயிலி அக்கறையுடன் விசாரித்தாள்.

"இல்லை குயிலி. ஒருக்காத்தான் எடுத்தநான். அவ்வளவு நல்ல றிசல்ற் வரவில்லை. படிச்சது போதும் என்று அம்மா சொல்லிப்போட்டா. இப்ப நான் தையல் கிளாசுக்குப் போறநான்."

அவளது பதிலைக் கேட்டதும் குயிலிக்கும் தையல் பழகவேண்டும் என்ற ஆசை தலைதூக்கிவிட்டது. அம்மாவிடம் கெஞ்சினாள்.

"அம்மா ! நானும் மச்சாளோட தையல் கிளாசுக்குப் போகட்டே. சோதினை மறுமொழிவரும் மட்டும் நானும் கொஞ்சம் பழகிடலாமல்லே."

செல்லத்துக்கும் அது சரியானதாகவே தோன்றியது.

"பொறு பிள்ளை எதுக்கும் கொப்பரிட்டக் கேட்டுப்போட்டு முடிவெடுக்கலாம்."

தேவகியும் மாமியிடம் குயிலிக்காக சிபார்சு செய்யமுற்பட்டாள்.

"மாமி! இப்ப நான் தனியாத்தானே போறநான். குயிலியும் கூடவந்தால் எனக்கும் துணையாயிருக்கும். அவவும் தைக்கப் பழகீடுவா."

"நீ சொல்லுறது சரிதான் பிள்ளை. எதுக்கும் அவள் தகப்பனிட்ட ஒரு சொல் கேக்க வேணும் கண்டியோ"

செல்லம் ஒரேடியாகச் சொல்லிவிட்டாள். தேவகி அவர்களுக்கு தேநீர் தயாரிப்பதற்காக சமையலறைப் பக்கம் போனாள். குயிலி வீட்டின் முன்புறமிருந்த பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதில் ஈடுபட்டாள். பூக்கள் என்றால் அவளுக்கு கொள்ளை ஆசைதான். ஆனால் பூக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுவதிலும் ஏதும் மரக்கறிப் பயிர்களைப் பராமரித்தால் அது பயன் தரும். நாலு காசு சேமிக்கலாம் என்பது அவளது மனதில் பதிந்துவிட்டதால் அவள் அதில் ஈடுபடுவதில்லை.

திடீரென ஒரு சைக்கிள் அவளைக் கடந்து வந்து வீட்டுவாசலில் நின்றது. அதிலிருந்து குதித்து இறங்கிய ரகு அவளைக் கண்டு விட்டான்.

“என்ன புது ஆக்களெல்லாம் வீட்டுக்கு வந்திருக்கினம். எங்கட வீடெல்லாம் கண்ணுக்குத் தெரியுதோ”

சீண்டியவனை அவள் இடைவெட்டினாள்.

“நீங்கள் மட்டும் அடிக்கடி எங்கட வீட்டுக்கு வந்து போறியளாக்கும். ஆம்புளைப்புள்ளையளுக்கே வீட்ட வர நேரமில்லாமக் கிடக்கு. அதுக்குள்ள பொம்பிள்ளைப் பிள்ளையள் மட்டும் அடிக்கடி வீட்ட வரவேணுமெண்ட நினைப்பு போல.”

“ஐயோ ! நான் கேட்டது தப்புதான். தெரியாம வாயைக் குடுத்திட்டு மன்னிப்பு கேட்க வேண்டியிருக்கு.”

பிடரியைச் சொறிந்து கொண்டவன் மீண்டும் வாய் திறந்தான்.

“எப்படி எக்ஸாம் எல்லாம். எட்டு டி எதிர்ப்பார்க்கலாமோ?”

“பகிடியைப் பார். எனக்கு எட்டு சி வந்தாலே போதும். உங்கட நோட்ஸ் எனக்கு படிக்கிறதுக்கு பெரிய உதவியாய் இருந்துது. தாங்க்ஸ் வெரி மச்”

“தாங்க்ஸ் மட்டும் தானா?”

சிரித்துக் கொண்டே கேட்டவனை வார்த்தைகளால் மடக்கினாள்.

“வாற ஆகஸ்ற்றிலை எக்ஸாம் எழுதப் போறியள். அதிலை நாலு ஏ எடுக்கிற வழியைப் பாருங்கோ.”

“அது எனக்கு தெரியும் தானே.”

படீரென்று வந்தது பதில்.

சொன்னவனை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தாள், குயிலி. ரகு அத்தான் நிறையவே மாறிவிட்டிருந்தான். அரும்பு மீசையும், நெற்றியில் சுருள் சுருளாக விழுந்திருந்த மயிரும் அவனது தோற்றத்திற்கு அழகு சேர்த்தன. ஒரே நொடியில் அந்த உருவம் அவளது மனத்திரையில் பதிந்து கொண்டது. கிணற்றுத் தண்ணீர்தானே , அதனை வெள்ளமா அடித்துக் கொண்டு போகப்போகிறது, என மனம் இறுமாப்படைந்தது.

அரவங்கேட்டு வெளியே எட்டிப்பார்த்த தேவகி குரல் கொடுத்தாள்.

மாமி! தம்பி வந்திட்டான்.

அவர்களுடைய உரையாடல் அத்துடன் நின்று போனது.

***

சுட்டுப் பொசுக்கும் வெய்யிலில் தையல் வகுப்புக்கென புறப்பட்டுப் போன குயிலி , வீடு திரும்பும்போது மாலை வெய்யிலும் மறைந்து கருக்கல் பொழுது இலேசாக புறச்சூழலைக் கவ்விக் கொள்ளத் தொடங்கியிருந்தது. அவசர அவசரமாக உடைமாற்றிக் கொண்டு தான் அன்றாடம் செய்யும்

வேலையைக் கவனிக்க கொல்லைப்புறம் நோக்கிப் போனாள்.

அங்கே..... லட்சுமி தனது மகளை அரவணைக்கும் நோக்கத்துடன் , அவளது முகம், காது , உடல் என அவயவங்களை நாவினால் தடவி, தனது அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. மெதுவாக அருகில் வந்த குயிலி, கன்றுக் குட்டியை இழுத்து வந்து வழமையாகக் கட்டி வைக்கும் கப்பில் கட்டியவள், லட்சுமியிடம் போய் அதனையும் தடவிக் கொடுத்தாள். லட்சுமி அவளது கையையும் தனது சொரசொரப்பான நாவினால் நக்கி விட்டது. பொழுது கருகி விட்டதை உணர்ந்து கொண்டவளாய் முகம் கழுவுவதற்காக கிணற்றடியை நோக்கி விரைந்தாள்.

முகம் கழுவி விட்டு வந்தவள் வீட்டிற்குள் நுழைய முற்பட்டபோது தான் வாசற்படியில் கடும் யோசனையுடன் அமர்ந்திருந்த அம்மாவைக் கவனித்தாள்.

“என்னம்மா! ஏதோ கப்பல் கவிழ்ந்தது போல யோசிச்சுக் கொண்டிருக்கிறியள். என்ன ? பிரச்சனை”

அம்மாவை நோக்கி கேள்விக் கணையை வீசியவாறு ஓடிப்போய் கடவுளை வணங்கி விட்டுத் திரும்பியவள் அம்மாவின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டாள்.

“என்னம்மா பிரச்சனை? அப்பா எங்கை போயிட்டார்?”

ஒரு வேளை அப்பாதான் திடீரென்று முருங்கை மரத்தில் ஏறி விட்டாரோ? என மனம் ஒருகணம் ஏங்கியது.

“கொப்பர் மாமி வீட்டை போனவர், தங்கச்சிக்காரியோடை கதைச்சுக் கொண்டிருக்கிறாராக்கும், வந்திடுவார். ”

அம்மாவின் பதில் அவளுக்கு வயிற்றில் பால் வார்த்தது.

“பின்னை என்னம்மா யோசிக்கிறியள் ?”

“சின்னம்மாக்கா சீட்டுக்காசை கொண்டந்து தந்திட்டுப் போறா”

“நல்ல விசயம்தானே, நாளைக்கே போய் தாலிக்கொடியை மீட்டுக்கொண்டு வந்திடுங்கோ. “

“அங்கைதானே பிள்ளை வில்லங்கம் இருக்குது. ”

“என்னம்மா சொல்லுறியள், எனக்கொண்டும் விளங்கேல்ல”

“நான் சீட்டு எடுத்த உடனேயே சோமர் வீட்டை போய் கணக்குப் பார்த்தனான். சின்னம்மாக்கா தந்த சீட்டுக் காசில அடைவை மீளேலாது போல கிடக்கு. இன்னும் இருநூறு ரூபா வேணும். சோமர் சொல்லிப் போட்டார். வட்டியும் முதலுமாய் முழுக்காசும் தந்தால்தான் பொருளைத் தருவாராம். அதுதான் என்ன செய்யலாம் எண்டு யோசிக்கிறன்”

“பூ...உவ்வளவுதானே, இவ்வளவு காலத்திற்குப் பிறகு தாலிக்கொடி

கைக்கு வரப்போகுதே என்று சந்தோசப்படாமல் .. உதென்ன முகத்தை உம் மென்றுவைச்சுக் கொண்டிருக்கிறியள்.”

“சும்மா போ பிள்ளை, உனக்கு எப்ப பார்த்தாலும் பகிடிதான். கொப்பருக்கு சம்பளம் வந்த பிறகுபோய் அடைவை எடுப்பமெண்டு யோசிக்கிறன். ஆனால் ஒருமாத வட்டியெல்லே கூடிப்போம்.”

கலகலவெனச் சிரித்தாள் குயிலி, சிரித்துவிட்டு நிதானமாகச் சொன்னாள்.

“அம்மா உப்பிடியான அவசரத் தேவைக்கு உதவும் என்றுதானே நான் உண்டியலிலை காசு சேர்க்கிறன்”. கடவுளே! இருநூறு ரூபாய்க்கு குறையாமல் அதிலை இருந்திட வேணும்.

உண்டியலை எடுத்துவரப் புறப்பட்டவளை செல்லம் இழுத்து நிறுத்தினாள்

“குயிலி! சொன்னால் கேள் பிள்ளை , விளக்கு வைச்ச பிறகு இருப்பிலை இருக்கிற காசை எடுக்கக் கூடாது. எப்பன் பொறு. பொழுது விடியட்டும்.”

குயிலிக்கு மனதில் சந்தோசம். தனது சேமிப்பு ஒரு அவசரத் தேவைக்கு உதவப் போவதில் அவளுக்கு மகா திருப்தி. இன்னும் நிறையக் காசு சேமிக்க வேண்டும் என மனதிலும் ஓர் உந்துதல் ஏற்பட்டது. படலையில் யாரோ காறித்துப்பும் சத்தம் கேட்டது.

“என்ன! தாயும் மகளுமாய் குந்தியிருந்த கதையளக்கிறியள். குயிலி ! நீ போய் தங்கச்சியவைக்குப் பாடம் சொல்லிக்கொடு.”

இருளைக் கிழித்துக்கொண்டு வந்த பரமசிவத்தின் கட்டளையை வெறுப்புடன் ஏற்றுக் கொண்டவளாய் குயிலி எழுந்து உள்ளே போனாள். இப்பொழுது பரமசிவம் வந்து செல்லத்தின் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

“என்னவாம் உங்கடை அருமைத் தங்கச்சி”

கணவனைச் சீண்டினாள், செல்லம்

“அவள் என்னத்தைச் சொல்லுறது. பிள்ளையளின்ரை படிப்பைப் பற்றித்தான் கதைத்துக் கொண்டிருந்தம்.”

“மச்சாள் அவசரப்பட்டு தேவகியை படிப்பாலை நிப்பாட்டிப் போட்டா, இப்ப அவளுக்கென்ன, வயசு கிடக்குத்தானே. இன்னு மொருக்கா சோதினையை எடுத்துப் பார்க்க விட்டிருக்கலாம்.”

“அவள் பெட்டைக்குப் படிக்க விருப்பமில்லையாம். தங்கைச்சிக்கு ரகுவைப் பற்றிதான் யோசனை. வருகிற ஆவணியிலை சோதினை எடுக்கப் போறான். கம்பஸ் கிடைக்குதோ இல்லையோ எண்டு இப்பவே புலம்பத்

தொடங்கி விட்டாள்."

"உண்மையிலை கமலம் மச்சாளுக்கு ஏதோ விசர்தான் பிடிச்சிருக்கு, ரகு நல்ல கெட்டிக்காரப் பிள்ளை. நல்லாய்ப் படிக்கிறான். ஓ எல் இலையும் நல்ல றிசல்ட் எடுத்தவன். ஏ எல் இலையும் நல்ல றிசல்ட் எடுப்பான் தானே. அதுக்கேன் இப்பவே மனுசி கவலைப் படுகுது? இப்ப எங்களைப் பாருங்கோ, நாங்கள் மூன்று பெட்டைக் குஞ்சுகளையும் வைச்சுக் கொண்டு சீவியத்துக்கே மட்டு மட்டான நிலைமையிலை இருக்கிறம். நாங்கள் தான் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க வேணும்"

"செல்லம்! நீர் சொல்லுறதும் சரிதான். குயிலி படிச்சு எப்பன் ஒரு நல்ல நிலைக்கு வந்திட்டாள் என்றால்..... அவள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளுவாள் என்ற நம்பிக்கை எனக்கிருக்குது".

"அவளை நாங்கள் ரியூசனுக்கும் அனுப்பிறதில்லை. இருந்தாலும் பிள்ளை கஸ்டப்பட்டு படிச்சவள். பாஸ் பண்ணிடுவாள் என்றுதான் நினைக்கிறன்."

இருவருக்குமே குயிலியின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது. இதுதான் நிதர்சனமான உண்மையுமாகும்.

"இஞ்சாருங்கோப்பா நான் உங்களிட்ட ஒரு விசயத்தை , மறைச்சுப் போட்டன்." பீடிகையுடன் பேசத் தொடங்கிய செல்லத்தை அதிசயத் துடன் ஒருமுறை உற்றுப் பார்த்தார், பரமசிவம். செல்லம் ஒரு அடக்கமான தர்மபத்தினி என்று அவரது கணிப்பு. அப்படியாக தன்மனதில் உயரிய இடத்தைப் பிடித்திருக்கும் செல்லம், இப்போது என்ன சொல்லப் போகிறாள்?. மனதில் ஒரு தவிப்பு, கேள்விக் குறியுடன் தன்னை எதிர் நோக்கியவரை அதிகநேரம் காக்க வைக்காமல் வாய்திறந்தாள், செல்லம்.

"நாலஞ்சு வருசத்திற்கு முந்தி நான் என்னுடைய தாலிக்கொடியை அடைவ வைச்சிட்டுத்தான் எங்கட லெட்சுமிப் பசுவை விலைக்கு வாங்கின னான். அப்பெல்லாம் நீங்கள் சம்பளக் காசிலை ஒரு கொஞ்சத்தைத்தான் கண்ணில காட்டுறநீங்கள். அரையும், குறையுமாய் பிள்ளைகள் பட்டினி கிடக்கிறதைப் பார்த்து பொறுக்காமல்தான் நான் அந்த முடிவெடுத்தன். பால் விக்கிற காசிலை அடைவை மீட்டிடலாம் என்று பார்த்தால் வீட்டுச்செலவையே சமாளிக்க முடியேல. பேந்தென்னென்று அடைவை எடுக்கிறது? நீங்களும் இதுநாள் வரைக்கும் உந்தப் பசுவை என்னென்று வாங்கின நீ என்று ஒரு கேள்வி கேட்கேல்லையே, அந்தளவிற்கு குடிவெறியிலை உங்கட காலம் போச்சுது.

செல்லத்தின் கண்களை எதிர்நோக்கத் திராணியற்றவராய் தலை குனிந்தார், பரமசிவம்.

"என்ன சொல்லுறீர் செல்லம், இன்னும் அடைவிலைதானே கிடக்கு"

"அதைத்தான் நாளைக்கு அடைவை மீளப்போறன் எண்ட

விசயத்தைதான் உங்களிட்டை சொல்ல வந்தநான்.”

“எங்கால காசு”

“இப்பதான் நீங்கள் முழுசாய் சம்பளத்தைக் கொண்டந்து என்னட்டைத் தாறியள். நான்அதிலை மிச்சம் பிடிச்சு சீட்டுப் போட்டநான். இந்தமாதம் சீட்டை எடுத்தும் கொஞ்சக்காசு பத்தாமல் போச்சு. உவள் பிள்ளை குயிலி மரக்கறி வித்த காசு சேமிச்சு வைச்சிருக்கிறாளாம். தாறன் எண்டவள்”

முதல்முறையாக பரமசிவத்திற்கு மனைவிமீதும் , மகள்மீதும் மதிப்பு ஏற்பட்டதுடன், பெருமிதமாகவும் இருந்தது.

***

குயிலியின் பரீட்சைப் பெறுபேறு வெளியாகி , அவளும் ஏ.எல் வகுப்பில் வர்த்தகப் பிரிவில் படிக்கத் தொடங்கி விட்டாள். பரம சிவத்துக்கு இப்போது குடும்பத்தின் மீது அக்கறை அதிகரித்திருந்தது. குயிலிக்குக் கிடைத்த பெறுபேறு அவரது மனதுக்குத் திருப்தியாக இருந்தது. அவளாகவே வர்த்தகப் பிரிவைத் தெரிவு செய்தபோது அவர் அதை ஆட்சேபிக்கவில்லை. படிக்கப்போறது அவள்தானே. தான் விரும்பிய துறையில் படிப்பைத் தொடரட்டும் என அனுமதித்து விட்டார். எனினும் ஏ.எல் வகுப்பானதால் டியூசன் மிக அவசியம் எனக் கருதினார். அவரே அந்தக் காலத்தில் எஸ்.எஸ்.ஸி வரைதான் படித்து சித்தியெய்தி யிருந்தார். அந்தக்காலம் ஆனதால் உடனே அவருக்கு வேலை கிடைத்து விட்டது. இப்போதெல்லாம் கல்வியில் பெரும் போட்டி நிலவுகிறது. டியூசனுக்குப் போய்ப் படித்தால்தான் ஓரளவு நல்ல பெறுபேறு எடுக்க முடியும். விஞ்ஞான பாடங்களுக்கு அங்குள்ள மாணவர்கள் யாழ்ப்பாணம் தான் போய்ப் படிக்கிறார்கள். வர்த்தகம் என்ற படியால் சாவகச்சேரியில் இருக்கும் டியூட்டரிக்கு அனுப்பலாம் என முடிவெடுத்துக் கொண்டார். செல்லமும் அவரது கூற்றை ஆமோதித்தாள்.

பரமசிவம் மகளை அழைத்துப் போய் டியூட்டரியில் சேர்த்து விட்டு வந்தார். குயிலிக்கு வாழ்க்கை ஒரு புது அத்தியாயமாகத் தோன்றியது. டியூட்டரிக்குப் போய் வரும் அனுபவம் அவளுக்கு முதலில் களைப்பையும் சோர்வையும் தந்தபோதிலும் பின்னர் அவள் அந்த கற்கை நெறிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாள். காலப்போக்கில் அது அவளது மனதிற்கு இதமான பொழுதுபோக்காக அமைந்து விட்டதுதான் உண்மையான நிலைப்பாடு. தன்னை முற்றுமுழுதாக கற்றல் செயற் பாட்டுக்குள் அமிழ்த்திக்கொண்டாள்.

பரமசிவமும் செல்லமும் மகளது எதிர்காலம் பற்றிய கற்பனைகளில் மூழ்கிப்போனவர்களாய் தமது காலத்தைக் கழித்தனர். குயிலிக்கு இப்போதெல்லாம் தனது வீட்டுத்தோட்டத்தைப் கவனிக்க நேரமில்லை. பரமசிவத்தார் தானே அந்தத் தோட்டத்தைப் பொறுப்பெடுத்து கவனிக்கத்

தொடங்கினார்.செல்லம் காலைவேளைகளில் மரக்கறிகளைப் பறித்து அவரிடம் கொடுத்து விடுவாள். அவர் கொண்டு வந்து கொடுக்கும் பணத்தை அப்படியே உண்டியலில் போட்டு விடுவாள். தனக்கு இப்படியான ஒரு வாழ்க்கையை அமைத்துத் தந்த முருகப்பெருமானை வழிபட அவள் எப்போதும் தவறியதில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. செல்லம் அவசர அவசரமாக இரவுச்சமையலையும் வேளைக்கே முடித்துவிட்டு தெய்வ தரிசனத்திற்காக கோயிலுக்குக் கிளம்பினாள். மகிழையும் புகழையும் அழைத்து பனை வளவுக்குள் மேயக் கட்டியிருக்கும் பசுக்களை அவிழ்த்து வந்து கட்டுமாறு கூறினாள். கூறியதும்தான் தாமதம். புகழ் ஒரேயடியாகப் பொரிந்து தள்ளிவிட்டாள்.

"அக்காவை மட்டும் டியூசனுக்கு அனுப்பிவிட்டு எங்களைக் கொண்டு வேலை வாங்கப் பாக்கிறியள். அவ மட்டும் சுகமாக உலாத்திக் கொண்டு வந்து றெஸ்ட் எடுத்துக் கொண்டிருக்கட்டும்."

மகளின் இந்த எதிர்பாராத வார்த்தைகளைக் கேட்டு செல்லம் உள்ளம் குமுறிப் போய்விட்டாள்.

"புகிழ்! ஏன் இப்படி கூச்சல் போடுகிறாய். கொக்கா ஏ.எல். படிக்கிற பிள்ளை அவளுக்கு டியூசனுக்குப் போய் படிக்க வேண்டிய தேவை இருக்கு. எக்கணம் நீயும் ஓ.எல். பாஸ் பண்ணினால் உன்னையும் டியூசனுக்கு அனுப்புவம் தானே."

"ஓ... நல்லாய்த்தான் அனுப்புவியள். உங்களுக்கு அவதானே உசத்தி"

செல்லத்துக்கு ஆத்திரம் உச்சத்திற்கு ஏறிவிட்டது.

"எல்லாம் நான் கோயிலுக்கு போய்விட்டு வந்து கவனிக்கிறன். இப்ப மாடுகளைக் கொண்டந்து வளவுக்கை கட்டுங்கோ"

சொல்லிக்கொண்டே எட்டி நடந்தாள் செல்லம். ஆத்திர மேலீட்டி னால் இதயம் படபடத்தது. வரவர இவள் புகழினியின் போக்கே சரி யில்லை. எதற்கெடுத்தாலும் குயிலியுடன் போட்டிபோடத் துவங்கியிருக் கிறாள். இன்றைக்கு இவர் வரட்டுக்கும். அவரிட்டைச் சொல்லி புகழை அறுக்கை பண்ணி வைக்க வேணும் அவளுடைய நடையை விடவும் வேகமாக கொதித்தெழுந்தது மனம்

பொழுது கருகும் நேரத்தில் வீடுதிரும்பினாள் செல்லம். குயிலி வீட்டுக்கு விளக்கேற்றி வைத்திருந்தாள். அம்மாவைக் கண்டதும் ஓடோடி வந்து கோயிற் பிரசாதத்தை பயபக்தியுடன் இருகைகளாலும் வாங்கிக் கொண்டு உள்ளே போனாள். செல்லம் தனது மற்றைய இரு பிள்ளைகளை யும் தேடி பார்வையைச் சுழல விட்டாள். அவர்கள் அவளது கண்களில் தென்படவில்லை. வீட்டின் கோடிப்புறத்திலிருந்து பரமசிவம் வந்து கொண்டிருந்தார். செல்லத்தைக் கண்டதும் அவள் மீதுபாய்ந்தார்.

“என்ன பழக்கம் பழக்கி வைச்சிருக்கிறீர் அவள் புகழினிக்கு. எதுக்கெடுத்தாலும் வாய் காட்டிக் கொண்டிருக்கிறாள்.”

கணவனின் சீற்றத்தை அவதானித்த செல்லத்துக்கு ஓரளவு விசயம் புரிந்துவிட்டது வரவர புகழினியின் போக்கே சரியில்லை எவருடனும் சட்டென்று வாய் வாதத்தில் துவங்கிவிடுகிறாள். தணிந்த குரலில் கணவனிடம் வினவினாள்.

“என்னப்பா நடந்தது?”

“அது ஒன்றுமில்லை செல்லம். தோட்டத்துக்கை கொஞ்ச புல்லு புடுங்கினநான். அதைக் கொண்டு வந்து கன்றுக்குட்டிக்கு போட்டுவிடச் சொல்லி புகழைக் கூப்பிட்டுக் குடுத்துவிட்டன். அவள் புறுபுறுக்கத் தொடங்கிவிட்டாள். எல்லாத்துக்கும் உங்களுக்கு நான்தானோ இடம் கண்ட நான். ஏன் அக்காஜி குடுத்துவிடலாம் தானே என்று எதிர்த்து என்னையே கேள்வி கேட்கிறாள். எனக்கு வந்த கோபத்துக்கு எட்டி தலையில நறுக்கென்று ஒரு ஒரு குட்டு வைச்சநான். அங்கை கோடியில நிண்டு அழுது கொண்டிருக்கிறாள் போய்ப் பாரும்”.

செல்லத்துக்கு ஒன்று மட்டும் புரிந்துவிட்டது. புகழுக்கு அக்கா மீது பொறாமை என்னும் விதை வேரூன்றி முளை விடத் தொடங்கியிருக்கிறது. இதை எப்படியாவது முளையிலேயே கிள்ளி எறித்துவிட வேண்டும். மனதில் நினைத்துக் கொண்டவளாய் அவளைத் தேடிப் போனாள்.

***

காலம் தன் போக்கில் நகர்ந்து கொண்டிருக்க வருடமும் ஒன்று ஓடி மறைந்து விட்டது. ஏ.எல் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. ரகு நான்கு ஏ எடுத்து பொறியியல் பீடத்துக்கு தெரிவாகியிருந்தான். விடயத்தைக் கேள்விப்பட்டவுடன் பரமசிவம் அவர்கள் வீட்டுக்குப் போய் மருமகனை மனதார வாழ்த்தி விட்டு வந்தார். செல்லமும் தன் பங்குக்கு போய் வரலாமென்றால் வெறுங்கையுடன் போவது அவ்வளவு உசிதமல்ல என மனதுக்குப்பட்டது. கொழுக்கட்டை அவித்தால் அவர்களுக்கும் கொண்டு போகலாம். வீட்டில் பிள்ளைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள் என நினைத்தவள் செயலில் இறங்கிவிட்டாள்.

பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த குயிலி சாப்பிடுவதற்காக அடுப்படிக்குப் போனபோது அவித்த பயறின் வாசனை மூக்கைத் துளைத்தது. அம்மாவிடம் விசாரித்ததில் விபரம் தெரிந்தது.

ஏனம்மா வெள்ளிக்கிழமை நீங்கள் இந்த வேலையைத் துவங்கியிருக் கலாமே. எனக்கு அன்றைக்கு டியூசன் இருக்காது. உதவியாய் இருந் திருப்பனே. என்று சொல்லி அலுத்துக் கொண்டாள். அவசரமாகக் சாப் பிட்டு முடித்தவள் ஒரு தேங்காயை எடுத்து உடைத்து அதனைத் துருவிக் கொடுத்து விட்டுத்தான் டியூசனுக்குப் புறப்பட்டுப் போனாள்.

அடுப்படியில் அலுவலாக இருந்த செல்லத்தை எட்டிப் பார்த்த புகழ் அவளை வார்த்தைகளால் சீண்டினாள்.

"மகளை டியூசனுக்கு அனுப்பிப் போட்டு நீங்கள் தனிய இருந்து கஸ்டப்படுங்கோ."

குத்திக் காட்டிய மகளின் மீது சீறி விழுந்தாள் செல்லம்.

"என்னடி பெரிய பேச்செல்லாம் பேசுறாய் விரும்பினால் வந்து உதவி செய். இல்லாட்டி வாயை மூடிக் கொண்டு அங்கால போ."

இவர்களது தர்க்கத்தை கண்ணுற்ற மகிழ் தானாகவே முன்வந்து அடுப்பை எரித்துவிட்டு அம்மாவுக்கு உதவியாக நடந்து கொண்டாள். செல்லம் கடைசித் தட்டை அடுப்பில் வைத்துவிட்டு முகம் கழுவுவதற்காக கிணற்றடியை நோக்கிப் போனாள். மகிழுக்கு கொழுக்கட்டையை ருசி பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் தலைதூக்கியது. அம்மா வெளியில் போவதைக் கண்ணுற்றவள் ஓடி வந்து ஒரு கொழுக்கட்டையை எடுத்து ருசிக்கத் தொடங்கினாள். முகம் கழுவி விட்டு வந்த செல்லம் மகளின் இந்தச் செய்கையைக் கண்ணுற்றவள் காணாதது போல் பாசாங்கு செய்த வண்ணம் வீட்டிற்குள் போனாள். திருநீறு பூசி குங்குமம் இட்டு வந்தவள் மகிழை அழைத்தாள்.

"மகிழ் பிள்ளை அஞ்சாறு பூவரசம்இலை கொண்டா"

கொழுக்கட்டையின் இனிப்பில் கட்டுண்டு போய்க் கிடந்த மகிழ் விரைவாகப் போய் பூவரசம் இலைகள் பறித்து வந்து கொடுத்தாள். செல்லம் தான் சாய ஓலை கலந்து இழைத்து வைத்திருந்த சிறிய மூடல்தாய்ப் பெட்டியை எடுத்து வந்து அதற்குள் பூவரசம் இலைகளைப் பரப்பி அதன் மேல் கொழுக்கட்டைகளை அடுக்கி மூடினாள்.

"பிள்ளையள்! கொழுக்கட்டையை எடுத்துச் சாப்பிடுங்கோ. நான் மாமி வீடு வரைக்கும் போயிட்டு வாறன்."

புறப்பட்டுப் போய்விட்டாள். மகிழும் புகழும் ஆளுக்கொரு கொழுக்கட்டையை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு பனை வளவுக்கு விறகு பொறுக்கி வருவதற்காகப் போனார்கள். வழியில் அப்பா மாடுகளை அவிழ்த்துக் கொண்டு வருவதை அவதானித்தனர். அப்பாவைக் கண்டதும் இருவரும் நெளிந்து தடுமாறினர்.

"இப்ப எங்கை போறியள்?"

மகிழ்தான் மெதுவாக வாய் திறந்தாள்.

"விறகு எடுக்க போறம் அப்பா"

சரிசரி பொழுது படுமட்டும் நில்லாமல் நேரத்தோட வந்திடவேணும்.

"சரியப்பா"

ஏக காலத்தில் இருவரும் கூறிவிட்டு நடையை விரைவாக்கினர். பரமசிவம் மாடுகள் இரண்டையும் முன்னே விட்டு பின்னால நடந்து கொண்டிருந்தார். சினையாயிருந்த பசுக்கள். இரண்டும்வயிற்றின் சுமையை சுமக்க முடியாமல் தள்ளாடியவாறு மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தன. பின்னால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த கந்தசாமி பரமசிவத்திடம் கதை கொடுத்தார்.

"என்ன வாத்தியார்! பசுக்கள் இரண்டும் சினை போல இருக்கு."

"ஓமண்ணை. நிறைமாசமாகீட்டுது. அதுதான் நடக்க பஞ்சிப் படுதுகள்"

"இரண்டையும் வைச்சு தாபரிக்கிறது கஷ்டமெல்லே. ஒன்றைக் குடுக்கிற எண்ணம் இருக்கோ. இருந்தாச் சொல்லுங்கோ .. என்னட்டை ஒருத்தன் கேட்டவன். நல்ல பசுவாய் பாத்து வாங்கித்தா மச்சான் எண்டு."

பரமசிவத்தாருக்கு தன்னிச்சையாக முடிவெடுக்கும் பக்குவம் இருக்கவில்லை.

"எதுக்கும் வீட்டிலயும் கதைச்சுப் போட்டு சொல்லுறன் அண்ணை"

கந்தசாமி சைக்கிளில் ஓடிப்போய் ஒழுங்கை முகப்பு வரையும் சென்று திரும்பும்வரை கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த பரமசிவத்தின் மனதில் சிறு சலனம். இரண்டு பசுக்களும் ஒரே நேரத்தில் கன்றீன்றால் பராமரிப்பதும் கஷ்டம் . பால் கறப்பதும் கஷ்டம் தானே இலட்சுமியின் கன்றான காயா இது முதல் ஈத்துதானே. அதை நாங்கள் வைத்துக் கொண்டு இலட்சுமிப்பசுவைக் கொடுத்தாலென்ன. எதுக்கும் இண்டைக்கு செல்லத்தோட கதைச்சுப் பாப்பம். மனதில் ஒரு முடி வெடுத்துக் கொண்டவர் பசுக்களை சாய்த்து வந்து கட்டினார்.

கை கால் முகம் கழுவியவர் நேராக சுவாமியறைக்குச் சென்றார். அங்கே படத்துக்கு விளக்கேற்றப்பட்டிருந்தது. சுவாமியை மனமுருகி வேண்டியவர் திருநீற்றை எடுத்து மூன்று குறிகளாக நெற்றியிலிட்டுக் கொண்டார். திரும்பி வந்து வாசற்படியில் அமர்ந்து கொண்டவரது கண்கள் மனைவி செல்லத்தைத் தேடின.

மகிழும் புகழும் விறகுச் சுமையோடு படலையைத் திறந்து கொண்டு முன்னால் வர பின்னால் செல்லம் வந்தாள்.

"இப்ப எங்கை கிளம்பிப் போயிட்டு வாறீர். எனக்கொரு சொல் சொல்லேல்ல" மனைவியை விசாரித்தார். செல்லம் பதிலளித்தாள்.

"நான் ஒரு இடமும் பஸ் ஏறி இறங்கி போய் வரேயில்ல. உதில கமலமச்சாள் வீட்டுப் பக்கம் போயிட்டு வாறன். தம்பியின்ரை சோதினை மறுமொழி வந்ததுக்கு அந்தப்பக்கம் எட்டிப்பாக்கயில்லை. நல்லாயில்லைத்தானே."

“அப்படிச்சொல்லுமன் சங்கதியை. பாஸ் பண்ணின மருமோனுக்கு என்ன கொண்டு போன நீர்?”

பகிடியாகத்தான் பரமசிவம் கேட்டார்.

“கொழுக்கட்டை அவிச்சுக் கொண்டு போனநான்.”

“மருமோன்மேல கரிசனை தான்.”

கொடுப்புக்குள் சிரித்தவாறு சொன்னவர். எதிரில் வந்த குயிலியைப் பார்த்து கண்களைச் சிமிட்டினார்.

“எக்கணம் நீயும் பாஸ் பண்ணினால் கமலமாமி உனக்கும் ஏதாவது பலகாரம் செய்து கொண்டு வருவா.”

“சும்மா போங்கோப்பா.” செல்லமாகச் சிணுங்கினாள் குயிலி.

***

அன்று சனிக்கிழமை. விடுமுறை நாளாதலால் பரமசிவம் பிள்ளைகள் அனைவரும் வீட்டிலிருந்தனர். இன்றைக்கு கூழ் காய்ச்சினால் என்ன? திடீரென பரமசிவத்தின் மனதில் ஒரு ஆசை முளை விட்டது. செல்லத்திடம் தனது விருப்பத்தைக் கூறியவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு சந்தைக்குப் புறப்பட்டுவிட்டார்.

எல்லோரும் வீட்டில் இருப்பதால் கூழ் காய்ச்சலாம் என்ற எண்ணம் செல்லத்துக்கும் பிடித்திருந்தது. மளமளவென்று காரியத்தில் இறங்கி விட்டாள். படித்துக்கொண்டிந்த குயிலி அம்மாவுக்கு ஒத்தாசை செய்ய ஓடி வந்தாள். தோட்டத்துக்குள் போய் பயிற்றங்காய் ஒருபிடி பிடுங்கி வந்து அம்மாவிடம் கொடுத்தாள். பலாக்கொட்டைகளை எடுத்து வெட்டி உரித்துக் கொண்டே அம்மாவிடம் சொன்னாள்.

“அம்மா ! அடுத்தமுறைக்கு நாங்கள் மரவள்ளி நட்டுப்பார்க்க வேணும். மணல் தரைதானே. கிழங்கு பெரிசாய்ப் போடும்”.

“ஓமடிபிள்ளை. கொப்பரிட்டைச் சொல்லுவம்.”

செல்லம் வீட்டில் எப்பொழுதும் ஒடியல்மா தயாராக இருக்கும். மீன் குழம்பு வைக்கும் சமயங்களில் பரமசிவத்துக்கு சோற்றோடு ஒடியல் புட்டும் சேர்த்துச் சாப்பிடுவது பிடிக்கும். எனவே செல்லம் கணவனின் விருப்பத்துக்காக வீட்டில் ஒடியல்மா குறையவிடமாட்டாள்.

படலையைப் பார்த்து அவர்களது ஜிம்மி நாய் குரைத்ததும் விளையாடிக்கொண்டிருந்த புகழ் ஓடிவந்து எட்டிப்பார்த்தாள்.

“ஆசையம்மா வந்திருக்கிறா.”

ஆவலுடன் பெருங்குரலெடுத்துக் கத்தியவள் ஓடோடிப்போய் ஆசையம்மா கொண்டுவந்த சுமையை வாங்கிக் கொண்டாள். எல்லோரும் ஆரவாரம் கேட்டு வாசலுக்கு வந்து விட்டனர்.

“ஏனக்கா இந்த வெய்யிலுக்கை உந்தச் சுமையையும்தூக்கிக் கொண்டு வெளிக்கிட்ட நீ?”

அன்போடு அக்காவைக் கடித்துக் கொண்டாள்.

“அப்பப்பா! என்ன வெய்யில்.கொஞ்சம் பச்சைத்தண்ணிகொண்டா பிள்ளை.”

களைப்புடன் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டாள் ஆசையம்மா

“இந்தாங்கோ ஆசையம்மா. விடாய் தீர தண்ணியைக் குடியுங்கோ”

செம்பும் தண்ணீரும் கொண்டு வந்து கொடுத்த குயிலி ஒரு கொப்பியை எடுத்து வந்து ஆசையம்மாவுக்கு விசிறி விட்டாள்.

“அக்கா! நாங்கள் இண்டைக்கு கூழ்காய்ச்ச இருக்கிறம்”

செல்லம் சொல்ல “அதுதான் நல்லது. நானும் கூழ் குடிச்சு கன நாளாச்சுது“. என்று ஆசையக்கா சொன்னவள் தொடர்ந்தாள்.

“கேட்டியே செல்லம். நாங்கள் சின்னப் பிள்ளையளாய் இருக்கேக்க ஐயா ஒரு தொகையாய் கறியளை வாங்கிக் கொண்டந்து போட்டிடுவார். அம்மா கிட்டடிக்கும் வரமாட்டா. பெரியக்கா தான் அவ்வளவு கறியையும் துப்பரவாக்கி சமைப்பா. சிலவேளை சின்னக்காவும் ஒரு குணம் வந்தா உதவி செய்வா. பெரியக்கா பாவம். அலுக்காமல் சமைச்சு எங்கள் எல்லாருக்கும் போட்டுத் தருவா. எங்கள் ரெண்டு பேருக்கும் ஒரு கவலையுமில்லை. விளை யாட்டுத்தான் எந்தநேரமும். அம்மா சிலவேளை எங்களுக்கு அடிச்சுப் போடுவா. ஆனால் ஐயா ஒருநாளும் அடிச்சறியார். ம்...எல்லாம் ஒரு காலம்.”

நெடுமூச்செறிந்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள் ஆசையம்மா.

“அதையேனக்கா இப்ப நினைவு படுத்திறாய். இந்தாக்கா இந்த தேத்தண்ணியைக் குடி. நல்லாய்க் களைச்சுப் போனாய்.”

படலையடியில் பரமசிவம் வந்து சைக்கிளிலிருந்து தொப் பென்று குதிக்கும் சத்தம் கேட்டதுதான் தாமதம். மகிழ் ஓடிப்போய் அவரிடம் ஆசையம்மா வந்திருக்கிற புதினத்தைக்கக்கி விட்டு வரவும் அவரும் பின்னால் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தார். குயிலி ஓடோடிப் போய் அப்பாவிடம் சாமான்களை வாங்கிக் கொண்டு அடுப்படிக்குள் போனாள்.

“இப்பதானே வந்த நீங்கள்?”

மரியாதையுடன் ஒதுங்கி நின்று மைத்துனியிடம் நலம் விசாரித்தார் பரமசிவம். இதற்கிடையில் செல்லம் குரல் கொடுத்தாள்.

“அக்கா! நீ இந்த மரவள்ளிக்கிழங்கை வெட்டி வை. நான் ஒரு நொடியில கறி கழுவிக்கொண்டு வாறன்.”

சட்டிக்குள் பரமசிவம் வாங்கி வந்த மீன், இறால், நண்டு வகைகளைப் போட்டு எடுத்துக் கொண்டு பின் புறமாகப் போனாள் செல்லம் . மகிழும் புகழும் பின்னால் போயினர்.

"நீங்கள் ஏன் பின்னால வாறியள்?"

சீறினாள் செல்லம். "நாய் கோழியளைக் கலைக்கத்தான் நாங்கள் வாறம்."

நறுக்கென பதில் சொல்லிவிட்டு மகிழ் கையில் ஒரு தடியை எடுத்து வைத்துக் கொண்டாள். உண்மையிலேயே நாயும் கோழிகளும் செல்லத்தைச் சூழ்ந்து கொள்ள முற்பட மகிழ் அவற்றைத் துரத்தினாள்.

"பிள்ளை குயிலி! ஒருக்கா சோத்தைப் பாத்து வடிச்சு விடு."

உரக்கக்குரல் கொடுத்தாள் செல்லம். தேங்காய் துருவிக் கொண்டிருந்த குயிலி எழுந்து போய் சோற்றைப் பதம் பார்த்து வடித்து விட்டு வந்தாள். ஆசையம்மா மரவள்ளிக்கிழங்குக்கு தோல் சீவி வெட்டிக் கொண் டிருந்தாள். இதற்கிடையில் பரமசிவத்தார் வளவுக்குள்ளிருந்த முல்லை மரத்தில் சில இலைகளைப் பிடுங்கி வந்து வைத்து விட்டுப் போனார்.

முல்லை இலைபோட்டால் கூழுக்கு நல்லாயிருக்கும்.

சொல்லிக் கொண்டு வெளியே போனவர் சிறிது நேரத்தில் ஒரு மாங்காயுடன் வந்தார். "மச்சாள்! இந்த மாங்காயையும் சீவி வையுங்கோ. செல்லம் வந்து ஈக்கில்ல குத்தி கூழுக்கை போடுவா."

அங்கு நடந்து கொண்டிருக்கும் ஆரவாரத்தைப் பார்த்து வியந்த வாறு ஆசையக்கா தன் வேலையில் குறியாயிருந்தாள்.. கறிகளைக் கழுவி வந்த செல்லம் அடுப்பிலிருந்த சோற்றுப் பானையை இறக்கிவிட்டு கூழுக்கான பானையை அடுப்பில் ஏத்தினாள். மரவள்ளி பயிற்றங்காய் பலாக்கொட்டை கறிவகைகளை உலைக்குள் போட்டவள் முல்லை இலைகளைக் கழுவி ஆசையக்காவிடம் நீட்டினாள்.

"அக்கா இதை ஒருக்கா சின்னனாய் அரிஞ்சு தா."

ஆசையக்காவுக்கு செல்லத்தின் பக்குவத்தைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. வீட்டில் இருந்தபோது ஒரு வேலையும் தெரியாமல் வளர்ந்தவள் பெரிய அனுபவசாலி போல கூழ் காய்ச்சுவதைப் பார்த்து ரசித்தாள்.

"அக்கா!" மாங்காயை வாங்கியவள் பரமசிவத்தார் கொண்டு வந்து கொடுத்த பச்சைத் தென்னீக்கிலில் குத்தி கூழ்ப்பானைக்குள் இறக்கினாள். ஈக்கில் நுனிப்புறமாக நீட்டிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் ஊறவைத்த ஒடியல் மாவிலிருந்து தண்ணீரைத் தெளித்து வைத்துக் கொண்டாள். அம்மா எடுத்துக் கொடுத்த செத்தல்மிளகாய் மஞ்சளை குயிலி அம்மியில் பதமாக அரைத்து வழித்து எடுத்து வந்து கொடுக்க

*அதையும் ஒடியல் மாவுடன் சேர்த்து கரைத்துக் கொண்டாள்.*

*சிறிது நேரத்தில் ஈக்கிலைப் பிடித்து இழுக்க அவிந்த மாங்காய் வெளியே வந்தது. கூழுக்கென கரைத்து வைத்திருந்த மாவை பானைக்குள் ஊற்றிக் கிளறியவள் அவித்த மாங்காயை ஒரு சட்டிக்குள் போட்டு அகப்பையால் தட்டி விட மாங்கொட்டை மட்டும் மிஞ்சியது. அதை எடுத்து வீசிவிட்டு அதற்குள் சிறிது தண்ணீரை விட்டுக் கரைத்து அதையும் பானைக்குள் ஊற்றிக்கிளறியவள் கூழ்ப்பானையை இறக்கி கீழே வைத்தாள்.*

*“அப்பா! கூழ் இறக்கியாச்சு.”*

*மகிழும் புகழும் அப்பாவுக்கு குரல் கொடுத்தனர். பெரிய பலாவிலைகளாகப் பார்த்து எடுத்து வந்த பரமசிவம் அவற்றைக் கோலி சிறு ஈர்க்கினால் தைத்து சிறு குவளை போல் செய்து அடுக்கி வைத்திருந்தார். பிள்ளைகள் குரல் கொடுத்ததும் கந்தையானாலும் கசக்கிக் கட்டு கூழாயினும் குளித்துக்குடி என்று சொல்லுவினம். நான் குளித்துவிட்டு வாறன். சொல்லிக் கொண்டே கிணற்றடியை நோக்கிப் போகும் பரமசிவத்தாரைப் பார்க்க சிரிப்பாக வந்தது. ஆசையக்காவுக்கு.*

*“நாங்கள் சின்னனாய் இருக்கேக்க ஐயா அம்மா அக்காமாரோட வேப்பம்மரத்துக்கு கீழ இருந்து கூழ்குடிச்ச ஞாபகம் தான் வருகுது.”*

*ஆசையம்மா சொல்ல செல்லம் அங்கலாய்த்தாள்.*

*“அந்த நாட்களில ஐயா கடற்கரைக்குப் போய் பன்னுமல் நிறைய வாங்கிக் கொண்டு வாற கறி என்ன..... இந்தக் காலத்தில காசுதான் செலவழியுது. ஆகப்போக கறி வாங்கேலாது”.*

*“அதுசரியடி செல்லம். வீட்டில இருக்கேக்க அடுப்படிக்கே வராத நீ இப்ப என்னெண்டு கூழெல்லாம் காய்ச்சுறாய்.”*

*எல்லாம் என்ரை மனுசன் கத்துத்தந்த கலை தான்*

*பெருமிதத்துடன் செல்லம் சொல்ல ஆசையக்கா தொடர்ந்தாள்.*

*“ஆனால் ஒண்டு. என்ரை மனுசனுக்கு சமையல் எண்டால் என்னெண்டே தெரியாது. என்னத்தைச் சமைச்சு வைச்சாலும் பேச்சு மூச்சில்லாமல் சாப்பிட்டிட்டுப் போகும்.”*

*“இவருக்கு பதினாலு வயசாய் இருக்கேக்க தாய் செத்துப் போனாவாம். அதிலையிருந்து தேப்பனோட சேர்ந்து சமைச்சுப்பழகி விட்டார். ஆனால் அக்கா. சும்மா சொல்லக்கூடாது. நல்ல கைப் பக்குவம். வாய்க்குருசியாய் சமைப்பார். அதே சமயம் என்ரை சமையலிலையும் குறைபிடிப்பார்.”*

*வாய்விட்டுச் சிரித்தாள் ஆசையக்கா.*

*பரமசிவம் குளித்துவிட்டு நெற்றியில் திருநீற்றுக் குறியுடன் வந்தார்.*

செல்லம் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் கூழை பரிமாறத் தொடங் கினாள்.

***

லெட்சுமிப்பசு கன்று ஈன்று இன்றோடு பதின்னான்கு நாட்கள் ஆகிவிட்டன. பதினோராம் நாளிலிருந்து கன்று கட்டி பால் கறக்கத் தொடங்கியிருந்தாள், செல்லம். மகிழும், புகழும் பாடசாலையால் வந்ததும் கன்றுக் குட்டியுடன் விளையாடத் தொடங்கி விடுவார்கள். மாலை மூன்று மணிக்கே பாலைக் கறந்து கொண்டு கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டால் , அது வாலைத் தூக்கிக்கொண்டு வளவு முற்றிலும் துள்ளித் திரியும். அதன் பின்னால் மகிழும், புகழும் ஓடி விளையாடு வார்கள். மாலையானதும் தவறாமல் வீட்டுத் தோட்டத்தினுள் போய் புல்லைப் பிடுங்கி வந்து வைத்து விடுவார்கள். இரவு ஒன்பது மணிபோல் கன்றைக் கட்டிவிட்டு அதற்கு அந்தப் புல்லைப் போட்டுவிட்டு வருவார், பரமசிவம். கன்றுக் குட்டியும் புல்லின் நுனியைக் கடித்துப் பழகி நாளடை வில் புல்லை விரும்பி உண்ணப் பழகிக் கொண்டது.

செல்லத்துக்கும் பால் வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இந்தமுறை பால் விற்று வரும் பணத்தை எடுத்துச் செலவழிப்பதில்லை எனத் தனக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டாள். மாதா மாதம் வரும் வருமானத்தை சேமிப்புக் கணக்கில் போட்டுவைத்தால் அது ஏதாவது அவசரத் தேவைக்கு உதவியாயிருக்கும் என நினைத்துக் கொண்டவள், செயலிலும் காட்டத் தொடங்கி விட்டாள்.

மாதங்கள் இரண்டு உருண்டோடின. காயா பசுவும் கன்று ஈன்று விட்டது. அதுவும் பசுக்கன்று, லட்சுமியின் கன்று நாம்பன். காயாவும் தாயைப்போல வஞ்சனையின்றி பால் சுரக்கத் தொடங்கினாள். செல்லத் திற்கு இரண்டு பசுக்களிலும் பால் கறக்க முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டாள். அத்தருணத்தில் பரமசிவம்தான் கறந்து பார்க்கப் போவதாகக் கூறினார்.

“அப்பாவுக்கு இருந்து கறக்க வண்டிவிடாது”

மகிழ் கூறிச் சிரித்தாள்.

“அதெல்லாம் கறக்கலாம். ஒரு பலகைக் குத்தியை வைச்சு , அதிலை இருந்துகொண்டு நான் இழுத்துத் தள்ளி விடுவன். என்னைப் பற்றி என்ன நினைச்சுக் கொண்டியள். ”

சவால்விட்ட பரமசிவம், ஒரு குற்றியின் மேல் அமர்ந்திருந்து மளமளவென்று பால் கறக்கத் தொடங்கி விட்டார். வேகமாக அவர் கறப்ப தால் பாலும் பொலிவாக இருந்தது. செல்லத்தின் சுமையும் குறைந்தது. மகிழ் அப்பாவுக்கு உதவியாக நின்று கன்றைப் பாலூட்ட விடுவாள். இப்போதெல்லாம் அப்பாவுக்கும், மகிழுக்கும் இடையிலான நெருக்கம்

அதிகரித்திருந்தது. இருவரும் சேர்ந்து ஒற்றுமையாக மாடுகளைப் பராமரிக்கத் தொடங்கினார்கள்.

மங்கும் ஒரு மாலைப் பொழுதில் ரகு அவர்களது வீட்டிற்கு வந்திருந் தான். குயிலி அப்போதுதான் ரியூசன் முடிந்து வீட்டிற்குத் திரும்பியிருந் தாள். வீட்டு முற்றத்தில் சைக்கிளை நிறுத்தியவாறு பெல் அடித்தான், ரகு. ஓடிவந்து எட்டிப் பார்த்த குயிலிக்கு மகிழ்ச்சிப் பிரவாகத்தில் உடலே சிலிர்த்தது.

"அ... வாங்கோ...வாங்கோ.. எஞ்சினியர் ஐயாவுக்கு எங்கட வீடெல்லாம் தெரியுதோ?" கிண்டலுடன் வரவேற்றவளைத் தன் வார்த்தை களால் மடக்கினான், ரகு.

"எத்தினைபேர் வீடுதேடிவந்து என்னை வாழ்த்தினவை. அக்கறை இருந்திருந்தால் வீட்டை வந்திருக்கலாமே. இப்ப.. எனக்கு அக்கறை இருந்த படியால்தான் பயணம் சொல்லிவிட்டுப்போக வந்திருக்கிறனாக்கும்".

சிரித்துக் கொண்டே கூறியவனை , ஓரக்கண்ணால் விழுங்கி விடுவதுபோல் ஓர் பார்வை பார்த்தாள், குயிலி

நேர வந்து வாழ்த்தாவிட்டாலும் என்னுடைய இதயம் எப்போதும் உங்களை வாழ்த்திக் கொண்டே இருக்கும். அது மட்டுமல்ல, உங்களுடைய முன்னேற்றத்திற்காக இறைவனிடம் எப்போதும் மன்றாடிக் கொண்டேயிருக்கும்.

ரகு, தானாகவே படியேறிவந்து விறாந்தையில் போட்டிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டான். அரவம் கேட்டு வீட்டின் பின் கோடியிலிருந்து வெளிப்பட்டார், பரமசிவம். அப்பாவைக் கண்டதும் மெதுவாக நழுவினாள் குயிலி.

"குயிலி! அத்தானுக்கு தேத்தண்ணி கொண்டுவா"

"சரியப்பா"

சொல்லிக் கொண்டே போய் அடுப்படிக்குள் நுழைந்தவள் , அடுப்பை மூட்டி நீரைக் கொதிக்க வைத்தாள். அம்மா எதையோ ஓலைப்பெட்டிக்குள் மூடி வைத்திருப்பதை அவதானித்தவள் , அதைத் திறந்து பார்த்தாள். புழுக்கொடியல் மாவை தேங்காய், இனிப்பு போட்டுக் குழைத்து வைத்திருந்தாள், அம்மா. அந்த உருண்டைகளை எடுத்து தட்டில் வைத்துக் கொண்டு வந்தவள் ரகுவின் முன்னால் வைத்தாள். அப்பா உடன் இருந்ததால் சங்கோஜத்துடன் "எடுத்துச் சாப்பிடுங்கோ" என்று மட்டும் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தாள். ரகு, ஒரு உருண்டையை எடுத்து சாப்பிட்டான். அவனது நாவும், மனமும் இனித்தது. பரமசிவம் அவனை விடவில்லை.

"எடுத்துச் சாப்பிடு தம்பி"

மேலுமொரு உருண்டையை எடுத்து ருசிக்கத் தொடங்கினான். குயிலி தேநீருடன் வந்தாள்.

“அப்பிடி வை பிள்ளை, சாப்பிட்டிட்டு எடுத்துக் குடிக்கட்டும்”.

“மாமியையும் மகிழ், புகழையும் காணேல்ல.”

ரகு அவரிடம் விசாரித்தான். பரமசிவம் வாயிலிருந்த எச்சிலைத் துப்பிவிட்டு வர வெளியே இறங்கிப் போனார். சடுதியாக வந்த குயிலி அவனிடம் ஒரு பேனாவை நீட்டினாள்.

“இந்தாங்க இது என்னுடைய அன்புப் பரிசு. பரிசு சிறிதாக இருந்தாலும் என் மனம் நிறைந்து தருவது,”

சட்டெனத் திகைத்தவனாய் அந்தப் பேனாவை வாங்கித் தனது சட்டைப் பொக்கற்றில் செருகிக் கொண்டவன், சற்றுத் தாமதித்தே “தாங்க்ஸ்” என்றான். குயிலிக்கு உச்சி குளிர்ந்தது. அந்தப் பேனாவைப் பரமசிவம் அவள் ஓ.எல் பரீட்சை எழுதுவதற்காக வாங்கிக் கொடுத்திருந்தார். . பாக்கர் பேனா.

எச்சலைத் துப்பிவிட்டு வந்த பரமசிவம் சொன்னார்.

“மாமியும் பிள்ளைகளும் கோயிலுக்கென்று போனவை. நேரமாயிட்டுது, இன்னும் காணயில்ல.”

“மாமா! கோயிலில இன்றைக்கு நிறையச் சனமாய்க் கிடந்தது. நான் வரயுக்கை பாத்தநான். அதுதான் வரச் சுணங்குதோ...... என்னவோ....”

“அது சரி தம்பி உனக்கு எப்ப கம்பஸ் துவங்குது?”

“வாற திங்கள் துவங்கப் போகுது. நான் நாளைக்குப் பயணம் மாமா. அதுதான் சொல்லீட்டுப் போவமெண்டு வந்தநான்.”

மெத்தச் சந்தோசம். நீ மூச்சாய் படிச்சு ஒரு என்ஜினியராய் வரவேணும் என்ற ஆசை மட்டுமல்ல என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துக்களும் உனக்காகட்டும்.”

“நன்றி மாமா நன்றி.”

பரமசிவத்தின் பாதங்களைத் தொட்டு வணங்கியவனின் கண்களில் நீர் பளபளத்ததை குயிலி அவதானித்தாள். உணர்ச்சிப் பரவசத்தில் அவன் நெகிழ்ந்து போயிருப்பதாக அவள் கருதினாள். விளக்கேற்றியவள், அதைக் கொண்டுவந்து அவனுக்கருகிலிருந்த மேசையில் வைத்தபோது அவளது கடைக்கண் பார்வை அவனது நெகிழ்வை படம் பிடித்துக் கொண்டது.

செல்லமும் பிள்ளைகளும் வீடு வந்து சேர்ந்தார்கள். செல்லம் ஆர்வத்துடன் மருமகனை குசலம் விசாரித்தாள். மகிழும் புகழும் அத்தானைக் கண்டதுடன் மருண்டவர்களாய் வீட்டிற்குள் போய் அடைக்கலம் புகுந்து கொண்டார்கள்.

*சிறிது நேரத்தில் ரகு அவர்களிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டான். குயிலிக்கு மட்டும் மனதில் எதையோ இழந்து விட்டதுபோன்றதோர் தவிப்பு உள்ளத்தை உலுப்பிக் கொண்டிருந்தது.*

***

*செல்லத்தின் வீட்டிற்குப் போய் வந்ததிலிருந்து ஆசையக்காவுக்கு மனதில் ஓர் தவிப்பு. செல்லம் காய்ச்சித் தந்த கூழ் இன்னும் வாய்க்குள் ருசித்துக் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல அந்த கிராமப்புறச் சூழல். பலாவிலையில் கூழை வார்த்துக் குடிப்பதே ஒருதனி ருசிதான். மகிழும் புகழும் சின்னப் பிள்ளைகளாயிருந்த போதிலும் கூழை ரசித்து ருசித்துக் குடித்தார்கள்.அவர்களோடு சேர்ந்து குடித்ததில் சுவை இன்னும் அதிக மாயிருந்தது. அடிக்கடி மகிழ் பகிடிக் கதைகளைச் சொல்லுவதும் தகப்பன் அதட்டும்போது அடக்கமாக இருப்பதுபோல் பாவனை செய்வதும் சரியான குறும்புக்காரி என மனம் நினைத்துக் கொண்டது. என்னுடைய பிள்ளைகளுக்கு நான் கூழ் காய்ச்சிக் கொடுத்ததேயில்லை. ஆடிக்கூழைக் காய்ச்சினாலும் ஆளுக்கொரு கிண்ணத்தில் ஊற்றி கரண்டியால் எடுத்துக் குடிப்பார்கள். அதையும் பக்குவமாய்க் குடிக்கமுடியாமல் மேசை யெல்லாம் ஊற்றி வைத்திருப்பார்கள். அந்த சின்னஞ்சிறிசுகள் கோலிய பலாவிலைக்குள் என்னவாய் கூழை வார்த்து ஒரு சொட்டுக் கூட கீழே ஊற்றாமல் எத்தனை பக்குவத்துடன் குடிக்கிறார்கள். அடுத்தமுறை செல்லம் வரும்போது நாங்களும் வீட்டில் கூழ் காய்ச்ச வேணும். செல்லத்திட்ட இருந்துதான் நானும் அந்தப் பக்குவத்தை பழகவேணும்.*

*இத்தியாதி எண்ணங்களை மனதில் அலையவிட்டவளாய். சமையலைக் கவனித்துக் கொண்டிருந்தாள் ஆசையக்கா.*

*“புனிதக்கா! புனிதக்கா!!”*

*கேற்றடியில் யாரோ கூப்பிடுவது கேட்டு செய்துகொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு வாசலுக்கு விரைந்தாள் செல்லத்தின் ஆசையக்காவாகிய புனிதமலர் . வாசலருகே கையில் ஒரு பிடி கீரைக்கட்டுடன் நின்றிருந்தாள் பக்கத்து வீட்டு பானு.*

*“இந்தாங்கோம்மா இன்றைக்கு இந்தக் கீரையைக் காய்ச்சி சாப்பிடுங்கோ. எங்கட வீட்டுத் தோட்டத்தில போட்ட நாங்கள்.”*

*“தாங்க்ஸ் பானு” என்று சொல்லி கீரையைக் கையில் வாங்கிக் கொண்டாள் ஆசையக்கா.*

*“அக்கா! வீட்டில எல்லாம் போட்டது போட்டபடி கிடக்கு. இனித்தான் போய் கூட்டுறது கழுவுறது எல்லாம் செய்யப் போறன்”.*

*சொல்லிக் கொண்டே போனாள் பானு. ஏனோ ஆசையக்காவுக்கு செல்லத்தின் வீட்டு நினைவு வந்தது. செல்லத்தின்ரை பிள்ளைய ளெண்டால் இந்தக் கீரையைத் துப்பரவாக்கி வெட்டி கழுவியும் குடுப்*

பாளவை. என்ரை பிள்ளையளுக்கு ஒரு வேலையும் தெரியாது. மூத்தவள் யமுனா இந்தமுறை ஏ.எல் சோதினை எடுக்கப்போறாள். புடிப்பையும் டியூசனையும் விட்டால் எதுவுமே தெரியாது. அவள் குயிலி. யமுனாவை விட ஒரு வயது சிறியவள். என்னமாதிரி சமையல் வேலைகளுக்கு உதவி செய்யிறாள். செல்லம் ஏழ்மையிலும் பிள்ளைகளை ஒழுங்காய்த்தான் வளர்த்துவைச்சிருக்கிறாள். குடுத்து வைச்சவள்.

ஏக்கத்துடனான பெருமூச்சொன்றை உதிர்த்துவிட்டு கீரைக் கட்டைப் பிரித்து துப்பரவாக்கத் தொடங்கினாள். சிறுபோகச் செய்கை யில் விளையும் தானியங்களை அவள் அவ்வப்போது பானுவுக்கும் கொடுப்பதுவழக்கம். பானுவும் தனக்குக்கிடைப்பதில் ஆசையக்காவுக்கும் ஒருபங்கு கொடுத்துவிடுவாள். அயலுக்குள் வசிக்கும் அவர்களுள் அப்பிடியொரு ஒற்றுமை.

ஆசையக்கா வந்துவிட்டுப் போனதிலிருந்து செல்லத்திற்கு மனதில் பலவிதமான சிந்தனைகள் தோன்றி அவளை ஒரு முடிவுக்கு வரவிடாமல் அலைக்கழித்துக் கொண்டிருந்தன. கதையோடு கதையாக ஆசையக்கா அவளுக்கு அறிவுறுத்தினாள்.

“இஞ்சை பார் செல்லம். ஒன்றுக்கு மூன்று பொம்பிளைப் பிள்ளையளை வைச்சிருக்கிறநீ குடியிருக்க ஆனமானவீடு ஒன்றைத் தேடவேணும். உது உன்ரை மனிசனின்ரை பாட்டன் காலத்துவீடு. நீங்கள் இருந்து காலந்தள்ளுறியளே தவிர உங்கை ஒருத்தரும் உப்பிடியான வீட்டிலை இருந்து சமாளிக்கமாட்டினம். வீட்டோட குசினி பாத்ரூம் என்று வசதியாய்த்தான் எல்லாரும் இருக்கினம். நீ என்றபடியால் உந்த மண்குசினியில இருந்து சமாளிக்கிறாய். என்ன.....நான் சொல்லுறது விளங்குதே.”

“விளங்குதக்கா. விளங்கி என்ன செய்யிறது. கையில தம்பாச்சல்லி கிடையாது. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமே”.

“எடி விசரி. நீ உந்த வீட்டிலை இருந்து கொண்டு பனை வளவுக்குள்ள சின்னதா ஒரு அத்திவாரத்தைப் போடு. வேலை துவங்கினால் எப்பிடியும் முடிச்சுப் போடலாம்”.

ஆசையக்காவின் ஆலோசனை சரியென்றே பட்டது. இருந்தாலும் கையில் கொஞ்ச பணம் சேர்க்க வேணும். அதுக்குப் பிறகு பார்க்கலாமென மனம் சொல்லிற்று.

அன்று மாலையே அதைப்பற்றிய கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் அமைந்து விட்டது. இரண்டு பசுக்களிலும் பாலைக் கறந்து விட்டு இளைத்தவாறு வந்து குசினித்திண்ணையில் அமர்ந்துகொண்டார். பரமசிவம் செல்லத்துக்கு கணவரை அந்த நிலையில் பார்க்க பரிதாபமாக இருந்தது. உடனே வாடிக்கையாளர்களுக்கு பாலை அளந்து ஊற்றி

வைத்துவிட்டு மிகுதியைக் காய்ச்சி அவருக்கு சுடச்சுட ஒரு தேநீர் தயாரித்து வந்து கொடுத்தாள். அவரும் தேநீரைக் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவராய் எழுந்து போனார்.

செல்லம் அன்றைய கடமையை முடித்துக் கொண்டு வீட்டு விறாந்தையின் படிக்கட்டுக்கு வந்தாள். அங்கே ஏற்கனவே பரமசிவத்தார் அவளின் வருகைக்காக காத்திருந்தார். பிள்ளைகளைப் படிக்க விட்டுவிட்டு அவர்களிருவரும் அவ்விடத்தில் அமர்ந்திருந்து வீட்டு நடப்புகளைப் பற்றி அலசுவது வழக்கம். மெதுவாக செல்லம் தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். சிறிது நேரம் யோசனையில் மூழ்கியிருந்த பரமசிவம் வாய் திறந்தார்.

நீர் சொல்லுறது நியாயம்தான். இருந்தாலும் நாங்கள் வேலை துவங்கிறதெண்டால் கையில ஒரு கொஞ்ச முதலாவது வைச்சிருக்க வேண்டாமோ?

“இஞ்சேருங்கோப்பா! எனக்கு ஒன்று தோன்றுது. இரண்டு பசுக்களை வைச்சுக்கொண்டு பராமரிக்கிறது கஷ்டமாயிருக்குது. எங்கட லெட்சுமிக்கும் வயசாகிக் கொண்டு வருகுது. காயாவை வைச்சுக் கொண்டு லெட்சுமியையும் நாம்பன் கன்றையும் குடுப்பம். காயாவின்ரை பசுக்கன்று இருக்குதுதானே.”

ம்... என்று இழுத்தவர் சிறிது விநாடிகளின் பின் சொன்னார்.

“நீர் சொல்லுறதும் சரிதான். கந்தசாமி அண்ணை சொன்னவர் . குடுக்கிறதெண்டாச் சொல்லச் சொல்லி.”

“ஒருபசு வென்றால் நானும் மாறி பால்கறப்பன். இப்ப இரண்டையும் வைச்சுக் கொண்டு நீங்கள் அங்கால இஞ்சால விலத்தேலாமல் கிடக்குது.”

“ஓ... உண்மைதான். எதுக்கும் நான் கந்தசாமி அண்ணையைக் கண்டாச்சொல்லுறன். எங்களுக்கு விலை தோது வந்தால் குடுப்பம்.”

“குடுத்தால் அந்தக்காசையும் சேமிப்புக் கணக்கில போடுவம்.. இப்ப பால்க்காசு கொஞ்சம் சேர்ந்திருக்கு. அதோட பனை வளவை இரண்டாப் பிரிப்பம். அஞ்சு பரப்புக்கை வேலியை அண்டி கொஞ்சப்பனையளை விட்டிட்டு மிச்சத்தைத் தறிப்பம். எங்களுக்கு வீட்டுத்தேவைக்கு வேண்டியதை எடுப்பம். மிச்சப் பனையளையும் வித்து காசாக்குவம். அப்பிடியெண்டால் கொஞ்சக்காசு கையில தேறும். சின்னதாய் ஒரு வீட்டுக்கு அத்திவாரத்தைப் போடுவம். என்னப்பா நான் சொல்லுறது சரிதானே”.

மனைவியின் சமயோகிதத்தை வியந்தவராய் அவளைக் கனிவுடன் நோக்கினார். பரமசிவம்.

***

எல்லோரும் பாடசாலைக்குப் புறப்பட்டு போய் விட்டார்கள்.

செல்லம் மட்டும் வீட்டில் தனித்து விடப்பட்டிருந்தாள். இனந்தெரியாத பிரிவுத்துயர் ஒன்றினால் அவளது மனம் அல்லல் பட்டுக் கொண்டிருந்தது. அதற்கு உண்மையான காரணம் இதுதான். ஒரு காலத்தில் அவளது வீட்டிலுள்ளவர்களின் வயிற்றுப் பசியை போக்கிய ஜீவனான லெட்சுமிப் பசு அவளை விட்டுப் பிரிந்ததுதான் விடயம். என்ன செய்வது அதற்கும் வயதாகிக் கொண்டு வருகிறது. அது சாகும் வரை நாங்கள் வைத்திருந்து அது உயிர் விடுவதைப் பார்த்து எங்களால் தாங்க முடியாமா?. அதைவிட எங்கிருந்தாலும் வாழட்டும் என்ற நல்ல எண்ணத்துடன் தானே நாங்கள் அதனைப் பிரிந்தோம். தானே தன் மனதிற்கு சமாதானம் சொல்லிக் கொண்டாள். செல்லம்.

லெட்சுமியின் மகளான காயாவும் சாந்தமான பசுதான். லெட்சுமி வெள்ளை நிறம். காயாவுக்கு வெள்ளை நிற மேனியில் பிறவுண் நிற புள்ளிகள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும். பார்ப்பதற்கு இலட்சணமாக இருக்கும். காயா ஒரு விதத்தில் அழகென்றால் லெட்சுமி தூய வெள்ளையில் அம்சமான தோற்றமுடையது.

"ம்..."

மனதில் தோன்றிய வேதனை நெடுமூச்சாக வெளியேறியது.

"சீ... என்ரை மனத்துக்கு எதனையும் தாங்கிற பக்குவம் கிடையாது. எதுக்கெடுத்தாலும் ஆழமாய் யோசிச்சு அல்லல் படுகிறதுதான் மிச்சம். எதையும் சுகமாக எடுத்துக் கொண்டால் இப்படியான துன்பங்கள் எங்களை அணுகாது".

மனதைத் திடப்படுத்திக் கொண்டவளாய் சமையலைக் கவனிப்பதற் காக எழுந்து போனாள். உலைப்பானையில் நீர் ஊற்றி அடுப்பில் வைத்தவள் பன்னாடையை எடுத்து நெருப்பைமூட்டி அதன்மேல் தென்னம் பாளையைப் பிரித்து வைத்து எரியப்பண்ணினாள்.

"அத்தாச்சி! அத்தாச்சி!!"

கமலம் மச்சாளின் குரல் கேட்டது. வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

"வாவெண மச்சாள்! என்ன நேரகாலத்தோட சமையலையும் விட்டிட்டு வெளிக்கிட்டு வந்திருக்கிறாய். ஏதும் புதினமே?"

"ஓமெண அத்தாச்சி ஒரு செய்தியோடதான் வந்திருக்கிறன்."

சொல்லிக்கொண்டே அடுப்படித் திண்ணைக் குத்தில் அமர்ந்து கொண்டாள். செல்லமும் அவள் அவள் கொண்டு வந்த புதினத்தைக் கேட்கும் ஆவலோடு அவளுக்கப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

"என்னெண மச்சாள் ஏதோ புதினம் கிதினமென்று பீடிகை போடுகிறாய். என்னவெண்டுதான் விசயத்தைச் சொல்லன். நானும் ஒருக்கா என்னெண்டு கேப்பம்."

*ஆவலை அடக்கமுடியாமல் தவிப்பைக் காட்டினாள் செல்லம். "இல்லையெண அத்தாச்சி. என்ரை மேள் தேவகிக்கு ஒரு சம்மந்தம் பொருந்தி வந்திருக்குது".*

*"மெய்தானே. மச்சாள். மெய்யாத்தானே சொல்லுறாய். எனக்கு வலு சந்தோசமாக்கிடக்கு. ஆரெண மாப்பிள்ளை. எந்த ஊர்?"*

*"வேலனையைச் சேர்ந்த பெடியன். போஸ்ற் மாஸ்டராய் இருக்குதாம்."*

*"அது சரி , மச்சாள் மாப்பிள்ளையைப் பற்றி விசாரிச்சநீங்களோ?"*

*"இவர் தனக்குத் தெரிஞ்ச ஆட்களை கொண்டு விசாரிச்சவர். ஒருத்தரும் பிழையாய் சொல்லேல்ல" இழுத்தாள், கமலம்.*

*"எணெ மச்சாள் குடிப்பழக்கம் இருக்குதோ எண்டு வடிவாய் விசாரிச்சுப்போடு. பிறகு பிள்ளையின்ரை வாழ்க்கை கண்ணீரும் கம்பலையுமாய் போயிடும். செல்லத்துக்கு அனுபவம் பேசியது. " அதைத்தான் நாங்களும் யோசிச்சநாங்கள். எதுக்கும் ஒருக்கால் பெடியன் வேலை செய்கிற கந்தோரிலைபோய் விசாரிச்சுப் பாப்பம் எண்டு இவர் சொன்னவர்."*

*" அதுதான் நல்லது, அதை முதலில் செய்யுங்கோ"*

*"எணெ அத்தாச்சி அவை வாற வெள்ளிக்கிழமை பொம்பிளை பாக்க வாறதெண்டு நிக்கினம். எனக்குத் தெரியாது. நீங்கள்தான் வந்து முன்னிண்டு எல்லாத்தையும் பாக்கவேணும். அதைச் சொல்லத்தான் இப்பநான் அவதியாய் ஓடி வந்தனான்"*

*"மச்சாள்! உன்ரை வீட்டுக் காரியமெண்டால் அது என்டை வீட்டுக் காரியம் மாதிரித்தானே. எல்லாம் நான் வந்த நிண்டு கவனிக்கிறன். நீ யோசியாத"*

*"அதைவிடு வாறவைக்கு ஏதும் பலகாரம் செய்து வைக்க வேண்டாமோ?"*

*"முதன் முதலாய் வருகினம், இனிப்பாய்த்தான் ஏதும் செய்ய வேணும். அதிரசம் அல்லாட்டி கொழுக்கட்டைதான் செய்ய வேணும்."*

*"சரியாய்ச் சொன்னாயெண அத்தாச்சி. அப்ப நான் அடுக்குப் பண்ணி வைக்கிறன். நேரத்தோட வந்திட வேணும்"*

*"நான் வேளைக்கே சமைச்சுப்போட்டு வாறன். இவர் பள்ளிக் கூடத்தால வந்து சாப்பிட்டிட்டு வரட்டும்."*

*"சரியெண நான் வாறன்."*

*செல்லத்தின் மனத்திரையில் பல கற்பனைகளை வளர்த்துவிட்டு , கமலம் காலில் சக்கரத்தைப் பூட்டியவாறு விரைந்து போய்விட்டாள்.*

*“முந்தநாள் பிறந்த பிள்ளை தேவகி. அவளுக்குக் கல்யாண மெண்டால் ...இனி எங்கடையளும் வளரந்து நிற்கப் போகுதுகள். எங்களுக்கும் பொறுப்புக்கள் தலைக்குமேலை கிடக்கு. எக்கணம் நாங்கள் என்ன செய்யப் போறமோ? என்னப்பனே முருகா! நான் கையெடுத்த தெய்வம் நீதான், எனக்கொரு நல்ல வழியைக் காட்டவேணும்”.*

*கைகள் முருகன் கோயில் அமைந்திருக்கும் வடக்குத் திசையை நோக்கி கூப்பிக் கொண்டன.*

*“அவையள் வீடு வளவு நகை நட்டு பொருள் என்று தொகையாய் வச்சிருக்கினம். கலியாணம் பொருந்தி வந்தாப்போல செய்யிறதுக்கு ஒரு தடையுமில்லை. ஓட்டாண்டியாய் இருக்கிற நாங்கள் எங்கை போறது? குயிலியைப் படிக்க வைச்சு வேலையாக்கிப் போட்டால் எப்பன் நிம்மதி கிடைக்கும். அதே சமயம் பனை வளவுக்கை இப்போதைப் பாட்டுக்கு ஒரு சின்ன வீடெண்டாலும் எழுப்பிப் போடவேணும்”*

*மனம் கங்கணம் கட்டிக் கொண்டது.*

*பல்வேறு திசையில் சிந்தனையைச் சிதறவிட்டவாறு செல்லம் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். ஈரவிறகு அடுப்பு எரிய மறுத்தது. மூரிமட்டை ஒன்றை எடுத்து வைத்து அடுப்பை ஊதினாள். அது பற்றிக் கொண்டது. அடுப்பில் வைத்திருந்த குழம்பு பொங்கத் தொடங்கியது. அகப்பையை வைத்து குழம்பை ஆற்றியவள். நெருப்பைத் தணித்தாள். திடீரென ஒரு பரிச்சயமான குரல் அவள் காதுகளில் வந்து மோதி அவளது உள்ளுணர்வுகளை விழிப்புறச் செய்தது.*

*“ம்பா!ம்பா!!”*

*இது எங்கட லெட்சுமியின் குரலாச்சே. நினைவில் பொறி தட்ட, போட்டது போட்டபடியே தான் செய்துகொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு படலையடியை நோக்கி விரைந்து வந்தாள். படலையைத் திறந்ததும் அவள் அப்படியே ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள்.*

*கட்டிய கயிற்றுடன் லெட்சுமிப்பசு வளவுக்குள் நுழைந்தது. மெதுவாகக் குனிந்து கயிற்றைப் பிடித்தவள்.முற்றத்து மாவில் அதைக் கட்டி வைத்தாள்.*

*என்னடி அம்மாவைத் தேடி வந்தநீயா?*

*அதன் வயிற்றில கைகளால் தடவி விட்டவள் ஓடோடிப் போய் வாளி நிறைய தண்ணீர் எடுத்து வந்தாள். அதற்குள் சிறிது தவிட்டையும் புண்ணாக்கையும் போட்டுக் கரைத்தவள் அதை எடுத்து பசுவின் முன் வைத்தாள். லெட்சுமி ஒரு தரம் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு அந்தத் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கியது. குடித்து முடிந்ததும் வாளியை நாவினால் நக்கி விட்டு அருகில் நின்றிருந்த செல்லத்தின் கைகளையும் நக்கி தன் விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டது.*

*பாசம் என்பது மக்களுக்கு மட்டுமல்ல. இந்த மண்வாழ் ஜீவராசி களுக்கே சொந்தமானதொன்று, செல்லத்தின் மனதில் அலை மோதியது.*

***

*கமலம் வீட்டில் பெண் பார்க்கும் படலம் இனிதே நிறைவேறியது. மாப்பிள்ளை வீட்டாருக்கு பெண்ணைப் பிடித்துப் போயிற்று. தேவகியின் அழகு மட்டும் அதற்கு காரணமல்ல. அவள் கொண்டு வரப்போகும் சீதனமும் கூடத்தான் அவர்களுக்கு திருப்தியை ஏற்படுத்தியது. தரகர் நாள் குறிப்பதற்கு அவசரம் காட்டினார். அதில் அவரது பிழைப்புமல்லவா அடங்கியிருக்கிறது. இரு பகுதியினரும் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர். முருகன் கோயில் குருக்கள் ஐயா விட்ட இரண்டு சாதகங்களையும் கொண்டு போய் ஒருநல்ல நாளாய் பார்த்து தெரிவு செய்வம் இரு பகுதியினரதும் ஏகோபித்த முடிவாக அது இருந்தது.*

*கல்யாணத்துக்கு திகதி நிச்சயிக்கப்பட்டதும் கமலம் செல்லத்திடம் தான் முதலில் வந்து விபரத்தைச் சொல்லிவிட்டுப் போனாள். கமலம் வந்து போன கையோடு வீட்டுப்படியில் சிந்தித்தவாறு அமர்ந்து விட்டாள் செல்லம். அப்படியென்ன தீவிர யோசனை அவளுக்கு. இதை உணர்ந்திராத காயா பசு கட்டுக்கொடியில் நின்றவாறு குரல் எழுப்பியது.*

*“ம்பா.!ம்பா!!”*

*பசுவின் குரல் அவளது சிந்தனையை குறுக்கறுத்திருக்க வேண்டும். செல்லம் திடுக்கிட்டு விழித்தவளுக்கு பசுவை அவிழ்த்து மேயக் கட்ட வேண்டும் என்ற நினைப்பு தோன்றியது. அட! நான் என்னுடைய யோசனையில இருந்திட்டன். பால் கறக்கிற மாடு பசியில கத்துது. வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே பசுவை மேயக்கட்டுவதற்காக எழுந்து போனாள். பசுவையும் கன்றையும் மேய்வதற்காக பனை வளவிற்கு கொண்டு போய் கட்டிவிட்டு வந்தாள். சுறுசுறுப்புடன் செயற்பட்டவள் அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினாள். மளமளவென்று சமையலை முடித்துவிட்டு ஆறஅமர வந்து திண்ணையில் குந்திக் கொண்டாள். அவளது மனமோ அவளை முந்திக் கொண்டு வெவ்வேறு வழிகளில் தாவத் தொடங்கியது. எத்தனை நேரம்தான் அப்படியே இருந்தாளோ.... அவளது தோளை ஆதரவுடன் ஒரு கரம் பற்றிய போது நிதானத்திற்கு வந்தாள்.*

*அவளுக்கு அருகில் இருந்தவாறே குயிலி அவளது தோளைத் தொட்டு உலுப்பினாள்.*

*“வந்த நேரத்திலிருந்து நானும் பாத்துக்கொண்டு தான் இருக்கிறன். என்ன அப்படி பலமான யோசனை?”*

*மகளது கேள்வி அவளைத் திடுக்கிட வைத்தது.*

*அது ஒன்றுமில்லைப் பிள்ளை. சமையலை முடிச்சிட்டு வந்தன். ஒரே*

அலுப்பாய் இருந்துது. அதுதான் கொஞ்ச நேரம் இதிலை இருந்திட்டுப் போய்க் குளிப்பமெண்டு நினைச்சன்.

“இல்லையம்மா. உள்ளதைச் சொல்லுங்கோ. என்ன பிரச்சனை உங்களுக்கு?”

செல்லம் மகளின் கேள்விக்கு பதில்சொல்லாமல் கதையை மாற்றினாள்.

“ஏன் பிள்ளை இண்டைக்கு நேரத்தோட வந்திட்டாய்?”

“எங்களுக்கு தவணைப் பரீட்சை நடக்குது. சோதினை வேளைக்கே முடிஞ்சுதுஅதான்....”

“சரி சரி போய் முகத்தைக் கழுவிப்போட்டு வந்து சாப்பிடு”

“எனக்குப் பசிக்கேல்ல. இப்ப எனக்கு உங்கட யோசனைக்கான காரணம் தெரிய வேணும்.”

மகளின் பிடிவாத குணத்தை செல்லம் நன்கறிவாள். சிலவேளைகளில் குயிலி அவளுக்கு தோழியாக அல்ல அதற்கு ஒரு படி மேலாக ஒரு ஆசானாகவே இருந்து இக்கட்டான சமயங்களில் அவளுக்கு வழிகாட்டி யாக இருந்திருக்கிறாள். தனது ஆதங்கத்தை மகளிடம் கொட்டி விடுவதென அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

“இல்லையடி பிள்ளை. உவள் தேவகிக்கு கலியாணத்துக்கு நாள் வைச்சிட்டினம். கொப்பர் அவளுக்கு தாய் மாமனெல்லே. நாங்களும் சங்கையாய் அவளுக்கு ஏதும் நகை போட வேண்டாமே. கொப்பருக்கு உதுகளைப் பற்றிய சிந்தனை வராது. அதுதான் நான் என்ன செய்யிறது எண்டு முளிச்சுக் கொண்டிருக்கிறன்.”

குயிலி வாய்விட்டு சிரித்தாள்.

“உதுக்கேனம்மா இருந்து யோசிச்சு உடம்பைக் கெடுத்துக் கொள்ளுறியள். உங்கட பாஸ் புக் கில கொஞ்சக்காசு கிடக்குதெல்லே. லெட்சுமியை வித்த காசையும் அதில தானே போட்டு வைச்ச நீங்கள்”.

குயிலியைப் பேசவிடாது செல்லம் குறுக்கறுத்தாள்.

“அதுபிள்ளை நாங்கள் அத்திவாரம் போடுறதுக்கெண்டு சிறுகச்சிறுக சேமித்தது. அதில கை வைக்க எனக்கு விருப்பமில்லை.”

“இப்ப அவசர தேவைக்கு அதிலை எடுங்கோ. பிறகு அந்த நேரம் பாத்துக்கொள்ளலாம்”. எனினும் வேறு வழி இருப்பதாகவும் தோன்ற வில்லை.

“மாமி உனக்கு ஒன்றரைப் பவுணில சங்கிலி போட்டவ. நாங்கள் என்னத்த போடுறது.?”

இருங்கோம்மா. நான் ஒரு யோசனை சொல்லுறன். தேவகி மச்சாளுக்கு அரைப்பவுணில ஒரு மோதிரமும் மாப்பிள்ளைக்கு முக்கால்

*பவுணில ஒன்றும் போட்டாப் போச்சுது.அதை விட்டிட்டு இருந்து யோசிக்கிறாவாம்".*

*குயிலி அம்மாவைப் பார்த்து நெளித்தாள். செல்லத்துக்கு புத்துயிர் வந்தது போலிருந்தது.*

*நான் இரண்டு பவுணில ஒரு சோடி காப்பாவது போடவேணு மென்று நினைச்சன்.*

*"சும்மா போங்கோம்மா. விரலுக்கேற்ற வீக்கம் தான் நல்லது. ஒன்றேகால் பவுணில இரண்டு மோதிரங்களும் செய்திடலாம். விடுங்கோ கவலையை.."*

*"கொப்பர் உதுக்கு சம்மதிக்கிறாரோ தெரியேல்ல"*

*அவர் என்ன சம்மதிக்கிறது. எங்கட வல்லமை கமலமாமிக்கு தெரியும்தானே. அவ குறையாய் நினைக்கமாட்டா. எங்கட பங்குக்கு நாங்கள் எங்களால முடிஞ்ச உதவியைச் செய்து குடுப்பம். சரிதானே நான் சொல்லுறது."*

*அரைமனதுடன் தலையசைத்தாள் செல்லம்.*

*"சரிசரி நேரமாகுது அப்பாவும் தங்கச்சியவையும் ஸ்கூலால வரப்போகினம் நீங்கள் போய் குளிச்சிட்டு வாங்கோ.."*

*"இப்பதான் என்க்கு கொஞ்சம் நிம்மதியாயிருக்கு. இப்ப ரெண்டு நாளாய் என்ரை மனம் கிடந்து அடிச்சுக் கொண்டிருந்தது எனக்கெல்லோ தெரியும்".*

*தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவளாய் செல்லம் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். திடீரென ஏதோ நினைத்துக் கொண்ட வளாய் குயிலியை அழைத்தாள்.*

*"என்னம்மா!" என்று கேட்டுக் கொண்டே முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்கு வந்தாள் குயிலி.*

*"என்னைப் பார்த்துக் கொண்டிராத பிள்ளை. முகத்தைக் கழுவிப் போட்டு போய் நீ போட்டுச் சாப்பிடு என்ன!"*

*"இல்லையம்மா நீங்களும் குளிச்சுப் போட்டுவாங்கோ. அப்பாவை யும் வரட்டும் எல்லாரும் ஒன்றாய்ச் சாப்பிடுவம்." குயிலியின் பதில் செல்லத்துக்கு சரியாகப்பட்டது. மனநிறைவையும் தந்தது.*

***

*கல்யாண வீட்டு ஆரவாரத்தில் கமலத்தின் வீடு களை கட்டி யிருந்தது. பரமசிவமும் செல்லமும் தேவகியின் கல்யாண அலுவல்களைத் தமது சொந்த வீட்டுக்காரியமாகவே நினைத்து அங்கு வளைய வந்து கொண்டிருந்தனர். மகிழும் புகழும் கூட இடைக்கிடை மாமியின் வீட்டில் தலையைக் காட்டிக் கொண்டிருந்தனர். குயிலி மட்டும் தானும் தனது*

படிப்பும் என கல்வியில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தாள். கலியாணத்திற்கு இன்னும் மூன்று நாட்களே பாக்கி இருந்த வேளையில்த்தான் மகிழ் வந்து அக்காவிடம் அந்தப் புதினத்தைச் சொன்னாள்.

“அக்கா! அக்கா ரகுஅத்தான் வந்திருக்கிறார். அவர் இப்ப முன்னை மாதிரி இல்லை. ஆள் படுஸ்ரைலாய் இருக்கிறார்”.

மகிழ் கூறிய வார்த்தைகள் அவளது உள்ளத்து உணர்ச்சிகளைத் தூண்டிவிட்ட போதும் வாய் மட்டும் அவளை விரட்டியது.

“சும்மா போடி உனக்கு எப்பவும் பகிடி தான்”.

“இல்லையக்கா. நான் சொல்லுறதை நம்பு. அவர் பக்கத்தால போக்கேக்க சும்மா கப்பென்று வாசனையெல்லாம் வருகுது. கண்ணாடி வேற போட்டிருக்கிறார். உண்மையில பார்வைக்குறைபாடு தானோ அல்லாட்டி ஸ்ரைலுக்குத்தான் போட்டிருக்கிறாரோ தெரியேல்ல”.

“எனக்கு உன்னைப்பற்றி தெரியாதோ. கொஞ்சம் எண்ட உடன பெரிசாய் ஊதிப்பெருப்பிச்சுப் போடுவாய். போடி கள்ளி.”

“சரி தான். சொல்லுறதை நம்பாட்டி போ. நீ நேரில பாக்கேக்க தெரியும்தானே”

அப்போது தான் கமலம் வீட்டிலிருந்து வந்த செல்லம் அவசரமாக மகிழைக் கூப்பிட்டாள்.

“மகிழ்! ஓடி வா பிள்ளை. நேரமாச்சுது. கன்றை ஊட்ட விட வேணும்”

மகிழ் அம்மா மீதுசினத்தாள்.

என்னால ஏலாது. வேணுமெண்டால் ,நீங்கள் அக்காவைக் கூட்டிக் கொண்டு போங்கோ. அவவுக்கு எந்த நேரமும் படிப்பு. அதுஒரு சாட்டாய்ப் போச்சுது. இஞ்சை எல்லா வீட்டு வேலையும் நான்தான் செய்ய வேணும் உங்களுக்கு..”

“அம்மா நான் வாறன். “

முந்திக்கொண்டு மாட்டுக்கொட்டிலை நோக்கிப் போனாள் குயிலி. செல்லத்துக்கு மகிழ் மீது ஏற்பட்ட கோபம் அடங்கவில்லை. புறுபுறுத்தவாறே போனாள்.

“இவ்வளவு நேரமும் அங்கை மாமி வீட்டில் நின்று ஆட்டம் போட்டிட்டு இப்பதான் வீட்டை வாறாள். அதுக்கிடையில அவளின்ரை வாயைப்பார். இருந்துகொள். வந்து உன்னைக் கவனிக்கிறன்.”

குயிலி அம்மாவை சாந்தப்படுத்தினாள்.

“அவளின்ரை குணம் தெரியாதோ உங்களுக்கு. நீங்களும் அதைப் பெரிசாய் தூக்கிப் பிடிக்கிறியள். சும்மா விட்டிட்டு இப்ப வந்து பாலைக்

*கறவுங்கோவன்."*

*இருவரும் பாலைக் கறந்து கொண்டு வந்தனர். வாடிக்கையாளர் களுக்கு கொடுக்கும் பாலை போத்தல்களில் ஊற்றி வைத்துவிட்டு மிகுதியை செம்போடு வைக்க குயிலி அதை எடுத்துப் போய் காய்ச்சினாள்.*

*"குயிலி! கொப்பரும் வந்திட்டார். எல்லாருக்குமா தேத்தண்ணியைப் போடு பிள்ளை."*

*தவிடு புண்ணாக்கைக் கரைத்தவாறே செல்லம் குரல் கொடுத்தாள்.*

*அனைவரும் வந்து விறாந்தையில் அமர்ந்தவாறே சுடச்சுட தேநீரை சுவைத்துப் பருகிக் கொண்டிருந்தனர். மகிழ் தனது வாயால் அம்மாவைக் கிளறினாள்.*

*"அம்மா! ரகு அத்தான் வந்திட்டாரெல்லே"*

*"ஓ... அதுக்கு இப்ப என்ன"*

*மகளின் துழாவுதல் செல்லத்துக்கு எரிச்சலை மூட்டியது.*

*"நான் சொல்ல ... அக்கா நம்பமாட்டாவாம்."*

*"இல்லையம்மா."*

*நாணத்துடன் நெளிந்தாள் குயிலி . அதே சமயம் தங்கைமாரை விரட்டினாள்.*

*பொழுதுபட்டால் போயிருந்து படிக்க வேண்டியதுதானே. அதுவும் சொல்ல வேணுமாக்கும் இருவரும் எழுந்து போனார்கள். மகிழ் வாய்க்குள் புறுபுறுப்பது தெளிவாக கேட்டது.*

*"அது எங்களுக்குத் தெரியும்தானே. இவ சொல்ல வேணுமே."*

*பரமசிவத்தின் காதுகளில் அவளது வார்த்தைகள் விழ அவர் ஆவேசத்துடன் உறுமினார்.*

*" வர வர உவளுக்கு வாய் நீண்டு கொண்டு போகுது. ஒரு நாளைக்கு குடுக்கிற அடியில் எல்லாம் தன்னால் சரி வரும்."*

*குயிலி அப்பாவினதும் அம்மாவினதும் காலியான தேநீர்க் கிண்ணங்களை எடுத்துக் கொண்டு போய் அமர்ந்தவள் , குறிப்பேடுகளை எடுத்து புரட்டத் தொடங்கினாள். மனம் ஒருநிலைப்பட்டு கவனத்தை படிப்பில் செலுத்த மறுத்தது.*

*"பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் நாகரிகமான யுவதிகளைக் கண்டவனுக்கு இனி நாமெல்லாம் நாட்டுப்புறத்து நாகரிகமற்றவர்களாகத்தான் கண்ணுக்கு தெரியும்". ஒரு கணம் மனம் எண்ணி அங்கலாய்த்தது. மறுகோடியில் அது தனாகவே சமாதான மடைந்தும் கொண்டது.*

“சே! ரகு அத்தான் அப்படிப்பட்டவர் அல்ல. அவருக்காகவே காத்திருக்கும் இந்த அபலையை மறந்து விடுவாரா... என்ன... கலி யாண வீட்டிற்கு அம்மா என்னை கூட்டிப் போவதாகச் சொன்னவதானே. அப்போது நான் அவரை நேரில் பார்க்கத்தானே போகிறேன்.“

தெளிவான ஒரு முடிவுக்கு வந்தவள் மனதில் நடந்த போராட்டத்தை ஒரு புறம் ஓரங்கட்டி வைத்து விட்டு வலுக்கட்டாயமாக தனது கவனத்தை பாடத்தில் செலுத்தினாள். செலுத்தியவள் வெற்றியும் கண்டாள்.

“நாங்கள் ஏழைகளாய் இருந்தபோதிலும் நன்றாக படிக்க வேண்டும். படித்தால்த்தான் நாங்களும் அவர்களுடன் சம அந்தஸ்த்தில் இருந்து வாழ முடியும். என்னால் முடிந்த வரை படிப்பேன். படித்து ஒரு நல்ல நிலைக்கு வருவேன். இது நிச்சயம் மனம் கங்கணம் கட்டிக்கொண்டது.

வீட்டின் வாசற் குந்தில் பரமசிவம் அமர்ந்திருந்தார். செல்லம் அவரது காலடியில் படிக்கட்டில் இருந்தவாறு தங்களது இட்டல் இடைஞ்சல் களைப் பற்றி அலசத்தொடங்கினாள்.

“கலியான வீட்டிற்கு போட்டுக்கொண்டு போறதுக்கு குயிலிக்கு மட்டும் ஒரு காஞ்சிபுர பட்டுபாவாடையும் தாவணியும் வாங்கினால் போதும். அதுக்கும் இப்ப... எக்கச்சக்கமாய் முடியும் போல தெரியுது. மற்றவளைவைக்கு குயிலியின்ரை முழுப்பாவாடைகள் அப்படியே பிசங்கா மல் புதுசாக்கிடக்கு. எடுத்து சிறுப்பிச்சுப் போட்டுக் குடுப்பமெண்டு யோசிக்கிறன்.”

எப்போதும் செல்லத்தின் கருத்துக்கு மறுத்துச் சொல்பவரல்ல பரமசிவம் “நீர் சொன்னால் சரிதான்” என்று ஓரே வார்த்தையில் ஆமோதித்துவிட்டார். இருந்த போதிலும் மனதில் அவருக்கு ஒரு குழப்பம் இருக்கத்தான் செய்தது.

“செல்லம்! நீர் உமக்கென்று ஒரு சாறியும் வேண்டுறதில்லை. நீர் என்னத்தை உடுக்கபோறீர்?”

மனதில் தோன்றியதை அவர் கேட்டுவிட்டார்.

“அதைப் பற்றி யோசியாதையுங்கோ. என்ரை கூறைச் சேலை அப்படியே மடிப்புக் குலையாமல் புதுசாய்க் கிடக்குது. நானும் அதை எங்கே தான் உடுக்கிறது. தேவகியின்ரை கலியாணத்துக்கு எடுத்து உடுப்ப மென்று இருக்கிறன். அதுக்கு சட்டை மட்டும் அளவிருக்காது. ஒன்றை வேண்டித் தைச்சால் போகுது.”

செல்லம் சாதாரணமாகச் சொன்னாள். பரமசிவத்தாருக்கு அவளுடைய பக்குவகுணம் நன்கு தெரியும். சுமார் பதினாறு வருடங்களின் முன் நடந்த அவர்களது திருமணத்தைப் பற்றிய நினைவுகள் அவரை எட்டிப் பார்த்து கண் சிமிட்டின. ஒரு புன்னகையுடன் வானத்து நிலவை ஊடுருவிக் கொண்டிருந்த அவரது பார்வையை திசைத்திருப்பினாள் செல்லம்.

“இஞ்சாருங்கோப்பா! நாளைக்கு மோதிரங்களை வந்து எடுக்கச் சொல்லி தட்டான் சொல்லி விட்டவர். போய் எடுக்கவேணும். மறந் திடாதையுங்கோ”

அக்கறையுடன் கூறிய மனைவியின் முகத்தை நிலவொளியில் ஆராய்ந்தார் பரமசிவம். “அந்த நிலவைப்போலவே கள்ளங்கபடமற்ற முகம்” மனத்தில் ஒரு திருப்தி தோன்றியது.

***

விடிந்தால் திருமணம் செல்லம் அன்று இரவு அங்கேயே தங்கி விட்டாள். பரமசிவத்தார் பிள்ளைகளதும் பசுவினதும் பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டு செல்லத்தை தங்கையின் வீட்டில் தங்கி கூடமாட ஒத் தாசையாக இருக்குமாறு பணித்து விட்டார். பெண்கள் அதிகாலை யிலேயே எழுப்பி இடியப்பம் உருளைக்கிழங்கு பிரட்டல் சொதி என பெண்ணுக்குத் தண்ணி வார்க்க வரும் மாப்பிள்ளை வீட்டாருக்காக உணவு தயாரிப்பதில் ஈடுபட்டனர். கமலம் செல்லத்தை விரட்டினாள்.

“எணெ அத்தாச்சி! நீபோய் குளிச்சு வெளிக்கிட்டு வா எக்கணம் மாப்பிள்ளை அழைப்புக்கு போறதுக்கு நேரமாகுது.”

செல்லமும் தான் செய்த வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு புறப்பட்டு விட்டாள். அங்கு பரமசிவம் குளித்து றெடியாகி நின்றார்.

“நீங்கள் நேரத்துக்கு போங்கோப்பா. நான் மகிழையும் புகழையும் கூட்டிக் கொண்டு வாறன்”

“அப்ப... குயிலி...”

பரமசிவம் கேள்வி எழுப்பினார்.

“அவள் வீட்டிலை நிக்கட்டும். ஆசையக்கா வந்து அவளைக் கூட்டிக் கொண்டு வருவா. தாலி கட்டுற நேரத்துக்கு வந்தா சரிதானே”

“ஓ... அதுவும் நல்லது தான்“

பரமசிவம் புறப்பட்டுப் போய்விட்டார். தாய் மாமன் ஸ்தானத்தில் இருந்து அவர் பல காரியங்களைச் செய்ய வேண்டி இருக்குமே.

செல்லமும் பிள்ளைகள் இருவரும் கிளம்ப ஆயத்தமானார்கள். மகிழ்மட்டும் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டாள். தாழ்வு மனப்பான்மை என்ற சொல்லுக்கு அவள் அடிமையாகி இருந்தாள்.

“அம்மா மட்டும் அழகான சாறி கட்டியிருக்கிறா. என்னுடைய பாவாடை சரியில்லை. அக்கா உடுத்தின பழசுதானே. அது எனக்கு வேண்டாம்”

சிணுங்கியவள் முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு போய் ஒரு பக்கம் இருந்துவிட்டாள். குயிலி அவளைச் சமாதானப்படுத்தினாள்.

“இஞ்சை பார் மகிழ்! அக்கா சாமத்திய வீட்டுக்கு ஒரு நாள் மட்டும் தானே இந்த பாவாடையை உடுத்தின நான். எல்லாரும் பார்த்து வடிவாய் இருக்குதென்று தானே சொன்னவை. “

மகிழ் அக்காவின் பேச்சை வெட்டினாள்.

“உது பழசுதானே. உங்களுக்கு மட்டும் அம்மா புதுசு வாங்கி தந்து போட்டா. நான் மட்டும் உங்கட கழிவையோ உடுத்திறது நான் கலியாண வீட்டுக்கு வரயில்லை.”

அடம் பிடித்தவளை சமாதானப் படுத்த குயிலி பாடுபட்டாள். நேரமும் போய் கொண்டு இருந்தது. செல்லத்துக்கு கோபம் உச்சத்துக்கு ஏறிவிட்டது.

“அவள் வராட்டில் வீட்டுக்குக் காவலாய் இருக்கட்டும். புகழ் நீ வா நாங்கள் போவம்”

புகழை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டாள் செல்லம். ஒருவாறு மகிழின் மூர்க்கத்தனமான பிடிவாதத்தை உடைத்து விட்டாள் குயிலி. சாமர்த்தியமாக அவளுக்கு தான் அணிந்த வளையல்கள் சிமிக்கி போன்ற அலங்கார ஆபரணங்களை அணிவித்து தலைக்கு கனகாம்பர மாலையும் கட்டிவிட்டாள். மகிழுக்கு தன்னை அழகாக அலங்கரிப்பதில் ஆர்வம் அதிகம். ஆசையம்மா வந்ததும் அவவுடன் இணைந்து போகலாம் என குயிலி சொன்னதையும் கேட்காமல் தனியாகவே திருமண வீட்டுற்கு புறப்பட்டு விட்டாள்.

அலங்கார தேவதையாக அங்கு வந்து நின்ற மகள் மகிழினியைக் கண்டதும் செல்லம் ஆச்சரியத்தில் திளைத்துப் போனாள். எல்லாம் குயிலியின் வேலையாகத்தான் இருக்கும் என மனதுக்குள் நினைத்து நிம்மதியுற்றாள்.

சரியாக மாப்பிள்ளை அழைத்துவந்த நேரத்துக்கு ஆசையம்மாவுடன் குயிலியும் அங்கு வந்து சேர்ந்தாள். மாப்பிள்ளையை பார்க்கும் ஆவலுடன் நிமிர்ந்து பார்த்தவளது இமைகள் ஒருதரம் இயங்க மறுத்துவிட்டன. சாட்சாத். மாப்பிள்ளைக் கோலத்தில் அங்கு மாப்பிள்ளையருகே ரகு நின்றிருந்ததுதான். மாப்பிள்ளையை விட ரகு எடுப்பான தோற்றத்தில் காட்சியளித் தான். எத்தனை நேரம் தான் அப்படி நின்றிருந்தாளோ... சுயநினைவுக்கு வந்தவுடன் அவள் வெட்கித்துப்போய் தன்னையே நொந்து கொண்டாள்.

“ரகுவின் அழகுக்கும் கம்பீரத்துக்கும் நான் ஏற்றவள் தானா” மனம் ஒரு தரம் ஏக்கத்துடன் வினாவெழுப்பியது. அவளது கண்களோ கட்டுப் பாட்டை இழந்து மணவறையை நோக்கியே வட்டமிட்டது.

“பொம்பிளையை அழைச்சுக் கொண்டு வாங்கோ“

*யாரோ உரக்க குரல் கொடுத்தார்கள். ஆசையம்மாவுடன் பந்தலின் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த குயிலி ஆவலுடன் பார்வையைச் செலுத்தினாள். தேவகி மச்சாளா இது.... அழகே உருவாக ஒரு தேவதையைப் போல் அன்ன நடை யுடன் தலையைக் குனிந்தவாறு வந்தவளை தோழி அணைத்தவாறு அழைத்து வந்தாள். மணவறையில் அவள் அமர்ந்ததும் சம்பிரதாய பூர்வமான சடங்குகள் நடந்தேறிய பின்னர் மணமகன் அவளது கழுத்தில் மங்கலநாணை அணிவித்தார். இமைவெட்டாமல் அவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த குயிலி இடையிடையே ரகுவையும் கவனிக்கத் தவறவில்லை.*

*சம்பிரதாய பூர்வமான சடங்குகள் முடிந்ததும் மணமக்களை ஆசீர் வதித்து அட்சதை போட அனைவரும் எழுந்துபோயினர். பரமசிவமும் செல்லமும் மணமக்களுக்கு மோதிரம் அணிவித்து அட்சதை தூவி ஆசீர்வதித்தனர். ஆசையம்மாவும் எழுந்து போய்விட்டதால் குயிலி மட்டும் தனித்து ஒரு தூணருகில் நின்றிருந்தாள். அருகே ஒரு குரல் கேட்டதும் பிரமித்துப் போனாள்.*

*“மாமாவும் மாமியும் பொம்பிளை மாப்பிள்ளைக்கு மோதிரம் போட்டு வாழ்த்துகினம். எங்களுக்கு அப்பிடிச் செய்வினமா?”*

*சிரித்தவாறு ரகு அருகில் நின்றிருந்தான். இதனை சற்றும் எதிர்பார்த்திராத குயிலிக்கு வெட்கமாக இருந்தது. தலையைக் குனிந்து கொண்டாள்.*

*“ஏ.எல். படிக்கத் தொடங்கியதும் வாயடிக்கிறகுணம் குறைஞ் சிட்டுது போல“ ரகுவின் கிண்டல் பேச்சுக் கேட்டு சற்று முறுவலித்தவள் கேட்டாள்*

*“எப்பிடிப் போகுது படிப்பு?”*

*“இது நான் கேட்க வேண்டிய கேள்வி “*

*“கம்பஸ்சுக்குப் போனபிறகு நல்லாய்த்தான் கதைக்கப்பழகி விட்டியள்”*

*“இல்லை. நான் சீரியஸாய்த்தான் கேக்கிறன். எப்பிடி படிக்கிறீரோ?”*

*“என்னால முடிஞ்சவரைக்கும் தெண்டிக்கிறன்”*

*“நான் ஒன்று சொல்லுறன் குயிலி வடிவாய்க் கேட்டுக் கொள்ளும் படிச்சு முன்னேறியனால்த்தான் இந்த உலகத்தில் மதிப்பு இல்லாட்டி...”*

*“இல்லாட்டி என்ன... சொல்லுங்கோவன். ஏன் நிறுத்திப் போட்டியவள்?”*

*“பகிடியில்லை குயிலி. கவனமாய்ப் படிச்சு கம்பஸ் என்ர பண்ணிப் போடும்”*

யாரோ ரகுவைக் கூப்பிடவே அவனும் போய்விட்டான். நிர்மல மாய் இருந்த குயிலியின் மனத்தைக் கிளறிவிட்டவன் அவளது உள்ளத்தில் நீக்கமற நிறைந்தும் விட்டான்.

***

கலியாண வீட்டில் மதிய போசனம் முடிந்ததும் வந்திருந்த விருந்தினார்கள் சிறிது சிறிதாக விடைபெற்றுப் புறப்பட கூட்டமும் கலையத் தொடங்கியது. ஆசையம்மாவும் இரண்டு பஸ்கள் எடுத்துப் போக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் செல்லத்திடமும் கமலத்திடமும் சொல்லி கொண்டு கிளம்பிவிட்டாள். குயிலியும் அவளோடு கூடவே வீட்டிற்கு வந்து சேர்த்தாள் . மகிழ் புகழ் வால்கள் இரண்டும் அங்கு கலியாண வீட்டில் மற்றைய சிறுசுகளோடு ஓடியாடி ஒரே கும்மாளம்.

வீட்டிற்கு வந்த குயிலி ஆசையம்மாவை வழியனுப்பி வைத்துவிட்டு தானும் உடைமாற்றி முகம் கழுவிவிட்டு வந்தாள்.

“ம்பா!...”

காயாப்பசு தன் வயிற்றுப்பசியை அவளுக்கு நினைவூட்டியது. குயிலி ஓடோடிச் சென்று ஒரு பெரிய வாளியில் தவிடு பிண்ணாக்கு என்ப வற்றைக் கரைத்து பசுவுக்கு வைத்தாள். பசுக்கன்றுக்கும் தண்ணீர் வைத்துவிட்டு அவசரஅவசரமாக தோட்டத்துக்குள் ஓடிப்போய் பசும் புல்லைப் பிடுங்கி வந்து வைத்தாள். வேட்கையுடன் அது உண்ணும் அழகை சிறிதுநேரம் ரசித்துவிட்டு வந்தவள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டாள். அவளது கண்கள் எங்கேயோ நிலைத்திருக்க மனக்கண்முன் அன்றைய கல்யாணக்காட்சிகள் அரங்கேறத் தொடங்கின. முக்கியமாக ரகு அத்தான் அவளிடம் வலிய வந்து பேச்சக் கொடுத்த அங்கமே மீள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

ஏன் அத்தான் அப்படிச் சொன்னவர்? மீண்டும் மீண்டும் அதே கேள்வி மனதைக் குடைய விடைதேடும் படலத்தில் அவள் மூழ்கிப் போனாள். ஒரு வேளை நானும் பட்டப்படிப்பை முடித்தால்த்தான் அவருக்கு சம அந்தஸ்த்தில் இருக்க முடியும் என அவர் நினைத்திருக்கலாம். எப்படியும் நான் கவனமாகப் படித்து ஒரு நல்ல நிலைக்கு வந்துவிட வேண்டும் மனம் தீர்க்கமான ஒரு முடிவை எடுத்துக் கொண்டது.

எத்தனை நேரம்தான் சிந்தனையைச் சிதறவிட்டவாறு அப்படியே அமர்ந்திருந்தாளோ... அம்மாவின் பரபரப்பான குரல் அவளை இவ்வுலகிற்கு அழைத்து வந்தது. வந்ததும் வராததுமாக அம்மா கன்று ஊட்டவிட வேண்டும் என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள். குயிலியும் அடுப்படிக்குள் நுழைந்து பாற்செம்புடன் வரவும் அம்மா உடைமாற்றி வரவும் நேரம் சரியாக இருந்தது.

“மகிழ் புகழ் ரெண்டு பேரும் எனக்குப் பின்னால வந்தவளவை பார்

இன்றும் வீடு வந்து சேரயில்ல."

"இன்றைக்கு நல்லாய் வாங்கிக்கட்டப் போகினம்"

மனதுக்கு நினைத்துக் கொண்டவளாய் கன்றை அவிட்டு ஊட்ட விட்டாள் குயிலி

சுர்ர்ர்... சுர்ர்ர்...

அம்மாவின் கையிலிருந்த செம்பில் பால் நுரை பொங்கிவழிந்தது. வாடிக்கையாளர்களுக்கான பாலை ஊற்றி வைத்துவிட்டு மிகுதியை செம்போடு குயிலியிடம் கொடுத்தாள் செல்லம். அவளும் அதைப் பக்குவமாக காய்ச்சி தேநீர் தயாரித்தும் அவர்கள் இருவருமாக விறாந்தையில் வந்து ஆற அமர இருந்துகொண்டு சுடச்சுட பருகத் தொடங்கினர்.

"ஏன் பிள்ளை முகம் காய்நது போய்க்கிடக்குது"

மகளைப் பார்த்து கரிசனையுடன் வினாவினாள் செல்லம்

"அம்மா! தலை வலிக்குதம்மா"

சிணுங்கினாள் குயிலி

"இன்றைக்கு கலியாண வீட்டில் பல பேருடைய கண் பட்டது. ஒருக்கா என்டை பிள்ளைக்கு திட்டி சுத்திப் போடவேணும்." மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் செல்லம்.

குயிலி அப்படி ஒண்டும் குறிப்பிடத்தக்க பேரழகியல்ல . ஒல்லியான உடம்பும், அடக்கமான தோற்றமும் எவரையும் ஒருதரம் திரும்பிய பார்க்க வைக்கும் தன்மையுடையது. செல்லத்தைப் பொறுத்தவரை காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா.....

பரமசிவம் மற்றும் சிலருடன் மணமக்களை அழைத்துக் கொண்டு போய் மாப்பிள்ளை வீடு வரை விட்டுவிட்டு வரப் போயிருந்தார். வேலணைக்குப் போய்த்திரும்ப இரவு ஒன்பது மணியாவது ஆகும். எனவே உடல் அசதியினால் செல்லமும் பிள்ளைகளும் நேரத்தோடு படுக்கைக்குப் போய்விட்டனர்.

குயிலிக்கு மட்டும் நித்திரை வர மறுத்து விட்டது. கலியாண வீட்டில் நடந்த சம்பவங்கள் காட்சிகளாக மனக்கண்முன் ஓடத் தொடங்கின. தேவகி மச்சாளைப் போலவே நானும் ஒருநாள் அலங்கார தேவதையாக மணவறையில் வீற்றிருப்பேன். என்னருகில் ரகு அத்தான் ஒரு சுந்தர புருசனாக அமர்ந்திருந்து கடைக்கண் பார்வையால் என்னைச் சீண்டுவார். கடவுளே அத்தான் தான் எனக்கு புருசனாக அமைய வேண்டும். அவர் என்ஜினியர் ஆனால் என்ன... நானும் ஒரு பட்டதாரியாக பெரும் பதவியில் இருப்பேன். அவருக்கு நண்பர்கள் கூட்டம் இருப்பது போல் நானும் வேலை பார்க்கும் இடத்தில் எனக்கும் ஒரு நண்பிகள் வட்டம் இல்லாமலா போய்விடும். தெய்வமே நீதான் எனது ஆசையை நிறைவேற்றி வைக்க வேண்டும். ஏனோ

என்னுடைய மனதில் அத்தானைத் தவிர வேறொருவருக்கும் இடமில்லை. இந்த இச்சையை எனக்குக் கொடுத்ததும் நீயேதான். ரகுவின் அழகுமுகம் அவள் கண் முன்னே தோன்றி அவளை அலைக்கழித்தது. அவளுடன் கூட ஓடிப்பிடித்து விளையாடிய அந்தப் பையனா இவன்… அரும்பு மீசை அவனது பொதுநிற மேனிக்கு அழகு சேர்த்தது மட்டுமல்லாமல் கண்களில்தான் எத்தனை கவர்ச்சி. அதுவே காந்தம் போல் அவனுடன் கூடப் படிக்கும் மற்றைய பெண்களையும் சுண்டி இழுத்து விடுமோ.

மனம் ஒரு கணம் ஏக்கம் கொண்டது. மறுகணமே அவள் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். சே! ரகு அத்தான் அப்படிப்பட்டவ ரல்ல. என் மனம் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும் அவர் வேறு பெண் களின் வலையில் விழ மாட்டார். அம்மா சொன்னவ. தேவகி மச்சான் வீட்டில இருந்து வெளிக்கிடும் போது அழத் துவங்கீட்டாவாம். நான் என்றால் அழமாட்டன். நான் என்ன கண்காணாத இடத்துக்கே போகப் போறன். எங்கட கமலமாமி வீட்டுக்குத் தானே போவன். போதாததுக்கு ரகு அத்தான் பக்கத்தில இருக்கேக்க எனக்கு அழுகை என்னெண்டு வரும்?.

குயிலிக்கு அதை நினைக்க பெருமையாய் இருந்தது. ரகு அத்தானும் அவளும் வாழப் போகும் வாழ்க்கையைப் பற்றிய கற்பனைக் கோட்டைகள் அவளது மனத்தை நிறைத்து நிற்கும். அதேசமயம் அவள் தன்னையே நொந்து கொள்வாள்.

சே… இப்பதான் நான் ஏ.ஏல் படிக்கிறன். இனி நான் கம்பஸ் என்ரர் பண்ணி டிகிரி முடிச்சு. ஒருவேலையில சேர்ந்து எவ்வளவு காலம் இருக்கு. அதுமட்டுமில்ல. என்ரை குடும்பத்தை நான் உழைத்துத் தான் முன்னேற்ற வேண்டும். தங்கச்சிமாரை படிக்க வைத்து அவைக்கு ஒருநல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்க வேண்டும் அம்மா பாவம். இந்தக் குடும்பத்துக்காக அவ ஓடாய் உழைத்து படுற கஸ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அவ படுற கஸ்டங்களுக்கு நான் தான் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் . அதையெல்லாம் சிந்திக்காமல் என்னுடைய விசர் கற்பனைகளை நான் வளர்க்கக் கூடாது.

அவளது சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாப் போல் கதவில் தட்டும் சத்தம் கேட்டது.

டொக்! டொக்!!

கூடவே பரமசிவத்தின் குரலும் கேட்டது. குயிலி கதவைத் திறப்பதற்காக எழுந்து போனாள்…

***

தேவகியின் திருமணம் இனிதே நடந்தேறி அவள் மாமியார் வீட்டுக்கு வாழப் போய் விட்டாள். ரகுவும் பேராதனைக்குப் போய் விட கமலத்தின் பாடு தனிமை என்னும் வலைக்குள் மாட்டிக் கொண்டு

விட்டது. எடுத்ததற்கெல்லாம் தேவகி தேவகி என வாய் நிறையக் கூப்பிட்டு பழக்கப்பட்டவளுக்கு வீடு வெறிச்சோடி விட்டதாக ஒரு பிரமை. சுந்தரலிங்கம் விடியக்காலையில் கடைக்கு போனால் பொழுது கருகிய பின் தான் வீடு வந்து சேருவார். மதியம் கடையில் வேலை செய்யும் பையனை அனுப்பி உணவை எடுப்பித்துக் கொள்ளுவார்.

கமலத்துக்கு இப்போது தான் தனிமையின் தார்ப்பரியம் உறைக்கத் தொடங்கியது. அவள் அடிக்கடி செல்லத்திடம் தான் போய் தன் மனப் புலம்பலை வெளிப்படுத்துவாள். செல்லம் அவளுக்கு இதமாக ஆறுதல் சொல்லி அரவணைத்துக் கொள்ளுவாள். மகளின் பிரிவினைத் தாங்க முடியாமல் அங்கலாய்த்துக் கொண்டிருந்த கமலத்துக்கு செல்லம் ஒருஆலோசனை கூறினாள்.

"எணெ மச்சாள்! நீஇஞ்சை கிடந்து புலம்பாமல் ஒரு நடைபோய் தேவகியை பாத்துக் கொண்டு வாவன் பிள்ளை அங்கை சந்தோசமாய் இருக்கிறாளோ எண்டு கண்டறிஞ்ச மாதிரியும் இருக்கும்."

"சரியாய்ச் சொன்னாயெண அத்தாச்சி. நான் ஓர் எட்டு அவளைப் போய் பாத்துக் கொண்டு வந்திட்டா….. எப்பன் மனத்துக்கு நிம்மதி யாயிருக்கும்."

மீண்டும் செல்லம் அவளுக்கு அறிவுறுத்தினாள்.

"பிள்ளையைப் பார்க்க வெறுங் கையோடயே போறது. அவளுக்குப் பிடித்தமான பலகாரம் ஏதும் செய்து கொண்டு போவெண".

"அவளுக்கு இனிப்புப்பண்டம் பிடிக்காது. கொஞ்ச வடையைச் சுட்டுக் கொண்டு போவமெண்டு பாக்கிறன்."

"நீ வெளிக்கிடேக்க சொல்லு மச்சாள். நானே வந்து வடை சுட்டுத் தாறன். அதோட... அண்ணரின்ரை மதியச் சாப்பாட்டைப் பற்றி யோசிக்காத நான் சமைச்சுக் குடுத்து விடுறன் பிள்ளையைப் பார்க்கப் போறநீ பகல் ஒரு நேரம் நின்டு தானே வரவேணும்"

"உண்ணாண அத்தாச்சி உதுக்குத்தான நான் உன்னட்ட ஓடிவாற நான் சரியான புத்தி சொல்லித் தாறதுக்கு உன்னைக் கேட்டுத்தான்"

துயரம் தோய்ந்திருந்த மனது லேசாகியபோது அவளால் அண்ணியைப் புகழாமல் இருக்க முடியவில்லை சனிக்கிழமை வேளைக்கே புறப்படுவதாக ஒரு முடிவு எடுத்துக் கொண்டவளாக கமலம் தனது வீடு நோக்கி நடந்தாள்.

செல்லத்திற்கோ மனதில் பல குழப்பங்கள் பனை வளவை இரண்டாகப் பிளந்து ஐந்து பரப்புக்குள் ஒரு சிறிய வீட்டைக் கட்ட சாத்திரியாரைக் கொண்டு நிலம் எடுத்தாகிவிட்டது. அதற்கிடையில் நெருக்கமாக நிற்கும் பனைகளைத் தறித்தாற் தான் வீடு கட்டுவதற்கு நிலம்

வெளிக்கும். பின் வேலிக்கரையில் இரண்டு நிரை பனைகளை விட்டுவிட்டு மிகுதியைத் தறிக்க வேண்டியதுதான்.

இண்டைக்கு இவர் வந்ததும் பனை தறிக்க ஆள் ஒழுங்கு பண்ணச் சொல்ல வேணும்.

ஒரு முடிவு எடுத்துக் கொண்டவளாய் எழுந்து சமையற்கட்டை நோக்கிப் போனாள். சாயங்காலம் பரமசிவம் பாடசாலை விட்டு வந்ததும் அவருக்கு சாப்பாட்டை போட்டுக் கொடுத்து விட்டு மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள். இப்பொழுதுதெல்லாம் பரமசிவம் கறி சரியில்லை என்றெல்லாம் குறை சொல்வதில்லை. எதைக் கொடுத்தாலும் பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் போவார். இதனால் செல்லத்துக்கு பரம திருப்தியே.

"இஞ்சாருங்கோப்பா! வீடு கட்டுற நிலத்தில் இருக்கிற பனைகளை ஒருக்கா தறிப்பிக்கவெல்லே வேணும்."

மெதுவாக அவள் ஆரம்பித்ததும் பரமசிவம் கொதித்தெழுந்தார்.

"கொஞ்சம் பொறுமன். உவன் தருமன் வீடு மேயுறதுக்கு பனை ஓலை வேணுமெண்டு கேட்டவன். வேறையும் ஒரு பகுதி வீட்டுக் கூரைக்கு மரம் சீவ பதினைஞ்சு பனை தேவைப்படுகுது என்று சொன்னவை. நீர் நினைக்கிறமாதிரி சுடுகுது மடியைப்பிடி என்று, எதையும் யோசிக்காம அவசரமாய்ச் செய்ய முடியாது. அவசரப்பட்டால் நட்டம் எங்களுக்குத்தான். இதைப் புரிஞ்சு கொள்ளப்பழகு."

"சரியப்பா. நீங்கள் சொல்லுறமாதிரியே செய்வம்."

செல்லத்துக்கு பரமசிவத்தாரின் சமயோசிதமான போக்கு இப்போதுதான் மண்டையில் உறைத்தது.

"பின்னை நீர் என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறீர் என்னைப் பற்றி முதல்ல தருமன் முப்பது பனை ஓலையை வெட்டி எடுக்கட்டும். பேந்து பனை கேக்கிறவைக்கு வந்து பாத்து தறிச்சுக்கொண்டு போங்கோ என்று விடுவம். மிகுதி இருக்கிறதில நல்ல பனையளாப் பாத்து நாங்கள் எங்கட வீட்டுத் தேவைக்கு தறிப்பம்."

"சரியப்பா உங்கட இஷ்டப்படியே செய்யுங்கோ. எனக்கு உதுகளைப்பற்றி என்ன தெரியும்".

"மற்றுமொரு விசயம் உம்மோட கதைக்க வேணுமெண்டு நினைச்ச நான்"

"என்னப்பா. சொல்லுங்கோவன்."

வீட்டுக்கு அத்திவாரம் போடமுந்தி நாலு கொங்கிறீட் போஸ்ற் போட்டு அந்த வளவுக்கை ஒரு கொட்டிலைப் போட வேணும் கண்டீரோ. அப்பதான் சாமான்களை வைச்சு எடுக்கலாம்"

அதுவும் சரிதான் கூரையை கிடுகால மேய்வம் எண்டு

சொல்லுறியளோ."

"இல்லையப்பா. வெட்டுற பனையில மிஞ்சுற ஓலைகளை என்ன செய்யிறது. ஒதுங்கிறதுக்கும் அது அனுசரணையாய் இருக்கும். பேந்து ஒரு காலத்தில் அதுக்குள்ள நாங்கள் மாட்டையும் கட்டலாம்."

"இவ்வளவு பிளானையும் மனசுக்க வைச்சுக் கொண்டிருந்த நீங்கள். எனக்கு ஒரு மூச்சு விட்டியளோ?"

செல்லமாக கணவனை கடிந்து கொண்டாள்.

"அம்மா! இஞ்சை ஒருக்கா வாங்கோ"

மகிழ் தாயை அழைத்தாள். அவளது முகம் பேயறைந்தாற்போல் வெளிறி இருந்தது.

***

மகிழ் வயதுக்கு வந்து இருகிழமைகள் கடந்துவிட்டன. குயிலிக்கு செய்தது போல எதுவித ஆடம்பரமுமின்றி கமலம் குடும்பத்தினரோடு தண்ணீர் வார்க்கும் நிகழ்வை நடத்தி வைத்தாள். மகிழுக்கு அது விடயத்தில் திருப்தி ஏற்படாத போதிலும் அவர்களது குடும்ப நிலை அதற்கு இடமளிக்கவில்லை. தாயின் மீது வெறுப்பை உமிழ்வதைத் தவிர வேறு எதையும் அவளால் செய்யமுடியவில்லை.

"அக்கா கோயில் மாடு மாதிரி நீங்கள் சொல்லுறதுக்கெல்லாம் தலையை ஆட்டி உங்களிட்டை நல்ல பெயர் வாங்கிற மாதிரி என்னையும் நினைச்சுக் கொண்டியளே. எனக்கென்றும் சில ஆசைகள் இருக்கு. என்னுடைய சாமத்திய வீட்டை ஊரைக்கூட்டி செய்யவேணும் எண்டதுதான் என்ரை ஆசை"

ஒரே அதட்டலில் செல்லம் அவளது வாயை அடைத்துவிட்டாள்.

"எங்களால அப்பிடிச்செய்ய ஏலாது. விரலுக்கேற்றதுதான் வீக்கம். பேசாமல் வாயைப் பொத்திக்கொண்டிரு".

சிறிது நேரம் மூக்கைச் சிந்திக்கொண்டிருந்துவிட்டு ஓய்ந்து போனாள் மகிழினி.

"பெரியக்கா சின்னக்கா ஆசையக்கா எல்லாருக்கும் மகிழினி சாமத்தியப்பட்டதை தபால் மூலம் அறிவிச்சநான். இதுவரைக்கும் ஒருபதிலையும் காணேல்ல."

மனதில் நினைத்துக் கொண்ட செல்லத்துக்கு ஆசையக்கா செய்தி அறிந்தால் உடன ஓடி வருவா. ஏன் வரயில்ல. அவவுக்கு ஏதும் சுகயீனமோ? கேள்வியொன்றும் எண்ணத்தில் தோன்றி அலைக்கழித்தது. "எதுக்கும் அவரை ஒருக்கா இந்தக்கிழமை ஊருக்கு அனுப்பி விசாரிக்கவேணும்".

மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டவளாய் தனது வேலைகளில்

மூழ்கிப் போனாள் செல்லம்.

டிரிங்.! டிரிங்!...

சைக்கிள் மணியோசை அவளது கவனத்தை ஈர்த்தது. செய்த வேலையை அப்படியே விட்டுவிட்டு வாசலுக்கு விரைந்தாள். தபால்காரன் அவளது கையில் மூன்று கவர்களைத் தந்துவிட்டுப் போனான். மூன்று அக்காமாரும் ஒரே சமயத்தில் கடிதம் போட்டிருப்பதைக் கண்டு அவளுக்கு வியப்பாக இருந்தது. எனினும் ஆசையக்காவிடமிருந்து வந்த கவரை முதலில் பிரித்தாள்.

“வீட்டில் எல்லோருக்கும் அம்மாள் வருத்தம் வந்து இப்பதான் மீண்டு எழும்பியிருக்கிறோம். மகிழினியைப் பார்க்க ஆறுதலாய் வருகிறோம். அவளது கடிதத்தின் சாராம்சம் இதுதான். அடுத்து பெரியக்கா அனுப்பிய கவரைப் பிரித்தாள். கடிதத்துடன் நூறு ரூபாய்க்கான மணிஓடர் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. வழமைபோல் அக்காவின் அறிவுரையும் எழுத்தாகத் தோன்றி அவளை எச்சரித்தன. இரண்டு குமர்களாய்ப் போச்சு. இனியும் உந்த டச்சுக்காறன் காலத்து வீட்டில இருந்து காலத்தைத் தள்ளாமல் ஒரு நல்ல கல்வீடாய்க் கட்டி அதில நாலு மனிதர் பாரத்து ரசிக்கு மாப்போல வாழ முயற்சி செய்.” அக்காவின் புத்திமதி நியாயமாகப் பட்டாலும் அவளால் அக்காவின் சீண்டும் வார்த்தைகளை சீரணிக்க முடியவில்லை. மனதில் ஒருவித தவிப்பு தோன்றிஅவளை அலைக்கழிக்கத் தொடங்கியது.

மனதைச் சாந்தப்படுத்தியவாறு மற்றைய கடிதத்தைப் பிரித்தாள். அதற்குள்ளும் ஒரு மணியோடர் கிடந்தது. அதைத் தவிர்த்துவிட்டு கடிதத்தைப் படித்தாள்.

“செல்லம்! அம்மா எங்கள் எல்லாருக்கும் வடிவாய்ச் சீதனம் தந்து நல்ல மாப்பிள்ளைகளாய் பார்த்து கலியாணஞ்செய்து வைச்சவ. உன்ரை விசயத்தில பிழை விட்டிட்டா. உனக்கென்று எதையும் வைக்காமல் எங்களுக்கு எல்லாத்தையும் பிரிச்சுத்தந்து போட்டா. கடைசியில் பெரியக்காதான் மனசுவைச்சு உனக்கு அந்த நாலு பரப்புக் காணியை எழுதித் தந்தவ. அதனாலதானோ என்னவோ அவவுக்கு உன்னில எப்ப பார்த்தாலும் ஒரு சினமான போக்கு. அதை விடு. கடவுளாவது உனக்கு ஒரு ஆம்பிளைப்பிள்ளைத் தந்திருக்கலாம்.பிறந்தது மூன்றும் பெண்ணாக போயிட்டுது. எதுக்கும் நீ கவலைப்படாதை. படைச்சவன் படி அளக்கா மலா போய்விடுவான்.“

சின்னக்காவின் வார்த்தைகள் அவளது கொந்தளித்த மனதுக்கு ஒத்தடமாய் அமைந்தன. அத்துடன் அவள் இருநூறு ரூபாய்க்கான மணிஓடரையும் அனுப்பியிருந்தாள். அக்காவை அனுப்பியிருக்கிற காசோட நானும் கொஞ்சத்தைப் போட்டு மகிழினிக்கு ஒரு சங்கிலியைச் செய்து போடுவம். இவளும் இனி குமர்ப்பிள்ளை. கழுத்துக்கு ஒரு சங்கிலி

தேவைதானே மனம் கங்கணம் கட்டிக் கொண்டது.

கைகள் சமையலைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் மனம் மட்டும் பெரியக்காவின் சீண்டலான வார்த்தைகளை மீண்டும் மீண்டும் இரைமீட்டு நெருடிக் கொண்டேயிருந்தது. அவளுக்கு தனது கணவன் மீது எதுவித மான குறையும் இல்லை. அவர் என்ன செய்வார். உழைப்பதை அப்படியே கொண்டுவந்து என்னிடம் தருகிறார். இப்போது அவருக்கு எதுவிதமான கெட்ட பழக்கமும் இல்லை. ஏதோ குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்துவிடவேண்டும் என்பதில் மூச்சாய் இருக்கிறார். கடவுளே! குயிலி இந்தமுறை பரீட்சை எழுதி கம்பஸ்சுக்கு போயிட வேணும் அவள் படிச்சு முன்னேறி விட்டால் மற்றவளவை தானாய் ஊக்கமெடுத்து படிச்சிடு வாளவை. மூத்தவள் தலையெடுத்திட்டாக் காணும். இந்தக் குடும்பம் உருப்பட்டுவிடும் மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

வாசலில் ஏதோ அரவம் கேட்கவே திரும்பிப் பார்த்தாள். படலை யைத் திறந்து குயிலி சைக்கிளை உருட்டிக் கொண்டு உள்ளே வந்தாள்.

“ஏன் பிள்ளை நேரத்தோட வந்திட்டாய் “

“இரண்டைக்கு டியுசன் இல்லையம்மா”

சொல்லிக் கொண்டே புத்தகப்பையை சுமந்தவாறு குயிலி உள்ளே போனாள். சிறிது நேரத்தில் உடை மாற்றி கால் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தவள் நேராக சமையற்கட்டுக்குள் நுழைந்தாள்.

“அம்மா! சமையல் முடியேல்லையே. நான் சமையலைப் பார்த்துக் கொள்ளுறன். நீங்கள் போய் குளிச்சிட்டு வாங்கோ. அப்பாவும் தங்கச்சியவையும் வர எல்லாருமாய்ச் சேர்ந்து சாப்பிடலாம்”.

“நான் சமைச்சுப் போட்டன். இந்தா! இண்டைக்கு என்ரை மூன்று அக்காமாரும் கடிதம் போட்டிருக்கினம். ஒருக்கா வாசிச்சுப்பார்”

குயிலி கடிதங்களை கையில் வாங்கிக் கொண்டு போய் விறாந்தைக் குந்தில் ஆற அமர இருந்து படிக்கத் தொடங்கினாள். படித்து முடிந்ததும் அவளது மனதிலும் ஒரு நெருடல்.

ஏழைகளாய் இருந்துவிட்டால் எல்லாரும் எங்களை ஒரு கிள்ளுக் கீரையாகத்தான் மதிப்பினம். நான் படித்து முன்னேறினால்த்தான் இந்த நிலையை மாற்றமுடியும் இறுக்கமான முடிவொன்றை மனம் எடுத்துக் கொண்டது.

***

பரமசிவத்தாரின் பனைவளவு அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. நெடிதுயர்ந்து பசுஞ்சோலையாக காட்சியளித்த பனைமரங்கள் தறித்து வீழ்த்தப்பட்ட நிலையில் முன் ஐந்து பரப்பு வளவும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

தறித்த பனைகளைத் துண்டுபோட்டு டிரக்டரில் ஏற்றிக் கொண்டு போய்விட்டனர், அதனை விலைகொடுத்து வாங்கியவர்கள். வைரப் பனைகள் போக மீதி நின்ற பனைகளை பரமசிவத்தார் தறிக்க வேண்டிய தாயிற்று. பனையில் அடிக்கட்டைகளையும் கூலிகொடுத்துக் கிளறி ஒரு கரையில் அடுக்கி வைத்தபின்தான் அத்திவார வேலைகள் தொடங்கின.

இரண்டு அறைகள் ஹோல் சமையலறை என ஒரு அம்சமான சிறிய வீட்டிற்கு அத்திவாரம் போட்டு முடிவதற்குள் பரமசிவத்துக்கும் செல்லத்துக்கும் போதும் போது மென்றாகிவிட்டது. கையில் மடியில் கிடந்த தெல்லாவற்றையும் அழித்து விட்டு அம்போ என்று நின்று அங்கலாய்த்த போது தான் பரமசிவத்தாருக்கு ஒரு யோசனை வந்து மூளையில் பொறியும் தட்டியது. உடனே அதை மனைவியிடம் ஒப்படைக்காவிட்டால் தலையே வெடித்துவிடும் போன்றதோர் உணர்வு அவரை ஆட்கொண்டது.

"இஞ்சாரும்! எனக்கு ஒரு யோசனை வருகுதப்பா"

கணவனின் யோசனையைக் கேட்பதில் செல்லத்துக்கும் ஓர் ஆர்வம் தோன்றத்தான் செய்தது.

"என்னப்பா யோசனை. ஏன்னெண்டுதான் சொல்லுங்கோவன்"

"இல்ல...அது வந்து...நான் ஹவுசிங் லோனுக்கு விண்ணப்பிக்க லாம் எண்டிருக்கிறன். என்ன... சம்பளக்காசில தான் வெட்டுவினம். நீர் பால் விக்கிற காசை வைச்சு வீட்டுச் செலவை சமாளிக்கமாட்டீரோ?"

கணவனின் பேச்சை கேட்க செல்லத்துக்கு நெஞ்சில் "பக்"கென்றது. முழுசாய் சம்பளத்தை எடுத்துமே மாதக்கடைசியில் செலவுகளைச் சமாளிக்கமுடியாமல் திண்டாடுவது அவளுக்கு மட்டுமே தெரிந்த விடயம். பிள்ளைகளும் வளர்ந்து விட்டார்கள். அவர்களது படிப்புச் செலவு வேறு. குயிலிக்கு டியுசன் காசு கட்டவேணும். இன்னும் ஆறு மாதத்தால பரீட்சை வந்துவிடும். அதுவரைக்கும் எப்படிச் சமாளிப்பதென்று தெரியாமல் நான் கிடந்து திண்டாடுறன். அவளது மனதில் அபாயச்சங்கு ஒலித்தது. எடுத்த எடுப்பில் மறுப்பைத் தெரிவித்துவிட்டாள்.

"வேண்டாமப்பா. அது சரி வராது."

"அப்ப என்னதான் செய்யலாமென்று நினைக்கிறீர்?"

ஒரு உத்வேகத்துடன் வீடு கட்டத் தொடங்கியவருக்கு இடையில் வந்த தடையை எப்படிப்போக்குவ தென்று தெரியாமல் மனம் அல்லாடியது. கணவனது முகத்தை நிமிர்ந்து பார்த்த செல்லம் அவரது வாடிய முகத்தைக் கண்டு துணுக்குற்றாள்.

"ஏனப்பா நான் ஒன்று சொல்லட்டுமே? "

"சொல்லுமன். கேட்கத்தானே நான் இருக்கிறன்."

"பேசாமல் எங்கட தென்னம்பிள்ளை வளவை வித்துவிடுவமே? வித்தால் வீட்டையும் கட்டி முடிச்சிடலாம். அதைவிட்டிட்டு கடன் பட்டால் வட்டி கட்டுறதுக்காக புறம்பாய் உழைக்க வேணும். அதுக்கு நாங்கள் எங்கை போறது?"

நாடியைத் தடவியவாறே பரமசிவம் வாய் திறந்தார்.

"நீர் சொல்லுறதும் நல்ல யோசினைதான். இருந்தாலும் பொம்பிளைப் பிள்ளையளை வைச்சிருக்கிற நாங்கள் கொஞ்சம் யோசிக்க வேண்டி இருக்குது".

"எங்களுக்குத் தான் இஞ்சை வளவுகள் இருக்குதே. அவளவை மூன்று பேருக்கும் இஞ்சை கிடக்கிறதை பிரிச்சுக் குடுப்பம். அங்கை போய் எங்களால வீடு கட்ட முடியுமோ. தவிர அந்தக் காணியை ஒருத்திக்கு குடுத்தால் அவள் தனிச்சுப் போவாள். என்னப்பா நான் சொல்லுறது சரிதானே"

பரமசிவத்துக்கு அதில் அவ்வளவு இஷ்டமில்லை. முக்கியமாக அவரது மூத்த மைத்துனிதான் அவர்மீது குற்றம் கண்டு பிடிப்பாள் என்பது அவருக்கு நன்கு விளங்கும் இருந்தபோதிலும் அவருடைய மனதில் ஒரு நப்பாசை இருக்கத்தான் செய்தது. அது அவரையறியாமலே வெளிவந்து விட்டது.

"எக்கணம் ரகு இஞ்சினியர் ஆன பிறகு இந்த பட்டிக்காட்டை விட்டிட்டு டவுனுக்கை வீடு கட்டுவம் எண்டு நினைக்கமாட்டானோ... அதுதான் எனக்கு யோசனையாய்க்கிடக்கு."

ஆற்றாமையின் வெளிப்பாடாக செல்லம் ஒரு நமட்டுச் சிரிப்பை வெளியிட்டாள்.

"அப்ப...நீங்களாகவே ரகுவை உங்கட மருமகனாக்க ஒரு முடிவு எடுத்து விட்டியள் என்று சொல்லுங்கோ"

"இதில என்ன கிடக்கு. ரகு குயிலிக்கு முறைப் பையன் தானே என்னை மீறி கமலம் அவனுக்கு வெளியில் பொம்பிளை பாத்திடுவாளோ..."

த்சொ.. த்சொ

பல்லி ஒன்று சடாரிட்டது.

"அது உச்சியில் பல்லி. அச்சப்படத்தேவையில்ல"

பரமசிவம் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டார். செல்லத்திற்கு மனதில் விருப்பம் இருந்தாலும் நம்பிக்கையை வளர்க்க விரும்பவில்லை. அவளுக்கு நாங்கள் ஏழைகள் என்ற உறுத்தல் அடிமனதில் பதிந்து போயிருந்தது தான் காரணம்.

"எங்களுடைய இப்போதைய அவசரத்துக்கு அந்தக் காணியை விற்கிறது தான் நல்ல முடிவு என்று நான் நினைக்கிறன்."

*பரமசிவம் இறங்கி வந்தார்.*

*"சரி உம்முடைய இஷ்டம். பேந்து கொக்காமார் நான் காணியை வித்து குடிச்சிட்டன் என்று பழி போடக்கூடாது."*

*"அதெல்லாம் உங்கள் மேல பழி வராமல் நான் பார்த்துக் கொள்ளுறன். இப்போதைக்கு நீங்கள் சம்மதம் சொன்னால சரி. மிகுதி எல்லாத்தையும் என்னட்ட விட்டிடுங்கோ."*

*பரமசிவம் அரைமனதுடன் சம்மதித்தார்.*

*செல்லத்துக்கு இப்போது மனப்பளு அதிகரித்துவிட்டது. கொக்குவி லில இருக்கிற காணியை எப்படி விலை பேசி விற்பது. ஆசையக்காவைப் பிடித்துத்தான் நாசூக்காக விசயத்தை எடுத்து சொல்லி விற்பதற்கு ஒழுங்கு செய்ய வேணும். மனதுக்குள் ஓராயிரம் நெருடல்கள் தோன்றி அவளை அலைக்கழிக்கத் தொடங்கியது. மெய்மறந்தவளாய் அமர்ந்திருந்தவளது மடியில் வந்து விழுந்தாள் புகழ்.*

*"அம்மா! சின்னக்கா மணிக்கூட்டை எடுத்து நேரத்தைக்கூட்டி வைக்கிறா. வந்து பாருங்கோவன்"*

*திடுக்குற்று விழித்தெழுந்த செல்லம் எழுந்து போய் நேராக மகிழினியின் முதுகில் ஓர் அறை விட்டாள். "ஐயோ!...." அவலக்குரல் எழுப்பினாள் மகிழினி.*

*மனைவியின் பின்னால் எழுந்து வந்த பரமசிவம் அவளது கோபத்திற்கு காரணம் புரியாமல் வினவினார்.*

*"ஏன் இப்ப அவளை அடிச்சநீர்?"*

*மகிழினியை இழுத்து அணைத்தவாறே கேட்டார். அவருக்கு எப்போதும் மகிழினியின் மீது பிரியம் அதிகம். அவருடைய அம்மாவின் சாயலை அவள் கொண்டிருப்பது தான் காரணம். அதுமட்டுமல்ல. வாயாடுவதிலும் இருவரும் ஒத்த இயல்பு உடையவர்கள்.*

*"அவளைப் படிக்கத்தானே விட்டது. இப்ப என்னத்துக்கு மணிக்கூட்டை தொட்டவள்?"*

*"பூ... உதுதானே விசயம். உதுக்கேன் இப்பிடி உருக்கொண்டு நிக்கிறீர். சும்மா விட்டுத்தள்ளும்."*

*"நீங்கள்தான் அவளுக்கு செல்லம் குடுத்து கெடுத்து வைச்சிருக் கிறியவள். அவள் ஒரு இடத்தில இருந்து தானும் படிக்கமாட்டாள். மற்றவையையும் படிக்க விடமாட்டாள்."*

*இவர்களின் வாக்குவாதம் நீண்டுகொண்டு போவதை அவதானித்த குயிலினி தனது படிப்பை இடையில் நிறுத்திவிட்டு எழுந்து வந்தாள்.*

*"அம்மா! நேரம் எட்டரை மணியாகுது. வாங்கோ சாப்பிடுவம்."*

குயிலினியின் பேச்சுக்கு கட்டுப்பட்டவர்களாய் அனைவரும் சமையற்கட்டை நோக்கி நடந்தார்கள். மகிழினி ஓரக்கண்ணால் புகழைப் பார்த்து புறுபுறுத்தாள்.

“என்ன? கோள் கொண்டு போன நீயோ. இரு பிறகு உன்னைக் கவனிச்சுக் கொள்ளுறன்.”

திருதிருவென முழித்துக் கொண்டு நின்ற புகழை குயிலினி அன்பாகக் கட்டிப்பிடித்து அழைத்துபோனாள். குயிலினி உணவுத்தட்டுகளை எடுத்து கழுவிக் கொடுக்க செல்லம் பரிமாறினாள். முதலில் பரமசிவமும் இளையவர்களும் சாப்பிட்டார்கள். அவர்கள் உணவருந்திவிட்டுப் போன பின் செல்லமும் குயிலினியும் மிகுதியாய் இருந்த உணவைப் பங்கிட்டு சாப் பிட்டார்கள். குயிலினியின் கவனம் எப்போதும் அம்மாவின் உணவுத் தட்டின் மீது இருக்கும். அம்மா வயிறாறச் சாப்பிடுகிறாளா என்பதை நோட்டமிட்டுக் கொள்வாள்.

“அம்மா! பாத்திரங்களை காலமை எழும்பிக் கழுவித்தாறன். நீங்கள் அவசரப்பட்டு கழுவிப் போடாதையுங்கோ.”

பாத்திரங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்தவாறு குயிலினி சொன்னாள். செல்லம் பதிலேதும் சொல்லவில்லை. அவளது மனதில் ஆயிரம் பிரச்சனைகள் இப்போது சுழியோடிக் கொண்டிருந்தது தான் காரணம் தண்ணீர்ச்செம்பை எடுத்துப் போய் பரமசிவத்தாரின் தலை மாட்டில் வைத்துவிட்டு நேராக தனதுபடுக்கைக்குப் போய்விட்டாள்.

உடல் அசதி நீண்டதோர் கொட்டாவியாக வெளியேறி அவளை ஆசுவாசப்படுத்தியது. மனமோ புத்துயிர் பெற்றதுபோல் புதுவிதமான கற்பனைகளில் மூழ்கத் தொடங்கியது.

தென்னம்பிள்ளை வளவை விக்கிறதெண்டு முடிவெடுத்திட்டம் , அதுக்கு மனுசனும் ஓமெண்டு போட்டுது. இனி அதை என்னெண்டு விக்கிறது. மனம் எங்கெல்லாமோ பாய்ந்து தாவியது . கட்டுக்கடங்க மறுத்த மனத்தை ஒருவாறு கட்டுப்படுத்தியவள் சுயமாக ஒரு முடிவையும் எடுத்துக்கொண்டாள்.

“எதுக்கும் நாளைக்கு ஆசையக்காவைப் போய்ச் சந்திச்சு அவவோட கலந்தாலோசிச்சு ஒரு முடிவை எடுப்பம்“

அல்லலுற்ற மனம் அமைதியடைந்தும் நித்திராதேவியின் அரவணைப்பில் செல்லம் மெய்மறந்து துயிலத் தொடங்கினாள்.

***

சற்றும் எதிர்பார்த்திராத வேளையில் தங்கை செல்லத்தைக் கண்ட தும் ஆச்சரியத்திலும், ஆனந்தத்திலும் மூழ்கிப்போய்விட்டாள் , ஆசை யக்கா. அவர்கள் ஆற அமர இருந்து குசலம் விசாரித்தபின் செல்லம் தான்

வந்த விடயத்தை அக்காவிடம் மெதுவாக அவிழ்த்து விட்டாள். தங்கையின் நியாயமான கோரிக்கையை மனப்பூர்வமாக உணர்ந்து கொண்ட போதிலும் அவளது மனசாட்சி அவளை அறிவுறுத்தியது.

"இருந்தாலும் செல்லம் நாங்கள் ஒருக்கா அக்காமார் ரெண்டுபேரையும் கேட்டுப்பாக்க வேணும். அவை நல்ல வழி வகையோட இருக்கிறவை. ஒருவேளை உந்தக் காணியை வேண்ட விரும்புவினம்"

"ஓமக்கா நீங்கள் சொல்லுறதும் சரிதான். உதுக்காகத் தான் நான் உங்களிட்டை ஓடி வந்தநான் எனக்கெண்டால் மூளை சரியாய் வேலை செய்யாது கண்டியளோ"

"சரி செல்லம்! நீ எதுக்கும் அவசரப்படாத. முதல்ல நீ அக்காவை இரண்டு பேருக்கும் கடிதத்தை எழுதிப் போடு. உன்னுடைய கஷ்ட நிலைப் பாட்டை காரணங்காட்டி நான் இப்ப காணியை விக்கப்போறன். உங்களிட்டைச் சொல்லாமல் விற்கிறது சரியில்லை என்று நினைச்சுத்தான் உங்களுக்குத் தெரியப்படுத்திறன். உங்களுக்கு விருப்பமிருந்தால் நீங்களே மற்றவை கேக்கிற விலைக்கு வாங்கிக்கொள்ளுங்கோ என்று எழுது."

"ம்..."

மெதுவாக வந்தது பதில்

செல்லத்துக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடமான நிலையை அவளை ஊகிக்க முடிந்தது. ஏனென்றால் பெரியக்காதான் அவளுக்கு இந்த காணியை சீதனமாக எழுதிக் கொடுத்திருந்தாள். அம்மாவோ எதுவித சிந்தனையுமில்லாமல் இருபது பரப்புக் காணியையும் வீட்டையும் மூத்த மகளுக்கே எழுதிக் கொடுத்து விட்டிருந்தாள். ஐயாவின் முதுசக் காணிகளை சின்னக்காவுக்கும், ஆசையக்காவுக்கும் சீதனமாய்க் கிடைக்க செல்லத்துக்குக் கொடுக்க ஒரு குழி நிலம் கூட இல்லாமல் இவர்கள் அந்தரித்து நின்றபோது... பெரியக்கா மனமுவந்து கொடுத்த காணிதான் இது.

செல்லத்தின் மனதிலும் பெரும் பூகம்பம் உருவாகி அவளது உலுப்பத் தொடங்கியிருந்தது. "அந்த நேரம் ஏற்பட்ட சந்தர்ப்ப சூழலில் அக்கா அவளுக்கு காணியை எழுதித் தந்தது உண்மைதான். எனினும் அது ஒன்றும் அவளது சொந்த உழைப்பில் வாங்கிய காணியல்லவே. அம்மாவின் சீதனக்காணியைத்தானே அவவுக்கு முற்றிலுமாக அம்மா எழுதிக் கொடுத்து முன்யோசனையின்றி நடந்து கொண்டதால் வந்த வினைதான் எல்லாமே. இப்போது அக்கா எனக்கு எழுதித் தந்த காணியை நான் எனது விருப்பப்படி எதுவேண்டுமானாலும் செய்யலாம். அதற்குரிய உரிமை எனக்கு இருக்கிறது. இருந்தாலும் இந்த மனசாட்சி நிலை கொள்ள விடாமல் என்னை அலைக்கழிக்கிறதே".

மனம் பேதலித்து நின்றவளை ஆசையக்கா ஆசுவாசப்படுத்தி

அனுப்பி வைத்தாள். கணவனோடு கதைத்து காணியின் பெறுமதி அறிந்து எவருக்காவது நல்ல விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னது செல்லத்துக்கு மனதில் சிறு தென்பை ஏற்படுத்தியது.

பொழுது கருகும் வேளையில் பஸ்ஸில் வந்து இறங்கியவளுக்காக காத்திருந்து பரமசிவம் வீட்டிற்கு அழைத்துப் போனார். ஆசையக்கா வீட்டிற்குப் போய் வந்த விசயங்கள் அனைத்தையும் கொட்டித் தீர்த்த பின் தான் அவளுக்கு சிறிது நிம்மதியாயிருந்தது.

மறுநாள் வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் வெளியே புறப்பட்டுப் போனபின்னர் ஆறுதலாக அமர்ந்திருந்து அக்காமார் இருவருக்கும் கடிதம் எழுதத்தொடங்கினாள். சின்னக்காவிற்கு எழுதுவதில் அவளுக்கு எந்தவித சிரமமும் இருக்கவில்லை.

பெரியக்காவுக்கு எழுதும் போது மனதில் சிறுபேதலிப்பு. ஒருவாறு அமைதியாக இருந்து பவ்வியமாக அவளுக்கு விசயத்தை புரிய வைக்க முயன்றவள் அதில் திருப்தியும் அடைந்தாள்.

மனைவி எழுதி வைத்திருந்த கடிதங்களை ஒரு தரம் மேலோட்ட மாகப் பார்த்து விட்டு பரமசிவம் அவற்றை தபாலில் சேர்த்து விட்டார். வாரம் ஒன்று கழிந்தது.

தினமும் செல்லம் தபாற்காரனின் வரவுக்காகக் காத்திருந்து ஏமாறுவதுதான் மிச்சம். நாட்கள் செல்லச் செல்லச் செல்லமும் காணியை விற்று வீட்டு வேலை முடித்துவிடவேண்டும் என்ற ஓர்மத்தோடு காத்திருந்தாள். இதற்கிடையில் ஆசையக்கா அனுப்பிய இரண்டு மூன்று பேர் வந்து காணியை விலை கேட்டுப் போனார்கள். ஒருவாறு ஒரு புரோக்கர் மூலமாக நாலுபரப்புக் காணியும் பத்தாயிரம் ரூபாயாக விலை தீர்ந்தது

ஆசையக்காவின் வீட்டில் வைத்து காணியை எழுதிக் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது காணி எழுதுவற்கு இன்னும் நான்கு நாட்களே பாக்கியிருந்தன. செல்லத்துக்கு மனதில் ஒருகுற்ற உணர்வு இருந்த போதிலும் எடுத்த காரியத்தை நிறைவேற்றித் தீர வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது

காலையில் எல்லோரும் புறப்பட்டுப் போய்விட அவர்களை அனுப்பிவிட்டு தனிமையில் வந்து வீட்டு வாசற்படியில் அமர்ந்து கொண்டாள் செல்லம். அவளது மனதில் எண்ணற்ற சிந்தனைகள் ஆக்கிரமிக்க வெறித்த பார்வையுடன் அவள்... நேரம் போவதுகூடத் தெரியாமல் அமர்ந்திருந்தாள். திடீரென அவளது கவனம் கலைந்தது.

டீரிங் ! டிரிங்! டீரிங்!

கணீரிட்ட சைக்கிள் மணியோசை வந்த திசையை நோக்கி வாசலுக்கு விரைந்தாள் செல்லம். தபாற்காரர் அவளது கைகளுக்குள் ஒருகடிதத்தைத்

திணித்துவிட்டுப் போனார்.

கையில் கிடந்த கடிதத்தை வெறித்துப் பார்த்தவாறு திகைத்துப் போய் நின்றாள் செல்லம்.

***

நேரம் மதியம் பன்னிரண்டைத் தாண்டியிருந்தது. எதுவித சுரணையுமின்றி சமையலறைக் குந்தில் சாய்ந்திருந்தாள் செல்லம். அவளது கண்கள் கையிலிருந்த கடிதத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. பார்வை அதில் நிலைக்கவு மில்லை. லயிக்கவுமில்லை. எத்தனை நேரம் தான் அப்படியே இருந் தாளோ...கண்களிலிருந்து வடிந்திருந்த கண்ணீர் கன்னங்களில் கறையாகப் படிந்திருந்தது. படலை திறக்கும் சத்தம்கூட அவளது மோன நிலையைக் கலைக்கவில்லை.

வகுப்பு முடிந்து வீட்டுக்கு வந்த குயிலிக்கு பசி வயிற்றைக்கிள்ள சைக்கிளை உருட்டி வந்து தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தாள். அங்கே செல்லம் இருந்த கோலம்...அவளது வயிற்றில் புளியைக் கரைத்தது.

“அம்மா!....அம்மா!....”

தாயின் தோளைத் தொட்டு உலுப்பியவள் அப்போதுதான் அவளது மடியில் கிடந்த கடிதத்தைக் கண்டாள். தாயின் இந்த நிலைக்கான காரணத்தை அவளால் ஓரளவு ஊகிக்க முடிந்தது.

அப்போதுதான் சுயநினைவுக்குத் திரும்பிய செல்லத்தினால் வகுப்பு முடிந்து குயிலி வீடு திரும்பி விட்டதையும் நேரம் மதியத்தைத் தாண்டி விட்டதையும் உணர்ந்தவளாய் கைகளை உதறிக் கொண்டு எழுந்தாள். படபடக்கும் நெஞ்சை பொத்திப் பிடித்தவளாய் நிமிர்ந்து பார்த்தாள்.

குயிலியின் கையில் பெரியக்காவின் கடிதம். அதை வாசித்துக் கொண்டிருந்தவளின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. கடைக்கண்ணால் மகளை நோட்டமிட்டவள் எதுவும் பேசாமல் அவசர மாக அடுப்படிக்குள் நுழைந்தாள். நுழைந்து அடுப்பைப் பற்றவைத்து தண்ணீர் கொதிக்க வைக்க முயன்றவளை ஒரு கை தடுத்தது.

“அம்மா! நீங்கள் இதிலை வந்து இருந்து இந்தக்காய் கறிகளை நறுக்கித் தாங்கோ. நான் சமைக்கிறன்”

குயிலியின் ஆதரவான சொற்கள் அவளை இதமாகத் தடவின. உண்மையிலேயே அவளது கைகள் இயங்க மறுத்தன. உடல் சோர்ந்து போனது. எல்லாவற்றுக்கும் காரணம் மனத்தாக்கம் தான்.

உடை மாற்றிக் கொண்டு வந்த குயிலி அடுப்பை மூட்டி உலையை வைத்தாள். உலைத்தண்ணீரில் எடுத்து தேத்தண்ணீர் ஊற்றியவள் அம்மாவுக்கு குடிக்கக் கொடுத்தாள்.

“முதல்ல இதைக் குடிங்கோ.”

மகள் நீட்டிய தேநீரை வாங்கிக் குடித்ததும் செல்லத்துக்குக் களை நீங்கி சிறு தென்பு வந்தது. உலையில் அரிசியைப் போட்டு விட்டு குயிலி வந்து தேங்காயை துருவத்தொடங்கினாள். செல்லம் குனிந்த தலை நிமிராமல் வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்தாள். மனதிலுள்ள ஆத்திரமெல்லாவற்றையும் ஒன்று திரட்டி குயிலி வார்த்தைகளை உமிழத் தொடங்கினாள்.

“உங்கட அக்காவுக்கு என்ன நினைப்பு. அவவின்ரை பணத்தால எல்லாத்தையும் சாதிக்கலாம் என்று நினைக்கிறாவோ. அவ காணி எழுதித் தந்தால் அதோட முடிஞ்சு போச்சுது அந்தக் கதை. அவ தந்தவ எண்டதுக் காக அவ கேக்கிற விலைக்கு காணியைத் திருப்பிக்கொடுக்க நாங்கள் என்ன மடையரே. பத்தாயிரம் விலை போகிற காணியை அவவுக்கு நாலாயிரத் துக்கு எழுதித்தரட்டாம். இது எந்த விதத்தில நியாயம் என்று கேக்கிறன்”.

கொதித்தெழுந்த குயிலியை அடக்கினாள் செல்லம்.

“விடு பிள்ளை. இப்ப நாங்கள் என்ன எழுதிக்குடுக்கப்போறமே?”

இதற்கிடையில் பாடசாலைவிட்டு பரமசிவத்தார் வந்து விட்டார். களைத்து வருபவரிம் கடித விடயத்தைக் கூறாமல் மறைத்து விட்டாள் செல்லம். அவளுடைய குணஇயல்பே அப்படித்தான். பின்னர் ஆறுதலாக இருக்கும்போது சொல்லலாம் என நினைத்தவளாய் குயிலிக்கும் கண்சாடைகாட்ட அவளும் அதை எளிதில் புரிந்து கொண்டுவிட்டாள்.

ஒரு அடுப்பில் சோறும் மறு அடுப்பில் சாம்பாருமாக அரை மணித்தியாலத்தில் உணவு தயராகிவிட்டது. குயிலி உணவை தட்டில் பரிமாறி ஆறவிட்டாள். சமயோசிதமாகச் செயற்படுவதில் அவளுக்கு நிகர் அவளே தான்.

கால் முகத்தைக் கழுவிக்கொண்டு உணவருந்த வந்து அமர்ந்தவரிடம் தட்டில் பரிமாறிய சோற்றை எடுத்து பக்குவமாக நீட்டினாள் குயிலி.

“சாப்பிடுங்கோப்பா”

“ஏன் கொம்மா எங்கை?”

“அம்மா கிணற்றடியில நிக்கிறா”.

சுருக்கமாக வந்தது பதில். அழுது சிவந்த கண்களை அவர் பார்த்து விடக்கூடாதே என்பதற்காக தாய்-மகள் ஒருங்கிணைந்த ஏற்பாடு தான் இது. இப்பொழுதெல்லாம் பரமசிவம் கறி சரியில்லை என முறைப்படுவது கிடையாது. ஏதோ கொடுத்ததைச் சாப்பிட்டுவிட்டு எழும்பி விடுவார்.

திடீரென படலைக்குள் கேட்ட ஆரவாரம் அனைவரதும் கவனத்தை ஈர்த்தது. அது வேறு யாருமல்ல. புகழும் மகிழும் அப்போது தான் பாடசாலை விட்டு வீடு திரும்பியிருந்தனர்.

“ அம்மா! சின்னக்கா என்னை விட்டிட்டு ஓடி வந்திட்டா”

மகிழது முறைப்பாட்டை காதில் வாங்கிக் கொள்ளாதவளாய் செல்லம் அவர்களை விரட்டினாள்.

“சரி சரி இப்ப என்ன... ரெண்டு பேரும் வீட்டை வந்திட்டியள் எல்லோ...சட்டுப்புட்டுன்னு கால் முகத்தைக் கழுவிப் போட்டு போய்ச் சாப்பிடுற வழியைப் பாருங்கோ. அங்கை குசினிக்குள்ள கொக்கா உங்களுக் காக காவல் இருக்கிறா.”

அம்மாவின் வார்த்தைகள் புகழுக்கு எரிச்சலை மூட்ட... பட்டென்று பொரிந்து தள்ளினாள்.

“ஓ... அவவுக்கென்ன எங்களைப் போலவா.. சொகுசாய் சைக்கிளில போய் வாறவ. கொஞ்ச நேரம் காத்திருந்தா என்ன குறைஞ்சா போயிடும்”

செல்லத்துக்கு மனதுக்குள் வருத்தமாயிருந்தது. குயிலிக்கு வாற மாதம் சோதினை நடக்கப் போகுது. அதிலை பாஸ் பண்ணினால்த்தான் கம்பஸ்சுக்குப் போய் படிக்கலாம். அவள் படிச்சு ஒரு நல்ல உத்தியோகம் பார்த்தால்தான் இந்தக்குடும்பம் உருப்படும். மனமுருகி முருகனை வேண்டிக்கொள்வதைவிட அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

“செல்லம்! இஞ்சை ஒருக்கா வாரும்.”

பரமசிவம் உரக்கக் குரல் கொடுத்தார்.

குரல் வந்த திசையை எட்டிப்பார்த்த செல்லத்துக்கு நெஞ்சு பக் கென்றது.

***

செல்லம் எதிர்பார்த்ததுபோல் பரமசிவம் அக்காவின் கடிதத்தை முற்றாகப் படித்து முடித்துவிட்டு எவர் மீதும் சீறிவிழவில்லை. தவிர தீர்க்கமான தனது முடிவை அமைதியாக வெளியிட்டார்.

“கொக்கா சீதனமாக அந்தக் காணியை எப்ப எங்களுக்கு எழுதித் தந்தாவோ அப்பவே அவவுக்கு காணிமீது இருந்த உரிமை போயிட்டுது. இனி அவ ஒன்றும் எங்களை ஆட்சி பண்ணவோ காணி விஷயத்தில தலையிடவோ அவவுக்கு அருகதை இல்லை. நாங்கள் அவங்களுக்கு வாக்குக் கொடுத்தபடி திங்கட்கிழமை காணிக்கு கையெழுத்து வைச்சுக் குடுக்கத்தான் போறம் தேவையில்லாமல் கவலைப்படுறதை நீர் விட்டுப்போட்டு ஆகவேண்டியதைப் பாரும்”

இத்தனை நேரமும் படபடத்துக் கொண்டிருந்த செல்லத்தின் இதயம் ஓரளவு நிதானத்துக்கு வந்தது அப்பாடா ஆசுவாசப் பெருமூச்சு ஒன்றை வெளிப்படுத்தி சுயநினைவுக்குத் திரும்பினாள்.

பரமசிவம் கூறியது போலவே காணியின் உறுதி கை. மாறியது.

*கையில் கிடைத்த பணத்தை முற்றிலுமாக வீட்டுக்குள் முடக்க செல்லம் விரும்பவில்லை. அதில் மூவாயிரம் ரூபாயை தனது சேமிப்புக் கணக்கில் போட்டுக் கொண்டாள். மிகுதிப் பணத்தில் வீட்டு வேலை முடிந்தது.*

*ஒரு நல்ல நாள் பார்த்து நெருங்கிய உறவினர்களுடன் மட்டுப்படுத்தி அவர்கள் புதுவீட்டிக்கு குடிபோனார்கள். புது வீட்டைப்பார்த்து அதிக மகிழ்ச்சியடைந்தது புகழ்தான். அது தன்னுடைய வீடு என்று அடிக்கடி சொல்லிக் கொண்டாள். அத்துடன் அவள் நின்று விடவில்லலை. அப்பா விடம் சொல்லிவிட்டு அவள் வீட்டு முற்றத்தில் ஒரு விலாட்டு மாமரக் கன்றை நடுவித்தாள். ஏற்கெனவே நட்டு வைத்திருந்த தென்னம்பிள்ளை களும் வளர்ந்து வளவை ஒரு சோலையாக மாற்றியிருந்தன.*

*புகழ் தனது நண்பிகளிடம் கேட்டு குறோட்டன் தடிகளை வாங்கி வந்து முன் புறத்து வேலிக்கரையில் நட்டாள். வீட்டின் இருப்பக்கத்து முன் பக்கத்திலும் பாத்திகள் அமைத்து செவ்வந்தி விதைகளைப் பரவி வைத்தாள். மாலை நேரங்களில் அவற்றிக்கு நீர் வார்ப்பது அவளது பொழுது போக்காகிவிட்டது. இப்போதேல்லாம் அவளுக்கு மகிழுடன் சண்டை போடுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. அவளது மாற்றத்தை பார்த்து பெற்றோரும் நிறைவடைந்தனர்.*

*குயிலிக்கு ஏ.எல் பரீட்சை நெருங்கி விட்டது. அவள் தனது படிப்பில் குறியாக இருந்தாள். அம்மா அவளது படிப்புக்கு ஒரு இடையூறும் வராதபடி கவனித்துக்கொண்டாள். மகிழ் அம்மாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தாள்.*

*ஒருவாறு பரீட்சை நாளும் வந்தது. பரமசிவம் மகளது சைக்கிளைத் துடைத்து சில்லுகளுக்கு காற்றை நிரம்பி அவள் புறப்படுவதற்கு ஏதுவாக அதை உருட்டி வந்து முற்றத்தில் விட்டார். அப்பா அக்காவுக்கு இதமாக நடந்து கொள்வதைப் பார்க்க புகழுக்கு மனதில் அனலாக எரிந்தது. “வெடுக்கென்று உளறினாள்.*

*“சாய்! நல்ல பிள்ளையும்...அவவுக்கு பணிவிடை செய்யிற அப்பாவும்.”*

*பரமசிவத்தின் காதுகளில் அது வந்து விழுந்தபோதிலும் அவர் அதை சட்டை செய்யவில்லை. அவருடைய எண்ணமெல்லாம் குயிலி பரீட்சையை ஒழுங்காக எழுதி சிறந்த பெறுபேற்றைப் பெறவேண்டும் என்பதிலேயே நிறைந்திருந்தது.*

*அருகிலிருந்த வைரவரிடம் அருள் வேண்டிப் போயிருந்த குயிலியைத் தேடிக் கொண்டிருந்தாள் செல்லம்.*

*“புகழ்! கொக்கா எங்கையடி. சோதினைக்குப் போகவேண்டிய பிள்ளை. இன்னும் குளிச்சுட்டு வரயில்லை இனி எப்ப வந்து சாப்பிடுறது. எக்கணம் பட்டினியாத்தான் போகப்போறாள் போல”*

அம்மாவின் ஆதங்கமான பேச்சு புகழுக்கு எரிச்சலைக் கிளப்பியது. "ஓ... அவவை நான்தான் மடிக்கை கட்டி வைச்சிருக்கிறன்."

புகழுடைய குதர்க்கமான பதில் செல்லத்துக்கு ஆத்திரத்தைமூட்ட அவளை அடிக்க வேண்டும் போல கைகள் துறுதுறுத்தன. இருந்த போதிலும் அவள் சோதனைக்கு வெளிக்கிடும்போது ஏன் வீண் பிரச்சினை? மனதை அடக்கி வசப்படுத்திக் கொண்டாள்.

படலையைத் திறந்து கொண்டு குயிலியும் மகிழும் வந்து கொண்டிருந்தார்கள். இருவரது நெற்றிகளும் திருநீற்றுப் பூச்சுடன் சந்தனம் குங்குமப் பொட்டுடன் அருட் தேவதைகளாய் அவர்கள் செல்லத்தினது கண்களுக்குத் தோன்றினர்.

குயிலி நேராக வந்து அப்பாவின் காலில் வீழ்ந்தாள்.

"என்னை ஆசீர்வதியுங்கோ அப்பா!"

மகளது உச்சியைத் தொட்டு ஆசீர்வதித்தார் பரமசிவம். அந்தக் காட்சியைக் கண்ணுற்று நின்ற செல்லத்தின் கண்களில் நீர் திரையிட்டது. உணவை உண்ண மறுத்தவளுக்கு பசுப்பாலில் தேநீர் தயாரித்துக் கொடுத்தாள் செல்லம். நேரத்தைப் பார்த்து பரபரப்படைத்தவளாய் எல்லோரிடமும் விடைபெற்று புறப்பட்டாள் குயிலி.

பரமசிவம் சைக்கிளை உருட்டி வந்து மகளிடம் கொடுத்தார். "மகிழ் போட்டு வாறன்."

"விஷ் யூ ஓல் த பெஸ்ற் அக்கா" மகிழ் வாழ்த்தி அனுப்பிவைத்தாள். "புகழ் போட்டு வாறன்" விடையளிப்பதற்கு புகழ் அங்கு இருக்கவில்லை.

***

ஒருவாறு குயிலி பரீட்சை எழுதி முடித்து விட்டாள். விடைகள் எழுதியதில் அவளது மனம் ஓரளவு திருப்தியாயிருந்தது. இருந்த போதிலும் மீண்டும் புத்தகங்களை எடுத்துப் புரட்ட அவளது மனம் இடமளிக்க வில்லை. மெதுவாக பின் வளவுக்குள் எட்டிப் பார்த்தாள். என்ன ஆச்சரியம். அவர்களுடைய செங்காரி பசுக்கன்று கட்டுக்கொடியில் நின்று புல் மேய்ந்து கொண்டிருந்தது. அவளால் நம்ப முடியவில்லை. வாலை உயர்த்தியவாறு வளவெல்லாம் துள்ளிக்குதித்து வரும் அந்த பசுக்கன்றா இப்படி வளர்ந்து விட்டிருக்கிறது. இத்தனை நாளும் நான் ஏன் இதை கவனிக்கவில்லை. அத்தனை தீவிரமாகவா நான் படிப்புடன் ஒன்றிப் போயிருந்தேன். நினைத்துப் பார்த்த போது அதிர்ச்சியாய் இருந்தது.

பா! பா! பா! பா!

அம்மாதான் கோழிக்குஞ்சுகளை அடைப்பதற்காக கையில் தீனியுடன் அங்கு வந்தாள். என்ன அதிசயம். அவளது வெள்ளைக்கோழி தன் குஞ்சுகளை கொக்! கொக்! என சத்தமிட்டு அழைத்துக் கொண்டு வந்து

அம்மா போட்ட தீனியை அதுகளுக்கு காட்ட அதுகளும் ஓடி ஓடி அவற்றை கொத்தித்தின்றன. அந்தக் குஞ்சுகள் பொரித்த போது சிறு பஞ்சுப் பொதிகளாக அவற்றை எடுத்து கையில் வைத்துக் கொஞ்சியது ஞாபகத்தில் வந்தது. இவ்வளவு நாளும் இவற்றையெல்லாம் மறந்து நான் எங்கேயிருந்தேன். மனம் தன்னை தானே கேட்டுக்கொண்டது.

கைகளை உயர்த்தி சோம்பல்பல் முறித்தவாறே குயிலி சொன்னாள்.

"அம்மா! சரியான அலுப்பாய்க்கிடக்குது. என்ன செய்யிற தெண்டே தெரியேல்ல"

"இதென்ன பிள்ளை உன்னுடைய கதை. இத்தினை நாளும் உன்ரை படிப்போடை மினக்கெட்டாய். இனி உன்ரை தங்கைமாற்றை படிப்பைக் கவனிக்க வேண்டியதுதானே".

அவசரமாக குயிலி குறுக்கிட்டாள்.

"நல்லாய்ச் சொன்னியள் அம்மா. புகழ் என்னட்டை கேட்டுப் படிக்க வருவாள் என்றே நினைச்சியள். அவள் அதுக்கு எத்தனை விதண்டாவாதம் கதைப்பளெண்டு உங்களுக்குத் தெரியாதே?"

"எங்களுக்கென்ன. நீ அவளைக் கூப்பிட்டுப் பார். வந்தால் வாறாள். இல்லாட்டி இருக்கிறாள். உவள் மகிழும் அடுத்த வருசம் சோதினை எடுக்கத்தானே போறாள். அவளுக்கு சொல்லிக்குடு."

"சரி அம்மா. அதுவும் நல்ல ஐடியாதான்."

அவர்கள் எதிர்பாத்தவாறே புகழ் அக்காவின் அழைப்பை உதறி எறிந்துவிட்டாள். மகிழ்க்குட்டி மட்டும் அக்காவிடம் பாடத்தை அக்கறையுடன் கேட்டுப் படிக்கத் தொடங்கியது. அத்துடன் அவள் நின்று விடவில்லை. தன்னுடன் படிக்கும் பதின்மூன்று மாணவர்களையும் அக்காவிடம் ரியூசனுக்கு சேர்த்துவிட்டாள்.

"அக்கா! அவை இவ்வளவு காலமும் ரியூசனுக்கு பதினைஞ்சு ரூபாய்தான் கொடுத்து படிச்சவையாம். உங்களுக்கு பீஸ் என்ன மாதிரி என்று கேட்கினம்."

"எனக்கு காசில அவ்வளவு அக்கறையில்லை. இருந்தாலும் தாற காசை வேண்டாமென்று சொல்லமாட்டன். ஏனென்றால் எனக்கும் சில தேவைகள் இருக்குது."

மகிழ் தானே சுயமாக ஒரு முடிவு எடுத்துக்கொண்டாள். ஒவ்வொரு மாதமும் முப்பதாம் திகதியன்று ஆளுக்கு பன்னிரண்டு ரூபாய் கொண்டு வந்து மகிழிடம் தரவேண்டும் என்பதுதான் அது. மாதங்கள் சில உருண் டோடின. குயிலியிடம் பாடம் கேட்டுப் படிக்கும் மாணவர்களிடம் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு ஆசிரியர்களே வியந்தனர். அத்தனை அர்ப்பணிப்புடன் அவளது செயற்பாடு இருந்ததுதான் காரணம். அந்த

வருடம் ஓ.எல் எழுதப்போகும் மாணவர் சிலர் குயிலியிடம் வந்து தங்களுக்கும் பாடம் சொல்லித்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். நேர நெருக்கடி காரணமாக அவளும் இரவு ஆறு முப்பதிலிருந்து எட்டு மணி வரை வகுப்பெடுப்பதாக ஒப்புக்கொண்டாள்.

காலம் கரைந்தோடியது. குயிலியின் கையில் பணப்புழக்கம் அதிகரித்தது. இத்தனைக்கும் புகழ் அக்காவை விட்டு விலகியே இருந்தாள். அவளோ கட்டிய வீடு தன்னுடையதுதான் என்ற கற்பனையில் மூழ்கி அந்த வீட்டிற்கு அடிக்கடி போவதும் வீடு வாசலைப் பராமரிப்பதும் தான் அவளது பொழுதுபோக்கு. தவிர பரீட்சை நெருங்கியதையிட்டு அவள் எதுவித சிரத்தையும் இல்லாமலே காலத்தைக் கழித்தாள்.

அந்தச் சமயத்தில்த் தான் ஏ.எல் பெறுபேறுகள் வெளியாகின. குயிலி சிறந்த பெறுபேற்றையும் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானாள். வீட்டில் புகழைத்தவிர அனைவரும் மகிழ்ச்சிப் பிரவாதத்தில் மூழ்கிப் போயினர்.

பரமசிவத்துக்கு மற்றுமொரு புதுக்கவலை மனதை அரிக்கத் தொடங்கியது. குயிலியை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி படிக்க வைப்பதென்றால் நிறைய செலவாகுமே. இதற்கு நான் எங்கே போவது?

புலம்பிக் கொண்டிருந்தவரின் கவலையை வார்த்தைகளால் துடைத்தெறிந்தாள் செல்லம்.

“உதுக்கென்னப்பா யோசிக்கிறியள். ஏதோ படைத்தவன் எங்களைக் கைவிட்டிட்டுவானா.... என்ன....”

மனைவியின் வார்த்தைகள் அவரது மனத்துக்கு ஒத்தடமாய் அமைந்தது. குயிலி எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் தனது கற்பித்தல் தொழிலை ஆர்வத்துடன் நடத்திக் கொண்டிருந்தாள். கையில் சிறிது பணம் வந்து சேரவும் அவளுக்கு மென்மேலும் வகுப்புகள் எடுத்து நிறையச் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்தது. தன்னை நாடி வரும் மாணவர்களை அரவணைத்து அவர்களுக்கு இதமாக கல்வி புகட்டி னாள். ஒன்பதாம் பத்தாம் தர மாணவர்களுக்கு காலை ஏழு மணிக்கு வகுப்பு போட்டாள். மகளது கடின உழைப்பைப் பார்த்து பெற்றோர் மனம் புழுங்கினர்.

“எங்களுடைய கையாலாகாத் தனத்தினால்த்தானே குயிலி இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.”

மனைவியிடம் கூறி அங்காலாய்த்தார் பரமசிவம். ஆனால் குயிலி மற்றவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதால் அடையும் மனநிறைவு பற்றி அவளுக்குத் தெரியவில்லை.

அன்று ஒரு வெள்ளிகிழமை. மாலைப்பொழுது. குயிலி ஓ.எல். வகுப்பு மாணவர்களுக்கு பாடம் எடுத்துக்கொண்டிருந்தாள்.

*“கிறீச்!”*

*படலை திறக்கும் சத்தம் அவளது கவனத்தைத் திருப்பவே வாசலை நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் ஆச்சரியத்தால் விரிய பிரமை பிடித்தவள் போல் விக்கித்து நின்றாள் அவள்.*

***

*சைக்கிளை முற்றத்தில் விட்டுவிட்டு உள்ளே நடந்து வந்தான் ரகு. குயிலிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கைகால் தாமாகவே வெடவெடக்கத் தொடங்கின. மௌனத்துடன் கைகளை பிசைந்தவாறு நின்றாள். இவளது தயக்கத்தைக் கண்ணுற்ற மாணவர்கள் எழுந்து கொண்டனர்.*

*“டீச்சர் ! நாங்கள் நாளைக்கு வாறம்”*

*பதில் எதுவும் கூறாமல் நின்றவளை அதிசயத்துடன் பார்த்தவாறு மாணவர்கள் ஒவ்வொருவராக கலையத் தொடங்கினர். அவளை நெருங்கி வந்த ரகு கலகலவெனச் சிரித்தான்.*

*“என்ன! முந்தியெண்டால் உள்ளுக்கு வாங்கோ என்று சொல்லி அடம்பிடிக்கிற நீர் இப்ப என்னடா என்றால் பேயறைஞ்சது மாதிரி நிக்கிறீர்?”*

*குயிலி ஒருதரம் சுற்று முற்றும் பார்த்தவள் மாணவர்கள் எவரும் அங்கில்லை என்பதை உணர்ந்து கொண்டவளாய் பல்லைக் கடித்துக் கொண்டே “ஸாரி வெரி ஸாரி” என்று கூறி அவனிடம் மன்னிப்புக் கேட்டாள்.*

*“கொங்கிராட்ஸ் குயிலி. உம்முடைய றிசல்ட் அறிஞ்சதும் உம்மை வாழ்த்திப் போட்டுப் போகவேணும் என்று பெரடேனியாவிலை இருந்து ஓடி வந்திருக்கிறனாக்கும்.”*

*ரகு தனது இயல்பான கலகலப்புடன் கூறியதும் குயிலிக்கு இயல்பு நிலை திரும்பியது*

*“தாங்க்ஸ் அத்தான்! தாங்க்ஸ் வெரிமச்”*

*குயிலிக்கு மேனி புல்லரித்தது.*

*“எங்கே வீட்டில ஒருத்தரையும் காணயில்ல. டியூசன் கிளாஸ் தான் அமளியாய் நடக்குது போல.”*

*குயிலி நாணத்துடன் ஒரு சிரிப்பை உதிர்த்தாள்.*

*“அப்பாவும் புகழும் புது வீட்டுக்குப் போயிருக்கினம். அம்மாவும் மகிழும் இஞ்சைதான் மாட்டடியில நிப்பினம் என்றுநினைக்கிறன்”*

*“அப்பாடா!ஒருபடியாக வாய் திறந்து கதைச்சிட்டீர்.”*

*ரகு சிரிக்க குயிலி சிணுங்கினாள்.*

"ஏன் நான் என்ன ஊமையே?"

இதற்கிடையில் அரவம் கேட்டு செல்லம் கன்றுகளைக் கட்டுவதற் காக மாட்டடிக்குப் போனவள் வந்து எட்டிப் பார்த்தாள். ரகுவைக் கண்டதும் வந்து திண்ணைக் குந்தில் அமர்ந்து கொண்டாள்.

"ஏப்ப தம்பி வந்தநீங்கள்?"

அவளது கை சேலைத் தலைப்பை எடுத்து தோளைப் போர்த்துக் கொண்டது.

"இண்டைக்கு காலமைதான் வந்தநான் மாமி. இரவு ரயிலுக்குள்ள ஒரே சனம். இருக்கவே இடமில்லை. நிண்டு கொண்டுதான் வந்தநான். இப்பதான் எழும்பி வாறன்."

"அப்பிடியே சங்கதி. அம்மா சுகமாய் இருக்கிறாவோ. நான் வீட்டுப்பக்கம் போய் கனநாள். குயிலிக்கு படிப்பிக்கிறதோட பொழுது சரி. நான் தானே வீட்டு வேலையளையும் பார்த்து மாட்டடி வேலையையும் பார்க்க வேணும்."

"ஏன் மாமி மகிழ் புகழ் எங்கை?"

"புகழுக்கு இந்த வருசம் சோதினை தான். ஆனால்... அவள் படிக்காமலே சோதினை எழுதப் போறாளாம். மகிழ் அக்காவிட்ட கேட்டுப் படிக்கிறவள். அவளுக்கு அடுத்த வருசம் தானே. அவள் படிப்பாள்."

ஆவி பறக்கும் பால் தேநீரைக் கொண்டு வந்து குயிலி ரகுவிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பருகியவாறே ரகு சொன்னான்.

"உண்மையில எனக்கு இப்ப சுடச்சுட தேத்தண்ணிதான் குடிக்கவேணும் போல இருந்தது. தாங்க்ஸ் குயிலி."

குயிலி கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டாள்.

சிறிது நேரம் அளவளாவிவிட்டு ரகு புறப்பட்டான். "மாமி! நான் போய் மாமாவையும் புதுவீட்டையும் பார்த்துக் கொண்டு அப்பிடியே வீட்டுக்குத் திரும்பிறன். ஏன்ன நான் வரட்டுமே?"

"சரியப்பன். எப்ப பயணம்?"

"எங்களுக்கு கம்பஸ்ஸால ஒரு கிழமை வக்கேசன் விட்டது. அதுதான் வந்தநான். லீவு முடியத்தான் போவன்."

சொல்லிக்கொண்டே சைக்கிளை வாசல் வரை உருட்டிப்போனான். கூடவே குயிலியும் நடந்தாள். அவனைச் சந்தித்த மகிழ்ச்சியில் பழைய வாயாடிக் குணம் தலைதூக்கியது. "என்ஜினியர் ஐயா ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கி ஓடித்திரியாம இப்படி பழைய கறள் பிடிச்ச சைக்கிளிலை ஓடித்திரியிறார்."

சொல்லிவிட்டு "களுக்"கென்று சிரித்தாள். அவனும் விடவில்லை.

“இந்த வருசம் எனக்கு பைனல் முடியுது. அடுத்த வருசம் வேலையாகின உடன மோட்டார் சைக்கிள் என்ன . ஐயா காரே வாங்கப் போறானக்கும். அதுக்கு எனக்குப் பக்கத்தில இருந்து போறதுக்கு இனித்தான் ஆள் செற்பண்ண வேணும். அதுதான் இப்ப தாமதம்”

சொல்லிக் கொண்டே அவளைக் கடைக் கண்ணால் பார்த்தான். அவளும் தற்செயலாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். இருவரும் தம்மை மறந்து நின்றனர். சட்டென சுயநினைவுக்குத் திரும்பியவளாய் குயிலி தலையைத் தாழ்த்திக் கொண்டாள். ரகுவும் அவளிடமிருந்து கண் களாலேயே விடைபெற்று புறப்பட்டுபோனான்.

அவனது உருவம் ஒழுங்கை முனைப்பில் மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்ற குயிலிக்கு திடீரென தான் தனிமையில் விடப்பட்டது போன்றதோர் பிரமையில் திளைத்து நின்றாள்.

என்ன ஆச்சரியம். திடீரென ரகு காலை ஊன்றி திரும்பிப் பார்த்தவன் குயிலியைநோக்கி கைகளை அசைத்துவிட்டுப் போனான். குயிலிக்கு உடம்பெல்லாம் ஒரு கணம் பரவசம் மூண்டது. தானும் கையை அசைக்க மறந்தவளாய் விறைத்துப் போய் நின்றாள்.

அவளை நோக்கி வந்த செல்லம் ஒரு குண்டைப் போட்டாள்.

எங்கையடி பிள்ளை மகிழைக் காணம்.

என்னம்மா சொல்லுறியன்? அவள் மாட்டடியில தானே நின்றவள்

வெறி பிடித்தவள் போல் ஆவேசமாக ஓடியவள் வளவுக்குள் வீட்டுக்குள் எல்லாம் அலசித் தேடினாள்

மகிழ்! மகிழ்!

குயிலியின் குரல் தென்னையில் மோதி எதிரொலித்ததே தவிர பதிலைக் காணவில்லை. எதுவும் புரியாதவளாய் செல்லம் வாசற்படியில் உட்கார்ந்து தலையில் கையை வைத்தவாறு புலம்பத் தொடங்கினாள். அவளது இதயத்தில் ஆயிரம் உலக்கைகள் கொண்டு இடிப்பது போன்றதோர் உணர்வு ஆட்கொள்ள அப்படியே விறைத்துக் கிடந்தாள்.

எத்தனை நேரம்தான் அப்படியே கிடந்தாளோ…

குயிலியின் குரல் அவளை உலுப்பி எழ வைத்தது .

“அம்மா! மகிழ் கிடைச்சிட்டாள்.”

“எங்கையடி பிள்ளை போன நீ?”

குயிலியின் கைத்தாங்கலில் வந்த மகிழை இழுத்து தன் மடியில் விழுத்தியவாறே செல்லம் கேட்டாள். திக்கித்திக்கி வந்தது குரல்.

“அம்மா! நீங்களும் அக்காவும் ரகு அத்தானோட கதைச்சுக் கொண்டு இருந்தீங்களா… நான் ஒருக்கா புதுவீட்டை போட்டு வருவமெண்டு

போனன். அங்கை போனால்...சின்னக்கா என்னை வீட்டுக்குள்ள போக விடாம துரத்திறா."

"அப்ப..கொப்பர் எய்கையடி போயிட்டார்?"

"அப்பாவோ.. அவர் கிணற்றடியில இருக்கிற வாழைகளுக்கு தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தவர். ஏனம்மா எங்கள் எல்லாருக்குமென்று தானே வீடு கட்டினது. அதென்ன அவ மட்டும் சொந்தம் கொண்டாடுறா?

செல்லத்துக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை. குயிலி தேநீர் கலந்து வந்து இவர்கள் இருவருக்கும் கொடுத்தாள். மாலை வேளைகளில் வகுப்பு முடிந்ததும் குயிலி வந்து எல்லோருக்கும் தேநீர் கலந்து கொடுப்பது வழக்கம். தேநீரை அருந்தியவாறே மகிழின் ஆதங்கத் தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள் குயிலி. அவள் கேட்பது நியாயம் தானே. அடங்காப்பிடாரியான புகழ் எப்படி அந்த வீட்டை ஆதிக்கம் பண்ண முடியும்?

அப்போது பரமசிவம் புகழையும் அழைத்துக் கொண்டு வந்து சேரவும் குயிலி புகழைப் பார்த்து சற்று அதட்டலுடன் கூறினாள்.

"புகழ்! குசினிக்குள்ள தேத்தண்ணி கலந்து மூடிவைச்சிட்டு வந்திருக்கிறன். போய் எடுத்துக் கொண்டுவந்து அப்பாவுக்கும் குடுத்து நீயும் குடி".

அவளைத் திரும்பி முறைத்துப் பார்த்தவாறே புகழ் உள்ளே போனாள். குயிலியின் மனதில் ஒரு கீறல் விழுந்திருப்பதை எவரும் அறிந்திலர். புகழைக் கண்டிக்காமல் அம்மாவோ அப்பாவோ சாவகாசமாக நடந்து கொண்டது அவளுக்குப் பிடிக்கவில்லை. சலனமுற்ற மனம் அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

இரவு அனைவரும் சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குப் போனார்கள். வழமைக்கு மாறாக குயிலி அன்று தலையை வலிக்கிறது என்று சொல்லிவிட்டு நேரத்தோடு படுத்துக் கொண்டு விட்டாள். மகிழ் அவளிடம் பாடத்தில் ஏதோ சந்தேகம் கேட்டாள்.

***

"மகிழ் அக்காவுக்கு தலையை வலிக்குது. இப்ப நீ வந்து படு. நாளைக்கு அக்கா வடிவாய் விளங்கப் படுத்தி விடுறன்."

மகிழ் வந்து படுத்துக்கொண்டாள். நித்திராதேவியின் அழைப்பு தனக்கு எளிதாகக் கிட்டி விடும் எனக் கருதிய குயிலிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கண்களை இறுக மூடி துயிலை வரவழைக்க முயன்ற போது ... அங்கே ரகு புன்சிரிப்புடன் தோன்றி அவளது கவனத்தை ஈர்த்தான். அவளது மேனிக்குள் சட்டென்று ஒரு புதுத்தென்பு பிறந்தது. மனம் கற்பனையில் மிதக்கத் தொடங்கியது.

அப்பப்பா .... முன்னரெல்லாம் மூக்கும் முழியுமாய் ...அரைக் காற்சட்டையுடன் எங்கட மணற் தரையில கிட்டிப்புள் அடிச்சு விளையாடிக்கொண்டு திரிஞ்ச ரகு அத்தான்... இப்ப என்னடா எண்டால் பெரிய ஆள் போல ஜீன்ஸ் ரீசேட் டில சினிமாவில வாற அசல் ஹீரோ போல வளர்ந்திட்டார். கடைக்கண்ணால் பார்ககிறபோது என்ரை மனத்தையே கொள்ளையடிக்கிறார். அவருடைய முகத்துக்கு அந்த மீசைதான் இன்னும் எடுப்பாகயிருக்குது. அவரை அடைய நான் குடுத்து வைச்சிருக்க வேணும். நானும் கம்பஸ்சுக்கு போய் படிச்சிட்டு வந்தால் அவருடைய அந்தஸ்த்துக்கு பொருத்தமானவளாகிடுவன். அந்த நம்பிக்கையில தான் நான் உயிரைக் குடுத்தும் படிச்சு முடிக்கவேணுமெண்டதில குறியாய் இருக்கிறன்.

ஆனா... அத்தானுக்கும் என்மேல ஒரு விருப்பம் இருக்கும் போலத்தான் தெரியுது. அவருடைய கதைகளில இருந்து எனக்கு அது விளங்கிப் போச்சுது. போகேக்கையும் அவர் தெருவால திரும்பேக்க நின்று என்னைப் பார்த்து கை காட்டிப் போட்டுத்தானே போனவர். ஆனபடியால அவருடைய மனத்தில நான் இருக்கிறன் என்றுதானே அர்த்தம்.

குரங்காகத் தாவிய நினைவுகளோடு அவள் கண்ணயர்ந்து போனாள்.

மறு நாள் வெள்ளிக்கிழமை. அப்பாவும் இளைய பெண்கள் இருவரும் பாடசாலைக்கு புறப்பட்டுப் போய் விட்டார்கள். குயிலியும் செல்லமும் வீட்டில் தனித்திருந்தனர்.

“அம்மா ! நான் இண்டைக்குச் சமைக்கிறன். நீங்கள் ரெஸ்ற் எடுங்கோ”

குயிலி அம்மாவைப் பார்த்துச் சொன்னதும் செல்லத்துக்கு கோவம் வந்து விட்டது.

“என்ன கண்டறியாத ரெஸ்ற் என்று கேக்கிறன். ஒரு பொம்பிளைக்கு சமைக்கிறது என்ன பெரிய வேலையே? நான்தான் சமைப்பன். நீ போய் உனக்கேதும் அலுவல் இருந்தால் பார்.”

வாய்விட்டுச் சிரித்தாள் குயிலி

“சரி சரி இரண்டு பேரும் சேர்ந்து சமைப்பம். ஏன்ன கறி வைப்பமெண்டு சொல்லுங்கோ. இண்டைக்கு வெள்ளிக்கிழமை. மரக்கறி தானே.”

செல்லத்துக்கு அப்போதுதான் நினைவு வந்தது. பனை வளவுக்குள் முருங்கைக்காய் பிஞ்சு விட்டிருப்பதை சில நாட்களுக்கு முன் பார்த்தது. அது இப்போது பதமான காயாக வந்திருக்கும் என நினைத்தவள் அதைப் பார்த்து வருவதாக குயிலியிடம் சொல்லிவிட்டுப் போனாள். குயிலியும் உலையை மூட்டி அரிசி போட்டு சமையலுக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கிவிட்டாள்.

சிறிது நேரத்தில் சேலைத் தலைப்பினால் தலையைப் போர்த்தவாறு வியர்க்க விறுவிறுக்க நான்கு முருங்கைக் காய்களுடன் செல்லம் வந்து சேர்ந்தாள். செம்பிலிருந்த தண்ணீரை எடுத்து மடக்மடக் எனக் குடித்தவள் சிறிது நேரம் களையாறிவிட்டு சொன்னாள்.

"நல்ல வேளை. அங்காலித்துண்டுக்கை இருந்த முருங்கைதான் காய்ச்சுக்கிடக்குது. புதுவீட்டு வளவுக்கை இருந்தால்.... புகழ் பிடுங்க விடுறாளோ... என்னவோ."

"அது சரியம்மா. தெரியாமத்தான் கேக்கிறன். நீங்களோ... அப்பாவோ அந்தக் காணியை அவளுக்குத் தாறனெண்டு சொன்ன நீங்களோ?"

"எங்கட வயிரவரான நாங்கள் ஒண்டும் வாய் விடயில்ல. அவளாய்த்தான் ஆதிக்கம் செய்யிறாள். எனக்கு ஒண்டுமாய் விளங்கேல்ல."

டிரிங்! டிரிங்!! டிரிங்!!!

மணியோசை கேட்டு வாசலுக்கு விரைந்தாள் செல்லம்.

***

தபாற்காரரிடமிருந்து கவரை வாங்கும்போதே செல்லத்துக்கு கை நடுக்கியது. பெரியக்காதான் மீண்டுமொருமுறை திட்டித் தீர்ந்திருக் கிறாளோ...மனம் பதறியது.

இதற்கிடையில் அங்கே வந்த குயிலி அம்மாவின் கையிலிருந்த கவரைப் பிடுங்கி எடுத்து முகவரியைப் பார்த்தவள் கூறினாள்.

"ஹை! ஆசையம்மா கடிதம் போட்டிருக்கிறா"

குயிலியின் வார்த்தைகள் செல்லத்தின் வயிற்றில் பாலை வார்க்க "உடைச்சுப்படிபிள்ளை" என்று மகளை உஷார்ப்படுத்தினாள். கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்து விட்டு தாயாரிடம் நீட்டிய வாறே குயிலி கூறினாள்.

"அம்மா! நான் கம்பஸ்சுக்கு தெரிவாகினதை அறிஞ்சுதான் ஆசை யம்மா கடிதம் போட்டிருக்கிறா. என்னை வந்து தங்களோட இருந்து படிக் கட்டுமாம். ஓமம்மா அதுவும் சரிதான். அவையின்ரை வீட்டில இருந்து கம்பஸ் கொஞ்சத் தூரம்தானே. வடிவாய் சைக்கிளிலை போய்வரலாம்"

மளமளவென்று மனதில் தோன்றியதை கொட்டினாள் குயிலி. "ஏன் பிள்ளை! பெரியம்மாவைப் பற்றி ஏதும் எழுதியிருக்கிறாவோ?"

செல்லத்தின் மனக்கொதிப்பு குயிலிக்குப் புரிய நியாயமில்லை.

"சீச்சீ! இல்லை. நீங்கள் பயமில்லாமல் ஆறுதலாய் கடிதத்தை வாசியுங்கோ செல்லம் ஆற அமர திண்ணக்குந்தில் இருந்து கொண்டு கடிதத்தை வாசிக்கத்தொடங்கினாள்".

*குயிலி முருங்கைக்காய்களைத் துண்டாக்கி தோலை வாரத் தொடங்கினாள். மனமோ கற்பனையில் சஞ்சரிக்கத் தொடங்கியது. அவள் ஆசையம்மா வீட்டிலிருந்து சைக்கிளில் புறப்பட்டு பல்கலைக்கழகத்தை நோக்கி பயணிக்கிறாள். கூடவே ஆசையம்மாவின் பிள்ளைகளும் அவளுடன் வந்து கொக்குவில் சந்தியை நோக்கி திரும்பிவிடுகிறார்கள். அவள் மட்டும் மருந்துபீட வளாத்யையும் தாண்டி வந்து பலாலிவீதியில் திரும்பி நேராக போய்க் கொண்டிருக்கிறாள்.அவளுடைய மனத்தில் ஒரு பயம் தோன்றி மறைகிறது. ஐயையோ! பலாலி வீதியில் வாகனங்கள் சனங்கள் என நிறைய நெருக்கடியாரிருக்குமே. அவற்றுக்கு நடுவில் நான் எப்படி சைக்கிளில் போவது?...*

*சிந்தனையை ஓட விடாமல் அம்மா குறுக்கறுத்துவிட்டாள்.*

*“பிள்ளை! அஞ்சாறு பிலாக்கொட்டை கிடக்குது. அதையும் முருங்கைக்காய்க்குள்ள போட்டு பிரட்டலாம் என்று பாக்கிறன்.”*

*“அது நல்ல யோசனைதான். நீங்கள் பிலாக்கொட்டையை வெட்டி உரியுங்கோ. நான் தேங்காயைத் துருவுறன்.”*

*சொல்லிக் கொண்டே தேங்காய் ஒன்றை எடுத்து உடைத்து துருவத் தொடங்கினாள் குயிலி. தனது மன அங்கலாய்ப்பை வெளியே கொட்டினாள்.*

*“ஆசைறம்மாவோட இருந்து படிக்கிறது வசதிதான். இனி கொப்பர் அதுக்கு என்ன சொல்லுறாரா தெரியேல்ல”*

*“அவர் ஒண்டும் சொல்லமாட்டார்”*

*“இல்லையடி பிள்ளை. கொப்பருக்கு என்ரை ஆக்களிற்றை கடமைப்படுறது அவ்வளவாய்ப் பிடிக்கிறேல்ல. அவற்றை குணம் அறிஞ்சுதான் நான் சொல்லுறன்.”*

*“அதெல்லாம் நான் சமாளிப்பன். நீங்கள் போசிக்காமல் இருங்கோ!”*

*இருவரும் கதை பேசிப்பேசியே சமைத்து முடித்தனர்.*

*மதிய போசனம் முடிந்தும் பரமசிவம் வீட்டின் முன்புறத்து திண்ணைக்குந்தில் இருந்தவாறு வெற்றிலை பாக்கை ரசனையோடு மெல்லுவது வழக்கம். இடையிலே வெளியே எட்டி எச்சிலை உமிழ்ந்து துப்புவதற்கு அந்த இடம் அவருக்கு ஏதுவாக அமைந்துவிட்டது. அன்றும் அப்படித்தான் அவர் ஏதோ சிந்தனையில் மூழ்கியவாறு வாயை அசைத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் செல்லமும் குயிலியும் மதிய உணவை முடித்துவிட்டு வந்து அவரருகே அமர்ந்து கொண்டனர்.*

*“என்னப்பா கடுமையாய் யோசிக்கிறியள் போல கிடக்கு”*

*குயிலி அங்கு நிலவிய அமைதியைக் கலைத்தாள்.*

*சுய நினைவுக்கு திரும்பியவராய் பரமசிவம் வாய்திறந்தார்.*

*"எல்லாம் உன்னைப்பற்றித்தான். கம்பஸ் கிடைச்சிட்டுது. இனி உன்னை அங்கை அனுப்பி படிப்பிச்சு முடிக்க வேணுமே. அந்தச்செலவு களை எப்பிடிச் சமாளிக்கப் போறன் என்றுதான் யோசிக்கிறன்."*

*குயிலி அப்பாவின் பேச்சைக் கேட்டதும் கலகலவென்று வாய் விட்டுச் சிரித்தாள். பரமசிவம் ஆச்சரியமுற்றவராய் அவளை நிமிர்ந்து பார்த்தார். அவரது பார்வையில் இருந்த கேள்விக்குறியை குயிலி புரிந்து கொண்டாள்.*

*"அப்பா! அதெல்லாம் ஒரு சிம்பிள் விடயம். உங்கட கவலையை விட்டுத்தள்ளுங்கோ."*

*"என்ன பிள்ளை. நீ என்ன சொல்லுறாய்?"*

*"இண்டைக்கு ஆசையம்மா கடிதம் போட்டிருக்கிறா. என்னை தங்களோட வந்து இருந்து படிக்கட்டுமாம். அதனால... எனக்கு தங்குமிடப் பிரச்சனை சுமுகமாக தீர்ந்து போச்சுது. மற்றும் படிப்புச் செலவு களுக்கு எனக்குத்தான் மகாபொல புலமைப்பரிசில் கிடைச்சிருக்குதே. பிறகென்ன... அதிலையும் நான் கட்டுமாட்டாய் செலவழிச்சுப்போட்டு மிச்சத்தை சேகரிச்சுப் போடுவன்."*

*குயிலி வாய்மூடியதும் பரமசிவம் செல்லத்தைப் பார்த்து கண்சிமிட்டியவராய் வாய் திறந்தார்.*

*"கேட்டீரே உம்முடைய பிள்ளையின்ரை கதையை"*

*மூவரும் வாய் விட்டுச்சிரித்தனர். பரமசிவம் பிடரியைக் கையால் தடவியவாறே கூறினார்.*

*"பிள்ளை குயிலி! நான் ஒண்டு சொல்லுறன். என்னதான் சொந்தமெண்டாலும் நீ அங்கை போய்த் தங்கிறது அவ்வளவு நல்லாயில்லை."*

*அவர் சொல்லி வாய்மூடமுன் செல்லம் குயிலியைப் பார்த்து கண் அசைத்தாள். குயிலி அவளுக்கு கண் ஜாடை காட்டிவிட்டு அப்பாவைப் பார்த்துக் கூறினாள்.*

*"அப்பா! ஆசையம்மா யார். அம்மாவின்ரை உடன் பிறந்த சகோதரம், வலிய வந்து அவவாய் கூப்பிடேக்க அதை நான் தட்டிக் கழித்து விடமுடியாது. அவ எனக்கு இருக்க இடம் தருவா. நானும் அவவுக்கு உதவி யாய் நடந்து கொள்ளுவன். அவவின்ரை பிள்ளைகளுக்கும் உதவியாய் இருப்பன். அப்படியே நாங்கள் ஒருவருக்கு மற்றவர் உதவியாய்... புரிந்துணர்வோட நடந்துகொண்டால் இருசாராருக்கும் நன்மைதான் கிடைக்கும். இது ஏன் உங்களுக்குப் புரியுதில்ல."*

*மகளின் பகுத்தறிவு கண்டு பரமசிவம் மலைத்து நின்றார்.அவரது*

மௌனம் அவரது சம்மதத்துக்கு எடுத்துக் காட்டாய் நிலைத்தது.

***

நேரமோ நடுநிசி. ஆழ்ந்த நித்திரையில் கிடந்த குயிலி திடீரென திடுக்கிட்டு விழித்தாள். வெளியே சோ! ஏன்ற இரைச்சலுடன் மழை கொட்டிக் கொண்டிருப்பதை அவளது புலன்கள் அவளுக்கு உணர்த்து கின்றன. குளிரின் தாக்கத்தினால் அவளது மேனி புல்லரித்தது. எழுந்து போய் கொடியில் கிடந்த அம்மாவின் பழைய சேலையை எடுத்து வந்து போர்த்திக் கொண்டவள் திரும்பிப் பார்த்தாள். அருகில் மகிழ் குளிரில் உடம்பைக் குறுக்கி சுருண்டு கிடந்தாள். எப்போதுமே குயிலிக்கு மகிழின் மீது கழிவிரக்கம் அதிகம். சேலையின் ஒரு முனையை இழுத்து அவளை நன்கு போர்த்தி விட்டாள். பாவம் மகிழ் சின்னப்பிள்ளையாய் இருந்த போதிலும் தன்னாலான வீட்டு வேலைகளைச் செய்கிறாள். படிப்பிலும் கவனம் செலுத்துகிறாள். அக்கறையோடு என்னிடம் கேட்டுப் படிக்கிறாள். புகழும் இருக்கிறாளே. ஏன்தான் அவளுக்கு இப்படியொரு சுயநலப் போக்கும் எவரிடம் ஒட்டாத ஒரு மனப்பான்மையும் அப்பாச்சியும் அப்படி தான் என அப்பா அடிக்கடி கூறுவார். அவளுடைய பரம்பரைதான் போலும் மனம் தன் போக்கில் சிந்திக்க... குயிலி தானும் சேலையின் மறுபகுதியை இழுத்து மூடிக்கொண்டு படுத்தாள்.

ஏனோ திடீரென அவளுக்கு ரகுவின் நினைவுகள் வந்து மனதை அலைக்கழிக்கத்தொடங்கின. இந்தக் குளிருக்கு அவனது அணைப்புக்குள் இருக்க வேண்டும் என்ற உந்துதல் அவளை ஆட்கொண்டது. மறுகணமே தன்னை சுதாகரித்துக் கொண்டான். பேராதனையில் குளிர் அதிகமாய் இருக்குமாமே. அப்படியென்றால் ரகு அத்தானுக்கும் இப்படியான உணர்வுகள் ஏற்படுமா? தன்னைத் தானே கேட்டுக் கொண்டவளுக்கு வெட்கமாக வந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

பொழுது புலர்ந்தபோது மழை விட்டிருந்தது. செல்லம் நேரத்தோடு எழுந்து கணவன் பால் கறப்பதற்கு உதவியாக இருந்தாள். பால் வந்ததும் வாடிக்கையாளர்களுக்கு போத்தலில் விட்டு வைத்துவிட்டு மிகுதியைக் காய்ச்சி தேநீர் ஊற்றுவதற்காக அடுப்படிக்குப் போனவள் மலைத்து கின்றாள். காரணம் கறையான் பிடித்துக் கிடந்த பனையோலைகள் பெய்த மழையினால் மண் கரைந்து போக மழைநீர் நேரடியாகப் பொழிந்து அடுப்படியை நனைத்து விட்டிருந்தது. செல்லம் எழுப்பிய அவலக்குரல் பரமசிவத்தையும் குயிலியையும் அங்கு வரவழைக்க எல்லோரும் விக்கித்து நின்றனர். குயிலி சமயோசிதமாக செயற்பட்டாள்.

மூன்று கற்களை எடுத்து வீட்டின் பின்புறத்து விறாந்தையில் அடுப்பு மூட்டி தண்ணீர் சுட வைத்து பால் காய்ச்சி தேநீர் தயாரித்து அனை வருக்கும் கொடுத்தாள். என்ரை மகராசி என்று சொல்லி நடுங்கும் கரங் களால் அவள் தந்த தேநீரை வாங்கி பரமசிவம் பருகினார் .என்ரை பிள்ளை நல்லாய் இருக்க வேணும் என மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

செல்லம்.

"என்னப்பா செய்யிறது. மாரிக்கு முதல் நாங்கள் குசினியை மேய்ஞ்சு போடவேணும்."

"சாண் ஏற முழம் சறுக்கும் எண்டு சொல்லுறவை. அது மாதிரித்தான் நான் வீட்டுக்கு பட்ட சில்லறைக்கடன் ஒரு மாதிரி ஓய்ஞ்சுது என்று தலை நிமிர அடுத்த செலவு வந்திட்டுது. எங்கட வளவுக்குள்ள கொஞ்சப்பனை போகம் தப்பி நிக்குது கண்டீரோ. அதை வெட்டுவிப்பம் . எதுக்கும் இந்த மழை ஓய வேணுமே."

அங்கலாய்த்தார் பரமசிவம். செல்லம் அவரை சமாதானப்படுத் தினாள். "சித்திரை மாதம் சிறுமாரி என்று சொல்லுறது. அது அஞ்சாறு நாள் ...மிஞ்சினால் பத்துப் பன்னிரண்டு நாளில ஓய்ஞ்சு போகும். பிறகு கந்தனைக் கூப்பிட்டு வெட்டிக்கலாம் அதுவரை சமாளிப்பம்."

அவர்கள் முன் குயிலி வந்து நின்றாள்.

"அப்பா! நான் ஒரு ஐடியா சொல்லட்டுமே?"

பரமசிவமும் செல்லமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கம்பீரமாக அவளது குரல் ஒலித்தது.

"நாங்கள் உந்த மண்குசினியை இடிச்சுப் போட்டு வீட்டோட சேர்த்து ஒரு குசினிக் கட்டுவம்".

"உதெல்லாம் சாத்தியப்படுமா உதை விட்டிட்டு வேறை ஏதும் பிரயோசனமான கதையைக் கதை"

அலுத்துக் கொண்டார் பரமசிவம். யாரோ கெக்கலி கொட்டிச் சிரிக்கும் ஒலி கேட்டது. குயிலி திரும்பிப்பார்த்தாள். அது வேறு யாருமல்ல. புகழ்தான்.

ஒரு நாளுமில்லாதவாறு குயிலிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். கூடவே ஓர்மத்துடன் ஒரு தீர்மானம் எடுத்துக் கொண்டாள். வீட்டை சீரமைத்து குசினியையும் இணைத்து ஒரு முழுமையான வீடாக ஆக்கியே தீருவதென்று.

பரமசிவத்துக்கோ தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. ஒரு வீட்டைக் கட்டிமுடித்து இப்போதுதான் தலை நிமிர முடிந்த வேளையில் குயிலி ஒரு குண்டை துக்கிப் போடுகிறாளே என ஏங்கியவருக்கு தன் முன் நடப்பவையெல்லாம் சூன்யமாகவே தொன்றியது. அவரது குழப்பத்துக் கெல்லாம் மதியமே விடைகிடைத்தது.

பாடசாலையிலிருந்து வந்தவர் உணவருந்தியபின் சிறிது களைப் பாறலாமென திண்ணைக் குந்தில் சரிந்த வேளை அவர்முன் புன்சிரிப் பொன்றை உதிர்த்தவாறு வந்து நின்றாள் குயிலி.

“என்ன அப்பா உண்ட மயக்கமா?”

கிண்டலடித்தவளைப் பார்க்க அவருக்கு எரிச்சலாக வந்தது.

“அப்பா! உங்கட கையை ஒருக்கா நீட்டுங்கோ”

சுரத்தில்லாமல் கையை நீட்டியவருக்கு காத்திருந்தது அதிசயம்.

கையில் கிடந்த பணநோட்டுகளைக் கண்ணுற்றதும் ஆச்சரியத் தோடு அவளது முகத்தை நிமிர்ந்து பார்த்தார்.

அப்பா! இது நான் டியூசன் குடுத்து சேமித்த பணம் நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் வீட்டைத் திருத்திற வேலையை தொடங்கலாம். சரியா? மகளின் செய்கை கண்டு பரமசிவத்தின் கண்கள் கலங்கின. தளர்ந்து போயிருந்த அவரது உடல் உஷாரடைந்து விட்டது.

குயிலியின் விருப்பப்படியே கிழக்குப் புறமாக வீட்டோடு இணைந்த வாறு சமையலறைக்கு அத்திவாரம் வெட்டப்பட்டது. முன்புறத்து விறாந்தையையும் மூடிக்கட்டி அதை வரவேற்பறையாக மாற்ற அவள் விரும்பினாள். மேற்கில் ஒரு சோடி யன்னல்களும் வடக்கே இரண்டு சோடி அகன்ற யன்னல்களுமாக காற்றோட்டத்துடன் வெளிச்சமுமாக அமைந்தது ஹோல். வீட்டின் பின்புறத்து விறாந்தையையும் மூடிக்கட்டி வடக்குப் பக்கமாக ஒரு அறையையும் அமைக்கவேண்டுமென வலியுறுத்தினாள்.

வேலை முடியும தறுவாயில் பணத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்ட போது செல்லம் தனது சேமிப்பிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கவும் தடங்கல் எதுவுமின்றி வேலை முடிந்தது.

“புழைய வீட்டைத் திருத்தினாலும் புதுவீடு மாதிரி வராது. புகழ் மகிழைச் சீண்ட முற்பட்டாள்.”

“பழசோ புதுசோ எங்களுக்கு வீடு வசதியாயிருந்தால் போதும்”

வெடுக்கெனக் கூறி அவளது சீண்டலை முறியடித்தாள்.

இதனால் ஆத்திரமுற்ற புகழ் மகிழைத் துரத்திக் கொண்டு போனாள். செய்வதறியாத மகிழ் அவலக் குரல் எழுப்பினாள்.

“அ…ம்…மா…”

***

காலச் சுழற்சியினால் வருடங்கள் இரண்டு ஓடி மறைந்து விட்டன. பரமசிவத்தின் வீட்டிலும் பல மாற்றங்கள் நிகழத்தான் செய்தது. படிப்பைக் காரணங்காட்டி குயிலி ஆசையம்மாவின் வீட்டில் குடியேறி விட்டாள். வார இறுதி நாட்களிலும் தவணை விடுமுறை காலங்களிலும் வீட்டிற்கு வந்து போவாள். அவள் இல்லாத வீடு கலகலப்பையே இழந்துவிட்டதாக பெற்றோர் கருதினர். புகழ் இப்பொழுது நிரந்தரமாக வீட்டிலேயே இருக்கிறாள். காரணம் சென்ற வருடம் நடந்தேறிய ஓ.எல் பரீட்சையில்

அவளுக்கு ஒரு வெற்றிக்கொடி பெறுபேறாகக் கிடைத்ததுதான் . அதன்பின் அவள் படிப்பதற்கு இஷ்டப்படவில்லை. அவளைப் படிக்க வைத்தும் பயனில்லை எனக் கருதிய பெற்றோரும் அவள் வழியில் விட்டுவிட்டனர். குயிலிக்கு மட்டும் அதையிட்டு சிறு மனவருத்தம் ஏற்பட்டது என்னவோ உண்மைதான். மகிழ் இவ்வருடம் ஓ.எல் எழுதிவிட்டு பெறுபேறு வெளியாகும் வரை காத்திருக்கிறாள். அவளுக்கு விஞ்ஞானபிரிவில் படிக்க ஆசைதான். ஆனால் பெறுபேறுகள் எப்படி அமையுமோ என்ற ஏக்கத் துடன் காலம் கழிக்கிறாள்.

குயிலிக்கு முதலாம் ஆண்டுப் பரீட்சை நெருங்கிவிட்டதால் அவள் வார இறுதி நாட்களிலும் வீட்டிற்கு வரவில்லை. அங்கேயே தங்கி படிப்பில் கவனம் செலுத்துகிறாள். மகளை இரண்டு வாரங்களாகப் பார்க்காதது செல்லத்துக்கு பெரும் சோட்டையை ஏற்படுத்தியது. சிறிது நேர யோசனையின் பின் ஒரு முடிவுக்கு வந்தாள்.

நாளைக்கு போயா விடுமுறை நாள்தானே. அப்பாவுக்கும் பாடசாலை லீவு நாள். புகழ் மகிழும் வீட்டில் நிற்கிறார்கள். மூன்று பேரும் சேர்ந்து சமையலைப் பார்க்கட்டும். புகழுக்கு படிப்பும் சரி வரவில்லை. வீட்டு வேலைகளையாவது ஒழுங்காகப் பழகட்டுமே. தகப்பனோட சேர்ந்து செய்யிறதெண்டால் அவளுக்கும் பிடிக்கும். இது தான் அவளுக்கும் பொருத்தமான செயற்பாடு!

முடிவொன்றை எடுத்துக் கொண்டவள் ! ஆசையக்கா வீட்டிற்கு வெறுங்கையோடு போவதா.... ஏதாவது செய்து கொண்டு போக வேணுமே என சிந்தித்தாள். அவளது சிந்தனையில் ஒரு பொறி தட்டியது. அ.. அதுதான் சரி இப்பவே அரிசியை எடுத்து புடைத்து ஊற வைப்போம்.

செயலில் இறங்கிய செல்லத்தைக் கவனித்துக் கொண்டிருந்த மகிழ் அம்மாவிடம் வந்தாள்.

"அம்மா! ஏனம்மா அரிசி ஊறவைச்ச நீங்கள்?"

தணிந்த குரலில் செல்லம் பதிலிறுத்தாள்.

"அது வந்து...கொக்காவைப் பாத்து கன நாளாகுது. அதுதான் நாளைக்கு லீவுநாள் தானே. வெள்ளனக் காத்தால ஒருக்காப் போய் பாத்திட்டு வரலாமென்று நினைச்சனடி பிள்ளை."

"அதுசரி இப்ப ஏனம்மா அரிசி நனைய விட்டிருக்கிறியள்?"

"ஆசையம்மா வீட்டுக்கு வெறுங்கையோட போறதோ...அதுதான் அஞ்சாறு அப்பம் சுட்டுக் கொண்டு போவமெண்டு நினைச்சன்."

"ஓமம்மா அதுவும் நல்ல யோசனைதான். நான் உங்களுக்கு உதவி செய்யிறன்"

மகிழ் அவளுக்கு அனுசரணையாகப் பேசியது அவருக்கு இதமாக

*இருந்தது. பாடசாலையால் வந்து உணவு அருந்தியதும் உண்ட களையின் விளைவாக கோழித்தூக்கத்தில் மூழ்கியிருந்த பரமசிவத்தை மெதுவாக அணுகினாள் செல்லம்.*

*மனைவியின் நியாயமான கோரிக்கைக்கு என்றுமே தடை விதிப்ப வரல்ல பரமசிவம். செல்லம் காலில் சில்லைக் கட்டிக் கொண்டு பரபரப்பாக வேலையில் இறங்கிவிட்டாள். மகிழ் அவளுக்கு ஆதரவாகக் கை கொடுத்தாள். புகழ் மட்டும் எதையுமே கண்டு கொள்ளாதமாதிரி ஒதுங்கி நடந்து கொண்டாள்.*

*மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கே செல்லமும் மகிழுமாக எழும்பி அப்பத்தை சுட்டு முடித்தனர். பரமசிவம் மனைவியை காலை ஆறு மணி பஸ்சில் ஏற்றிவிட்டார். யாழ்ப்பாணம் வந்து இறங்கியதும் காங்கேசன்துறை பஸ் புறப்படுவதற்கு தயாராக நின்றது. அதில் ஏறிய செல்லம் காலை ஏழரை மணிக்கெல்லாம் ஆசையக்கா வீட்டிற்கு வந்து விட்டாள். அவளைக் கண்டதும் ஆசையக்கா வாஞ்சையோடு வரவேற்றாள்.*

*"ஏனடி செல்லம் இந்த வெள்ளனக்காத்தால வெளிக்கிட்ட நீ?"*

*செல்லம் வார்த்தைகளால் மழுப்பினாள்.*

*"அதக்கா... நான் அப்பம் சுட்டநான். பிள்ளைகள் காலமைச் சாப்பாட்டுக்கு சாப்பிடட்டுமே என்று நினைச்சன்."*

*இருவரும் சமையலறைக்குள் நுழைந்தனர். செல்லத்தின் கண்கள் அவளையறியாமலே வீடெங்கும் துழாவியது. குயிலியை எங்கும் காண வில்லை. ஆசையக்காவின் இளையமகள் சோபனா அப்போதுதான் படுக்கை யிலிருந்து எழும்பி வந்தாள். செல்லத்தைக் கண்டதும் இருங்கோ சித்தி முகம் கழுவிப் போட்டு வாறன் என்று சொல்லிவிட்டுப் போனாள். செல்லத்தி னால் மனத்தை அடக்கமுடியவில்லை. அக்காவிடம் கேட்டே விட்டாள்.*

*"அக்கா! இவள் குயிலி எங்கை? படிக்கப்போட்டாளோ?"*

*"இல்லை செல்லம். அவள் பின்னால இருக்கிற மாமரத்துக்குக் கீழ இருந்து படிச்சுக் கொண்டிருக்கிறாள்."*

*இதற்கிடையில் சோபனா மூலம் செய்தியறிந்த குயிலி அம்மாவைத் தேடி ஓடி வந்துவிட்டாள்.*

*"அ..ம்..மா!"*

*பாச மகளின் தழுவலில் கட்டுண்டு கிடந்த செல்லத்தைப் பார்க்க ஆசையக்காவுக்கு அவளையறியாமலே தேகம் புல்லரித்தது. பாசப் பிணைப்பு என்பது இதுதான் போலும். மனம் கணக்கிட்ட போது குயிலி அம்மாவை கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தாள்.*

*"அப்பா தங்கச்சியவை எல்லாரும் எப்பிடி இருக்கினம் அம்மா?"*

“அவையளுக்கென்ன.... எல்லாரும் சுகமாயிருக்கினம்.”

கூறியவளின் கைகளில் தேநீர்க்குவளையைத் திணித்தாள் ஆசையக்கா.

“வெள்ளனக் காத்தால அப்பமும் சுட்டுக் கொண்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய் இந்தா... இந்தத் தேத்தண்ணியை முதல்ல குடி”

அவர்களது சகோதர பாசத்தைக் கண்ணுற்ற குயிலியின் மனத்தில் ஒரு கேள்வி முளைத்தது. ஏன் புகழ் மட்டும் என்னைப் புரிந்து கொள்கிறா ளில்லை. என்னை ஒரு எதிரியாகவே பார்க்கிறாள்.

மனதில் ஆதங்கம் ஒரு நெடுமூச்சாக வெளிப்பட்டது.

***

செல்லம் மகளிடம் உத்தரவிட்டாள்.

“பிள்ளை! அரிசி மா அப்பம் காய்ஞ்சு போயிடும். எல்லாரையும் கூப்பிட்டு சாப்பாட்டைக்குடு.”

முதலில் ஆசையப்பாவிடம் போனாள் குயிலி

“ஆசையப்பா! சாப்பிடவாங்கோ. உங்களுக்கு விருப்பமான சாப்பாடுதான்”

புதினத்தாளில் இருந்து பார்வையை விலக்கியவர் குயிலியை நிமிர்ந்து பார்த்தார்.

“என்ன.... உன்ரை ஆசையம்மாவுக்கு புட்டையும் இடியப்பத்தையும் விட்டால்... என்ன செய்யத் தெரியம். ஒருவேளை சக்கரைப் பொங்கல் வைச்சிருப்பாளோ...”

அவருக்கு இனிப்புச்சுவைதான் பிடிக்கும்.

கலகலவென்று சிரித்தாள் குயிலி

“எங்கட அம்மா அப்பத்தோட வந்திருக்கிறா”

குயிலியின் வார்த்தை கேட்டதும் பத்திரிகையை மடித்து வைத்து விட்டு எழும்பினார் ஆசையப்பா

“பந்திக்கு முந்து படைக்கு பிந்து என்று சொல்லுறவை.”

“இரு நான் முதல்ல போய் ஒரு பிடி பிடிக்கிறன்”

சிரித்துக் கொண்டே பின்னால் நடந்தாள் குயிலி.

சாப்பாட்டு மேசையில் குயிலியின் திரு அண்ணாவும் சோபனா அக்காவும் காத்திருந்தனர். ஆசையம்மா செல்லம் கொண்டு வந்திருந்த மூடல்தாய் பெட்டியைத் திறந்து பூவரசம் இலைகளால் மூடி வைக்கப் பட்டிருந்த அப்பங்களை எடுத்து அவர்களுக்குக் கொடுக்க ஆசையப்பாவும் அவர்களுடன் இணைந்து கொண்டார். ஓர் அப்பத்தைப் பிய்த்து வாய்க்குள் திணித்தவாறே அவர் குயிலியையும் சாப்பிட அழைத்தார்.

“நீங்கள் மூன்று பேரும் முதல்ல சாப்பிடுங்கோ. நானும் ஆசையம்மாவும் அம்மாவும் பேந்து சாப்பிடுறம்.”

சொல்லிவிட்டு குயிலி அம்மாவைத் தேடிப் போனாள்.

செல்லம் சமையலறைக்குள்ளிருந்து ஆசையக்காவுடன் கதைத்துக் கொண்டிருந்தாள்.

“பெரியக்கா கடிதம் போட்டவவோ?”

“எப்பவோ ஒரு கடிதம் வந்தது.”

“என்னக்கா எழுதினவ. இன்னமும் அவவுக்கு என் மேல இருக்கிற கோபம் அடங்கேல்லையே?”

சிரித்தாள் ஆசையக்கா

“என்னத்தை அடங்கிறது. அடங்கக்கூடிய ஜென்மமா, அவ தான் இனி உன்ரை கண்ணில முழிக்கமாட்டாவாம். அவள் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று திட்டியிருந்தவ”.

செல்லத்தின் கண்கள் கலங்கின.

“நீயே சொல்லு ஆசையக்கா. என்ரை ஏழ்மை நிலையில நான் என்ன செய்யமுடியும். கூடின விலை கேக்கிறவைக்குத்தானே குடுக்க முடியும். இவ தான் குடுத்த காணிதானே எண்டு நாலாயிரம் கேக்கிறா. இது நியாயமோ?”

“செல்லம்! உந்தக் கதையளை விட்டுத்தள்ளு. இப்ப என்ன நீ காணியை வித்தாய். வீட்டைக்கட்டி முடிச்சிட்டாய். பிறகென்ன...”

“அதுதானக்கா அந்த வீட்டை ஆரும் வாடகைக்கு கேட்டா குடுப்பம். சொற்ப வருமானம் வரும் எண்டு பாத்தால் ஒரு சனமும் வருகுதில்லையே...”

“அவசரப்படாத செல்லம் . எல்லாம் வரும். அதுக்கு காலம் கனிஞ்சு வரவேணும் கண்டியோ. அதுசரி. நீங்கள் போய் அந்த வீட்டில வசதியாய் இருக்கலாம் தானே.”

“அக்கா! நாங்கள் இப்ப இருக்கிற வீட்டைத் திருத்திப் போட்டம். இவள் குயிலி சொல்லயில்லையே?”

“இல்லையே!”

“வீட்டோட சேத்து குசினியும் கட்டி முன் விறாந்தையை மூடி ஹோலாக்கி பின் விறாந்தையும் அடைச்சு ஒரு அறையையும் இணக்கியிருக்கிறம். இப்ப நல்ல வசதியாயிருக்குது.”

“மெய்தானே. எனக்கு வலு சந்தோசம்.”“

நீ இப்ப அங்காலப் பக்கம் வந்தும் கனகாலமெல்லே”.

குயிலி அவர்களுக்கு இருந்த இடத்திலேயே உணவைக் கொண்டு வந்து கொடுக்க மூவருமாக சாப்பிடத்தொடங்கினர்.

ஆண்டுப்பரீட்சை நடைபெற்று முடிந்து விடுமுறையில் குயிலி வீட்டு வந்திருந்ததால் வீடே களை கட்டியிருந்தது. ஓய்வு கருதாமல் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்த குயிலி போட்டது போட்டவாறே அலங்கோல மாகக் கிடந்த வீட்டை ஒழுங்குபடுத்தினாள். வீட்டின் பின்புறத்தில் புதிதாக அமைந்த அறை மட்டும் பூட்டியிலிருந்தது. மகிழைக் கூப்பிட்டு விசாரித்த போது அவள் கூறிய பதில் அவளுக்கு ஆச்சரியத்தை யூட்டியது.

"அக்கா! அந்த அறைக்குள்ள சின்னக்கா தன்னுடைய சாமான்களை போட்டு பூட்டி வைச்சிருக்கிறா."

மகிழது வார்த்தை கேட்டு குயிலிக்கு எரிச்சலாக வந்தது. சாய்! எங்கை போனாலும் ஆட்சி பிடிக்க மட்டும் முன்னுக்கு நிப்பாள். வாய் புறுபுறுத்ததது

ஒருவாறு வீட்டைக் கூட்டி முடித்துவிட்டு சமையலறைக்குள் நுழைந் தாள் குயிலி. அங்கும் ஒரு சீரில்லாமல் பொருட்கள் கலைந்து கிடந்ததைக் கண்ணுற்றவள் அம்மாவைக் கடிந்து கொண்டாள்.

"ஏனம்மா பொருளெல்லாம் கண்டபாட்டுக்கு சிதறிக்கிடக்குது." செல்லத்தின் பதிலில் கிடந்த வருத்தத்தைப் பார்த்து திடுக்கிட்டுப் போனாள் குயிலி.

"நான் என்ன பிள்ளை செய்யிறது? முந்தியெண்டால் அடுப்படிக் குந்திலேயே சமையலுக்குத் தேவையானதுகளை வைச்சுக் கொண்டு இருந்த இடத்திலையே எட்டி எடுத்து சமைச்சுப் போடுவன். இப்ப என்னடா எண்டால் ஒவ்வொரு சாமானையும் தட்டில எல்லே தேடி எடுக்க வேண்டியிருக்குது".

அம்மாவின் ஆதங்கத்தைக் கேட்க குயிலிக்கு சிரிப்பாக வந்தது. ஓஹோ! வசதியாயிருக்குமென்று அடுப்பை மேடையில் கட்டியது. சீமேந்து தட்டுகளை வைத்து அதில் சுகமாக சாமான்களை வைத்து எடுக்கலாமென்று நினைத்து எல்லாமே வீண்தானோ. தினமும் மண் குந்திலிருந்து கறையானின் ஆக்கிரமிப்பில் ஒட்டிக் கிடக்கும் மண்ணைத் தட்டியெடுத்து புழங்குவது அம்மாவுக்கு சௌகரியத்தைத் தருவதாயிருக்குமோ....

மனதுக்குள் நினைத்துப் புழுங்கினாள் அவள்.

"அம்மா! வாழ்க்கையெல்லாம் நிலத்திலேயே இருந்து சமைச்சுப் பழகீட்டியள். இப்பிடியொரு மாற்றம் இப்ப கஷ்டமாயிருந்தாலும் போகப்போக சரியாகிடும்."

ம்!.... என்றொரு பெருமூச்சை வெளிவிட்டு தன்னை ஆசுவாசுப் படுத்திய செல்லத்தைப் பார்க்க அவளது மனசு சங்கடப்பட்டது.

"அம்மா! நீங்கள் நிலத்தில இருந்துகொண்டு இருந்த இடத்திலேயே கறி கூட்டிக் குடுங்கோ. மகிழ் புகழ் அடுப்பிலை வைச்சு எரிக்கட்டும்.

சோத்தையும் அவையே சமைக்கட்டும்."

அம்மா வருத்தத்துடன் சொன்னாள்.

"நீ நல்லாய்ச் சொன்னாய். அவளவை குசினிக்கை நிண்டு சண்டை போடத்தான் லாயக்கு"

குயிலி லாவகமாக அந்தப் பிரச்சனையைத் தீர்த்தாள்.

"ஒரு நாளைக்கு புகழ் சமைக்கட்டும். மறு நாளைக்கு மகிழ் சமைக்கட்டும். நீங்கள் அவையை வழி நடத்துங்கோ. புகழுக்கு படிப்பும் ஏறயில்ல. வீட்டில இருந்து என்ன செய்யப் போறாள்".

"நீ சொல்லுறதும் சரிதான். "

அம்மா தணிந்து வந்தது குயிலிக்கு ஆறுதலாக இருந்தது. கூடவே ஒரு யோசனையும் தோன்றியது.

"அம்மா! நான் புகழை தையல் வகுப்பில சேத்துவிடட்டே?"

"இப்போதைக்கு அவள் தைச்சுப் பழகட்டும். கொஞ்சக்காலத்தில அவளுக்கென்று ஒரு தையல் மெசினை கட்டுப் பணத்திலையாவது வாங்கிக் குடுத்திடலாம்".

அம்மாவுக்கு மட்டுமல்ல. அப்பாவுக்கும் பிடித்திருந்தது. அன்றே காரியத்தில் இறங்கிவிட்டாள் குயிலி.

புகழும் மன விருப்பத்துடன் தையல் வகுப்புக்கு போய் வரத் தொடங்கினாள்.

வாரம் ஒன்று கழிந்தது. குயிலி வீட்டில் இருப்பதால் செல்லத்துக்கு வேலைப்பழு குறைந்தது. ஆனால் அங்கே... ஆசையம்மாவோ...விடு முறைக்கு குயிலி இங்கேயே இருந்திருந்தால் கையுதவியாயிருந்திருக்கும் என ஏங்கினாள்.

வீட்டின் முன்புறத்து வாசற்படியில் குயிலி அமர்ந்திருந்தாள். அவளது கைகளில் கல்கியின் பொன் விலங்கு நாவல். வெகு சுவாரசியமாக கதை யோடு ஒன்றிப் போய் லயித்திருந்தாள். திடீரென அவளது எண்ணத்தில் ரகு வந்து தோன்றியது மட்டுமல்லாமல் ,அவளது உணர்வுகளை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான். இனிமை சொட்டும் கன்னிப் பருவத்திற்கேயுரிய கனவுகளில் அவள் மூழ்கிக் கிடந்ததால் ஒருவித மயக்கம் அவளை ஆட்கொண்டு விட்டது. எத்தனை நேரம் தான் அதில் கட்டுண்டு கிடந்தாளோ...

"அக்கா!... அக்கா"

மகிழ் தான் அவளது தோளைத் தொட்டு உலுப்பினாள். திருக்கிட்டு தன் நிலைக்குத் திரும்பியவள். ஒருவாறு சமாளித்துக் கொண்டாள்.

"கதைப் புத்தகத்தை வாசிக்க... கண்ணைச் சுழட்டிக் கொண்டு

நித்திரை வருகுது.”

சொன்னவள் புத்தகத்தை மூடி வைத்து விட்டு மகிழுடன் வளவுக்குள் உலாவி வர புறப்பட்டாள். உடலில் தோன்றிய இன்பக் கிளுகிளுப்பு இன்னும் அடங்கவில்லை. கிணற்றடிக்குப் போனவள் வாளியில் நீரை மொண்டு மகிழிடம் கொடுத்தாள்.

“இதைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்று. நான் குடிக்கிறன்.”

துலாக் கொடிக் கயிற்றிலிருந்த வாளியிலுள்ள நீரை மெதுமெதுவாக மகிழ் ஊற்ற குயிலி இரு கைகளாலும் ஏந்திக் குடித்தாள். குடித்து முடித்ததும் “மகிழ்! நீயும் குடிக்கப் போறியே?” என்று வினவ அவள் மறுத்து விட்டாள்.

“புட்டுச் சாப்பிட்டுது சரியான தண்ணி விடாய்”

குயிலியின் கூற்றை ஆமோதித்தவாறு இருவரும் நடந்தனர். முன்னர் மண் குசினி இருந்த இடம் இப்போது மண்மேடாகிக் கிடந்தது. அந்த செம்மண்ணை இழுத்துப் பரவிய பரமசிவம் அதில் மிளகாய்க் கன்றுகளை நட்டு வைத்திருந்தார். அவரது பராமரிப்பில் கன்றுகள் செழித்து வளர்ந்து பூவும் பிஞ்சுமாகக் காட்சியளித்தன. அதைப் பார்த்ததும் குயிலிக்கு ஒருயோசனை தோன்றியது.

“மகிழ்! நீபோய் ஒருஓலைப் பெட்டி எடுத்துக் கொண்டு வா. நாங்கள் பதமாய் இருக்கிற பச்சை மிளகாய்களைப் பிடுங்கிக் கொண்டு போய் மோர் மிளகாய் போடுவம். பச்சை மிளகாயைப் பிடுங்கினால்த்தான் மரம் நல்லாய்க் காய்க்கும் என்று அப்பா சொல்லுறவர்.”

படலையடியில் அரவம் கேட்டதும் அவர்களது கவனம் திரும்பியது.

“பரமசிவம் மாஸ்டர்வீடு இதுதானோ?”

இளம் விதவையாகத் தோற்றமளித்த அம்மா கேட்டாள்.

“ஓமோம் உள்ளே வாங்கோ”

முன்பின் தெரியாதவர்களை அக்கா உபசரிப்பதைப் பார்த்து மகிழ் மிரண்டாள். “அம்மா!...அம்மா!!” என குரல் கொடுத்தவாறு உள்ளே போனாள்.

இப்போது அந்த அம்மாவோடு கூட வந்த இளைஞன் வாய் திறந்தான்.

“எங்களை கொக்குவில் சரவணபவன் சேர் தான் அனுப்பி விட்டவர்.”

ஒருநொடியில் குயிலிக்கு எல்லாமே புரிந்துவிட்டது உடனே அவள் மகிழை அழைத்து அப்பாவைக் கூட்டிக் கொண்டு வருமாறு அனுப்பி வைத்தாள். ஒன்றுமே புரியாதவளாக அங்கு வந்த செல்லம் மகளின் செய்கையை ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டிருந்தாள். இப்போது குயிலி தாய் பக்கம் திரும்பினாள்.

“அம்மா! இவையை ஆசையப்பாதான் அனுப்பியிருக்கிறார்.”

*செல்லத்துக்கு எதுவுமே விளங்கவில்லை. பேந்த முளித்தவாறு வாளாவிருந்தாள்.*

*செருமல் சத்தம் ஒன்று பரமசிவத்தின் வருகையை உறுதிப்படுத்தியது. எல்லோரும் வாசற் புறத்தை திரும்பிப் பார்த்தனர். குயிலி அவருக்கு வந்திருப்பவர்களை அறிமுகப்படுத்திவிட்டு மெதுவாக உள்ளே நழுவினாள். செல்லமும் மகளின் பின்னால் நடந்தாள்.*

*சிறிது நேரத்தில் தேநீர் தயாரித்து வந்திருந்தவர்களுக்கு எடுத்து வந்து கொடுத்தாள் குயிலி. அதற்கிடையில் பரமசிவம் அவர்களுக்கு புதுவீட்டை வாடகைக்கு பேசி முடித்திருந்தார். அவர்களும் நல்ல நாள் பார்த்து வந்து குடியேறுவதாக வாக்களித்து விட்டுப் போயினர்.*

*மாத வருமானம் ஒன்று வரப்போகிறதென்பதில் அவர்கள் அனைவருக்கும் திருப்திதான். ஆயினும் தையல் வகுப்பிலிருந்து திரும்பி வந்த புகழ் செய்தியறிந்து துள்ளிக் குதித்தாள்.*

*“யாரைக் கேட்டு வீட்டை வாடகைக்குக் குடுத்தனீங்கள். அது என்னுடைய வீடு”*

*அங்கு ஒரு சிறு பூகம்பமே உருவாகியது என்று சொல்லலாம் குயிலி தான் சமயோசிதமாக அதைப் பெரிதாக விடாமல் தடுத்தாள்.*

*“புகழ்! நான் சொல்லுறதைக் கேளு. அது உன்னுடைய வீடு தானே. அவை தாற வாடகைப்பணத்தை நீயே வாங்கிக் கொள்”*

*ஒருவாறு தணிந்து வந்தாள் புகழ்*

*“அப்பிடியெண்டால் மாதா மாதம் பணம் என்னுடைய கைக்கு வந்து சேர வேணும்.”*

*அத்துடன் அங்கு நிலைமை சுமுகமாகியது.*

*அன்றைய இரவு. அம்மா அப்பாவுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந் தாள். ஹோலுக்குள் படித்துக் கொண்டிருந்த குயிலியின் காதுகளில் தற்செயலாக அவர்களது சம்பாசனை கேட்டது.*

*“இஞ்சாரும் செல்லம் நான் அந்த வீட்டை ரகுவுக்கு சீதனமாய்க்குடுக்க வேண்டிவரும் என்று நினைச்சுத்தான் செலவையும் பார்க்காமல் முன்னுக்கு ஒரு சின்ன போர்ட்டிக்கோவையும் இணைச்சு கட்டினநான் கண்டீரோ. இப்ப... இவள் புகழ் குயிலிக்கு அந்த வீட்டைக் குடுக்க விடமாட்டாள் போல இருக்கு. ம்”*

*ஆதங்கத்துடன் வந்தன வார்த்தைகள்.*

*“விட்டுத் தள்ளுங்கோ. எங்கட குயிலி பொருளுக்கு ஆசைப்படுறவள் அல்ல. இன்னும் இரண்டு வருசப் படிப்பு முடிஞ்சால் அவளுக்கு வேலை கிடைச்சிடும். அவள் தனக்குத் தேவையானதைத் தேடிக் கொள்ளட்டும்.”*

செல்லம் கூறிய வார்த்தைகள் அவருக்கு சிறிது தென்பை ஏற்படுத்தியது. அதே சமயம் சுவருக்கு மறுபக்கம் இருந்து படித்துக் கொண்டிருந்த குயிலியின் காதுகளில் விழுந்து அவளுக்கு இன்பக் கிளுகிளுப்பை மூட்டியது.

"எனக்கு இந்த சொத்தெல்லாம் வேண்டாம். ரகுஅத்தானே எனக்கு கிடைக்கப்போகும் பெரும் சொத்து"

இறுமாப்படைந்த மனம் கற்பனை வெள்ளத்தில் மூழ்கி திக்குமுக் காடத் தொடங்கியது. எத்தனை நேரம் தான் அப்படியே மௌனித்திருந் தாளோ… மடியின் மீது விரித்து வைத்திருந்த குறிப்புப்புத்தகம் நழுவி கீழே விழுந்ததும் தான் விழிப்புற்றாள்.

வாரங்கள் மூன்று ஓடி மறைந்தன. குயிலி ஆசையம்மா வீட்டிற்கு மோர் மிளகாய் பனாட்டு ஒடியல்மா போன்ற இத்தியாதி பொருட்களுடன் வந்து சேர்ந்தாள். இப்போதெல்லாம் அந்த வீட்டில் குயிலியின் மோர் மிளகாய்ப் பொரியல் இல்லாமல் பிட்டு சாப்பிடமாட்டார்கள். அந்தளவிற்கு அதன் மவுசு அதிகமாயிருந்தது.

ஆசையம்மா வீட்டில் தையல் மெசின் வாங்கி வைத்திருந்தாள். ஆனால் அங்கு ஒருவருக்கும் தையல் தெரியாது. குயிலி தான் இடையிடையே ஏதும் தைப்பாள். அவர்களுக்கும் தைத்துக் கொடுப்பாள்.

அடிக்கடி ஆசையம்மா குயிலியை உதாரணம் காட்டி மகள் சோபனாவை குறை பட்டுக் கொள்ளுவாள். குயிலி அதற்கு இடங் கொடுக்கமாட்டாள். அவளுக்கும் சிறுசிறு வேலைகளை சொல்லிக் கொடுப்பாள். மொத்தத்தில் சோபனாவின் போக்கில் நியாயமான முன்னேற்றம் காணப்பட்டது. ஆசையம்மாவுக்கு மனதில் திருப்தியும் நிம்மதியும் ஏற்பட்டது. பரஸ்பர புரிந்துணர்வினால் குயிலி அந்த வீட்டில் ஒருத்தியாகவே மாறிவிட்டாள்.

அன்று அப்பாவிடமிருந்து ஒர தபால் அட்டை வந்திருந்தது. அதில் எழுதியிருந்த செய்தி அவளை மகிழ்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்று விட்டது. அவளையறியாமலே மனதில் தோன்றிய வார்த்தைகள் பாடல் வரிகளாய் உதட்டிலிருந்து வெளியாகின.

"மனதுக்குள்ளே உன்னை வைத்தேன் ரகு அத்தான்

உயிர் இருக்கும் வரை நினைத்திருப்பேன் உன்னைத்தான்"

தபாலட்டையில் எழுதப்பட்டிருந்த செய்தியை மீண்டும் படித்தாள்

"ரகுவுக்கு கொழும்பில் வேலை கிடைத்துவிட்டது உனக்கு அறிவித்து விடச் சொல்லி எழுதியிருந்தான் -அப்பா"

***

ஒரு வளர்பிறை சதுர்த்தி தினத்தில் சிவகாமியும் மகன் சந்திரனும்

*பரமசிவத்தினது புதுவீட்டிற்கு குடி வந்து விட்டார்கள் பலாலியை பூர்வீக மாகக் கொண்ட அவர்கள் இடப் பெயர்வினால் கொக்குவில் கிராமத்தில் வந்து குடியேறியவர்கள். சந்திரனது தந்தை ஒரு விவசாயி தனது தோட்டத் தைக் கொத்திக் கொண்டிருந்த போது விழுந்து வெடிக்காத ஒரு ஏவுகணை மண்வெட்டியில் பட்டு வெடித்துச் சிதறி அவரது உயிரையும் காவு கொண்டு விட்டது. கணவனை இழந்ததால் மனம் தளர்ந்துபோன சிவகாமி தன் மனதை திடப்படுத்திக் கொண்டாள். கைக்குழந்தையான சந்திரனை வளர்த்து ஆளாக்கி விடுவதையே தனது உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கத் தொடங்கினாள்.*

*ஓரளவு வசதியுடன் வாழ்ந்த குடும்பம் அவளுடையது. இடம் பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டபோது அவளும் தன் குழந்தையுடன் கையில் கிடைத்ததை சுருட்டிக் கொண்டு புறப்பட்டாள்.பெற்றோர் அவளை தங்களுடன் வருமாறு வற்புறுத்தி அழைத்தபோது அவள் அதனை நிராகரித்து விட்டு தூரத்து உறவினர் ஒருவரது வீட்டில் தங்கிவிட்டாள். அவர்களது வீட்டிலும் அவள் நெடுநாள் நீடிக்கவில்லை. அவர்களுடன் இடம் பெயர்ந்து வந்த மற்றுமொரு குடும்பத்தினருடன் இணைந்து ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் ஒரு பகுதியை தனது இருப்பிடமாக்கிக கொண்டாள். அந்தச் சமயத்தில்தான் அவள் வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது சிறிது தடுமாறியவளுக்கு கடவுளின் அருளால் ஒரு உதவி கிடைத்தது*

*அவள் வாடகைக்கு குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர் வெளி நாட்டில் வசிப்பவர். அவளது கையறு நிலையைக் கண்டு அவள்மீது இரக்கம் கொண்டு தனது மகனின் பிறந்த தினத்தில் அவளுக்கு அன்பளிப்பாக ஒரு தையல் மெசினைக் கொடுத்தார். கடவுளின் கருணைக்கும் அவரது அன்பளிப்புக்கும் ஒரு சேர நன்றி பாராட்டி அவள் தனது புது வாழ்க்கையை ஆரம்பித்தாள்.*

*விசுவாசத்துடனும் நேர்மையுடனும் ஆரம்பித்த தையல் தொழில் அவளுக்கு கைகொடுத்தது. பல்கலைக் கழகத்தில் பயிலும் பெண்கள் மற்றும் ஊருக்குள் வசிப்பவர்களிடமிருந்தும் ஓடர்கள் வரத் தொடங்கின. நேர்த்தி யான அவளது தையலைப் பார்த்து பலர் அவளை நாடி வந்தனர். அதனால் அவளும் சந்திரனும் ஓரளவு வசதியாக வாழ முடிந்தது. காலச் சுழற்சியில் சந்திரன் ஏ.எல். வகுப்பு வரை கொக்குவில் இந்துக்கல்லூரியில் பயின்றான். அதற்குமேல் அவனால் கல்வியைத் தொடர முடியவில்லை. அடிக்கடி நோய் வாய்ப்படும் அம்மாவுக்கு ஊன்று கோலாயிருக்க வேண்டும் என அவனது மனம் ஏங்கியது. அவனது நிலையைப் புரிந்துகொண்ட வகுப்பாசிரியரான சரவணபவன் மாஸ்டர் மின்சார சபையில் ஒரு ஊழியனாகச் சேர்த்து விட்டார். மூன்று வருட சேவையின் பின் இப்போது அவனுக்கு சாவகச்சேரி மின் நிலையத்துக்கு மாற்றம் கிடைத்திருக்கிறது. ஒருவருக்கொருவர் பற்றுக் கோடாக வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மாவும் பிள்ளையும் பரமசிவம்*

மாஸ்டர் வீட்டில் குடியேறி விட்டார்கள்.

வாடகைக்கு வீட்டைக் கொடுத்த பின் பரமசிவம் அந்த வளவுற்குள் கால் வைப்பதில்லை. ஏதும் அலுவலாக பனை வளவிற்கு வந்தால் அத்தோடு திரும்பிவிடுவார். சிலவேளைகளில் பசுமாட்டை மேயக் கட்டுவதற்காக செல்லம் வருவதுண்டு. அப்படியான தருணங்களில் வீட்டுப் படலையில் நின்றே சிவகாமியிடம் விசாரித்துவிட்டு திரும்பி விடுவாள். எது எப்படியிருந்தாலும் மாதாமாதம் வாடகைப் பணத்தை சிவகாமி வீடுதேடி கொண்டுவந்து கொடுத்து விடுவது வழக்கமாகி விட்டது.

கிடைக்கும் வாடகைப் பணத்தை புகழ் தனது தபாற்சேமிப்புக் கணக்கில் போட்டு சேமிக்கத் தொடங்கியிருந்தாள். தையலையும் ஓரளவு கற்றுக் கொண்டுவிட்டதால் அவளுக்கு சொந்தமாக ஒரு மெசின் வாங்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டுவிட்டது. தனது விருப்பத்தை உடனே நிறைவேற்றித் தருமாறு நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள்.

பரமசிவத்தினால் எதுவும் செய்யமுடியாத நிலை. குயிலிக்கு செலவுகள் பெரிதாக இல்லாவிட்டாலும் அவ்வப்போது கைச்செலவுக்கு சிறு தொகை கொடுக்கவேண்டிருந்தது. மகிழும் இப்போது ஏ.எல். வகுப்பில் படிப்பதால் அவளுக்கு டியூசன் அத்தியாவசியமாகி விட்டது. அவருடைய சம்பளமும் பால் விற்கும் காசும் அவர்களது தேவைக்கு மட்டுமட்டாக இருக்கும்போது அவர் தையல்மெசின் வாங்க எங்கே போவது? தனது கையறு நிலையை எண்ணி மனம் கலங்கினார்.

வாசற்புறம் நாய் குரைக்கவே எட்டிப் பார்த்தார். சிவகாமி அங்கே நின்றிருந்தாள்.

“வாங்கோ தங்கச்சி! உள்ளுக்கு வாங்கோ.”

எனக்கூறி வரவேற்றவர் உள்ளே திரும்பி செல்லத்துக்கு குரல் கொடுத்தார். செல்லம் வந்ததும் அவளிடம் பணத்தை நீட்டிய சிவகாமி திரும்பிப் பார்த்தாள். அங்கே….. புகழ் முகத்தைத் தொங்கப்போட்டவாறு அமர்ந்திருந்தாள்.

“ஏன் மகள் சோகமாய் இருக்கிறா?”

சிவகாமி கேள்வி எழுப்பினாள்.

“அது ஒன்றுமில்லை பாருங்கோ அவ தையல் கிளாஸூக்கு போறவ. இப்ப நினைச்ச உடன மெசின் வாங்கித் தரட்டாம். கொஞசம் பொறுத்து வாங்கலா மெண்டு சொன்னம். அது அவவுக்கு பிடிக்கவில்லை.”

திறந்த மனதுடன் சிவகாமி சொன்னாள்.

“அட…. உதுக்கேன் யோசிக்கிறியள். வீட்டில என்னட்ட மெசின் சும்மாதான் கிடக்குது. நீங்கள் வேணுமெண்டால் எடுத்துக் கொண்டு வந்து வைச்சுப் பாவியுங்கோ. பாவனையில்லாமல் கறள் பிடிக்கப் போகுது.”

பரமசிவமும் செல்லமும் எப்படி மறுப்புத் தெரிவிப்பது என்று யோசிக்கும் போதே பளிச் சென வந்தது. புகழின் குரல்.

"மாமி ஒவ்வொரு நாளும் நான் பகலில் உங்கட வீட்டுக்கு வந்து தைக்கிறன்."

புகழின் செய்கையினால் பரமசிவமும் செல்லமும் அமைதியை இழந்திருந்தனர். செல்லம் தனது ஆற்றாமையை வார்த்தைகளாய் உதிர்த்தாள்.

ஒரு குமர்ப்பிள்ளை இன்னொருத்தர் வீட்டுக்கு போய் வருவது நல்லாயில்லை. அதுவும் அங்கை ஒரு வயசுப் பையனும் இருக்கிறான். தலையில் அடிக்காத குறையாக புலம்பிக் கொண்டிருந்தாள்.

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்லுறீர். அவள் தான் அடங்காப் பிடாரி ஆயிற்றே"

பதிலுக்கு பரமசிவம் பதகளித்தார்.

இவர்கள் இங்கே அங்கலாய்த்திருக்க .... அங்கே புகழ் சிவகாமியின் சமயலறையில் அவளுக்கு உதவியாக தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள்.

"புகழ்! உமக்கேன் உந்த வேலை, நீர் போய்த் தையும்"

"இல்லை மாமி, நான் உங்களுக்கு உதவி செய்து தந்திட்டு போறன். இன்னொரு விசயம் நான் சொல்ல மறந்திட்டன். இங்கை இருக்கிற சனங்களுக்கு தைக்கவே தெரியாது. நான் ஓடர் எடுத்தக்கொண்டு வந்தால் நீங்கள் வெட்டித் தருவீங்களே, நான் தைப்பன்."

"ஓ... அதுக்கென்ன, நானும் பொழுது போகாம சும்மாதானே இருக்கிறன்.

இப்படியாக அவர்கள் இருவருக்குள்ளும் பரஸ்பர கருத்து ஒற்றுமை உருவாகி, அது மெது மெதுவாக வளர்ந்து கொண்டிருந்தது. சந்திரன் பகல் பொழுதுகளில் வேலைக்குப் போய்விடுவதால் அவர்களது நெருக்கத்துக்கு எவ்வித இடையூறும் இருக்கவில்லை.

நாட்கள் நகர்ந்தன. புகழின் சேமிப்பும் சிறிது சிறிதாக உயர ஆரம்பித்தது. அவளுடைய மனத்தில் நிறையப் பணம் சேகரிக்க வேண்டும் என்ற ஆசை முளைவிட , அவள் மென்மேலும் வாடிக்கையாளர்களைத் தேட முற்பட்டாள். ஏதோ அவள் வந்து போவதால் சிவகாமிக்கும் தனிமை கலைந்து பொழுது பயனுள்ளதாகப் போய்க்கொண்டிருந்தது.

அன்று மாலை, சிவகாமி விட்டிலிருந்து திரும்பிய புகழ் செல்லத்திடம் வந்து முறையிட்டாள்.

"அம்மா! இடுப்பு முதுகெல்லாம் வலிக்குது"

ஈனக்குரலில் மகள் சொன்ன வார்த்தைகள் பெற்றவளின் உள்ளத்தை

உலுப்பியது.

ஓடி வந்து மகளை அரவணைத்தவள் புலம்பினாள்

"என்ன குஞ்சு புகழ்! அம்மா சொல்லுறதைக் கொஞ்சம் கேளம்மா. நான் உன்னைத் தைக்க வேண்டாம் எண்டு சொல்லயில்லை. வேலையைக் கொஞ்சம் குறை. நல்லாய் ஓய்வெடு"

அவள் சொல்லி வாய் மூடு முன் புகழ் எரிந்து விழுந்தாள்.

"இனித்துவங்கீட்டியளே உங்கட புராணத்தை. நான் உழைச்சு நாலு காசு சேர்க்கிறது உங்களுக்குப் பிடிக்காதே".

"ஐயோ கடவுளே! நான் ஏன் பிள்ளை உன்னைத் தடுக்கப் போறன். உன்ரை உடம்பையும் கொஞ்சம் கவனி எண்டுதான் சொல்லுறன்."

சொன்னவள் ஓடோடிப்போய் வேர்க்கொம்பு தட்டிப் போட்டு சுடச்சுட கோப்பியை ஊற்றி வந்து மகளிடம் கொடுத்தாள்.

"முதல்ல இதைக்குடி பிள்ளை. உடம்பில இருக்கிற நோவெல்லாம் பறந்துபோயிடும்"

அம்மா நீட்டிய கோப்பியை வாங்கி மெதுமெதுவாகப் பருகினாள் புகழ். உண்மையிலேயே ஆவி நாசித்துவாரத்தினுள்ளாக மண்டைக்குள் ஊடுருவ உடலின் அலுப்பு சற்று குறைவதாகத் தென்பட்டது. குடித்து முடித்ததும் புகழ் போய் பாயை விரித்து படுத்து விட்டாள்.

"பாவம் பிள்ளை!"

செல்லத்தின் மனம் துடித்தது.

"புகழுக்கென்று நாங்கள் ஒரு தையல் மெசினை வாங்கிக் குடுத்திட்ட மெண்டால்... அவள் நினைச்ச நேரம் தைச்சுக் கொள்ளுவள். இனியொருத்தர் வீட்டை போறதால... அவள் ஓய்வில்லாமல் ஒரேயடியாய் இருந்து தைக்க வேண்டியிருக்குது.இண்டைக்கு இவர் வேலையால வரட்டுக்கும். ஒருக்கா இதைப் பற்றிக் கதைக்க வேணும்."

மனதுக்குள் நினைத்துக் கொண்டவளாய் மாட்டுக்கு வைக்கோல் இழுத்துப் போட போனாள்.

உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் செல்லம் கணவரிடம் தனது கருத்தை வெளியிட்டாள். பரமசிவம் துள்ளியெழுந்தார்.

"இப்ப ..... என்னை என்ன செய்யச் சொல்லுறீர். என்னட்ட என்ன வழி இருக்கு. மகிழுக்கு வெள்ளிக்கிழமை டியூசன்காசு கட்ட வேணும். அதுக்கிடையில சம்பளமும் கைக்கு வந்து சேராது. என்ன செய்யலாம் என்று மண்டையைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்கிறன்."

கணவனது நியாயமான கூற்று செல்லத்துக்கு நன்கு புரிந்தது. அவருக்கு ஒத்தடமாக ஒரு பதிலையும் அவளே சொன்னாள்.

“இஞ்சாருங்கோப்பா! குயிலிக்கு இந்த மாதம் புலமைபரிசில் காசு வரும். அவள் தருவள்தானே சமாளிச்சுப் போடலம்”.

“ஓ... நீர் சொல்லுறதும் சரிதான். அவளிட்டை கிடந்தால் அது எங்கட கையில இருக்கிற மாதிரித்தானே!”

பெற்றோர் இருவரதும் மனங்களையும் பெருமை கவ்விக்கொண்டது.

பொழுது கருகிக் கொண்டிருந்த வேளையில்த்தான் மகிழ் டியூசன் வகுப்பு முடித்து வீட்டுக்கு வந்தாள். கால் முகம் கழுவிவிட்டு வந்தவளுக்கு செல்லம் சுடச்சுட பால் தேநீரை ஊற்றி வந்து கொடுத்தாள். வாசற்படியில் அமர்ந்திருந்து தேநீரைச் சுவைத்துக் கொண்டிருந்த மகிழ் திடீரென வாசலைப் பார்த்து கூக்குரலிட்டாள்.

“அ...க்...கா”

***

மகிழின் கூக்குரல் கேட்டு பரமசிவம் வெளியே வந்தார். வந்தவர் மகளைக் கண்ட உணர்ச்சிவசத்தில் மனைவியைஅழைத்தார்.

“இஞ்சாரும்! நாங்கள் பிள்ளையைப் பற்றி கதைச்சு வாய் மூடேல்ல அதுக்கிடையில பிள்ளையே வந்து முன்னால நிற்கிறாள்”.

செல்லமும் வந்து அவர்களுடன் கலந்து கொண்டாள்.

செல்லத்தை கண்டதும் குயிலிக்கு தூக்கிவாரிப் போட்டது “ஏனெண அம்மா! ஒழுங்காய் சாப்பிடுறேல்லையே. இவள் மகிழும் புகழும் என்ன செய்யிறவை. அம்மா இவ்வளவு இளைச்சுப் போய் இருக்கிறா. அப்பா! நீங்களும் அம்மாவைக் கவனிக்கிறதில்லையே?”

பொரிந்து தள்ளினாள் குயிலி. அனைத்து வேலைகளும் அவளது தலைமீதுதான் பொறிந்து போயிருந்தன. புகழ் தையலோடும் மகிழ் படிப்போடும் பொழுதைக்கழிக்க செல்லம் சமையலுடன் மாட்டடி வேலைகளையும் கவனிக்க வேண்டியிருந்தது.

பரமசிவம் மேலோட்டமாக மாட்டடி வேலைகளைக் கவனிப்ப துடன் பால் கறப்பது கொடுப்பதுமட்டும்தான் அவருடைய பொறுப்பா யிருந்தது.

குயிலியின் கேள்வி பரமசிவத்தின் இதயத்தைத் துளைத்தது. “நான் அவளுக்கென்று சத்தான கறி வகைகளை சோற்றுக்குள் மறைத்து வைத்து விட்டுத்தானே எழும்புறநான். அவள் அதைச் சாப்பிடுறதில்லையோ....”

மனதுக்குள் நினைத்தவராய் பிடரியைச் சொறிந்தார். அவர் சாப்பிட்ட உணவுத்தட்டில்தான் செல்லம் சாப்பிடுவது வழக்கம். பரம சிவத்தின் ஓரக்கண் பார்வை செல்லத்தின் மீது விழுந்தது.அவள் தலையைத் தாழ்த்தியவாறு உள்ளே போனாள்.

மகிழ் குயிலியை இழுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள். அவள் அக்காவிடம் கேட்க விழைந்த கேள்விக்கு குயிலியே பதிலிறுத்தாள். நாளைக்கு போயா லீவு. வெள்ளிக்கிழமை மட்டும்தான் வேலை நாள். அங்கால சனி ஞாயிறு திங்கட்கிழமையும் பொதுவிடுமுறை. அதனால எங்களுக்கு “லோங் வீக் என்ட்“ விட்டவை. அதுதான் வந்தநான்.

மகிழ் அக்காவிடம் மன்னிப்புக் கேட்டாள்.

ஸாரி அக்கா! எனக்கும் எக்ஸாம் கிட்டிட்டுது. நான் படிப்போட மினக்கட்டத்தில அம்மாவைக் கவனிக்காம விட்டிட்டன். இனிமேல் பார்த்துக் கொள்ளுறன்.

“அதுசரி. புகழ் என்ன செய்கிறாள்?”

“சின்னக்காவும் தையலும் தான். அக்கா அவ நல்லாய் தைக்கிறா”

“உண்மையிலேயே எனக்கு சந்தோசமாயிருக்குதடி”

குயிலி சொல்ல கதவுக்கு வெளியே ஒட்டுக்கேட்டு நின்றிருந்த புகழின் வாய் முணுமுணுத்தது

“மகாராணி வந்திட்டா. இனி அவவைத்தான் எல்லாருமாய்த் தூக்கி தலையில வைப்பம்.“

குயிலி உடை மாற்றிக் கொண்டு கிணற்றடிப் பக்கம் போனவள் முகத்தை அலம்பிக் கொண்டு வந்தாள். சமையலறைக்குள் செல்லம் தயாரித்து வைத்திருந்த தேநீர் அவளுக்காக காத்திருந்தது. வந்து தேநீரை எடுத்து முகர்ந்தவாறே கூறினாள்.

“சா! எங்கை போய்த் தேடினாலும் எங்கட வீட்டு பால் தேத்தண்ணிக்கு நிகர் கிடையாது”.

சொல்லிக் கொண்டே தேநீரை உறிஞ்சிப் பருகினாள். பார்த்துக் கொண்டிருந்த செல்லத்துக்கு சிறிது மனத்தாக்கம் ஏற்பட்டது.

“ஏன் ஆசையம்மா வீட்டுத் தேத்தண்ணிக்கு என்ன குறை?”

“குறை ஒண்டுமில்லையம்மா. அது பால்மாவில போடுற தேத்தண்ணி. இது உடன் கறந்த பாலில போடுறது. பால் வாசனை மூக்கைத் துளைக்கும்.”

“தேநீர் பருகிக் கொண்டிருந்தவளிடம் செல்லம் ஒருதுண்டு ரொட்டியை நீட்டினாள். பிள்ளை! இது காலமை சுட்ட குரக்கன் ரொட்டி. மிஞ்சினதைச் சுத்தி இந்தத் தட்டில தான் வைச்சிருந்தநான். ஒருத்தரும் தேடயில்ல”

“நீங்கள் வயிறு நிறைய சாப்பாடு போட்டால் அவை ஏன் தேடப்போகினம்.”

கலகலவென்று சிரித்தவாறே ரொட்டியைக் கடித்தாள். சடுதியாக ஒரு ஞாபகம் வந்து அவளை உறுத்தியது.

“அம்மா! நான் ஒரு விசயம் சொல்ல மறந்திட்டன். மகாபொல பணம் போன கிழமையே வந்திட்டுது. அதையும் குடுத்திட்டுப் போகலாமென்று நினைச்சுத்தான் வெளிக்கிட்டநான்.”

“அது கிடக்கட்டுமடி பிள்ளை. இவள் புகழ் தையலைக் காரணங் காட்டி அடிக்கடி அந்த சிவகாமி வீட்டுக்கு போயிடுறாள். ஒரு பெடியன் இருக்கிற வீட்டுக்கு போய் வாறது அவ்வளவு நல்லாயில்லை எண்டு நானும் தான் எடுத்துச் சொல்லுறன். அவள் கேக்கிறாளில்லை. அவளின்ரை குணம்தான் உனக்கு வடிவாய்த் தெரியுமே.”

வாய் ஓயாமல் கதைத்தவள் சிறிது நிறுத்திவிட்டு மீண்டும் ஆரம்பித்தாள்.

“நான் யோசிக்கிறன். அவளுக்கு ஒரு மெசினை வாங்கிக் குடுத்துவிட்டால் அவள் அடங்கி வீட்டில இருப்பாள்தானே.”

“அதுக்கு அப்பா என்ன சொல்லுறார்?”

“கொப்பர் என்னத்தைச் சொல்லுறது. பணமுடையைக் காரணம் காட்டி கதைக்கிறார். நான் இஞ்சை முள்ளுக்கு மேல நிண்டு தவிக்கிறன்.”

சிறிது நேரம் யோசித்துவிட்டு குயிலி சொன்னாள்.

“சரி. அப்பாவோடை கதைச்சுப் பாப்பம்”

சொன்னவள் ஏதோ நினைத்தவளாய் மீண்டும் அம்மாவிடம் திரும்பினாள்.

“ஏனம்மா புதுவீட்டு வாடகைக்காசு புகழிட்டைத்தானே இருக்குது. அதில எடுத்து வாங்கலாமே”

“எக்கணம் நீ கேட்ட உடன அவள் எடுத்துத் தந்திடப்போறாள் நாடியை தோள்பட்டையில் இடித்தவாறே செல்லம் சொன்னாள்.”

“அது மட்டுமில்ல. அவள் இப்ப ஆக்களுக்கு தைச்சுக் குடுக்கிறவள். அந்தக் காசுகளையும் சேர்த்து வைச்சிருக்கிறாள். ஆனால் .......... எங்களுக்கு மறந்து போயும் ஒரு சதம் கண்ணில காட்ட மாட்டாள்.”

இரகசியமாக தணிந்த குரலில் குயிலியின் காதருகில் வந்து சொன்ன அம்மாவைப் பார்க்க அவளுக்கு சிரிப்பாக வந்தது

***

குயிலிக்கு எப்பொழுதுமே வீட்டிற்கு வந்துவிட்டால் ரகுஅத்தானின் நினைப்பு வந்து அவளை அலைக் கழிப்பது வழக்கம். அந்தளவுக்கு அவனது செய்கைகளை நினைவுக் கோவையாக அவள் தொகுத்து வைத்திருக்கிறாள். வாசற்புற படலையைப் பார்த்தாலே இளம் வயதில் அவனோடு நின்று வாக்குவாதப்பட்ட சம்பவங்களே நினைவுக்கு வரும். இன்று குயிலியின் மனத்தில் புதிதாக ஒருஎண்ணம் உதித்தது.அவள் பல்கலைக்கழகத்திற்கு

படிக்கப்போன இந்த மூன்று வருடங்களில் ஒருநாள் கூட கமலம் மாமி வீட்டுப் பக்கம் எட்டிப்பார்க்கவில்லை. ஒருதரம் போய் வரலாம் என மனம் உந்தியது. உடனே அம்மாவிடம் போய் அனுமதி கேட்டாள்.

"என்ன இருந்தாலும் நீஒரு குமர்ப்பிள்ளை. தனியப்போறது சரியில்லை. பின்னேரம் நானும் வாறன். இரண்டு பேருமாய்ப் போயிட்டு வருவம்"

அம்மாவின் கூற்று சரியானதே என குயிலியின் மனதுக்குப்பட்டது, மாமி வீட்டுக்கு வெறுங்கையோடு போகக்கூடாதே. ஏதாவது செய்து கொண்டு போகலாமே என எண்ணியவளுக்கு செல்லத்தின் குரல் பூட்டு போட்டு விட்டது

"எங்கட கிணத்தடியில் இருந்த இதரை வாழை இடைப்பழம் பழுத்துக்கிடந்தது. அதை வெட்டி புகைக்கூட்டுக்குக் கீழே வைச்சநான். பழுத்திருக்கும். அதில ஒருசீப்பை வெட்டிக் கொண்டு போவம்".

"ஏனம்மா இப்ப வாழைக்குலை விற்கிறதில்லையோ?"

"விற்கிறநாங்கள் தான். இது சின்னக்குலை. இந்த வெய்யிலுக்கு பிள்ளையளும் சாப்பிடட்டும் என்று நினைச்சம்"

செல்லமும் குயிலியும் அன்று மாலை நேரத்தோடு கமலம் வீட்டுக்கு கிளம்பிவிட்டனர். போய்விட்டு வந்தபின் இருவருமாக இணைந்து வீட்டு வேலைகளைச் செய்யலாம் என பேசிக் கொண்டனர்.

கமலம் வீட்டுவாசலடி ஒழுங்கையில் எங்கிருந்தோ காற்றுக்கு அள்ளுப்பட்டு வந்தஒரு இக்கிரிக் கற்றை குவியலாய்க் கிடந்தது குனிந்து அதை எடுத்த குயிலி சற்று அப்பால் தள்ளிப் போய் ஒருஓதுக்குப் புறத்தில் போட்டு விட்டு வந்தாள். இதனை அவதானித்த செல்லம் மகளைக் கண்டித்தாள்.

"ஏன் பிள்ளை உனக்கு உந்த வேலை"

நான் வாழப் போற வீடம்மா குப்பை இருக்கலாமா? குயிலி வாய் திறக்கவில்லை. மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

இருவரும் வீட்டு வாசலுக்குள் நுழைந்தனர். நல்ல வேளையாக நாய் அவர்களைக் காணவில்லை. கட்டில் கிடந்தவாறு தூங்கிவழிந்து கொண்டிருந்தது, இருவரும் முன் போட்டிக்கோவுக்குள் நுழைந்தனர். குயிலி மெதுவாக "மாமி!" என குரல் கொடுத்தாள்.

குரல் கேட்டு வெளியே வந்த கமலம் செல்லத்தைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் "அத்தாச்சி! எவ்வளவு காலம் நீ இந்தப்பக்கம்" வந்து என்று வரவேற்றாள். குயிலியைத் திரும்பிப் பார்த்தவள் நீ யாழ்ப் பாணத்திலை யிருந்து எப்ப பிள்ளை வந்தநீ என விசாரித்தாள். பதிலேதும் சொல்ல மறந்தவளாய் குயிலி போர்ட்டிக்கோவில் நிறுத்தி வைக்கப்

*பட்டிருந்த புத்தம்புது மோட்டார் சைக்கிளின்மீது வைத்த கண் பார்வையை மீட்க முடியாமல் லயித்திருந்ததைக் கண்டதும் கமலம் பெருமையுடன் பீத்தத் தொடங்கினாள்.*

*"அதுவந்து ... ரகுவுக்கெண்டு தேப்பன் வாங்கி வைச்சிருக்கிறார். உவர் எங்கட மாப்பிள்ளைதான் இவள் தேவகியின்ரை புருசன் தான், வாங்கிக் கொடுத்ததுபின்னை இவருக்கென்ன தெரியும் உதுகளைப்பற்றி"*

*"வடிவாய் இருக்குது மாமி"*

*குயிலி மனம் திறந்து சொன்னாள். கமலம் மீண்டும் அளக்கத் தொடங்கினாள்.*

*"ரகு இப்ப சோதினையும் பாஸ் பண்ணி பெரிய எஞ்சினியராய் எல்லே வேலை பார்க்கிறான். பார்க்கிற வேலைக்குத் தக்கன மதிப்பாய் அவன் ஒடித்திரிஞ்சாத்தானே ஊருக்க சங்கையாய் இருக்கும்".*

*தணிந்த குரலில் கூறிய கமலத்தின் முகத்தில் பெருமையின் பிரதிபலிப்பு மின்னியது. செல்லத்திடம் திரும்பினாள்.*

*"என்னெண அத்தாச்சி பறையாமல் இருக்கிறாய்?"*

*"நான் என்னத்த மச்சாள் சொல்லுறது. எனக்கு உதைப்பற்றி என்ன தெரியும்"*

*"பாத்தியே நான் ஒருத்தி. வீட்டுக்கு வந்தவையை உள்ளுக்கு கூட்டிக் கொண்டு போகாம வாசலிலையே வைச்சு கதைச்சுக் கொண்டிருக்கிறன்."*

*மூவரும் உள்ளே போயினர்*

*ஹாலுக்குள் புது சோபா செற் எல்லாம் போட்டு கச்சிதமாயிருந்தது. தேவகி மச்சாள் தான் எல்லாத்தையும் ஒழுங்காக்கி வைச்சிருக்க வேணும் மனதில் தோன்றியதும் குயிலி கேட்டே விட்டாள்.*

*"மாமி! தேவகி மச்சாள் வந்தவவோ?"*

*"ஓமடி பிள்ளை அவளும் மனுசனும் வந்துதான் கட்டில்கள் அலுமாரி கதிரைகள் எண்டு வாங்கிப் போட்டு விட்டுப் போகினம். என்ன இருந்தாலும் ஒருஎஞ்சினியரின்ரைவீடு முந்திமாதிரி குப்பையாய் இருக்கக் கூடாதெல்லே"*

*"உப்பிடி இருங்கோ" என்று சோபாவைக் காட்டிவிட்டு கமலம் போய் நிலத்தில் இருந்து சுவரில் சாய்ந்து கொண்டாள்."*

*"எனக்கு காலைநீட்டி முதுகைச்சாய்ச்சு இருந்தாத்தான் பத்தியப் படும்" சொன்னவளுக்கு அருகிலேயே போய் தாயும் மகளும் அமர்ந்து கொண்டனர். கமலம் தனது மகன்தான் அந்த ஊருக்குள்ளேயே பெரிய உத்தி யோகத்தன் என நினைத்து இறுமாப்போடு கதை அளந்து கொண்டிருந்தாள். அவளது அறியாமையை எண்ணி குயிலி மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.*

*திடீரென எதையோ நினைத்துக் கொண்டவளாய் கமலம் குயிலியை*

அழைத்தாள்.

"பிள்ளை! குசினி றாக்கையில சோடாப்போத்தல் அடுக்கி விட்டிருக்கு. அதிலை ஒண்டை எடுத்து உடைச்சு பேணியில வார்த்துக் கொண்டந்து கொம்மாவுக்கும் குடு. நீயும் குடி."

அவசரமாக செல்லம் மறுப்புத் தெரிவித்தாள்.

"ஐயோ! எங்களுக்கு உதொண்டும் வேண்டாமென மச்சாள். இப்பதான் சாப்பிட்டிட்டு வந்த நாங்கள். இனிப்போய் பால் கறந்து தேத்தண்ணி போடவேணும்"

இருவரும் விடைபெற்று வீட்டுக்குக் கிளம்பினர் கமலம் வாசல் வரை வந்து வழியனுப்பி வைக்கையில் ஒருகுண்டையும் போட்டுவிட்டாள்.

"உனக்குச் சொன்னாலென்ன அத்தாச்சி. இவன் தம்பிக்கு இப்பவே நாலு பக்கத்தாலும் கலியாணம் பேசி வருகினம். இப்பத்தானே வேலை யாகினவன். அதுக்கிடையில் என்ன அவசரம் எண்டு பாக்கிறம்".

குயிலியின் மனத்துக்குள் ஒருஇடிகுண்டு வெடித்துச் சிதறியதை எவரும் அறிந்திலர்.

***

வீட்டின் பின்புறத்து தாழ்வாரத்தில் அரிவாள்மனையில் அமர்ந் திருந்த பரமசிவம் நுங்குக் கோம்பைகளை அரிந்து கொண்டிருந்தார். அங்கு வருகை தந்த செல்லம் கேள்விக்கணை தொடுத்தாள்.

"எங்காலையாக்கும் உந்த நுங்குக் கோம்பைகள்?"

நிமிர்ந்து மனைவியை ஒரு தரம் ஏறெடுத்துப் பார்த்துவிட்டு பரமசிவம் சொன்னார்.

"எல்லாம் எங்கட பனை வளவுக்கை கிடந்ததுதான். ஒருத்தரும் அந்தப்பக்கம் போறதுமில்லை. பாக்கிறதுமில்லை"

கணவன் குறைபட்டுக் கொண்டது செல்லத்துக்கு உறுத்தலா யிருந்தது.

"ஆர் சொன்னது போறதில்லை என்று நேற்றைக்கும் நானும் மகிழும் போய் விறகு எடுத்து வந்தநாங்கள் தானே"

"அப்ப..... இந்தக் கோம்பையள் விழுந்திருந்தது உங்கட கண்ணுக்குத் தெரியேல்லையே"

"பொழுது மம்மலுக்கதான் போன நாங்கள் சத்தியமாய் எங்கட கண்ணுக்குத் தென்படயில்லை"

"சரி விடும் இப்ப என்னத்துக்கு என்னைத் தேடி வந்தநீர். ஏதும் அலுவல் இல்லாமல் வரமாட்டீரே"

“இந்த மனுசனுக்கு எப்பவும் கிண்டல் தான்”

அலுத்துக் கொண்டாள் செல்லம்

“இல்லையப்பா உங்கட தங்கச்சி இப்ப முந்தின ஆள் இல்லை”

“ஏன் எதை வைச்சுச் சொல்லுறீர்?”

அவசரப்பட்டார் பரமசிவம்

“மகன் பெரிய என்ஜினியர் ஆகீட்டான் எண்ட பெருமைதான் வார்த்தைக்கு வார்த்தை வெளிவருகுது”

“அது உண்மைதானே செல்லம் அது பெருமைப்பட வேண்டிய விசயம் தானே”

ஒருவித ஏளனத்துடன் செல்லம் வார்த்தையை வீசினாள்.

“எக்கணம் வாறவருசம் எங்கட குயிலி ஒரு பி.ஏ.பட்டதாரி ஆகிடுவள் அப்ப என்ன... அவளைத்தலையில தூக்கிவைச்சுக் கொண்டு ஆடப்போறியளோ?

கெக்கட்டம் விட்டுச்சிரித்தார் பரமசிவம் செல்லத்துக்கு தலையில் யாரோ குட்டி விட்டாற்போலிருந்தது.

“ரகுவுக்கு இப்பவே நாலாபக்கத்திலையுமிருந்து பெண் கொடுக்க முந்தியடிக்கினமாம். தெரியாமத்தான் கேக்கிறன். பெடியனுக்கு என்ன ஒரு இருபத்தி அஞ்சு வயசு வருமே? உது நம்பக்கூடிய கதையே?”

பரமசிவத்துக்கு ஒரு விசயம் தெட்டத் தெளிவாகப் புரிந்துவிட்டது. அப்பாவியான செல்லத்தை சீண்டுமளவிற்கு கமலம் வார்த்தைகளை விட்டிருக்கிறாள். வார்த்தைகளால் செல்லத்தை அரவணைத்தார்.

“இஞ்சாரும் செல்லம்! நீர் ஒன்றுக்கும் யோசிக்க மூளையைக் குழப்பாதையும் எல்லாத்துக்கும் நான் இருக்கிறன். இது என்ரை பிள்ளை குயிலியுடைய வாழ்க்கை நான் லேசில விட்டுவிடுவனே”

“எனக்கென்னவோ அவவின்ரை போக்கு சரியில்லை.”

விசனத்துடன் சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டாள். மொத்தத்தில் தாய் தந்தை மகள் மூவரதும் மன நிலையில் சிறு பாதிப்பு ஏற்பட்டு விட்டது என்பதுதான் தெட்டத் தெளிவான உண்மை நிலை.

மாமி வீட்டிலிருந்து திரும்பிய பின் குயிலியினால் நிதானமாக இருக்க முடியவில்லை. எந்நேரமும் மனதுள் ஒரே குறுகுறுப்பு. எத்தனையோ தடவைகள் முயன்ற போதிலும் அவளால் தன்னைத் தானே தேற்ற முடியவில்லை. நம்பிக்கைதான் அவளது உள்ளத்தை சோரவிடாமல் சகஜ நிலையில் வைத்து பேணிக் கொண்டிருந்தது.

நடைப்பிணமாக உலவிவிட்டு குயிலி இரவு படுக்கைக்குப் போனாள். தளம்பும் மனதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளையும் மீறி

கண்கள் நீரைச் சொரியத் தொடங்கின. குயிலி தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். "நான் ஏன் இப்போது அழுகின்றேன்". அவளால் அதற்கு விடை தேட முடியவில்லை. இருந்தாலும் சிறிது நேரத்தில் மன இறுக்கம் சற்றுக் குறைந்ததை அவளால் உணர முடிந்தது. கண்ணீர் வெளியேறியதால் சோர்வடைந்த உடல் களைப்பு ஏற்படவே கண்ணயர்ந்து போனாள்.

மோட்டார் சைக்கிளில் கம்பீரமாக அமர்ந்திருக்கிறது ஓர் உருவம். அது வேறு யாருமல்ல. சாட்சாத் ரகு. அத்தானே தான். சைக்கிளைக் கிளப்பி வந்து அவளருகில் நிற்கிறான்.

"குயிலி ஏறும். ஏறி என்னுடைய தோளை வடிவாய் பிடிச்சுக் கொள்ளும்."

மறுபேச்சின்றி குயிலியும் தொற்றி ஒரு பக்க வாட்டாக அமர்ந்து கொள்கிறாள். ஒரு குலுக்கலுடன் சைக்கிளை இயக்குகிறான் ரகு, நிலை தடுமாறியவளாய் குயிலி அவனது தோளை இறுகப் பற்றிக் கொள்கிறாள். சைக்கிள் தெருவில் போவதாக அவளுக்குத் தெரியவில்லை. மாறாக காற்றில் பறப்பதாகவே உணருகிறாள். இன்பக் கிளுகிளுப்பில் அவளது உள்ளம் மிதக்கிறது. ரகுவும் வேணுமென்றே சைக்கிள் ஹாண்டிலைத் திருப்பியும் வளைத்தும் பல குறும்புகளைச் செய்கின்றான். அவனது குறும்புகளுக்கு இசைவாக குயிலியும் வளைந்து நெளிந்து இசைவாக்கத்துடன் செயற் படுகிறாள்.

திடீரென ரகு வேகத்தை மிதப்படுத்துகிறான். குயிலி அவனைச் செல்லமாக கண்டிக்கிறாள்.

அத்தான் மெதுவாய் போங்கோ பேந்து விபரீதமாய் ஏதும் நடந்துவிட்டால் ரெண்டு பேருமே மேலோகத்திலதான் இருப்பம்.

அவள் சொல்லி வாய் மூடமுன் வேகமாக வந்த டிப்பர் வாகன மொன்று அவர்களை மோதித் தளுளுகிறது.

"ஐயோ அம்மா"

நட்ட நடு நிசியில் நான்கு சுவர்களுள் மோதி எதிரொலித்த குயிலியின் அவலக் குரல் அந்த வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கி கிடந்த அனைவரையும் அசுர வேகத்தில் ஓடி வந்து அவளைச் சூழ வைத்தது. பதற்றத்துடன் தன்னை அழைத்துக் கொண்டிருந்தவர்களை அவளால் பேந்தப்பேந்த விழித்துப் பார்க்கத்தான் முடிந்தது. வாயில் வார்த்தைகள் வர மறுத்து விட்டது.

செல்லம் செம்பிலிருந்த தண்ணீரை கையில் வார்த்து அவளது முகத்துக்கு தெளித்தாள். மகிழ் "அக்கா! அக்கா!!" என வாய் பிதற்றிக் கொண்டிருக்க புகழ் மட்டும் சற்று எட்டத்தில் நின்று முறைத்துப் பார்த்தவாறு நின்றாள். பரம சிவத்தின் கையில் விபூதிக் குடுவை, சிவ தீட்சை பெற்றிருந்த அவர் சிவ மந்திரத்தை மனதுக்குள் சொல்லிக் கொண்டே

மகளின் நெற்றியில் விபூதியைப் பூசி விட்டார்.

இப்போது சுய நினைவுக்கு வந்துவிட்ட குயிலிக்கு அனைவரையும் பார்க்க வெட்கமாய் போய்விட்டது.

"ஏதோ கெட்ட கனவு கண்டிட்டன் போல"

வெட்கத்துடன் கூறி விட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

புகழ் வாய்க்குள் எதையோ புறுபுறப்பது அந்த நிசப்தத்தை கலைத்தவாறு அங்குள்ளவர்களது காதுகளில் விழுந்தது.

"எல்லாருடைய நித்திரையையும் குழப்பிக் கொண்டு கண்டறியாத கனவு."

அனைவரும் அறையை விட்டு வெளியேற குயிலி மீண்டும் படுத்துக் கொண்டாள். அருகில் வந்து படுத்த மகிழ் அக்காவைத் துழாவினாள்.

"அக்கா அப்பிடி என்ன பயங்கரக் கனவு கண்டீங்கள்"

"அதெல்லாம் இப்ப இரவில சொல்லக் கூடாது, பகலில சொல்லுறன். இப்ப நீ படுத்து நித்திரையைக் கொள்ளு"

அக்காவின் பேச்சுக்கு மறுப்பு சொல்லியறியாத மகிழ் பேசாமல் படுத்தக் கொண்டாள். குயிலியினால் அயர்ந்து தூங்கி விட முடியுமா என்ன?... அவளையறியாமலே மீண்டும் அந்தக் கனவை அசை போடத் தொடங்கினாள்.

அன்றைய தினம் கமலம் மாமியின் வீட்டில் பார்த்த மோட்டார் சைக்கிள் அவளது ஆழ் மனதில் ஏற்படுத்திய கிளர்ச்சியின் பயனாக ஏற்பட்ட நுண்ணிய உணர்வலைகளின் பிரதிபலிப்பே அவளுக்கு கனவாக உருவெடுத்து உள்ளத்தைச் சீண்டியிருக்கிறது.

அவளது மனம் எண்ணிக் கொண்ட அதே சமயம் கமலம் கூறிய சில வார்த்தைகளும் அவளை அடிக்கடி சீண்டி அலைக் கழித்துக் கொண்டிருந்தது.

***

ஒருவாறு விடுமுறை கழிந்து குயிலியும் புறப்பட்டுப் போய் விட்டாள். புகழின் பாவனைக்கு அவள் ஒரு தையல் மெசினை வாங்கிக் கொடுத்து விட்டுப் போயிருந்தது செல்லத்தின் மனதிற்கு நிம்மதியையும் நிறைவையும் தந்தது. முதலில் ஒரு பழைய மெசினைத்தான் அரை விலைக்கு வாங்குவதாக இருந்தார்கள். புகழ் அதற்கு இடம் கொடுக்கவில்லை. அதே சமயம் தனது சேமிப்பிலிருந்து ஒரு சதத்தையும் ஈய்வதற்கும் அவள் தயாராகவில்லை. எனவே முதலில் ஒரு தொகையை மட்டும் கட்டிவிட்டு மீதியை மாதாமாதம் கட்டுவதாக ஒழுங்கு செய்து புத்தம் புது மெசினையும் எடுத்துக் கொடுத்தாகி விட்டது. இனி மாதா மாதம் குறித்த தவணையில் பணத்தைக்

கட்டுவதற்கு அதற்குரிய தொகையை சேமிக்க வேண்டிய அவசியம் செல்லத்திற்கு இப்போது ஏற்பட்டிருக்கும் புதுத் தலைவலியாகிவிட்டது.

"ம்! ... பார்க்கலாம்" தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

அதே சமயம் மகிழுக்கு ஏ.எல் பரீட்சை நெருங்கி விட்டதால் டியூசன் வகுப்பிற்குப் போகவேண்டிய அவசியம் இருக்கவில்லை. எனவே மிஞ்சப்போகும் அந்தப் பணத்தையும் சேர்த்துச் சமாளிக்கலாம் என மனதைத் தேற்றிக் கொண்டாள். , செல்லம். இப்படியாக பலவித சிந்தனைகளிலும் தன்னை மறந்து இருந்தவளை புகழின் குரல் சகஜ நிலைக்குக் கொண்டு வந்தது.

"அம்மா! நான் சிவகாமி மாமி வீட்டிற்குப் போறன்".

செல்லத்துக்கு தலையில் குட்டிவிட்டாற்போல் கோபம் வந்து விட்டது. , மளமளவென்று பொரியத் தொடங்கினாள்.

"இப்ப என்னத்துக்கு அங்கை எண்டு கேக்கிறன்".

"யாரோ சட்டை தைக்கத் தந்தவை .அவவைக் கொண்டுதான் வெட்ட வேணும். அதுக்குத்தான் போறன்".

"ஏன்? நீ இவ்வளவு காலமும் தைக்கிறாய். உனக்கு வெட்டத் தெரியாதே?"

இப்போது புகழ் மிஞ்சினாள்.

"அம்மா தொட்டதுக்கெல்லாம் கேள்வி கேட்காமல் பேசாமல் இருங்கோ. நான் போட்டு வாறன்".

படலை அடிபடும் சத்தம் கேட்டது. அவள் போய்விட்டாள். உள்ளம் கொதித்து பதகளித்து நின்றாள் செல்லம். ஆத்திரம் மேலிட்டதால் நெஞ்சு படபடத்தது. அப்படியே படிக்கட்டில் இருந்து விட்டாள்.

சற்றே நேரத்தில் போன புகழ் புறுபுறுத்தவாறு திரும்பி வந்தாள்.

"என்னடி போனதும் வந்ததுமாய் வந்திட்டாய்?"

பதிலேதும் சொல்லாமல் அம்மாவைத் திரும்பிப் பார்த்து விட்டு உள்ளே போய்விட்டாள், புகழ்.

"இந்த அடங்காப் பிடாரியை காவந்து பண்ணி எப்படித்தான் ஒருவனுக்கு கட்டிக் குடுக்கப் போறமோ?"

ஏங்கித் தவித்த மனத்தில் எழுந்த கேள்வி ஒரு பெருமூச்சாய் உருவெடுத்து வெளியேறியது. எதுவுமே நடவாதது போல் அவள் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள் புகழ்.

"அம்மா! சிவகாமி மாமிக்கு காய்ச்சலாம்."

"என்னடி சொல்லுறாய்?"

“ஓமம்மா நான் அங்கை போனன் . வீட்டு முற்றத்திலை அந்தக் கொக்கனின்ரை சைக்கிள் நிண்டுது. நான் வாசலிலை நிண்டு மாமி எண்டு குரல் கொடுத்தன். கொக்கன் தான் வெளியில வந்து அவவுக்குக் காய்ச்சல் படுத்திருக்கிறா என்று சொன்னான். நான் திரும்பி வந்திட்டன்.”

“ஏனடி அந்தப் பொடியனை கொக்கன் எண்டு பழிக்கிறாய்? அப்படி எல்லாம் சொல்லக் கூடாது.”

“ஏன் ? சொன்னால் என்ன. அவன் கொக்கத்தடி மாதிரித்தானே இருக்கிறான்.”

“உன்னோட கதைக்க எனக்கு ஏலாது. என்ன இருந்தாலும் அந்த சிவகாமி பாவம். காய்ச்சல் . காய்ச்சல் எண்டு அறிஞ்சநான் ஒரு எட்டுப் போய் பார்த்திட்டு வாறன்”

செல்லம் புறப்பட்டு விட்டாள்.

செல்லத்தைக் கண்டதும் வீட்டு வாசலில் நின்றிருந்த சந்திரன் வரவேற்றான்.

“வாங்கோ அன்ரி அம்மாவிற்கு நேற்றையிலிருந்து காய்ச்சல். அதுதான் நான் வேலைக்கு லீவுபோட்டு நிற்கிறன்.”

“அம்மாவிற்குக் காய்ச்சல் என்றால் எனக்கு ஒரு சொல்லு சொல்லி இருக்கலாமே. நான் வந்து பாத்திருப்பன். நீர் என்ன பிள்ளை ?”

அன்புடன் அவனைக் கடிந்து கொண்டாள்.

“இல்லை அன்ரி உங்களுக்கு ஏன் வீண் சிரமத்தைத் தருவான் என்று பார்த்தன்.”

படுத்திருந்த சிவகாமியைப் போய் எட்டிப் பார்த்தவள், ஆச்சரியத்தில் திளைத்துப் போனாள். அத்தனை கச்சிதமாய் நெற்றியில் திருநீற்றுக் குறியுடன் படுத்திருந்தாள் சிவகாமி. இடையிடையே முனகல் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

“அம்மாவுக்கு என்ன குடுத்தநீர்?”

“வெள்ளன அவவுக்கு சுடுதண்ணி வைச்சுக்குடுத்தநான் குளிச்சவ. பேந்து பால்க்கஞ்சி வைச்சநான். கொஞ்சமாய்க் குடிச்சவ.”

அவனது பேச்சைக்கேட்டு வியப்பில் ஆழ்ந்து போனாள். செல்லம்

“ஆம்பிளைப்பிள்ளை. உமக்கேன் உந்த வேலை ?”

மனம் நொந்து கொண்டவளுக்கு சந்திரன் விளக்கமளித்தான்.

“ஆண் என்றால் என்ன?.. பெண் என்றால் என்ன?.. எல்லாருக்கும் எல்லா வேலையும் தெரிஞ்சிருக்க வேணும். இதிலை என்ன இருக்குது. அம்மாவுக்கு சுகமில்லை என்றால் நான்தான் சமைக்கிறநான்.”

“பறவாயில்லையே அம்மா நல்லாத்தான் வளர்த்து வைச்சிருக்கிறா. அதுசரி அம்மாவுக்கு மருந்து எடுத்துக் குடுத்தநீரே?”

“இல்லை அன்ரி.. பனடோல் மட்டும் தான் குடுத்தநான். சுகம் வராட்டா கூட்டிக்கொண்டு போய் மருந்து எடுக்கலாம் என்று நினைச்சன்.”

“கெட்டிகாரப் பிள்ளைதான். மத்தியானத்துக்கு அம்மாவுக்கு பத்தியமும் உமக்கு சாப்பாடும் கொண்டு வருவன். நீர் அடுப்படிப் பக்கம் போகக்கூடாது.”

கடும் உத்தரவு போட்டு விட்டுத் திரும்பினாள் செல்லம்.

***

மாதங்கள் உருண்டன. குயிலியின் பல்கலைக் கழக வாழ்க்கையும் கூடத்தான். இறுதியாண்டுப் பரீட்சை எழுதி முடித்து பெறுபேறு வரும்வரை காத்திருந்து தான் கல்வி பயின்ற பாடசாலையிலேயே ஆசிரியையாகப் பணி புரியக் கிடைத்ததை பெறும்பேறாகக் கருதினாள். வீட்டிலிருந்து தினமும் சைக்கிளில் பாடசாலைக்குப் போய் வந்தாள். அவள் பல்கலைக் கழகப் படிப்பை முடித்து வெளியேறவும் மகிழ் அங்கு உள் நுழையவும் சரியாக இருந்தது. விஞ்ஞானப் பிரிவில் அவள் கற்கத் தொடங்கினாள். அதற்கு மேல் மருத்துவபீடம் அது இது என அவர்கள் பெரிய படிப்பை எதிர்பார்த்திருக்கவும் இல்லை. காலம் மெதுவாக நகர அவர்களும் அதன் போக்கில் நகர்ந்து கொண்டிருந்தனர். புகழ் மட்டும் தனது தையல் தொழிலோடு பொழுதைக் கழித்தாள்.

பரமசிவம் ஆசிரியத்தொழிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும், குயிலியின் உழைப்பு அவர்களது குடுமபத்திற்கு கை கொடுத்ததால் எதுவித சிரமமுமின்றி அவர்களது வாழ்க்கைப் பயணம் தொடந்தது.

இடையிடையே சிவகாமி செல்லத்தின் வீட்டிற்கு வந்து போவாள் கூடுதலாக அவள் புகழுடன் தான் நேரத்தைக் கழிப்பாள். தையல் கலையின் சிறுசிறுநுட்பங்களை தெளிவுபடுத்துவாள். புகழும் அவளது ஆலோசனையை விருப்புடன் ஏற்றுக்கொள்வாள். மொத்தத்தில் அந்தக் கிராமத்தில் புகழுக்கு சிறந்த தையல்காரி என்ற மவுசு இருந்தது. சிவகாமிக்கும் புகழுக்கும் தொழில் ரீதியில் மட்டுமல்ல மனதளவிலும் ஒரு நெருக்கம் இருக்கத்தான் செய்தது.

ஓய்வூதியம் பெற்றபின் பரமசிவம் மனரீதியிலும் உடல்ரீதியிலும் சோர்ந்து போனார். பசுக்களை வைத்து பராமரிப்பதற்கு அவருக்கோ செல்லத்துக்கோ உடல்நிலை இடங்கொடுக்கவில்லை. இதை அவதானித்த குயிலி அப்பாவிடம் சொல்லி அவற்றை விற்க ஒழுங்குசெய்தாள்.

“இவ்வளவு காலமும் எங்களை வாழவைத்த சீதேவிகள்” செல்லம் கண் கலங்கினாள். அவளுக்கு வாழ்க்கையின் தார்ப்பரியத்தை நன்கு விளக்கிய குயிலி அவளது மனதைத் தேற்றினாள். விற்றுவந்த பணத்தை அப்பாவின்

சேமிப்புக்கணக்கில் போடுவித்தாள். இப்போது குயிலியின் கவனம் வேறு பக்கம் திரும்பியது.

புகழுக்கென்று ஒரு வீடு கட்டியாயிற்று. மகிழுக்கென ஒரு வீடு தேவையல்லவா. நாங்கள் வசிக்கும் இந்த பாரம்பரிய வீடு அப்பா அம்மாவுக்கும், எனக்குமாக இருக்கட்டும் எனக் கருதியவள். அப்பாவை அணுகினாள் விளைவு

அவர்களது பனை வளவில் மீதமாயிருந்த ஐந்து பரப்புக்காணிக்குள் ஒரு சிறு வீட்டிற்கு அத்திவாரம் போட்டாயிற்று. மனம் சோர்ந்து தளர்ந்து போயிருந்த பரமசிவம் வீட்டு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டார். மனச்சோர்வு தான் உடலையும் பாதிப்படையச் செய்கிறது. என்பதை நன்கு புரிந்து கொண்டார் அவர்.

இத்தனை காலமும் ஓய்வின்றி உழைத்த செல்லத்தின் உடல் நிலையிலும் பாதிப்பு ஏற்படத்தான் செய்தது. குயிலி அவளுக்கு உறுதுணை யாயிருந்து வீட்டுச் சுமைகளைத் தாங்குவதில் கை கொடுத்தாள். படிப்படி யாக மகிழதுவீடு உயரத் தொடங்கி கூரை வரை வந்ததும் நின்றுவிட்டது. வளவுக்குள் தறித்த பனைமரங்களிலிருந்து கூரைக்குத் தேவையானவற்றைச் சீவி எடுத்திருந்த போதிலும் பணம் தட்டுப்பாடாகி விட்டதனால் அதற்கு மேல் வேலை ஓட மறுத்து விட்டது. அந்தச் சமயத்தில் குயிலியின் மூளை யில் பளிச்சென ஒரு மின்னோட்டம் தோன்றி அவளை உசார்படுத்தியது. தனது சம்பளத்தில் ஒரு தொகையை கடனாக எடுத்து அப்பாவிடம் கையளித்தாள்.

வீட்டுவேலை குறையில் நின்று போனதால் மனம் சோர்ந்து போயிருந்த பரமசிவம் சற்றுத் தென்படைந்தவராய் துரிதமாகச் செயற்படத் தொடங்கினார். அவரதும் செல்லத்தினதும் மனங்களில் அது குயிலி வாழப் போகும் வீடு என்ற நினைப்பே மேலோங்கியிருந்தது. ஆனால்….. குயிலி யின் நினைவோ எதிர் மறையாய் இருந்ததை பெற்றோர் உணரவில்லை.

குயிலி இப்போது தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டை அரும் பொக்கிஷமாகக் கருதினாள். அம்மா, அப்பா, சகோதரர்களுடன் வாழ்ந்த வீடு என்பது மட்டுமல்ல, அதற்கும் மேலாக ரகு அத்தானின் குறும்பு நிறைந்த செயற்பாடுகளை அவளுக்கு மீட்டித்தரும் சின்னங்களாக சில இடங்கள் அமைந்திருந்தன. முக்கியமாகப் படலையடியில் ரகு வந்து நின்று கொண்டு வீட்டுக்குள்ளே வர மறுத்து பிகு பண்ணுவது, விறாந்தையில் போட்டிருந்த மேசையின் முன் அமர்ந்திருந்து கொண்டு அவளை வார்த்தைகளால் வம்பிற்கிழுப்பது போன்ற செயல்கள் அவளது மனதில் நிறைந்திருந்தன.

எப்போதும் படலை வாசலைத் தாண்டும்போது அவனது நினைவுகள் வந்து நெஞ்சை நிறைக்கும்.

பரமசிவம் ஒருவாறு வீட்டு வேலையை கச்சிதமாக முடித்து விட்டார்.

வர்ணப் பூச்சுகள் மெருகிட கம்பீரமாக நிமிர்ந்து நின்றது வீடு.

***

முன்னரைப்போல் இம்முறையும் வீடு புகும் வைபவத்தை சிக்கனமாக நெருங்கிய உறவினர்களுடன் மட்டுப்படுத்த முடியவில்லை. குயிலியுடன் கற்பிக்கும் ஆசிரியர்கள் , மகிழுடன் படிக்கும் சக மாணவர்கள் , மற்றும் அயலவர்கள் , உற்றார் உறவினர்கள் என விஸ்தரித்து ஒரு விழாவாக நடத்த வேண்டியதாயிற்று. அழைப்பிதழ் அச்சடித்து வந்த கையுடன் ஊருக் குள்ளும், அயற் கிராமங்களுக்குமென அவற்றை விநியோகிப்பதே பரமசிவத் தாருக்குப் பெரும் பாடாய்ப் போய்விட்டது. வெளியூரில் இருக்கும் உறவினர்களுக்கு தபால் மூலம் அனுப்பும் பொறுப்பை குயிலி ஏற்றுக் கொண்டாள். பெரியம்மா மாருக்கும், ரகு அத்தானுக்கும் அழைப்பிதழில் சில வரிகள் எழுதி விலாசமிட்டாள். அவர்கள் எல்லாரும் வருவார்கள் என்ற நினைப்பு அவளது இதயத்தில் கிளுகிளுப்பை மூட்டியது.

ஏழைகள் என எங்களை ஓரங்கட்டிய பெரியம்மாமார் இப்போது வந்து எங்களைப் பார்க்கட்டும். நாணல்களாக நாங்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்பதைக் கண்டு அவர்கள் நிச்சயமாக மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்படுவார்கள் என்ற நினைப்பு அவளது உள்ளத்தில் ஒரு உத்வேகத்தை அளித்தது. அதே சமயம் ரகு அத்தான் வருவாரா? ... மாட்டாரா?... ஏன்றொரு சந்தேகமும் எழத்தான் செய்தது. நிச்சயம் வருவார் என்ற மனத்திடத்துடன் அவள் தனது வேலையில் கவனம் செலுத்தத் தொடங்கினாள்.

நான்கு நாட்களுக்கு முன்னதாகவே பெண்கள் பலகாரம் சுடுவதற்குத் தொடங்கி விட்டனர். ஆசையம்மா நேரத்தோடு வந்த அங்க தங்கியிருந்து தங்கை செல்லத்தின் வேலைப் பழுவை தானும் பகிர்ந்து கொண்டாள். சிவகாமி அன்ரி மற்றும் அயலவர்கள் எனப் பெண்கள் பலரும் வந்து தங்களது பங்களிப்பைச் செய்தனர். கமலம் மாமியும் வந்து கலந்து கொண்ட போதிலும் அவளது முகத்தில் ஈயாடவில்லை. அவளது முகமாற்றத்திற்கான காரணத்தை புரிந்து கொள்ள முடியாதவர்களாய் பரமசிவமும், செல்லமும் சிந்தனையை அலைய விட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் குயிலி சுடச்சுட தேநீர் கொண்டு வந்து பரிமாறினாள்.

“மாமி ! தேத்தண்ணி குடியுங்கோ.”

குயிலி பணிவுடன் அவளுக்கு நீட்டினாள்.

“ஏன் எனக்கு முதல்ல தாறாய். உங்கை இருக்கிற முக்கியமானவைக்கு குடன்”. குயிலிக்கு எல்லாமே புரிந்துவிட்டது. அயலவர் அத்தனை பேரும் தங்களுக்கு உதவியாய் வந்து செயற்படுவது மாமிக்கு பிடிக்கவில்லை என்பதுதான் உண்மையான நிலைப்பாடு ஒருவாறு நிலைமையை சமாளித்தாள்.

மனித மனம்தான் எத்தனை விசித்திரமானது ஒருவர் நிலை தாழ்ந்திருக்கும் போது அவர்களுக்காக இரங்கும் மனம் அவர்கள் சமூகத்தில் மேன்நிலைக்கு வந்துவிட்டால் அதை ஜீரணிக்கமுடியவதில்லை மனித நேயம் மிக்கவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள். இதுவே இயற்கை கமலமாமி மட்டும் இதற்கு விதிவிலக்கான வளல்ல. முன்னர் பரமசிவம் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்த போது செல்லமும் பிள்ளைகளும் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள். செல்லத்தின் கடும் உழைப் பினாலும் குயிலியின் விடாமுயற்சியினாலும் இன்று பரமசிவம் குடிவெறி யற்ற ஒரு உயர்ந்த மனிதனாக ஊர்மக்களால் போற்றப்படுகிறார். அவரது குடும்பமும்  கல்வி அறிவினால் சிறந்து விளங்குகிறது. இதுதான் உண்மை யான நிலைப்பாடு.

பயத்தம் உருண்டைகளை உருட்டிக்கொண்டிருந்த கமலம் திடீரென கைகளை உதறிவிட்டு எழும்புகிறாள். செல்லம் அவளை ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்.

“எணெ அத்தாச்சி! எனக்கு தலையை கிறுகிறுக்கிது.நான் வீட்டை போய் படுக்கப்போறன்.”

கமலம் கூறியதைக் கேட்ட செல்லம் பதறித்துடித்தவளாய் எழுந்து அவளிடம் வந்தவள் அவளை அரவணைத்துக் கொண்டாள்.

“மச்சாள் என்னெண செய்யுது?”

ஆதரவுடன் தன்னை அணைத்துக் கொண்ட செல்லத்தின் கைகளை விலத்தியவாறே கமலம் சொன்னாள்.

“அது ஒண்டுமில்லையெண அத்தாச்சி. காலமை நான் பிறசர் குளுசை போட மறந்திட்டன் போல கிடக்கு. வீட்டை போய் குளுசையை போட்டுக் கொண்டு கொஞ்ச நேரம் படுத்திருந்தால் எல்லாம் சரியாய்ப் போயிடும்.”

அவளைத் தனியாக அனுப்ப செல்லத்துக்கு மனம் வரவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள். அவளது கண்களுக்கு முன் குயிலி தென்பட வில்லை. சிவகாமிக்கு அருகில் புகழ் நின்றிருந்தாள். அவளை அழைத்தாள்.

“பிள்ளை புகழ்! இஞ்சை ஒருக்கா வா. மாமியை கவனமாய்க் கூட்டிக் கொண்டு போய் வீட்டில விட்டிட்டு வா என்ரை குஞ்செல்லே”

தாயின் கெஞ்சலுக்கு செவிசாய்த்தவளாய் புகழ் கமலத்தை அழைத் துப் போனாள். கமலத்துக்கு ஏற்பட்டிருப்பது உடல் ரீதியான வருத்தமல்ல உள்ளத்தின் கொந்தளிப்புதான் என்பதை அப்பாவியான செல்லம் அறிந்திருக்க வில்லை.

குடிபுகுதலுக்கான ஆயத்தங்கள் யாவும் துரிதகதியில் நடந்தேற அன்றைய பொழுது யாவருக்கும் அமர்க்களமாக விடிந்தது. குயிலிக்கு மட்டும் மனதில் ஒரு தவிப்பு. ரகு அத்தானுக்கு கட்டாயம் வரவும் என

அழைப்பிதழில் வேண்டுகோள் விடுத்தும், அவன் இற்றை வரை வந்து சேரவில்லை. அவனது வரவுக்காக ஆவலுடன் காத்திருந்து மனம் சோர்வடைந்த நிலையில் துவண்டு கிடந்தது. தனது துயரத்தை எவரிடமும் சொல்லி பகிர்ந்து கொள்ள முடியாத ஒரு அவலம் ஆழ்மனதுக்குள் புதைந்து கிடக்க பொறுப்பாக இருந்து மற்றைய அலுவல்களைக் கவனிக்க வேண்டிய அவலநிலை அவளுடையதாயிருந்தது.

களை இழந்த முகத்துடன் குளிப்பதற்குப் புறப்பட்டாள். அச்சமயத்தில் அங்கு வந்த மகிழ் அவளது கைகளுக்குள் ஒரு பொதியைத் திணித்தாள்.

“அக்கா ! இன்றைக்கு நாங்கள் எல்லாரும் புதிய உடுப்புத்தான் போட வேணுமாம். அதுதான் நான் எனது பேர்சரி காசில எங்கள் மூன்றுபேருக்கும் ஒரே மாதிரி சாறி வாங்கினநான்.”

தங்கையின் செயல் குயிலிக்கு பிடித்திருந்தது.

“அதுசரி. சாறிக்கு மச் பண்ண பிளவுஸ் வேணுமே.”

வாய்விட்டு சிரித்தாள் புகழ்.

“அதுக்கேனக்கா யோசிக்கிறியள். பிளவுஸ் பீஸ் வாங்காமல் நான் சாறி வாங்கியிருப்பனே? சின்னக்கா எல்லாருக்கும் தைச்சுப்போட்டா. நீங்கள் குளிச்சிட்டு போட்டுக் கொண்டு றெடியாய் வந்தால் சரி.”

மகிழின் சமயோசிதத்தையும் புகழின் ஒத்துழைப்பையும் எண்ணிப் பார்த்தபோது அவளது மனதில் மலர்ச்சியும் நிம்மதியும் ஏற்பட்டது. மனநிறைவுடன் குளிப்பதற்குப் போனாள்.

***

பரமசிவத்தார் கட்டிய புதுவீடு சோபையுடன் கலகலப்பாய் காணப்பட்டது. உற்றார் உறவினர் குயிலியின் சகஆசிரியர்கள் அவளுடன் பிரியமாய் நடந்து கொள்ளும் மாணவர்கள் அவர்களது பெற்றோர் மகிழுடன் கற்கும் மாணவர்கள் என வீடே நிறைந்திருந்தது. அதுமட்டுமல்ல புகழிடம் தைப்பதற்கு வரும் உள்ளூர் வாசிகள் மற்றும் அயலூராரென அனைவரும் வருகை தந்திருந்தனர். இதனை முன்னரே எதிர்பார்த்திருந்த பரமசிவம் வீட்டிற்கு முன்னால் பெரிய பந்தலொன்றையும் போட்டிருந்தார். சகோதரிகள் மூவரும் ஓடியோடி அவர்களை உபசரித்துக் கொண்டிருந்தனர். ஒப்பனைக்கு இயங்கிக் கொண்டிருந்தாளே தவிர குயிலியின் மனத்திலும் நிறைவில்லை. முகத்தில் ஏக்கத்துடன் அவள் நடமாடுவதை மகிழ் அவதானித்துவிட்டாள். அவளருகில் வந்தவள் மெதுவாக அவளது காதுக்குள் கிசுகிசுத்தாள்.

“அக்கா ரகு அத்தான் வந்திருக்கிறார் கண்ட நீங்களே..?”

சட்டென மலர்ந்தது அவளது முகம்.

“சீ... போடி ... சும்மா விளையாடாதை”

“புரொமிஸ்ஸாத்தான் சொல்லுறன் நீங்கள் வேணுமெண்டால் போய் பந்தலுக்கை ஆம்பிளையள் இருக்கிற பக்கமாய்ப் பாருங்கோ..”

குயிலி வெட்கத்தையும் மறந்தவளாய்ப் போய் ஆண்கள் வரிசையில் எட்டிப் பார்த்தாள். அதே சமயம் பார்வையால் துழாவிக் கொண்டிருந்த ரகுவும் அவளை நோக்க, இருவரது கண்களும் மோதிக்கொண்டன. குயிலிக்கு உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்றதோர் பிரமை ஏற்பட தன்நிலை இழந்தவள் சட்டென தன்னை சுதாகரித்துக் கொண்டாள். ரகுவும் அவளைத் தனது கண்களுக்குள் சிறைப்பிடித்துக் கொண்டதைக் கூட அவளால் அனுமானிக்க முடியவில்லை. உள்ளே திரும்பிச் சென்றவள் சிறிது நேரத்தில் கையில் மென்பானத் தட்டுடன் வந்து ஆண்கள் பக்கத்திற்கு பரிமாறத் தொடங்கினாள்.

கண்களால் அவளை அளந்தவாறே ரகு மென்பானம் நிறைந்த குவளையை கையில் எடுத்தவன் மெதுவாகக் கூறினான்.

“ஒறேன்ஜ் கலர் சாறி உமக்கு வடிவாயிருக்கு”

“சாறி மட்டும் தானோ”

அவனைக் கண்களால் விழுங்கியவாறே கேட்டாள்

“இல்லை சாறி அணிந்திருக்கும் தேவதையும் கூடத்தான்”

இருவரும் சிரித்தனர்.

“நீங்கள் வரமாட்டிங்களோ என்று பயந்திட்டன்.”

மனம் திறந்தாள் குயிலி.

“எங்கட வீடு குடிபூரலுக்கு நான் வராமல் இருப்பனா?”

எங்கட வீடு என்ற பதத்தை சற்று அழுத்திச் சொன்னபோது குயிலியின் இதயமே குளிர்ந்தது. இதற்கிடையில் குயிலிக்கு அழைப்பு வரவே அவள் ஓரக்கண்களால் அவனை ஒரு வெட்டு வெட்டிவிட்டு போய்விட்டாள். ரகு பிரமித்து நின்றான். சிறு வயதில் வாயாடியாய் இருந்து அவனுடன் எடுத்ததற்கெல்லாம் சண்டைபோடும் குயிலி இன்று ஒரு அடக்கமான பெண்ணாய் குடும்பப்பொறுப்பை தன்னகத்தே சுமந்து தனது அதீத உழைப்பினால் மேன்மையுறச் செய்திருக்கிறாள். இவளை மனைவியாய் அடைய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

குதூகலித்த மனத்தில் சிறு கோடாக ஒரு சந்தேகமும் தோன்றியது. ஒரு வேளை குயிலியை வேறு யாராவது கொத்திக் கொண்டு போய் விடுவானா? கேள்வியைத் தொடுத்த மனத்தில் ஒரு சமாதானமும் தோன்றத்தான் செய்தது. கிணற்றுநீரை வெள்ளம் அடித்துக் கொண்டு போக முடியுமா?

அவனது சிந்தனையோட்டத்தை ஒரு குரல் கலைத்தது.

“எப்ப ராசா வந்த நீ?”

நிமிர்ந்து பார்த்தான். பரமசிவத்தார் அருகில் நின்றிருந்தார்.

“இரவு மெயில் ரெயினுக்கு வெளிக்கிட்டு காலமை தான் வந்தனான் மாமா”

“நீ வந்ததில எனக்கு பெரிய சந்தோசம் ராசா எனக்கென்று உறவு சொல்ல ஆர் இருக்கினம். உன்ரை கொம்மாவும் நீங்களும் தானே”

மனம் நெகிழ்ந்து சொன்னார் பரமசிவம்.

ரகுவுக்கு மேனி புல்லரித்தது.

புதுவீட்டுக்கு முருகன் கோயிலில் இருந்து படம் எடுத்து வந்து வைத்து மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தும் நிறைவேற்றி முடிவடைந்து விட்டது.அடுத்து வந்திருக்கும் விருந்தினர்களுக்கு பந்தி வைத்து உபசரிக்க வேண்டியது தான். முதலில் ஆண்களை உணவருந்த வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. பந்தலில் அமர்ந்திருந்த ஆண்கள் எழுந்த போது ரகுவும் எழும்பினான். எழும்பியவன் தான் அணிந்திருந்த வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு சபை வைப்பதற்கு ஒத்தாசை செய்யப்போனான். இதனை கமலத்தின் கழுகுக்கண்கள் அவதானித்து விட்டன. சனக் கூட்டத்திற்கு மத்தியில் அவனைத் தடுக்க முடியாமல் திணறினாள். ஏற்கெனவே குடிபூரலுக்காக அவன் பயணித்து வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை, மனக்கடுப்பில் அவள் தீயாக வெந்து கொண்டிருந்தாள்.

அவளது சீற்றத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை. சபை சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. குயிலி சுழன்று சுழன்று சபைக்குப் பரிமாற வேண்டிய கறிவகைகளை எடுத்துகொடுத்துக் கொண்டிருந்தாள். அவளது கையிலிருந்த பாத்திரத்தை ரகு வாங்கிக் கொண்டு போன பின்னர்தான் அவள் அவனை அவதானித்தாள்.

“ரகு அத்தான் வேட்டி உடுத்து வந்திருக்கிறார். அதோட சபைக்கு பரிமாறிக் கொண்டிருக்கிறதையும் பார்க்க மனசுக்கு சந்தோசமாயிருக்கு. எல்லாம் முடிந்த பிறகு அவரைப் பார்த்து தாங்க்ஸ் சொல்ல வேணும்”

நொடியில் மனம் தீர்மானித்துக் கொண்டது ரகு அங்கு இருக்கும் உணர்வு தந்த உத்வேகத்தில் அவளுக்கு உடல் அசதி தோன்றவில்லை. தவிர மின்சார இணைப்பினால் முடுக்கிவிடப்பட்ட பொம்மை போல் அவள் இயங்கிக்கொண்டிருந்தாள்.

விழாவுக்கு வந்திருந்த விருந்தாளிகள் அறுசுவை விருந்தினால் வயிறு நிரம்பியவர்களாய் அவர்களிடம் விடைப்பெற்றுக் கொண்டிருக்க வீட்டில் எஞ்சியிருந்தவர்களுக்கு பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. அவர்களை பந்தியில் இருத்தி உணவு பரிமாற வேண்டிய பொறுப்பு சகோதரிகள்

மூவரிடமும் ஒப்படைக்கப்பட்டது.

"நாங்கள் சாப்பிட்டிட்டு வந்து உங்களுக்குப் பரிமாறுவம்."

சோற்றில் கைவைத்த ரகு கூறினான். ரகுவின் கூற்றை மற்றவர்களும் ஆதரித்தனர்.

"ஓமடா மச்சான் அதுதான் சரி"

அவர்களும் ரகுவோடு முன்னொரு காலத்தில் பழகிய நண்பர்கள் தான்.

குயிலி உணவு பரிமாறும் போது ரகுவை பார்த்துப் பார்த்து கவனித்தாள். அவன் உண்ணும் விதத்தை ஓரக்கண்ணால் பார்த்து ரசிக்கவும் செய்தாள். குயிலி வடை பரிமாறிய பொழுது ஒருவன் சீண்டினான்.

"பாரடா மச்சான் தன்னுடைய மச்சானுக்கு மட்டும் பெரிய வடையாய் போட்டிருக்கிறா குயிலி எங்களுக்கெல்லாம் சின்ன வடை."

"கொல்" என்ற சிரிப்பொலி மண்டபத்தை நிறைத்தது. எட்டிப் பார்த்தார் பரமசிவம்.

"எல்லாரும் வடிவாய் சாப்பிடுங்கோ பிள்ளைகள்."

சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

மொத்தத்தில் குயிலியும் ரகுவும் மனதளவில் இறக்கை கட்டி ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தனர். அங்கிருந்து அரட்டை அடித்து விட்டு பொழுது கருகும் வேளையில் ரகு அவர்களிடம் விடைப்பெற்றுக் கொண்டு வீட்டிற்குப் போனான். அவனது மனதை இனம் புரியாத இன்ப உணர்வு நிறைந்திருந்தது.

வீட்டுக்குப் போய் அங்கு வாசலில் காலடி எடுத்து வைத்தவனுக்கு எதிர்பாராத வரவேற்பு காத்திருப்பதை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

***

சீண்டப்பட்ட சிங்கமாக கமலம் கர்ச்சிக்கத் தொடங்கினாள்.

"வா... வா... ராசா வா இப்பதான் வீட்டு வாசல் கண்ணுக்குத் தெரிஞ்சுதோ..."

திடீரென்று அம்மாவுக்கு என்ன வந்திட்டுது.

ரகுவின் மனம் திடுக்கிட்டது. நிலைமையை சமாளிக்கும் நோக்கத்துடன் வாய் திறந்தான்.

"அம்மா ! காலமை நான் பயணத்தால வரயுக்க நீங்கள் வீட்டில இருக்கயில்ல. அக்காதான் இருந்தவ. நான் குளிச்சு உடுப்பு மாத்திக்கொண்டு மாமா வீட்ட வந்திட்டன். அவ்வளவு தான்".

"அதுசரி நான் தெரியாமத்தான் கேக்கிறன். இப்ப என்ன

அவசரத்துக்கு நீ வேலையை விட்டிட்டு வெளிக்கிட்டு வந்தநீ?"

ஒரே வினாடியில் அவனுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. அம்மாவின் திடீர் குணமாற்றம் அவனுக்கு புரியாத புதிராக இருந்தது.

"மாமா அழைத்திருந்தார் அவருக்கு மரியாதை கொடுக்க வேண்டியது என்ரை கடமை என்று நினைச்சன்."

கமலம் கேலியாக நகைத்தாள்.

"உனக்கிங்கை, அப்படி ஒன்றும் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவர் இப்ப முந்திய மாமா இல்லை. பிள்ளையளோட சேர்ந்து தலைக்கனம் பிடிச்சு நிற்கிறார் கண்டியோ. அது உனக்கு தெரியேல்ல."

அம்மாவின் மனத்தில் பொறாமை எனும் தீ மூண்டிருப்பதை அவனது மனம் ஊகித்துக் கொண்டது. வாய்க்குள் புறுபுறுத்தான்.

"அவர் அப்படியே தான் இருக்கிறார். நீங்கள்தான் மாறீட்டியள்."

"என்ன முணுமுணுக்கிறாய்? போய் முதல்ல உந்த வேட்டியை மாத்து. எனக்கு பாக்க சகிக்கேல்ல. வந்ததுதான் வந்தாய் அங்கை வந்திருந்த நாலு பேருக்கு முன்னால நீ ஒரு என்ஜினியர் மாதிரி கால்ச்சட்டை போட்டு துரை மாதிரி வந்திருக்க வேண்டியது தானே. இஞ்சத்தை பட்டிக்காடுகள் மாதிரி வேட்டி உடுத்திக் கொண்டு வந்திருக்கிறாய்? கொக்கா என்னத்தைப் பார்த்தவள். நான் இருந்தால் விட்டிருக்கமாட்டன்."

ரகுவுக்கு இப்போது சிரிப்பாக வந்தது

"அம்மா! இது எங்கட பாரம்பரிய உடையம்மா. இதுக்குத்தான் எங்கட சபையில மதிப்பு. அது விளங்காமல் கதைச்சுக்கொண்டிருக்கிறியள். அம்மா ! எனக்கு கதைச்சுக் கொண்டிருக்க நேரமில்லை. சுடச்சுட ஒரு கோப்பி தாங்கோ. நான் வெளிக்கிடவேணும்."

சொல்லிவிட்டு பரபரப்புடன் ரகு கிணற்றடியை நோக்கிப் போனான். எக்ஸ்பிரஸ் புகைவண்டி சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு வர இன்னும் ஒரு மணித்தியாலமே பாக்கியிருந்தது. பயணத்துக்கு புறப்பட்டு வந்த ரகுவிடம் கமலம் கோப்பியை நீட்டினாள். அம்மாவிடம் அதை ஆவலுடன் வாங்கி பருகத் தொடங்கிய ரகுவிடம் அக்கா கேட்டாள்.

"தம்பி ஏதும் சாப்பிடன். நான் எடுத்துக் கொண்டு வாறன்."

"இல்லை அக்கா வயிறு நிறைஞ்சு போய்க்கிடக்குது. சுடச்சுட ஒரு கோப்பி போனதும் நல்ல உசாராய்த்தான் தெரியுது

அக்காவின் மடியில் இருந்த குழந்தையின் கன்னத்தைத் தடவிய வாறே, சொல்லிவிட்டு ரகு புறப்பட்டான். அக்கா குடும்பத்துடன் மாமா வின் வீட்டு குடிபுகும் நிகழ்வுக்கு வந்திருந்தாள்.

கமலம் மகனை எச்சரித்து வழியனுப்பினாள்.

'ரகு வேலையும் நீயுமாய் இருந்து கொள்ள வேணும். கண்டபடி சிநேகிதம் வைச்சுக்கொள்ளாத என்ன?.... நான் சொல்லுறது விளங்கு தெல்லே.."

"ஓம் அம்மா"

ரகுவை ஏத்திக் கொண்டு அவனது மோட்டார் சைக்கிள் புகையிரத நிலையத்தை நோக்கி விரைந்தது. இப்பொழுது அவனது மைத்துனர்தான் அதன் பாவனையாளர். வீட்டு வாசலுக்குள் அப்போதுதான் நுழைந்து கொண்டிருந்தார் , சுந்தரலிங்கம் அவரிடமும் விடைபெற்றுக் கொண்டான் ரகு.

கமலத்தின் சீற்றம் இப்போது கணவன்மீது திரும்பியது.

"அங்கை சட்டிபானை எல்லாத்தையும் கழுவி முடிச்சிட்டுத்தான் வாறியளோ?"

மனைவியின் கிண்டலான பேச்சு அவருக்கு எரிச்சலைக் கிளப்பியது.

"மச்சான் வீட்டு விசேசத்திற்குப் போனனான். ஆறஅமர இருந்து விட்டு வாறன். உன்னை மாதிரி அரை குறையிலை விட்டிட்டு வாறதோ?"

அவரது வார்த்தைகள் கமலத்தின் மனதில் உறுத்தியிருக்க வேண்டும். அத்துடன் நிறுத்திக் கொண்டாள். மகள் தேவகி தொடங்கினாள்.

"மாமா நல்ல சிறப்பாய் வீடு குடிபூரலை நடத்தி முடிச்சிட்டார். முந்தி எவ்வளவு கஸ்டப்பட்டவை? இப்ப... கடவுளே என்று நல்ல முன்னேற்றம். பார்க்கவே சந்தோசமாய்க் கிடக்கு".

"ஓ... அவளவைக்கென்ன? இப்ப சடுதியாய் வந்த பணம்... கண்டியளோ.... அதுதான் திமிர் புடிச்சு அலையிறாளவை.."

"ஏன் அம்மா அப்படிச் சொல்லுறியள்? அதுகள் பாவங்கள். நெடுகலும் வறுமையில் கிடந்து கஸ்டப்படுகிறதே? எல்லாம் குயிலியின்ரை பிரயாசைதான். தானும் படிச்சு , தங்கச்சியையும் படிக்க வைக்கிறாள். புகழ் தான் படிப்பைக் குழப்பிப் போட்டாள். எண்டாலும் ஊருக்குள்ளை நல்ல மதிப்பு இருக்கு. நல்ல தையல்காரி எண்டுதான் சனம் சொல்லுகுது. அவளும் நல்லா உழைக்கிறாள்தானே."

"சீ போடி உதெல்லாம் ஒரு உழைப்பே? என்ரை பிள்ளையைப்போல நல்ல உத்தியோகம் இவைக்குக் கிடைக்குமே?"

சுந்தரலிங்கத்தாரும் மகளும் அவளது அறியாமையை நினைத்து வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"ஏன் இப்ப இளிக்கிறியள்".

அதட்டியவளைப் பார்த்து மகள் தேவகி சொன்னாள்.

“அம்மா குயிலியும் உங்கட மகனைப் போல கம்பஸ்ஸில போய் படிச்சு வந்தவள்தான். ஆனால்...வெவ்வேற பட்டங்கள். இப்பவும் படிப்பிச்சுக் கொண்டே குயிலி மேற்படிப்புப் படிக்கிறாளாம். பட்டப்பின் டிப்ளோமா செய்யிறாளாம். இன்னும் நிர்வாக சேவை சோதினையும் எடுக்கப் போறாளாம். அதிலையும் பாஸ் பண்ணினால் கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக வந்திடுவாள். அது தெரியுமா?”

”அதையேன் எனக்குச் சொல்லுறாய்? என்ன இருந்தாலும் சொத்துப் பத்து இல்லாததுகள். அதுவும் மூண்டு பெட்டையள். ஆர் அதுகளைப் பெண்கேட்டு வரப்போகினம்?.”.

தாயின் அறியாமையை நினைத்து மகள் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்

சுந்தரலிங்கத்தாருக்கும் மகளுக்கும் ஒன்றுமட்டும் திட்டவட்டமாய் தெரிந்து போயிற்று. அது...கமலத்தின் மனத்தில் பொறாமை எனும் தீ பொறியாக மூண்டு அது சிறிது சிறிதாக சுவாலையாக மாறத் தொடங்கி யிருக்கிறது என்பதுதான் வாசலில் ஏதோ அரவம் கேட்கவே இருவரும் திரும்பிப்பார்த்தனர். அங்கே .....

ரகுவை ரயிலேற்றி அனுப்பிவிட்டு வந்து வாசலுக்குள் நுழைந்து கொண்டிருந்தான். சுந்தரலிங்கத்தாரின் மருமகன். தேவகி எழுந்து உள்ளே போனாள்.

***

பரமசிவத்தின் புதுவீட்டில் அனைவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர் பகல் முழுவதும் ஓடியாடித் திரிந்ததனால் ஏற்பட்ட உடல் அசதி அவர்களைத் தாலாட்டிக் கொண்டிருந்தது. ஆனால்... குயிலிக்கு மட்டும் உறக்கம் வர மறுத்தது. நித்திராதேவி அவளை நெருங்க மறுத்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தாள். அவளது மனத்தில் அன்றைய நாட்பொழுதின் நினைவு மீட்டல்கள் வந்து மோதி அலைக்கழித்துக் கொண்டிருந்த அதே வேளை ஒரு கேள்விக்குறியும் எழத்தான் செய்தது.

“ரகு அத்தானுக்கும் என்னைப்போன்று உணர்வலைகளின் ஆக்கிரமிப்பு மனதில் மோதிக் கொண்டிருக்குமா?“

நிச்சயமாக இருக்கும்.

மனம் திடமாக நம்பியது. இல்லாவிட்டாலும் அவர் என்னிடம் விடை பெறும் போது கண்களாலேயே என்னை விழுங்கிவிடுவது போன்ற தோர் பார்வையை வீசினாரே? அதற்கென்ன அர்த்தம். ம்! எல்லாம் சில வருடங்களுக்குத் தான். நாங்கள் சேர்ந்து வாழும் காலம் வெகுவிரைவில் வரத்தான் போகிறது. அதற்கிடையில் நான் எனது குடும்பத்தவருக்கென சில கடமைகளை நிறைவேற்றியே தீரவேண்டும்.

இந்த வருடம் இறுதிப் பரீட்சையை மகிழ் எழுதி முடித்து விட்டால்... எப்படியும் அவளுக்கு ஒரு வேலை கிடைத்துவிடும். சில வருடங்களுக்கு அவளும் உழைத்தால் சிறுதொகையைச் சேர்த்து விடலாம். அது அவளுடைய திருமணத்துக்கு உதவும். ஆனால்... புகழ் இருக்கிறாளே. அவளுக்கு முதலில் மாப்பிள்ளை பார்க்க வேணும். சீதனம் என்று கொடுப்பதற்கு வீடு இருக்கிறது. அம்மா தனது சிறு சேமிப்பில் எனக்கென்று நகைகள் செய்து வைச்சிருக்கிறாள். அதையும் அவளுக்கே கொடுத்து விடலாம். இருந்தபோதிலும் ரொக்கப்பணம் கேட்பார்களே அதற்கு எங்கே போவது?

மனம் தீவிரமாகச் சிந்தித்தது.என்னுடைய சம்பளத்திலும் கடன் எடுத்து மகிழின் வீட்டு வேலையை ஒப்பேற்றியாகி விட்டது. எங்களை நம்பி எவரும் கடன் தருவார்களா? சிலாகித்த மனத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியாமல் தவித்தவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

எங்கட வீட்டு வளவை ஈடு வைத்து பணத்தைக் கொடுக்கலாம். பிறகு அப்பாவின் பென்சன். என்னுடைய கடன் கழிந்து போக மீதியாய் வாற சம்பளம் மகிழின் சம்பளம் என எல்லா வருமானத்திலயும் மிச்சம் பிடிச்சு ஒரு மாதிரி வீடு வளவை மீட்டு போடலாம். ஐயர் வரும் வரைக்கும் அமாவாசை காத்திருக்க ஏலாது. காலா காலத்தில நாங்கள் அவளுக்கு ஒரு கலியாணத்தை கட்டி வைச்சிட வேணும்.

தீர்க்கமான ஒரு முடிவை எடுத்ததும் மனதிலிருந்த சுமை குறைந்தது போன்றதோர் உணர்வு தோன்றி அவளை மெய்மறக்கச் செய்ய மெதுவாக நித்திராதேவி அவளை அணைத்துக் கொண்டாள்.

நாட்கள் சில நகர்ந்தன. காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. அது தன் போக்கில் ஓடிக் கொண்டிருந்தது. குயிலியின் விருப்பப்படி புதிதாகக் கட்டிய வீட்டையும் பரமசிவம் வாடகைக்கு விட்டுவிட்டார். அதன்மூலம் கிடைத்த வருமானம் அவர்களது சேமிப்புக்குள் அடங்கிக் கொண்டது.

ஒரு நல்ல நாள் பார்த்து பரமசிவம் மனைவி செல்லத்திடம் புகழது சாதகக் குறிப்பை கேட்டு வாங்கிக் கொண்டு தரகரைத் தேடி புறப்பட்டார். செல்லத்துக்கு அதில அவ்வளவு இஷ்டமில்லாவிட்டாலும் குயிலியின் வார்த்தையை மீற முடியவில்லை. கமலம் வீட்டார் அவர்களாக பெண்கேட்டு வரும்வரை காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக அவர்களுக்குள் கற்பனை செய்து கொண்டவர்களாய் வாளாவிருந்தனர்.

திடீரென ஒரு நாள் கல்யாணத்தரகர் பரமசிவம் வீட்டிற்கு வந்திருந்தார்.அச்சமயம் பரமசிவம் வீட்டில் இல்லாததால் செல்லம் அவரை வரவேற்றாள். வந்தவர் புகழின் சாதகத்துடன் ஒரு பட்டதாரி ஆசிரியரின் சாதகம் பொருந்தியிருப்பதாகக் கூறியபோது செல்லத்துக்கு மனமகிழ்ச்சி ஏற்பட்டது. தரகர் மாப்பிள்ளையைப் பற்றியும் அவரது குடும்பத்தை

பற்றியும் நிறையவே அடுக்கிக் கொண்டு போனார். இறுதியாக அவர்கள் வீடுவளவு நகையுடன் ரொக்கமாக பத்தாயிரம் வரதட்சனை கேட்பதாகக் கூறி முற்றுப்புள்ளி வைத்தார்

செல்லத்துக்கு மனதில் திக் கென்றது. ஈனக்குரலில் சொன்னாள்.

“தம்பி! அவ்வளவு காசுக்கு நாங்கள் எங்கை போறது. ஏதோ அப்பிடி இப்பிடி எண்டு சேர்த்தாலும் ஒரு ஐயாயிரம் குடுக்கலாம். நீங்கள் அவையோட ஒருக்கா கதைச்சுப்பாருங்கோவன் மற்றதெல்லாம் அவை கேட்டபடி குடுப்பம்.”

“நான் என்னம்மா செய்யிறது. அவையின்ரை டிமாண்ட் இதுதான். எதுக்கும் அவையோட கதைச்சுப் பார்க்கிறன்”

அச்சமயம் பார்த்து வெளியில் போயிருந்த பரமசிவம் வந்துவிட்டார். தரகரோடு அவரைக் கதைக்கவிட்டுவிட்டு செல்லம் தேநீர் தயாரிப்பதற்காக உள்ளே போனாள்.

தரகர் பரமசிவத்திடம் மாப்பிள்ளை வீட்டாரின் கேள்வி பற்றி விளக்கிக்கொண்டிருந்தார் பெண்களை வியாபாரப் பொருளாக்கி அவர் மாப்பிள்ளை வீட்டுக்கு பக்க சார்பாக பேரம் பேச முற்பட்டார். என்னதான் சீர்திருத்தம் ஆணுக்கு பெண்ணும் சமம் என்று வாய்கிழிய கதை பேசினாலும் எமது சமுதாயத்தில் பெண்களின் நிலை இதுதான்.

பரமசிவத்துக்கும் பட்டதாரி மாப்பிள்ளை என்றதும் அதில் ஒரு ஈர்ப்பு இருந்தபோதிலும் விரலுக்கு ஏற்ற வீக்கத்தோடு நிறுத்திக் கொள்ளுவதே மேல் என்ற உணர்வே மேலோங்கி நின்றது. தரகரிடம் ஒரேயடியாக அடித்துச் சொல்லிவிட்டார்.

“எங்களிட்டை உள்ளது இவ்வளவு தான் அதற்கு அவை இணங்கி வந்தால் சரி இல்லாவிட்டால் வேறை இடம் பாப்பம்.”

செல்லம் கொண்டு வந்து நீட்டிய தேநீரைப் பருகிவிட்டு தரகரும் புறப்பட்டுவிட்டார். வெறுங்கையோடு அல்ல. பரமசிவத்திடம் தரகுகூலி யாக ஒரு பத்துரூபாயையும் பெற்றுக் கொண்ட பிற்பாடுதான்.

பரமசிவமும் செல்லமும் ஒருவரையொருவர் பார்த்தவாறு விக்கித்து நின்றனர். இப்போதுதானே ஆரம்பம். இன்னும் தரகுகூலியாக எவ்வளவு பணத்தை இழக்க வேண்டி வருமோ என்ற ஏகமனதாக ஏக்கம் அவர்களிடம் குடிகொண்டிருந்தது.

“அம்மா! ஆரது வந்திட்டுப் போறது.?”

புகழின் குரல் கேட்டு சுயநினைக்குத் திரும்பிய பெற்றோர் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டவராய் பரமசிவம் வாய் திறந்தார். வாய் குழறியது.

“அதுபிள்ளை. புரோக்கர் உனக்கொரு சம்மந்தம் கொண்டு வந்தவர்

*பட்டதாரி மாப்பிள்ளை நல்ல இடம்...”*

*அடுக்கிக் கொண்டே போனவரை புகழின் கர்ஜனைக் குரல் தடுத்து நிறுத்தியது.*

*“அக்கா இருக்கும் போது எனக்கேன் கலியாணம்” என்று ஒரு சொல் கேட்டிருந்தால் அவர்கள் நிம்மதியடைந்திருப்பார்கள் ஆனால்... அவள் வாயிலிருந்து வந்த அந்த வார்த்தைகள்...*

*கிறுகிறுத்த தலையை தாங்கிப்பிடித்தவாறு இருவரும் விக்கித்து நின்றிருந்தனர்*

***

*குயிலி பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்து சேரும் வரை அனலிடைப் புழுவாக துடித்துக் கொண்டிருந்த மனத்தைத் திறந்து அவளிடம் எல்லாவற்றையும் உளறிக் கொட்டினாள் செல்லம் . பரமசிவம் சாய்மனை யில் சாய்ந்திருந்து முகட்டை உற்றுநோக்கியவாறிருந்தார். அவரது முகத்தில் ஈயாடவில்லை. அம்மாவின் புலம்பலில் இருந்து எல்லாவற்றையும் கிரகித்துக் கொண்ட குயிலி தனது அறைக்குள் போய் ஆறுதலாக சிந்திக்கத் தொடங்கினாள்.*

*சிவகாமி அன்ரியின் மகன் சந்திரனை புகழ் விரும்புகிறாளாம்.*

*மீண்டும் மீண்டும் அந்த வார்த்தைகளை இரை மீட்டுகிறாள். அவளால் நம்பமுடியவில்லை. எப்போது பார்த்தாலும் அவன் மீது சீறுவதும் கரித்துக் கொட்டுவதுமாய் இருக்கும் புகழுக்கு அவன் மீது எப்படி காதல் வந்தது? காதலுக்கு கண் இல்லை என்று சொல்லுவார்கள் அது இது தானோ*

*சிந்தனை சுற்றிக் சுழன்றதே தவிர பதிலேதும் கிடைக்கவில்லை. நீண்ட நேர சிந்தனைக்குப் பிறகு அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். வந்தவள் உடை மாற்றிக்கொண்டு வெளியே வந்து பார்த்தபோது அம்மாவும் அப்பாவும் அப்படியே பேயறைந்தது மாதிரி அமர்ந்திருந்தனர். அவர்களை உஷார்படுத்தினாள் குயிலி.*

*“சரி சரி போய் முகம் கழுவிப் போட்டு வாங்கோ. சாப்பிடுவம். எனக்குத் தெரியும் நீங்கள் சாப்பிட்டிருக்கமாட்டியள் என்று. அதுசரி புகழ் எங்கை? ”*

*“உங்கை தான்”*

*முகத்தைத் தொங்கபோட்டவாறு அம்மா சொன்னாள். அவளையும் சமாதானப்படுத்தி அழைத்து வந்தாள். எல்லோருக்கும் உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து தானும் சாப்பிட்டாள்.*

*“பட்டினி கிடக்கிறது ஒரு விஷயத்துக்கு தீர்வாக அமையாது. எப்படித் தீர்க்கலாம் என்று ஆராய்ந்து செயற்பட வேண்டும். இது இத்தனை அனுபவசாலியான அப்பாவுக்கு தெரியேல்லையே...”*

மகளின் வார்த்தைகள் அவருக்கு தெம்பூட்டுவதாக அமைந்தது. கணவனின் முகத்தைப் பார்த்த செல்லத்துக்கும் சற்றே நிம்மதி ஏற்பட்டது.

அக்காவின் உறுதிமொழியை முற்றுமுழுதாக நம்பிய புகழும் பிகு பண்ணாமல் சாதாரணமாக நடந்து கொண்டாள்.

அந்த சமயம் அவர்களை ஒருவாறு சாமாளித்து விட்டாளே தவிர குயிலியால் எதுவித தீர்க்கமான முடிவையும் எடுக்கமுடியவில்லை. புகழ் தனது கைகளைப் பிடித்து கெஞ்சியது அவளது உள்ளத்தை நெருடியது.

“அக்கா உன்னைத் தான் நான் நம்பி இருக்கிறன். எப்படியாவது எங்களைச் சேர்த்து வைச்சிடு அக்கா”.

அடிக்கடி வந்து அவளது காதுகளில் மோதிக் கொண்டிருக்கும் அந்த வார்த்தைகளை புறக்கணிக்கவும் முடியாமல் அதே சமயம் எப்படி அதை நிறைவேற்றலாம் எனவும் மனம் போராடிக் கொண்டிருந்தது. ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப்போயிருந்தவளை அம்மாவின் குரல் தட்டி எழுப்பியது.

“என்னடி பிள்ளை இவள். ஏப்ப பார்த்தாலும் சந்திரனை கொக்கன் கொக்கன் எண்டு சீறி விழுகிறவள். ... இப்ப என்னடா எண்டால் வாழ்ந்தால் அவனோட தான் வாழுவன் எண்டு ஒற்றைக் காலில் நிக்கிறாள். இதென்ன கூத்து எனக்கொண்டுமாய் தெரியேல்ல.”

“அவளுக்கு அவன்தானெண்டு விதி இருந்தா...யார் என்ன செய்ய முடியும்?”

“ம்...”

அவளையறியாமலே பெருமூச்சொன்று அடிவயிற்றிலிருந்து புரண்டெழுந்து வெளியேறி காற்றுடன் கலந்து சங்கமாகியது. அம்மாவின் ஆதங்கம் குயிலிக்குப் புரிந்தது.

“அம்மா! எனக்கொரு யோசினை வருது. புகழின்ரை பிடிவாதம் உங்களுக்குத் தெரியும் தானே. அவள் தான் நினைச்சதைச் சாதிக்காமல் விடமாட்டாள். அதனால....”

“அதனால ... என்ன பிள்ளை செய்யிறதெண்டு சொல்ல வாறாய்?”

“நாங்கள் முதல்ல போய் சிவகாமி அன்ரியிட்டை கதைக்காமல் எங்கட ஆசையம்மா மூலமாய் கதைச்சுப் பாப்பம் எண்டு நினைக்கிறன்.”

“அதுவும் சரிதான்.”

ஆமோதித்தாள் செல்லம்.

“ஆசையக்கா மூலம் தானே இவை எங்களுக்கு அறிமுகமானவை. எதுக்கும் ஒரு நல்ல நாளாய்ப் பாத்து கொப்பரை ஒருக்கா கொக்குவிலுக்கு அனுப்பிவைப்பம். போய் கதைச்சுக் கொண்டு வரட்டுக்கும். வேறை

என்னத்தைத்தான் செய்யமுடியும் அவளுக்கு பெரிய இடத்தில போய் வாழ்க்கைப்பட குடுத்து வைக்கேல்ல அவ்வளவுதான்."

ஆற்றாமையால் துடித்த அம்மாவின் மனத்தை சமாதானப்படுத்த முயன்றாள் குயிலி.

"அம்மா சந்திரனும் நல்ல பிள்ளை தான் சின்ன உத்தியோகம் பார்த்தாலும் நல்ல குடும்பப் பொறுப்பான பெடியன். இவளின்ரை தூக்கி எறியிர குணத்துக்கு அவன் ஈடு கொடுப்பான். கெட்ட குணம் ஒண்டுமில்ல. நல்ல உழைப்பாளி வேறை. வீட்டில ஒரு நேரமும் சும்மா இருக்க மாட்டான். வளவுக்க ஏதும் பயிர்கொடி வைச்சு பிரயோசனமாய் காலத்தைக் கழிக்கிறவன். எனக்கெண்டால் அவன்தான் இவளுக்குப் பொருத்தமானவன் என்று தோன்றுது."

இருவரும் எடுத்த முடிவின் பிரகாரம் பரமசிவமும் செல்லமும் வெள்ளிக்கிழமை காலை கொக்குவிலுக்குப் புறப்பட்டு போயினர். அவர்களிடம் நிலைமையை விளக்கி கலந்தாலோசித்தபின் ஒரு முடிவுக்கு வந்தனர். ஆசையப்பா தானே முன்வந்து அவர்களிடம் சம்மந்தம் பேசுவதாக ஒப்புக் கொண்டார். பிறகென்ன மளமளவென காரியங்கள் நடந்து ஒப்பேறின. சிவகாமி குயிலி கன்னியாக இருக்கும் போது புகழை தனது மருமகளாக்குவதில் சிறிது தயக்கம் காட்டினாள். குயிலி அதையும் எளிதில் சமாளித்துவிட்டாள்.

"எனக்கென்று சில பொறுப்புகள் இருக்குது. முதல்ல மகிழ் படிப்பை முடித்து ஒரு வேலையில சேரவேணும்.. அவளுக்குத் தேவையான சீதனத்தைச் சேர்த்து விட்டால் பிறகு என்னுடைய வாழ்க்கையைப் பற்றி யோசிக்கலாம் தவிர எனக்கும் சில படிப்புகள் படித்து பரீட்சை எழுத வேண்டிய கட்டாயம் இருக்குது. வாழ்க்கையில முன்னேறுவதென்றால் கல்வியில மேம்பட்டு ஒரு நல்ல நிலைக்கு வரவேணும் . என்னுடைய இந்த ஆசை நிறைவேறின பிறகுதான் என்னுடைய வாழ்க்கையைப் பற்றி யோசிக்கலாம்."

அவள் கூறிய விளக்கத்தை புரிந்து கொண்டாளோ இல்லையோ சிவகாமி அத்துடன் நிறுத்திக் கொண்டாள். ஒரு நல்ல சுபதினத்தில் சந்திரன்-புகழினி திருமணம் செல்லம் மனமுருகிப் பிரார்த்திக்கும் முருகன் சன்னிதானத்தில் இனிதே நடைபெற்றது. சிவகாமி சந்திரன் வசித்து வந்த வீடே அவர்களுக்கு சீதனமாக அளிக்கப்பட்டு சொந்தமாகி விட்டது. செல்லத்தின் கடினப் பிரயத்தனத்தால் உருவாக்கப்பட்ட நகைகள் புகழுக் குப் போதுமானதாக இருந்தன. எப்படியோ ஐயாயிரம் ரூபாயைப் புரட்டி புகழது பெயரில் வங்கியில் இட்டு வைத்து விட்டுத்தான் ஓய்ந்தாள் குயிலி. அதுதவிர புகழின் தனிப்பட்ட சேகரிப்பு.. அதனையும் அவளே எடுத்துக் கொண்டாள்.

கருத்தொருமித்த காதலர்களாக சந்திரனும் புகழும் இல்லறமெனும்

நல்லறபந்தத்தில் இணைந்து ஈடு இணையற்ற இன்பகடலில் மூழ்கி யெழுந்தனர். பரமசிவம் வீட்டில் நிம்மதியும் அமைதியும் நிலவத் தொடங்கியது.

***

புகழின் திருமணத்துக்குப் போய்வந்த கமலத்தின் மனம் அமைதியை இழந்து என்னவெல்லாமோ சிந்திக்கத் தொடங்கியது. குயிலியைத் தள்ளி வைத்துவிட்டு புகழுக்கு திருமணம் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டுது. ஒருவேளை முன்னரே சந்திரனுக்கும் புகழுக்கும் தொடர்பு இருந்திருக்குமோ... சேச்சே புகழ் ஒரு நெருப்பு. அவளை எவரும் நெருங்கி விட முடியாது. அப்படியொரு நல்லெண்ணம் அவளுக்கு புகழ் மீது இருந்தது தான் காரணம்.

அதைத்தவிர அவர்கள் புகழுக்குப் போட்டிருந்த நகைகளின் கனதி பற்றியும் மனம் அலசி ஆராய்ந்தது. அதே சமயம் சந்திரன் அவளுக்குக் கட்டிய தாலிக்கொடி மட்டும் பதினைந்து தங்கப்பவுண் என்று பேசிக் கொண்டார்களே.. சாதாரணமாய் மின்சார சபையில் வேலை செய்யும் ஒருவனால் எப்படி அது சாத்தியமாயிற்று. அதே சமயம் கூறைச்சேலையும் நல்ல பெறுமதியானது தான். ஒன்றுக்கும் வழிவகையற்ற அவர்களால் எப்படி இது முடியும். ஒரு வேளை கடன்பட்டு செய்திருப்பார்களோ அப்படி அவர்களுக்கு கடன் கொடுக்க இங்கு யார்தான் இருக்கிறார்கள். மனதைப் போட்டுக் குழப்பி மூளையைக் குடைந்து கொண்டிருந்தாள் கமலம்.

திடீரென அவளது மனதில் மின்னலென ஒருபொறி தட்டியது. ஓஹோ இதுதான் விடயமாயிருக்க வேண்டும். அவர்கள் குயிலி இருக்கக் கூடியதாய் புகழுக்கு அவசரமாய் கலியாணம் செய்து வைக்கவேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது. குயிலி தான் பணம் காய்க்கும் மரமாயிற்றே. அவளது உழைப்பில் அவர்கள் சொகுசாக வாழலாம் என்று நினைத்திருக்கக்கூடும். ஓ... அதுபோலத்தானே நானும் நினைக்கிறேன். ரகு இன்னும் சில வருடங்கள் உழைத்துத் தந்தபின் ஆறுதலாக அவனுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைக்கலாம் என்று நான் நினைப்பதில் என்ன தவறு?

அவளது அடி மனதில் எதுவோ குறுகுறுத்தது.

குயிலியை ரகுவுக்கு செய்து கொடுக்கலாம் என அடிமனதில் அவர்களுக்கு ஒரு எண்ணம் இருந்திருக்கலாம் அதுதானாக்கும் அவளைத் தள்ளி வைச்சிட்டு மற்றவளுக்கு செய்து வைச்சிருக்கினம். அவளவையின்ரை நப்பாசைக்கு நான் ஒரு போதும் இடம் கொடுக்கப்போவதில்லை. ரகுவுக்கு நாங்கள் ஒருநல்ல வசதியான இடமாய்ப் பார்க்க வேணும். இப்பவே நான் அந்த முயற்சியில் இறங்கவேணும். இனியும் காலம் தாமதிக்கக்கூடாது. நல்லவேளையாய் அவையின்ரை கள்ள எண்ணத்தை இப்பவாவது

புரிஞ்சுகொண்டன்.

குறுகுறுத்த அவளது மனம் சற்று அமைதி அடைய அவள் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினாள். இண்டைக்கு இவர் வரட்டுக்கும். இரண்டில ஒரு முடிவு எடுக்கிறன் மனம் கறுவிக்கொண்டது.

பொழுது சாய்ந்த வேளையில் கமலம் போடடிக்கோ வாசற்படியில் கணவனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

"கிறிச்".

கேற்திறக்கும் சத்தம் அவளது கவனத்தைத் திசைதிருப்பியது திரும்பிப் பார்த்தாள். சுந்தரலிங்கம் சைக்கிளை உருட்டிவந்து போட்டிக் கோவிற்குள் ஏற்றினார். வாய் கமலத்தை அழைத்தது.

"இஞ்செரண கமலம் ! சுடச்சுட ஒரு தேத்தண்ணி கொண்டா..ஸ்! என்னமாய் தலை வலிக்குது".

கமலத்துக்கு எரிச்சலாய் வந்தது. எனினும் தனது காரியத்தை நிறைவேற்ற வேண்டிய அவசரம் இருந்தபடியால் கடுப்பு எதையும் வெளிக்காட்டாமல் எழுந்து அடுப்படிக்குப் போனாள்.

இப்பொது சுந்தரலிங்கமும் கால்முகம் அலம்பிக் கொண்டுவந்து போட்டிக்கோவின் படிகளில் அமர்ந்து கொண் டிருக்க , கமலம் அவரிடம் சுடச்சுட தேநீர்க் குவளையை நீட்டினாள். ஒரு குழந்தையைப் போல் அதை ஆவலுடன் இருகைகளையும் நீட்டி வாங்கியவர் , மெதுவாகப் பருகத் தொடங்கினார்.

"ம்!... இப்பதான் கொஞ்சம் சுகமாயிருக்கு."

தேநீரின் ஆவி நாசித்துவாரத்தினூடாக உட்சென்று அவரை ஆசுவாசப் படுத்தியிருக்க வேண்டும். தலைவலி சற்றுக் குறைந்திருந்தது.

சமயம் பார்த்து கமலம் ரகுவின் கல்யாணப் பேச்சை எடுத்தாள். சுந்தரலிங்கம் அவள்மீது பாய்ந்தார்.

"இப்ப அவனுக்கு கல்யாணத்துக்கு என்ன அவசரம்? இந்தப் பங்குனி வந்தால் அவனுக்கு இருபத்தியாறு வயது தானே ஆகப்போகுது. உனக்கென்ன பைத்தியமே பிடிச்சிருக்கு?"

"இல்லையெண, அவனோட்ட பெடியள் எல்லாம் கலியாணம் முடிச்சு பிள்ளை குட்டியோட இருக்கினம். அவனுக்கு நாங்கள் வேளா வேளைக்கு கலியாணத்தைச் செய்து வைக்காவிட்டால் , அவனும் தரக்குறைவான இடங்களுக்கைபோய் விழுந்திட்டால் பேந்து நாங்கள் என்ன செய்யிறது? அதுக்காகத்தான் சொன்னனான்".

சட்டென சுந்தரலிங்கத்தார் அவளது கூற்றை எதிர்த்து நின்றார்.

"தரக்குறைவான இடங்களில போய்விழ என்ரை பிள்ளை அப்பிடி

ஒண்டும் பேயனல்ல."

"அப்பிடிச் சொல்லாதையுங்கோ, வயசுப் பிள்ளையளின்ரை மனம் அல்லாடும். அவைக்கு நல்லது கெட்டது விளங்காது. எங்கையாகிலும் படுகுழியுக்கை போய் விழுந்திடுவினம்."

ஏளனமாகச் சிரித்தார் சுந்தரலிங்கம்.

"அதை நீ கண்டு பிடிச்சிட்டாய். சும்மா விடு. வேணுமெண்டால் நாங்கள் ரெண்டு பேருமாய்ப் போய் பரமசிவம் அண்ணரிட்டை குயிலி யைப் பெண் கேட்பம். அவள்தான் அவனுக்கு எல்லா விதத்திலும் தகுதியானவள்."

தன் தலைமீது இடிவிழுந்ததுபோல் ஆக்ரோசமாகச் சீறினாள், கமலம்.

"அந்தப் பரதேசியளிட்டை என்ன சொத்து சுகம் இருக்குது? ஒரே யடியாக என்ரை பிள்ளையை படுகுழியுக்கை தள்ளுறதெண்டு தீர்மானிச் சிட்டியளோ?"

"ஏன் இப்ப துள்ளுறாய் எண்டு கேட்கிறன். அவளுக்கு என்ன குறை? படிப்பு, பதவி நல்ல பண்பு எல்லாமே அவளிட்டை நிறைஞ்சுபோய்க் கிடக்கு. நான் சொல்லுறதை ஒருக்கால் வடிவாய்க் கேள். அவளைவிட ஒரு நல்ல பொம்பிளையை நீ எங்கடை பெடிக்கு தேடிக்கொள்ள மாட்டாய்."

அவர்களது நீண்டநேர வாக்குவாதம் ஒரு முற்றுப்புள்ளியுடன் முடிவுக்கு வந்தது. ஈற்றில் சுந்தரலிங்கத்தாரின் நியாயங்கள் எதுவும் எடுபடவில்லை. கல்யாணத் தரகர் ஒருவரின் உதவியை நாடுவதென தீர்மானம் எடுக்கப்பட்டது.

தசரதரைப்போல் சுந்தரலிங்கம் மனைவியின் பிடிவாதத்துக்க ஈடுகொடுக்க முடியாமல் கைகளைப் பிசைந்து நிற்க, கையேகியை ஒத்தவளாய் கமலம் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டாள். அதன் விளைவாக கல்யாணத் தரகர்களின் கைகள் பணத்தினால் ஓங்க , சுந்தர லிங்கத்தின் கைகள் வரண்டு போயின. இதை உணராத கமலமோ , சீதனமே வாழ்க்கை என வெறியுடன் அலைந்தாள்.

***

குயிலியின் வீடு அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. குயிலி தனது துணிமணிகளை அடுக்கி பயணத்திற்கு தயாராகிக் கொண்டி ருந்தாள். புது இடம் எப்படி இருக்குமோ என்ற தயக்கம் அவளது மனதை ஆக்கிரமிப்பதை அவளால் உணர முடிந்தது. செல்லம் மகளை வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களில் தோன்றிய ஏக்கத்தை கவனித்த குயிலி அவளைத் தேற்றுவதற்கான வார்த்தைகளை அள்ளி வீசினாள்.

*“அம்மா! நான் என்ன வெளிநாட்டிற்கா போகப் போறன் ?. உதிலை இருக்கிற முல்லைத்தீவுக்குத்தானே போறன். அதுக்கேன் இப்படி யோசிக்கிறியள்? நினைச்ச உடனேயே ஓடிவந்து உங்கட கண்முன்னால நிற்பன். முகத்தை உம்மென்று வைக்காமல் கொஞ்சம் சிரியுங்கோம்மா”*

*தாயின் தாடையைப்பற்றி திருப்பினாள், மகள், செல்லத்தின் முகத்தில் சிரிப்பு வர மறுத்து விட்டது.*

*“எக்கணம் நீ அங்கைபோய் தனிய என்னெண்டு சமாளிக்கப் போறாய்? எண்டுதான் யோசனையாய்க் கிடக்கு”*

*கடகடவென்று வாய்விட் டுச் சிரித்தாள், குயிலி.*

*“அம்மா! நான் உங்கட குயிலி அம்மா, எதையும் சமாளிப்பன். நீங்கள் யோசிக்காமல் தைரியமாய் இருங்கோ”*

*மகளுக்கு மாற்றம் கிடைத்ததை அந்த பேதைத்தாயினால் சீரணிக்க முடியவில்லை. பரமசிவம் மகளை அழைத்துப்போய் புதிய இடத்தில் வசதிகளைத் தேடிக் கொடுத்து விட்டு வருவதாகக் கூறி அவளுடன் முல்லைத்தீவுக்குப் பறப்பட்டு விட்டார்.*

*“அம்மா! போட்டு வாறன்”*

*கலங்கிய கண்கள் குயிலியின் பார்வையை மறைத்தது. செல்லம் பதிலேதும் கூறாது தலையை மட்டும் ஆட்டினாள்.அக்காவை வழியனுப்பு வதற்காக புகழும் கணவனுடன் வந்திருந்தாள். இப்போதெல்லாம் அவள் அக்காவுடன் காழ்ப்புணர்ச்சியைக் காட்டுவதில்லை. மாறாக அவளுடன் அணைந்து நடந்து கொள்கிறாள். அக்காவினால்தான் தானும் சந்திரனும் ஒன்றுசேர முடிந்தது என்ற நன்றியுணர்வே மேலோங்கியிருந்தது.*

*புகழிடம் விடைபெற்றபோது குயிலி அவளிடம் ஒரு வேண்டு கோளையும் விடுத்தாள்.*

*“புகழ்! அம்மா, அப்பாவைப் பார்த்துக்கொள். உன்னை நம்பித்தான் அவவை விட்டுவிட்டுப் போறன்”*

*“நான் பாத்துக்கொள்ளுறன் அக்கா”*

*குயிலியும் பரமசிவமும் சாவகச்சேரி பஸ் நிலையம் நோக்கி நடந்தே போயினர்.*

*அவர்கள் போய் மறையும்வரை ஒழுங்கை முகப்பில் நின்றிருந்து இடைவெட்டாது பார்த்துக் கொண்டிருந்த செல்லம், திரும்பி வந்து வீட்டுக்குள் நுழைந்தாள். அது அவளுக்குத் தான் வாழந்த வீடாகத் தெரியவில்லை. ஆளரவமற்ற காடாகத் தோன்றியது. வாசற்படியில் அப்படியே அமர்ந்து கொண்டாள்.*

*புகழும், கணவனும் வாசலிலிருந்தே தங்கள் வீட்டிற்குத் திரும்பி*

*விட்டனர். புகழ் மட்டுமாவது வீட்டுக்குள் வந்து தன்னுடன் சில நேரம் அமர்ந்திருந்து பேசிவிட்டுப் போயிருக்கலாம் என செல்லத்திற்கு எண்ணத் தோன்றிற்று. விறைத்துப்போன மனநிலையுடன் எத்தனை நேரந்தான் அப்படியே குந்தியிருந்தாளோ? திடீரென வாசலில் கேட்ட அரவம் அவளைத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க வைத்தது.*

*“அம்மா!”*

*விஞ்ஞான சுற்றுலா ஒன்றுக்கு பல்கலைக்கழக மாணவர்களுடன் போயிருந்த மகிழ் ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டாள்.*

*“ஏனம்மா சோகமாய் இருக்கிறியள்? எங்கை அப்பா?”*

*கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள், மகிழ்,*

*“அது ஒண்டுமில்லையடி கொக்காவுக்கு இருந்தாப்போலை வேலை மாற்றம் எண்டு ஓடர் வந்திட்டுது. அதுதான் கொப்பர் அவளைக் கூட்டிக்கொண்டு முள்ளியவளைக்குப் போயிட்டார்.”*

*“அ... அப்பிடியே?”*

*வாயைப் பிளந்தாள், மகிழ்*

*மகளைக் கண்டதும் உள்ளத்திலும் உடம்பிலும் தென்பு வரப்பெற்றவளாய் செல்லம் எழுந்து சமையலறையை நோக்கி நடந்தாள். மகிழ் அவளை விடவில்லை. அக்காவின் இடமாற்றத்தைப் பற்றி கேள்விக் கணையாகத் தொடுத்து குடைந்தெடுத்து விட்டாள். எனினும் மகிழாவது பேச்சுத் துணைக்கு அருகில் இருப்பது செல்லத்துக்கு ஆறுதலாக இருந்தது.*

*மறுநாள் மாலை மங்கும் நேரம் பரமசிவம் களைத்து , ஓய்ந்து வீடுவந்து சேர்ந்தார். மகளுக்கு, தனது நண்பர் ஒருவர் மூலம் அறை ஒன்றை வாடகைக்குப் பேசி , தங்குமிட வசதி செய்து கொடுத்துவிட்டு வந்ததாகச் சொன்னார்.*

*“அவள் படிப்பிக்கப்போற பள்ளிக்கூடம் கிட்டவே இருக்கு?”*

*மகள் மீதுள்ள கரிசனை கேள்வியாக எழுந்தது.*

*“ஓமெண செல்லம், அவள் பள்ளிக்கூடத்துக்கு நடந்துபோக வசதி யான இடம்தான். ஒரு வயதுபோன மனுசியும், ரெண்டு கலியாணம் செய்யாத பொம்பிளைப் பிள்ளையளும் வீட்டில் இருக்கினம். ஊற்றங் கரைப் பிள்ளையார் கோவிலுக்கு பக்கத்திலைதான் வீடு இருக்குது. வேணு மெண்டால் அவள் அடிக்கடி போய் பிள்ளையாரைக் கும்பிட்டுக் கொள்ளலாம் கண்டியோ”*

*தனது கணவர் சாமர்த்தியமாகச் செயற்படுபவர் என்ற எண்ணம் பரமசிவத்தார்மீது அவளுக்கிருந்தது.*

*நிம்மதிப் பெருமூச்சு அவளையறியாமலே வெளியேறி அங்கலாய்த்த*

மனத்தை சாந்தப்படுத்தியது.

வழமைபோல் வீட்டில் பொழுதுகள் போய்க்கொண்டிருந்தாலும், குயிலி வீட்டுக்குள் வளைய வரும்போது இருக்கும் கலகலப்பு காணாமற் போயிருந்தது, செல்லத்தின் மனதில் அது ஒரு வெறுமையை ஏற்படுத்தியிருந்தது.

“பிள்ளை போயும் இரண்டு கிழமையாச்சு . போய் ஒரு “போஸ்ற்காட்“ போட்டவள்தான். பிறகு ஒரு அசுமாத்தத்தையும் காணயில்ல. எதுக்கும் ஒருக்கால் போய் அவளை நேரில பாத்துக் கொண்டு வாறது நல்லதெண்டு மனம் சொல்லுது. விடிய பஸ்சுக்கு வெளிக்கிட்டால் பொழுது சாயிற நேரம் வந்து சேர்ந்திடலாம். நாளைக்கு சனிக்கிழமை, மகிழுக்கும் வகுப்பு இல்லை. அவள் வீட்டில் நிற்பாள் தானே. நானும் இவருமாய் ஒரு நடை போயிட்டு வந்திடலாம்.”

எடுத்த முடிவை செயற்படுத்துவதற்கு கணவனிடம் அனுமதி கேட்பதற்காக கணவனைத் தேடிப் போனாள், செல்லம். வீடெங்கும் அவரைக் காணாததால் வாசற்புற படிக்கட்டில் அமர்ந்து பத்திரிகையில் மூழ்கியிருப்பாரோ? எனக் கருதியவளாய் , அங்கு விரைந்தாள்.

“அம்மா!..”

இன்ப அதிர்ச்சியில் மெய்மறந்து நின்றவளை . கையிலிருந்த பொதியைக் கீழே இறக்கி வைத்துவிட்டு ஓடி வந்து கட்டிக் கொண்டாள், குயிலி.

***

குயிலியின் வரவினால் மீண்டும் பரமசிவத்தாரின் வீடு களை கட்டியிருந்தது. செல்லம் புத்துயிர் பெற்றவள்போல் ஓடியோடி மகளுக்கு விருப்பமான உணவுப் பதார்த்தங்களைச் சமைத்தாள். குயிலி எவ்வளவோ தடுத்தும் அவள் கேட்டபாடாயில்லை. பரமசிவமும், மகிழும் செல்லத்தை பார்த்து கண்ஜாடை காட்டி தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் கூழ் காய்ச்சுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. முன்னொரு காலத்தில் ஏழ்மைநிலை காரணமாக ஒடியல்கூழ் காய்ச்சி வயிற்றுப் பசியைப் போக்கிக் கொண்ட குடும்பம் அவர்களுடையது. அடிக்கடி குடித்துப் பழகியதாலோ என்னவோ அவர்கள் அனைவருமே கூழ்ப் பிரியர்களாக இருந்தனர்.

பரமசிவம் கடல் உணவுவகைகளை அள்ளிவந்து போட, செல்லம் அவற்றைக் கழுவுவதில் ஈடுபட்டாள். கூழ் விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்த சிவகாமி, செல்லத்துக்கு உதவியாக செயற்பட்டாள். குயிலி மரக்கறிகளை நறுக்க , மகிழ் கூழ் உலையை அடுப்பிலேற்றி மூட்டினாள். சுற்று முற்றும் ஒருதரம் கண்களால் துளாவிவிட் டு செல்லம் சிவகாமியிடம் வினவினாள்.

*“எங்கை புகழைக் காணயில்ல. அவள் வரயில்லையோ?”*

*சிரித்துக்கொண்டே பதிலிறுத்தாள் சிவகாமி,*

*“புகழின்ரை பகிடியைக் கேட்டியளே, கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி, என்று சொல்லுறவை. நான் குளிச்சுப் போட்டு வாறன் நீங்கள் முன்னுக்குப் போங்கோ மாமி என்று சொல்லி என்னை அனுப்பி விட்டவ”*

*“அவள் எப்பவும் அப்படித்தான் சரியான வேலைக்கள்ளி”*

*கதை பேசியவாறே அனைவரும் மும்முரமாய் செயற்பட , கூழ்ப்பானை அடுப்பிலிருந்து இறக்கப்பட்டது. குயிலியும், மகிழும் வீட்டின் பின்புறத்து முற்றத்தில் நின்றிருந்த பலாவின்கீழ் பாய்களை விரித்து இருந்து கூழ் குடிப்பதற்கு ஏதுவாக ஆயத்தம் செய்தனர்.*

*அப்போது கையில் ஒரு பச்சை வடலி ஓலையுடன் பரமசிவம் வர, அவரைப் பின்தொடர்ந்து கமலமும், சுந்தரலிங்கமும் வந்தனர். அப்பாதான் அவர்களை அழைத்து வந்திருக்கிறார் என்பத குயிலிக்கு ஒரு நொடியில் புரிந்து போயிற்று.*

*“வாணெ மச்சாள்!” என்று செல்லம் கமலத்தை வரவேற்க ,*

*“மச்சான்! இப்பிடி இந்தப் பாயிலை இருப்பம் என்று பரமசிவம் பகன்றார்.”*

*பரமசிவம் வந்து அழைத்த போது அவர்களுடன் உறவு கொண்டாடி கூழ் குடிக்க கமலத்துக்கு மனம் ஏவவில்லை இருந்தாலும் செல்லம் அத்தாச்சியின் கையால் காய்ச்சிய கூழ் அமிர்தமாயிருக்கும் என அவனது நா உமிழ் நீரைச் சுரக்கத் தொடங்கி விட்டது. ஆசையை அடக்கமாட்டாத வளாய் அண்ணரோடு புறப்பட்டு விட்டாள். இது தான் உண்மையான நிலைப்பாடு.*

*பரமசிவம் கையிலிருந்த வடலி ஓலையை வெட்டிக் கிழித்து மூன்று பிழாக்களைக் கோலி முடிந்தார். ஒன்று தனக்கு மற்றவை இரண்டும் தங்கை கமலத்துக்கும் மைத்துனர் சுந்தரலிங்கத்துக்குமாக கணக்கெடுத்துக் கொண்டவர், மனைவியை அழைத்து பிழாக்களை அவளிடம் நீட்டினார். இதற்கிடையில் பானையிலிருந்த கூழை மண் சட்டியில் வார்த்து வந்து குயிலி அம்மாவிடம் நீட்ட, அவள் அதை பக்குவமாக பிழாவுக்குள் வார்த்து வந்த அவர்கள் மூவரிடமும் கொடுத்தாள். அவர்களும் ஆவலோடு இரு கைகளிலும் பிழாவை ஏந்தி ரசித்து ருசித்து குடிக்கத் தொடங்கினர். ஒரு வாயை உறிஞ்சிக் குடித்து விட்டு கமலம் சொன்னாள்.*

*“அத்தாச்சியின்ரை கை பட்ட கூழ் உண்டாலே தனி ருசிதான். கூழ் காச்சிறதில அவவை அடிக்க யாராலும் ஏலாது.”*

*கமலத்தின் புகழ்ச்சி பரமசிவத்தாரை சீண்டி விட்டது.*

*“என்ன சொல்லுறாய் நீ. செல்லம் என்னைக் கலியாணஞ் செய்து வரேக்க சமைக்கவே தெரியாது. நானெல்லோ அவவுக்கு ஒவ்வொன்றாய் சொல்லிக் குடுத்த நான் அது தெரியாதே உனக்கு”*

*“அதெல்லாம் தெரியுமண்ணை இருந்தாலும் கைப்பக்குவம் என்றது எல்லாருக்கும் வந்து விடாது கண்டியளோ”*

*சுந்தரலிங்கம் இப்போது வாய்திறந்தார்.*

*“இப்ப நீங்கள் ரெண்டு பேரும் கதையை விட்டிட்டு கூழைக் குடியுங்கோ. முள்ளு கிள்ளு போய் தொண்டயில சிக்கப் போகுது”*

*சிறிது கூழ் போய் வயிற்றுக்குள் இறங்கியதும் பரமசிவத்தாரின் மனதில் ஒரு சபலம் தட்டியது.*

*சாய்... இந்த ஊட்டுக்குள்ள அவன் வயிரன் எங்கட பனங் கூடலுக்கை இருந்து இறக்கிக் கொண்டு வாற கள்ளில ஒரு பிழாவை உறிஞ்சினால் எப்படி இருக்கும்? அங்கலாய்த்த மனத்தை வெகு சிரமமப்பட்டு அடக்கிக் கொண்டார்.*

*“ அப்பா! கொஞ்சம் கூழ் வார்த்துத் தரட்டுமே?”*

*குயிலியின் குரல் அவரது மனத்தில் கொஞ்சம் மீதியிருந்த ஆசையையும் அணைத்துவிட்டது.*

*“பனங்கூடலை அழிச்சு வீடு கட்டியாச்சு, பிறகேன் இந்த மனதுக்கு அப்படியொரு விபரீத ஆசை”*

*தன்னைத் கானே நொந்து கொண்டவராய் குயிலி வார்த்துத் தந்த கூழை குடிக்கத் தொடங்கினார்.*

*வயிறு நிரம்பியதும் கமலத்தின் வாய் வார்த்தைகளை வீசத் தொடங்கியது.*

*“அண்ணை! இவன் தம்பிக்கு நல்லதொரு சம்மந்தம் பொருந்தி வந்திருக்கு”*

*தங்கை கமலத்தின் பேச்சைக் கேட்டவருக்கு தொண்டைக்குள் போய்க் கொண்டிருந்த கூழ் விழுங்க முடியாதவாறு பொறுக்க நாசுக்குள் அது புகுந்து புரையேறிவிட்டது. செல்லமும் குயிலியும் ஓடி வந்து அவரது பிடரியிலும் உச்சியிலும் தட்டினர். புரையேறியதால் ஏற்பட்ட உபாதை கண்களினூடு கண்ணீராக வழிந்தது. செல்லம் அதனைத் தனது சேலைத் தலைப்பினால் ஒற்றி விட்டாள்.*

*எல்லோரும் ஒரு கணம் துடித்துப் பதைத்துவிட்டனர். சுந்தரலிங்கம் மனைவியை சுட்டெரித்து விடுபவர் போல ஒரு பார்வை பார்த்தார். அத்துடன் கூழ் குடிக்கும் படலம் நிறைவுக்கு வந்தது.*

*கமலம் அங்கு கூறிய வார்த்தைகளை பரமசிவமும் சுந்தரலிங்கமும்*

தவிர வேறு எவரும் அறிந்திலர். பரமசிவம், தனது மனப்பெட்டகத்தினுள் அந்தச் செய்தியை வைத்துக் கொண்டு நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருந்தார். அவரது மனத்தில் அடிக்கடி போராட்டம் எழும். கூடவே ஒரு சமாதானத்தையும் தேடிக் கொள்ளுவார். கமலத்துக்கு பெரிய இடத்தில் சம்மந்தம் செய்ய ஆசை இருக்கலாம். ஆனால் ரகு அதற்கு சம்மதிக்க வேணுமே என்று நினைக்கும் போது மனம் சாந்தியடையும்.

இப்போதெல்லாம் வார இறுதி நாட்களில் குயிலி வீட்டிற்கு வந்து தங்கிப் போகிறாள். தவணை விடுமுறை காலங்களில் வீடு களைகட்டும், மகிழுக்கும் பட்டப்படிப்பு நிறைவடைந்து விட்டது. அடுத்த தவணைத் தொடக்கத்திலிருந்து அவளுக்கு தான் படித்த பாடசாலையிலேயே கற்பிப்பதற்கு அனுமதியும் கிடத்தாயிற்று. எல்லாமே குயிலியின் சமயோசிதமான முயற்சியின் பலன்தான். அத்துடன் அவர்களது புது வீட்டுக்கும் வன்னியிலிருந்து ஒரு ஆசிரியர் குடும்பத்தை வாடகைக்கு இருத்த ஒழுங்கு செய்திருந்தாள் குயிலி . பொதுவாக பரமசிவத்தாரின் வாழ்க்கையெனும் ஓடம் எதுவித இடையூறுமின்றி மெதுவாக நீந்தி கரையை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது. இருந்த போதிலும் பரமசிவத்தின் மனதில் ஒரு குறுகுறுப்பு அடிக்கடி தோன்றி அவரை அலைக்கழிக்கத் தவறுவதில்லை.

***

ரகு வேலைத் தளத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பியிருந்தான். உடலும் மனமும் அசதியினால் துவண்டு போவதை அவனால் உணர முடிந்தது. உடை மாற்றியவன் நேராக குளியலறைக்குப் போய் வியர்த்திருந்த உடலைக் கழுவ முற்பட்ட போது மேனி புல்லரித்தது. அவனையும் மீறி பற்கள் கிட்டத் தொடங்கின. தனது உடல் நிலை பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டவனாய் அவன் மெதுவாக வந்து கட்டிலில் விழுந்த துடன், போர்வையை இழுத்து மூடியும் கொண்டான். அவனையறியாமலே வாய் முனகத் தொடங்கியது.

விசிலடித்தவாறே அறைக்குள் நுழைந்த அவனது அறை நண்பனான கோபி, அவனது நிலையைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

“என்னடா மச்சான்! இப்பிடி போர்த்து மூடிக் கொண்டு படுத்திட்டாய்”

“என்னால முடியலையடா”

முனகினான், ரகு, கோபி, தன்னிடம் கைவசமிருந்த பனடோல் மாத்திரைகளில் இரண்டை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு தண்ணீர்ப் போத்தலையும் நீட்டினான். வேதனை தாங்க மாட்டாதவனாய் ரகு மள மளவென்று பனடோலைப் போட்டு விழுங்கி விட்டு மீண்டும் படுக்கையில் சுருண்டான். சில நிமிடங்களில் உடல் உபாதை குறைந்து வியர்க்கத்

தொடங்கியது. அவனை அவதானித்துக் கொண்டிருந்த கோபி அவனது போர்வையைத் தளர்த்தி விட்டு மின் விசிறியை சுழல விட்டான். இதமான தூக்கம் ரகுவைத் தழுவத் தொடங்கியது.

திடீரென அவனது கண் முன் கடற்கரை விரிந்தது. கரையில் கிடந்த பாறாங் கல் ஒன்றின் மீத ஒரு உருவம் தெரிந்தது. உற்றுப் பார்த்தான். வேறு யாருமல்ல அது குயிலியேதான். தேம்பித் தேம்பித் அவள் அழுது கொண்டிருந்தாள்.

"ஏன் அத்தான் என்னைக் கை விட்டனீங்கள்?"

நிச்சயமாக அது குயிலியின் குரலேதான்.

"நான் உன்னைக் கைவிடுவேனா குயிலி" என்று சொல்லி அவளது தோளைத் தொடுவதற்காக கைகளை நீட்டிய போது … அங்கே குயிலியைக் காணவில்லை.

திடுக்கிட்டு விழித்தவன் எழுந்து சுற்று முற்றும் பார்த்தான். அப்பொழுதுதான் அவனுக்கு தான் கண்டது கனவு என்ற உணர்வு உறைத்தது. மீண்டும் படுத்துக் கொண்டான். குயிலி அவனது நினைவுகள் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டாள்.

இத்தனை காலமும் ஒரு நீண்ட வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டியதாயிற்று. அதனால் அவன் அல்லும் பகலும் ஓய்வின்றி உழைக்க வேண்டிருந்தது. இந்த வேலைத் திட்டத்தை அவன் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினால் அவனுக்கு பதவி உயர்வு காத்திருந்தது. எனவே, அவன் தன் சொந்த விருப்பு வெறுப்புக்களையும் மறந்து அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்தான். இப்பொது வெண்ணெய் திரண்டு வரும் வேளை யில் அவனது உடல் நோய்வாய்ப்பட்டு விட்டது. எனது உடல் தளர்ந்தா லும் மனம் தளர்ந்து போகமாட்டேன், மனம் கங்கணம் கட்டிக் கொண்டது.

இந்த வேலைத் திட்டம் வெற்றியாக முடிந்ததும் நான் அந்த வெற்றியைக் கொண்டாட குயிலிக்கு ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிக் கொடுக்க வேண்டும். என் இதயத்தையே அன்பளிப்பாகக் கொடுக்கப் போகின்றேன். குயிலி! நீயில்லாமல் நானில்லை. மனம் துடித்துக் கொண்டிருக்க நித்திராதேவியின் பிடிக்குள் அவன் சிக்கிக் கொண்டான்.

ரகுவின் கடின உழைப்பு அவனுக்கு (Chief Engineer) சீவ் இன்ஜினியர் பதவியை தேடித் தந்தது. அவன் ஊருக்குப் போய் வந்தும் கிட்டத்தட்ட ஒரு வருடமாகிவிட்டது. வேலைக்கு இரண்டு கிழமை லீவு போட்டு ஊருக்குப் புறப்பட்டான். புறப்பட்டவனது சட்டைப் பையில் பளிச் சென்ற தங்க மோதிரம் கிடந்து ஜொலித்தது. அவன் அடிக்கடி சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். குயிலிக்கு அவன் தனது அன்பின் அடையாளச் சின்னமாய் அதைக் கொடுக்கப் போகிறான். ஓராயிரம் கற்பனைக் குவியல் அவனது உள்ளத்தை நிறைத்திருக்க அவன் வீடு வந்து

சேர்ந்தான்.

வீட்டுக்கு வந்து இறங்கியவனைக் கண்டதும் கமலம் முகத்தில் கேள்விக் குறியுடன் அவனை வரவேற்றாள்.

"போன கிழமைதானே மணி ஓடர் அனுப்பின நீ. அதுக் கிடையில் வந்து நிற்கிறாய்?." மாதக் கடைசியில் தவறாமல் தபாலில் வந்து சேரும் மணி ஓடர் கைக்கு வந்து சேர்ந்து விட்டால் போதும் கமலத்திற்கு அதை மாற்றி தனது சேமிப்பில் போட்டுக் கொள்ளுவாள். தவிர மகனைப் பார்க் வேண்டும் குலாவ வேண்டும் என்ற ஏக்கமெல்லாம் கிடையாது.

தாய் கூறியது ரகுவின் காதில் விழவில்லை அவனது எண்ண மெல்லாம் குயிலியையே சுற்றி சுற்றி சுழன்று கொண்டிருந்தது. அவளை எப்படி எப்படிச் சந்திப்பது?... தனது அன்பின் அடையாளத்தை எப்படி கையளிப்பது என்ற எண்ணமே மனதை நிறைத்திருந்தது.

காலை உணவை உட்கொள்ளும் போது அவன் மெதுவாக அம்மாவின் வாயைக் கிளறினான்.

"அம்மா! பரமசிவம் மாமாவின் புது வீட்டில் ஆர் இருக்கிறது.? அவை அங்கையே போயிட்டினமோ?"

மகனின் கேள்வி கமலத்துக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது.

"இப்ப உனக்கேன் அவளவயின்ரை கதை பேசாமல் சாப்பிடு"

அதற்கு மேல் அம்மாவிடம் எதையும் கேட்டறிய முடியாது என்பதை நன்குணர்ந்து கொண்டவனாய் ரகு மௌனத்தைத் தழுவிக் கொண்டான். சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு கமலமே வாய் திறந்தாள்.

"அந்த வீட்டில குயிலி ஆரோ வாத்தி குடும்பத்தை முள்ளியவளை யில இருந்து கொண்டு வந்து வாடகைக்கு இருத்தியிருக்கிறாள் என்று கேள்வி."

"முள்ளியவளைத் தொடர்பு குயிலிக்கு எப்படி ஏற்பட்டது."

"குயிலி இப்ப இஞ்சை இல்லை. முள்ளியவளையிலதான் படிப்பிக் கிறாளாம்."

அதைக் காதில் வாங்காதவன் போல நடித்தாலும் உள்ளத்தில் தோன்றிய குறுகுறுப்பு அவனை அலைக்கழித்தது.

இரவு ரயிலில் நித்திரையே கொள்ள முடியவில்லை. ஒரே சன நெருக்கடி எனக் கூறியவன் படுக்கைக்குப் போனான். அவனுடைய மனமோ குயிலியை எப்படி சந்திக்கலாம் எனத் தீவிரமாக ஆராயத் தொடங்கியது.

கமலம் சமையல் கட்டுக்குள் நுழைந்து சமையலைக் கவனிக்கத் தொடங்கினாள். கைகள்தான் இயங்கிக் கொண்டிருந்தனவே தவிர, மனம் போராட்டத்தில் மூழ்கியிருந்தது. காலம் தாமதிக்கக் கூடாது"

தீர்க்கமானதொரு முடிவுடன் சமையலைக் கவனித்தாள். அன்று மதிய போசனம் அருந்திய பின் கமலம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தவள் கணவனைத் தூண்டி விட்டாள்.

"மெய்யேயப்பா! உவன் பிள்ளைக்கு நாங்கள் பேசி வைச்சிருக்கிற சம்மந்தத்தைப் பற்றிச் சொல்லுங்கோவன். அவள் பெடிச்சியின்ர படத்தையும் காட்டுங்கோ. அவன் பார்க்கட்டும்."

ரகுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அம்மா! என்ன சொன்னியன் எனக்கு சம்மந்தமோ.... நான் வாழப் போற வாழ்க்கை. அது எனக்குப் பிடித்ததாய்த்தான் இருக்க வேணும்."

"நீங்கள் பார்க்கிற பெண்ணுக்கு தாலி கட்ட நான் ஒன்றும் தலையாட்டி பொம்மையல்ல."

"உன்னுடைய நினைப்பு எனக்கு தெரியாது. நீ நல்ல வசதியோட வாழ வேணும் எண்டது தான் எங்கட ஆசை. அந்த ஆசையில மண் அள்ளிப் போட்டிடாத"

இப்படியாக அவர்களுள் வாக்குவாதம் மூண்டு, அதன் விளைவாக வந்த உடனேயே ரகு வீட்டை விட்டு வெளியேறினான். பெற்றோருக்கும் பிள்ளைக்குமிடையில் பாரிய விரிசல் விழுந்து விட்டது.

***

வருடம் ஒன்று ஓடி மறைந்தது. குயிலி, முள்ளியவளைக்கும் வீட்டுக்குமாக வந்து போய் காலம் கழிந்து கொண்டிருந்தது. குயிலி இப்போது தான் தங்கியிருக்கும் வீட்டுக்கார அம்மாவின் பிள்ளைகளையும் தனது சொந்த சகோதரர்களாகவே கணிக்கத் தொடங்கி விட்டாள். அவர்களுள் மூத்த பெண்ணுக்கு வயது முப்பத்தொன்பதாகியும் அவள் கன்னியாகவே வாழ்ந்து கொண்டிருந்தாள். எப்படியாவது அவளுக்கு ஒரு வாழ்வு தேடிக் கொடுத்திட வேண்டும் என பிரயத்தனப்பட்டாள் குயிலி . நீண்ட நாள் பிரயாசையின் பின் ஒரு தாரமிழந்த ஆசிரியர் ஒருவர் அவளிடம் சிக்கினார். இரு தரப்பினரையும் சம்மதிக்க வைத்து அவர்களை ஒன்றிணைக்க அவள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இப்போது அவர்களது குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக போய்க்கொண்டிருக்கிறது. மொத்தத்தில் பரமசிவமும் செல்லமும் கூட நிறைவடைந்தனர்.

இப்படியாக மற்றவர்களை வாழ வைத்துக் கொண்டிருந்த குயிலி தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க நேரம் கிடைப்பதில்லை. எப்படியும் ரகு அத்தான் தன்னைக் கரம் பற்றுவான் என்ற அதீத நம்பிக்கையே மனதில் ஆழ வேரூன்றியிருந்தது.

ஒரு சமயம் வார இறுதி நாட்களில் அவள் வீட்டிற்கு வந்திருந்த போது மகிழ் சொன்னாள் "அக்கா! ரகு அத்தான் மாமா மாமியோடு சண்டை

பிடித்துக் கொண்டு போய் விட்டாராம் இப்போது வீட்டோடு தொடர்பில்லையாம்”

“சே அப்பிடியிருக்காது”

“எப்படியும் என்னை ரகு அத்தான் கை விடமாட்டார்.”

“மகிழ்! பிள்ளை மகிழ்”

அம்மாவின் அழைப்பு அவர்களது உரையாடலைத் துண்டிக்க, அவர்கள் சமையலறையை நோக்கி நகர்ந்தார்கள். அங்கே, அம்மா ஒரு கிண்ணத்தில் புளிக் கஞ்சியை ஊற்றி அதை ஒரு ஓலைப் பெட்டிக்குள் வைத்து மகிழிடம் கொடுத்தாள்.

“இதைச் சுடச்சுடட கொண்டு போய் சின்னக்காவிடம் குடுத்திட்டு வா சூடாற முந்தி குடிக்கச் சொல்லு. ஒரே ஓங்காளம் எண்டு சொல்லி பட்டினியாகக் கிடக்கிறாள்.”

மகிழ் போய் விட்டாள் குயிலிக்கு எல்வாமே புரிந்து விட்டது. “ஓஹோ! புகழ் முழுகாமலிருக்கிறாள் போல. எங்கட குடும்பத்துக்கு ஒரு குட்டி வாரிசு வரப்போகுது.”

மனம் துள்ளியது. அம்மாவிடம் சொல்லிக் கொண்டு சாவகச்சேரிக்கு புறப்பட்டுப் போனாள். சற்று நேரத்தில் ஒரு பிரம்புக் கூடை நிறைய பழ வகைகளுடன் வந்தாள். அதனைக் கண்ணுற்ற செல்லம் வியப்பினால் அதிர்ந்து நின்றாள். தான் வாழா விட்டாலும் மற்றவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து வைத்திருக்கிறாளே. உண்மையிலே இவள் ஒரு தெய்வப் பிறவியாகத்தான் இருக்க வேண்டும்.

“ஒரு எட்டு நடந்து போய் நீயே அவனிட்ட குடுத்திட்டு வா பிள்ளை “

“இல்லையம்மா அது நல்லாயிராது நீங்களே கொண்டு போய் குடுங்கோ”

மகளது மனப் பக்குவத்தை எண்ணி வியந்தாள் செல்லம்.

அன்று மாலையே அக்காவைத் தேடி வந்தாள்., புகழ்

“அக்கா! நீ வாங்கி அனுப்பின கொய்யாப்பழம் நல்லாயிருந்தது”. என்று அவள் கூறிய போது குயிலியின் உச்சி குளிர்ந்தது.

“பொறு புகழ் நான் வெள்ளிக்கிழமை வரேக்க உனக்கு புளிச்ச கொய்யாப் பழம் நிறையவே கொண்டு வாறன். அங்கை அது நிறையவே இருக்கு.”

புகழின் கண்கள் ஆவலுடன் விரிந்ததைப் பார்த்து ரசித்தாள் குயிலி, அத்துடன் அவள் நின்று விடவில்லை. வாராவாரம் வரும் போதெல்லாம் விதவிதமான பழவகைகள், தின் பண்டங்கள் என நிறையவே கொண்டு வந்தாள். அவளது வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் புகழ்

இப்போது அக்காவின் செல்லப் பிள்ளையாக மாறிவிட்டாள்.

மாதங்கள் உருண்டன. புகழின் வயிற்றுப் பகுதியும் மெதுமெது வாகப் பெருக்கத் தொடங்கியது. வயிற்றைச் சுமந்தவாறு அவள் நடமாடு வதைப் பார்க்கும் போது குயிலிக்கு அவள் மீது பச்சாத்தாபம் ஏற்படும். என்ன செய்வது பெண்ணாகப் பிறந்தவர்கள் குழந்தையை தம் வயிற்றில் சுமந்து தானே தீரவேண்டும். இது இயற்கையின் நியதியல்லவா? சுமை இறங்க வேண்டிய நாள் நெருங்க நெருங்க புகழின் மனத்தை பயம் கவ்விக் கொண்டது.

அந்தக் கால கட்டத்தில் அதிர்ச்சியான சம்பவம் ஒன்று நடந் தேறியது. திடீரென கமலத்திற்கு இரத்த அழுத்தம் ஏறி அவளது உடல் நிலையைப் பாதித்தது, மட்டுமல்லாமல் கோமா நிலைக்கு கொண்டு போய் விட்டது. அவளை வைத்தியசாலையில் அனுமதித்து விட்ட சுந்தரலிங்கம் மகனுக்குத் தந்தி அடித்தார்.

“அம்மாவுக்கு கடுமை உடனே வரவும்.”

தந்தியைக் கண்டதும் பதறித் துடித்துக் கொண்டு ரகு ஊருக்குப் புறப்பட்டான். என்னதான் கருத்து வேற்றுமையிருந்தாலும் தாய் சேய் உறவல்லவா? பற்று அற்றுப் போகுமா? மகன் வந்து பார்க்கும் போது கமலம் கண் விழித்திருந்தாள். கண் வெட்டாது மகனது முகத்தை உற்று நோக்கியவளது உணர்ச்சியின் கொந்தளிப்பாக கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. நெகிழ்ந்து போனவனாய் ரகு கண்ணீரைத் துடைத்து விட்டான். அச் செயல் அவளுக்கு ஆறுதலையும் மனநிறைவை யும் கொடுத்திருக்க வேண்டும். அப்படியே கண்ணயர்ந்து விட்டாள்.

ரகு டாக்டர்களைச் சந்தித்து அம்மாவின் உடல் நிலை பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவளுக்கு இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு உயர்ந்திருக்கிறதாம். அத்துடன் பிறசர் அதிகரித்ததால்தான் அவளுக்கு “ஸ்ரோக்” வந்து கோமா நிலைக்கு அவளைத் தள்ளியிருக்கிற தாம். எல்லாவற்றிற்கும் வைத்தியம் நடந்து கொண்டிருந்த போதிலும் அவளது நிலைமை சீரடைய வேண்டுமாயின் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அது உங்களது பொறுப்பு என டாக்டர் அவனுக்கு அறிவுரை கூறி விட்டார். அது அவனுக்கு அதிர்ச்சி யாக இருந்தது.

ஒருவாறு கமலம் உடல் நிலை தேறி வீட்டுக்கு வந்து விட்டாள். ஒரு கையும் காலும் இயங்க முடியதா நிலையில் அவளுக்கு படுக்கையே கதியாயிற்று. பரமசிவமும் செல்லமும் வந்து அவளைப் பார்தது விட்டுப் போனார்கள். அவர்களைக் கண்டதும் கமலம் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டுவிட்டாள். முன்னரும் அவள் வைத்தியசாலைக் கட்டிலில் கிடந்த போது செல்லம் இடியப்பமும் சொதியும் கொண்டு போயிருந்தாள். கமலம் அதைத் திருப்பி அனுப்பி விட்டாள். தேவகி அவளைத் தன்னுடன் அழைத்துப் போகப் போவதாக செய்தியறிந்து தான்

இப்போதும் அவர்கள் வந்திருந்தார்கள். இப்போது அவர்கள் தேவகியிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட எத்தனிக்கையில் அவளே வலிய வந்து சொன்னாள்.

"தம்பி நேற்றுக் கொழும்புக்குப் போயிட்டான்"

பதிலேதும் சொல்லாமல் அவர்கள் கிளம்பினர்.

இப்படியே எதுவித காரணமுமின்றி அந்த இரண்டு குடும்பத் தினருக்கு மிடையில் விரிசல் ஏற்பட்டு விட்டது.

***

வேலைத் தளத்திலிருந்து களைத்து ஓய்ந்து அறைக்குத் திரும்பிய ரகுவிடம் கோபி ஒரு தந்தியை நீட்டினான்.

"இது எப்படா வந்தது"

கேட்டுக் கொண்டே அதை வாங்கிப் படித்தான்.

"அம்மாவின் நிலை மோசம். உடன் வரவும்"

இந்தத் தடவை தேவகியின் கணவன்தான் தந்தி அனுப்பியிருந்தான். இப்போது கமலம் அவர்களது வீட்டில்தானே தங்கியிருக்கிறாள். தந்தியைப் பார்த்தவாறே விறைத்துப் போய் நின்றவனை கோபி எழுப்பினான்.

"என்னடா மச்சான் யோசிக்கிறாய்? யோசிக்குறத்துக்கு இது சம்பவ மில்லை. வெளிக்கிடு கெதியாய் வேணுமெண்டால் நானும் கூட வரட்டே?"

"ச்சீ வேண்டாமடா"

என்று சொன்னவன் மளமளவென்னு சில துணி மணிகளை எடுத்துப் பயணப் பைக்குள் அடைத்துக் கொண்டான்.. அதை எடுத்து தோளில் கொளுவியவாறு புறப்பட்ட போது கோபியும் அவனுடன் கூட ரயில்வே நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தான்.

"கடவுளே! அம்மாவுக்கு ஒண்டும் ஆகியிருக்கக்கூடாது மனம் இறைஞ்சியது. அதிகாலை வேளை யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் வந்து இறங்கியவனை தேவகியின் கணவன் வரவேற்றான். அவனுடைய முகத்தைப் பார்க்க திராணியற்றவனாய் ரகு தலை குனிந்து கொண்டான். மைத்துனன் கார்க் கதவை திறந்து விட்டதும் அதில் ஏறி அமர்ந்து கொண்ட போது தான் கவனித்தான். வேறும் இருவர் காருக்குள் இருந்தனர். கேள்வி கேட்கும் நேரமல்ல அது என்பதை உணர்ந்து கொண்டவன் வாளாவிருந் தான்.

தேவகியின் வீட்டின் முன் கார் வந்து நின்றது. கதவை விட்டு இறங்கிய போது தான் அவன் கவனித்தான். வீட்டு வாசலில் பலர் கூடி யிருந்தனர். நிச்சயமாக அம்மாவுக்கு ஏதோ நடந்து விட்டது. கணக்கெடுத்த மனம் பட பட வென அடிக்கத் தொடங்கியது. வேறு வழியின்றி மெதுவாக

*வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தான். வைத்தவனது கண்களோ ஆச்சரியத்தால் அகல விரிந்தன.*

*ஹால் வாசலில் அம்மா சக்கர நாற்காலியில் வீற்றிருந்தாள். சரிகைப் புடவை, நெற்றியில் வட்ட வடிவான குங்குமப் பொட்டு அலங்கரிக்க உண்மையிலேயே அம்மனை நினைவுபடுத்தியது அவளது தோற்றம். விழித்து நின்றவனைப் பார்த்து அவள் ஆணையிடும் தோரணையில் கூறினாள்.*

*"ரகு என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய் இண்டைக்கு உனக்கு கலியாணம் மாப்பிள்ளை அழைக்க இப்ப வரப் போகினம். கெதியாய்ப் போய் ,குளிச்சு வெளிக்கிட்டு வாற வழியைப் பார்"*

*அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் அவனுடன் காரில பயணித்த அந்த இருவரும் அவனது இருபக்கத் தோள்களிலும் பற்றி அவனை குளிய லறை நோக்கி அழைத்துப் போயினர். இப்போது அவன் ஒரு பொம்மையைப் போல் இயங்கினான். தான் காண்பது கனவா அல்லது நனவா என்ற பிரமை அவனை ஆட்கொண்டிருந்தது.*

*எப்படியோ கொந்தளிக்கும் இதயத்துடன் அவன் மாப்பிள்ளையாய் இயங்கி அம்மா பார்த்து வைத்த அந்தப் பட்டணத்துப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்ட வேண்டியதாயிற்று. தாலி கட்டி முடிந்ததும் அவனுக்குப் போட்டிருந்த காவல் விலக்கப்பட்டு விட்டது. ரகு மனதுக்குள் கறுவிக் கொண்டான்.*

*இப்போது வேண்டுமானால் அம்மாவின் கை ஓங்கியிருக்கலாம். ஆனால் அது நீடிக்காது. நீடிக்க நான் விடமாட்டேன்.*

*அன்றைய இரவு புதுமணத் தம்பதிகள் தனியறையில் தனித்து விடப்பட்டபோது ரகு அந்தப் பெண்ணிடம் தன் மனதைத் திறந்து ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் உளறிக் கொட்டினான். அவளும் அவனது கதையை மனப்பூர்வமாக நம்பினாள்.*

*அவளும் தனக்கேற்பட்ட ஏமாற்றத்தை மனம் திறந்து அவனிடம் சொன்னாள். ஏற்கனவே தான் ஒரு வசதி குறைந்த வாலிபனைக் காதலித்த தாகவும் தனது தந்தை அவளது காதலை நிராகரித்து வலுக்கட்டாயமாக கொழும்பிலிருந்து தன்னை இங்கு அழைத்து வந்து மணமகளாக்கியதையும் கண்ணீர் மல்கக் கூறி அவனுடைய காலடியில் விழுந்தாள்.*

*"மனம் ஒன்றாத இந்த வாழ்க்கையை உங்களுடன் வாழ்வதை விட நான் தற்கொலை செய்து எனது உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்து விட்டேன்."*

*ரகுவுக்கு தர்ம சங்கடமாய் போய்விட்டது. எனினும் மனதில் ஒரு நிம்மதி தோன்றியது. தீவிரமாகச் சிந்தித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான்.*

“எங்கள் இருவரையும் பொறுத்த வரையில் இது கட்டாயக் கல்யாணம் தான். நாங்களே அதற்கு ஒரு விமோசனம் தேடிக்கொள்வோம். இப்போது நீ அழுகையை நிறுத்து”

மகுடிக்கு கட்டுண்ட நாகம் போல அவள் தனது கண்ணீரை துடைத்துக் கொண்டாள். மீண்டும் அவன் அவளுக்கு வலியுறுத்திச் சொன்னான்.

“நீ அவசரப்பட்டு ஏதேனும் விபரீத முடிவை எடுத்து விடாதே, என்னை வாழ்நாள் முழுவதும் பழிச் சொல்லை ஏற்க வைக்க மாட்டேன் என்ற சத்தியத்தை மட்டும் தந்துவிடு அதுக்கு பிரதி உபகாரமாய் நான் உன்னை உனது காதலனோடு சேர்த்து வைப்பேன். இது உறுதி.”

இருவருக்கும் அந்த இரவுப் பொழுது சிவராத்திரியாகவே அமைந்தது.

எவருமே எதிர்பார்த்திராத வகையில் பொழுது விடிந்ததும் புது மாப்பிள்ளையைக் காணவில்லை என்ற கோஷம் அங்கு எழுந்தது.

தேடினார்கள், தேடினார்கள் நாலா பக்கமும் தேடிப் பார்த்தார்கள். அலைச்சல்தான் மிஞ்சியதே தவிர ரகுவைக் காணவில்லை. ஒருவேளை உயிரையே மாய்த்து விட்டானோ? என்றுகூட கமலம் கருதினாள். கிணறு, குளம், குட்டை, தண்டவாளம் என பல இடங்களிலும் ஆட்களை அனுப்பி தேடியதுதான் மிச்சம். எதுவித பயனும் கிட்டவில்லை.

கமலம் தலையைப் பிய்த்துக் கொண்டாள். மகனது பிரிவு அவளை மனநோயாளியாக மாற்றி விட்டது. ஏற்கனவே ஏராளமான நோய்கள் குடிகொண்டிருந்த உடலால் நீண்டகாலம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஒருநாள் நிரந்தரமாகவே கண்களை மூடிக்கொண்டு விட்டாள். அவளது அவஸ்தைகளுக்கு விடிவு கிடைத்து விட்டது என்பதுதான் உண்மை.

நாளேடுகளில் முழுப்பக்க அளவில் மரண அறிவித்தல் விளம்பர மாக்கப்பட்டது. அதைப் பார்த்தாவது ரகு வருவான் என எதிர்பார்த்தார், சுந்தரலிங்கம். எதுவித பயனும் கிட்டவில்லை.

ஆண்பிள்ளையைப் பெற்றால் மட்டும் போதாது. அவனது கையால் கொள்ளி கிட்டுவதற்கு கொடுப்பனவு இருக்க வேண்டும். இதுதான் யதார்த்தமான நிலைப்பாடு. இந்த விடயத்தில் கமலம் துர்ப்பாக்கிய சாலியாகி விட்டாள்.

நடைப்பிணமானார் சுந்தரலிங்கம்.

***

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தன. குயிலி இப்போது மல்லாவியிலுள்ள ஒரு பிரபல பாடசாலைக்கு அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தாள். கமலம் குடும்பத்தினர் வேலணையோடு போனபின்

அவர்களது சேதி ஒன்றும் தெரியாது. ரகுவின் தொடர்பும் அவர்களுக்குக் கிட்டவில்லை. பரமசிவம் ஒரு கடிதம் எழுதி அவனது வேலைத் தளத்திற்கு அனுப்பி இருந்தார். சுவரில் எறியப்பட்ட பந்துபோல் அது இரண்டு கிழமைகளால் மீண்டும் அவரது கைக்கு வந்து சேர்ந்தது. இதுவிடயத்தை அவர் வெளியில் காட்டவில்லை. மனதிற்குள் பூட்டிவைத்து குழப்பதிற் காளானார். குயிலியும் ரகுவை எதிர்பார்த்துக் காத்திருந்து மனச்சோர்விற்கு ஆளானபோதும் மனம் தளரவில்லை. அவன்மீது அவள் கொண்டிருந்த அதீத நம்பிக்கை அவளது எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்தது.

பாடசாலை இரண்டாந் தவணை விடுமுறைக்கு குயிலி வீட்டிற்கு வந்திருந்தாள்.

புகழது பெண் குழந்தையான சாம்பவி குறுநடை நடந்து உலா வரும் காட்சி கண்டு மெய் மறந்து போனாள், குயிலி. தனக்கும் அப்படி ஒரு மழலையின் வரவு கிடைக்குமா என்றவொரு ஏக்கம் அவளது மனத்தை முதன்முதலாக ஆட்டுவித்தது. இந்த ரகு அத்தான் ஏன் தான் இத்தனை காலமாக என்னை மறந்திருக்கிறானோ தவித்த உள்ளத்தை எப்படியும் அவன் என்னைத் தேடி வருவான் என்று சொல்லி ஆறுதல்படுத்தினாள். எத்தக் காலமானாலும் சரி அவனாக என்னைத் தேடி வரட்டும். நான் அவனுக்காகக் காத்திருப்பேன். மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

அன்றைய பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தார், பரமசிவம் திடீரென அவரது அழைப்புக் குரல் கேட்டு குயிலியும் செல்லமும் ஓடி வந்தனர்

"எங்கட கமலம் மோசம் போய்விட்டாள். இஞ்சை பார் பத்திரிகையில மரண அறிவித்தல் போட்டிருக்கு"

கலக்கத்துடன் கூறியவரை செல்லம் ஆசுவாசப்படுத்தினாள்.

"மச்சாள் ஏலாமல்தானே இருந்தவ. மனிசராய் பிறந்தவை எல்வாருமே ஒரு நாளைக்குப் போறது தானே. அதுக்கேன் நீங்கள் பதட்டப்படுறியள்."

கணவனைத் தடவி வார்த்தைகளால் ஒத்தடமிட்டாள்.

மரணச் சடங்கிற்குப் போனாலாவது ரகு அத்தானைப் பார்க்கலாம் என்ற நப்பாசை மேலிட குயிலி சொன்னாள்..

"அப்பா கவலைப்படாதையுங்கோ. நாங்கள் எல்லாரும் ஒரு காரைப் பிடிச்சுக் கொண்டு போட்டு வரலாம்."

சொன்னதுடன் நிற்காமல் அப்பாவின் கையிலிருந்த பத்திரிகையைப் பிடுங்கி அந்த மரண அறிவித்தலை வாசிக்கத் தொடங்கினாள். அங்கு தான் அவளுக்கு இமாலய அதிர்ச்சி காத்து இருந்தது. தேவகியின் கணவன் சிவராமின் பெயருடன் திருமதி மாலினி ரகுவரன் ஆகியோரது அன்பு மாமியாரும் என்ற சொற்களை வாசித்ததும் அவளுக்கு கண்களை இருட்டிக்

*கொண்டு வந்தது. அப்படியே மயங்கிச் சரிந்து விட்டாள்.*

*அனைவரும் அல்லோல கல்லோலப்பட்டு அவளது முகத்திற்கு நீர் தெளித்து அவளை உலுப்பினர். கண் திறந்த பார்த்தவள் சித்தப்பிரமை பிடித்தவள் போல் இமை வெட்டாது கிடந்தாள். செல்லம் அவளது தலையை எடுத்து தன் மடியில் கிடத்திக் கொண்டவள். "பிள்ளை குயிலி! இஞ்சை அம்மாவைப் பார்". என்று கெஞ்சும் குரலில் கூறினாள். இதற்கிடையில் பரமசிவம் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார். செல்லத்தின் நிலை தர்ம சங்கடமானது. கணவனைத் தேற்றத் தொடங்கினாள்.*

*"அழாதையுங்கோப்பா, நீங்கள் அழுதால் எங்களால எப்படித் தாங்க முடியும். உறவு சொல்லுறதுக்கு இருந்த ஒரே தங்கச்சி, அவ போனது கவலையாகத்தான் இருக்கும், கலங்காதையுங்கோ"*

*பரமசிவம் மகளது நிலை பார்த்துக் கலங்கியதை, செல்லம் தப்பாக விளங்கிக் கொண்டு விட்டாள். அவர்கள் இருவரையும் அவசரப்படுத் தினாள்.*

*"நீங்கள் ரெண்டு பேரும் வெளிக்கிட்டு நில்லுங்கோ, நான் போய் மருமகனிட்டை சொல்லி ஒரு கார் பிடிச்சுக்கொண்டு வரச்சொல்லுறன்"*

*சடுதியாக அம்மாவின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்த குயிலி எழும்பினாள்.*

*"நிறுத்துங்கோ, நாங்கள் ஏன் அங்கை போக வேணும்? அவைக்கும் எங்களுக்கமான உறவுதான் எப்பவோ முறிஞ்சு போயிட்டுதே."*

*இப்போது வாய்விட்டுச் சிரித்தார் பரமசிவம்,*

*"என்ரை பிள்ளை எழும்பிட்டாள்."*

*தன் கன்னங்களில் வழிந்திருந்த நீரை கைகளால் துடைத்து விட்டு ஓடி வந்து மகளைக் கட்டித் தழுவிக் கொண்டார்.*

*"என்ரை பிள்ளை. என்ரை குஞ்சு, என்ரை செல்லம்......."*

*அவரது பிதற்றலைக் கணக்கெடுக்காத குயிலி சொன்னாள்.*

*" அப்பா! ரகு அத்தானுக்கக் கலியாணம் முடிஞ்சுதப்பா"*

*பதறிப் போனார் பரமசிவம்.*

*" என்னம்மா சொல்லுறாய் நீ?"*

*"இஞ்சை பாருங்கோப்பா, மரண அறிவித்தலில் போட்டிருக்குது."*

*பரமசிவம் பத்திரிகையை வாங்கி விபரமாக வாசிக்கத் தொடங் கினார். செல்லம் பேயறைந்தவள் மாதிரி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பரமசிவத்தாரின் மனம் தனக்குள் புதைத்து வைத்திருந்த , பல்வேறு விடயங்களையும் இரைமீட்டு சுழியோடிக் கொண்டிருந்தது.*

விரக்தியின் விளிம்பில் மூவரும் வாயடைத்துப் போயிருந்தனர். திடீரென துணிவு வரப்பெற்றவளாய் வாய் திறந்தாள் குயிலி.

"அப்பா! திருமணம் செய்து குடும்பத்தைத் தாங்குவதுதான் வாழ்க்கை என்று பலரும் கருதலாம். ஆனால்... அதற்கு மேலும் ஒரு வாழ்க்கை இருக்குதப்பா. சமூகத்தில் முன்னோடியாக வாழ்ந்து பொதுநலம் பேணி மற்றவர்களுக்கு வழிகாட்டியாக வாழ்வதில ஒரு சுகம் கிடைக்குமப்பா. அதைத்தான் உங்கடை மகள் வாழ்ந்து காட்டப் போறன்."

மகளது உறுதியான வார்த்தைகள் அவரை வியக்க வைத்தன. எனினும், ஆழ்மனம் சுக்கு நூறாக நொருங்கிக் கிடப்பதை அவரது உணர்வுகள் தெளிவு படுத்தின.

***

ஆக்ரோசமான வார்த்தைகளை அள்ளி வீசிவிட்டாளே தவிர, குயிலியின் மனம் வேள்வித் தீயினால் வெந்து கொண்டிருப்பதை எவரும் அறிந்தாரில்லை. ரகு விரும்பித்தான் மாலினியை ஏற்றுக் கொண்டிருப் பானா? ... அல்லது வற்புறுத்தலால் நடந்த கல்யாணமாயிருக்குமா? எந்தவொரு முடிவுக்கும் அவளால் வரமுடியவில்லை. ரகுவின் கடைக்கண் பார்வைக்கு அவளால் இப்போது அர்த்தம் கற்பிக்க இயலவில்லை. அவளை இணைத்து அவன் மறைமுகமாய் பேசிய சில வார்த்தைகள் நினைவில் வந்து போயின. சிறு வயதில் அவனது குறும்புத் தனமான செயற்பாடுகள் தனது மேற்படிப்பில் அவன் காட்டிய அக்கறை... ஏன் ஓ. எல் படிக்கும் போது அவளால் பிரத்தியேக வகுப்புகளுக்குப் போகமுடியாத வறுமை நிலையில் அவன் தான் படித்த பாடக்குறிப்புகளை அவளுக்குக் கொடுத்தது. எல்லாமே நிழற்படமாக அவளது கண்களின் முன் நிழலாடியது... "என்னுடைய அத்தான், அவனை நான் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்" மனம் சொன்னது.

"முட்டாள் மனமே! இனியாவது உனது வறட்டு நம்பிக்கையை விட்டுவிடு, மாலினிதான் அவனைக் கொத்திக்கொண்டு போய்விட்டாளே, இன்னொருத்தியின் கணவன்மீது நீ உரிமை கொண்டாடுவது தவறு. அவனை மறந்து விடு. முடியாவிட்டால் மறப்பதற்கு முயற்சி செய், இதுதான் நேர்மையான ஒரு பெண்ணிற்கு அழகு."

மனப் போராட்டங்களுடன் கழிந்த அந்த இரவு விடிந்தது. குயிலியைக் கண்ணுற்ற அனைவரும் திகைத்தனர். கொவ்வைப் பழமாகச் சிவந்திருந்தன கண்கள், அப்பாவோ, அம்மாவோ அவளிடம் சகஜமாகவே பழக முற்பட்டனர்.

காலை நேரம் பரமசிவம் கண்களை மூடியவாறு சாய்மனையில் படுத் திருந்தார் அவரது மனத்தில் பாரிய அலைகள் மோதி அமைதியைக் கலைத் துக் கொண்டிருந்தன. தந்தையை அந்த நிலையில் பார்க்க குயிலிக்குச்

சகிக்கவில்லை. மெதுவாக அருகில் வந்து இதமாக அழைத்தாள்.

“அப்பா”

சுறணை வரப்பெற்றவராய் விழி திறந்த பார்த்தார், பரமசிவம்.

“ என்னப்பா யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்?”

“நான் என்னத்தை யோசிக்கிறது? எல்லாமே வேதனைதான்” விரக்தியுடன் வெளிப்பட்டது வார்த்தை, குயிலி அவரைத் தேற்ற முயன்றாள்.

“அப்பா! உங்களுக்குத் தெரியாதா என்ன! மேடும் பள்ளமும் நிறைந்தது தான் வாழ்க்கை. அதை வெற்றிகரமாகக் கடப்பவன்தான் விவேகி “

“ம்... இப்ப நீ என்ன சொல்ல வாறாய்?. ”

“இப்ப ... நாங்கள் ரகு அத்தான் என்ற உறவை மறப்பம். இன்னுமொரு புது அத்தியாயத்தை வாழ்வில் ஏற்படுத்துவம். ”

“அப்பிடியென்றால், உனக்கு நான் நல்ல இடத்திலை பார்க்கட்டுமே? ”

கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தாள், குயிலி

“அது ஒருபோதும் சரிவராதப்பா, இந்தக் குயிலி பிறந்த நாளிலிருந்து இறக்கும் வரைக்கும் பரமசிவத்தின் மகளாகவே இருந்துவிட்டுப் போகட்டும். “

தனது நாடியோட்டம் திடீரென நின்று விட்டது போன்றேதோர் உணர்வு அவரை ஆட்கொண்டது. உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டவராய் வேறு பக்கம் நோக்கினார். குயிலி சிரித்து அவரைச் சமாதானப்படுத்தினாள்.

“நான் சொல்ல வந்தது அதில்லையப்பா. எங்கட மகிழுக்கு ஒரு நல்ல இடத்தில பார்த்து கலியாணத்தை செய்து வைச்சிடுவம். அப்ப எங்கட கடமைகள் குறைஞ்சிடும். என்னப்பா நான் சொல்லுறது சரிதானே”

மௌனத்தை தனது மொழியாக்கி கொண்டார் பரமசிவம்.

குயிலி அத்துடன் நின்றுவிடவில்லை. தன் கவனத்தையெல்லாம் திசை திருப்பி மகிழுக்கு மாப்பிள்ளை தேடும் படலத்தை ஆரம்பித்தாள். ஆறு மாதங்கள் அலைந்த பின்னர் நெல்லியடியைச் சேர்ந்த ஒரு ஆசிரியரின் சாதகம் பொருந்தி வந்தது. பெரிய வசதியான இடமில்லை. சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பூர்வீக சொத்து என்று எதுவுமில்லை.

“மாப்பிள்ளை உழைக்கிறார்தானே. உழைப்பினால் முன்னேறலாம். நாங்கள் அவரை முழுமையாக நம்பித்தான் எங்கட பெண்ணைக் கொடுக்க முன்வருகின்றோம். ”

குயிலியின் பேச்சினால் கவரப்பட்டவர்கள். சீதனம் அன்று எதையும் வலியுறுத்திக் கேட்கவில்லை. ஆயினும் மகிழுக்கு எதுவித குறையுமின்றி

சீதனத்தைக் கொடுத்து திருமணத்தை நிறைவேற்றி வைத்துவிட்டார்கள். மகிழ் மறுத்த போதிலும் விடாப்பிடியாக நின்று அவளுக்கு மணமுடித்து வைத்தவள் குயிலிதான். அவளது வாழ்க்கை மட்டும் வாழாவெட்டியாப் போய்விட்டதே என வருத்தமுற்றனர் பெற்றோர்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் குயிலி. அப்பா அம்மாவைத் தனியே விட்டுப் போக அவளது மனம் இடங்கொடுக்கவில்லை. அவர்களையும் தன்னுடன் மல்லாவிக்கு அழைத்துப் போக முடிவெடுத்தாள். அந்த விடயத்தில் பரமசிவம் பிடிவாதமாக மறுத்துவிட்டார். தான் பிறந்து வளர்ந்த வாழ்ந்த மண்ணை விட்டு தன்னால் வரமுடியாது என ஆணித்தரமாக சொல்லிவிட்டார்.

முதன்முறையாக அந்த விடயத்தில குயிலி தோற்றுவிட்டாள். எனவே, வழமை போல் வார இறுதியில் வீட்டிற்கு வந்து போக வேண்டியதாயிற்று. மகிழும் அடிக்கடி வந்து பெற்றோரைப் பார்த்துவிட்டு போவாள். புகழின் குழந்தையுடன் அவர்கள் பொழுதைக் கழித்தனர்.. குயிலிக்கு வாழ்க்கை அமையவில்லை. என்பது அவர்களின் மனக்குறை.

திங்கள் புறப்படுவதும் வெள்ளி வருவதுமாக குயிலியின் வாழ்க்கை இரு இடங்களிலும் கழிந்து கொண்டிருந்தது. ஆனால் அவளால் ரகுவைத் தனது மனத்திலிருந்து தூக்கியெறிய முடியவில்லை. அவன் யாரோ நான் யாரோ. நான் ஏன் அவனை நினைக்க வேண்டும் என தன்னைத் தானே கடிந்து கொள்ளுவாள். சிறிது தனிமை கிடைத்துவிட்டால் போதும். அவன் கண்முன் நிழலாடி அவளுக்கு கண்ணாமூச்சி காட்டுவான். நாளுக்கு நாள் அவனது தொல்லை அதிகரித்ததே தவிர குறைந்த பாடாயில்லை. குயிலி தன்னைத் தானே நொந்து கொள்ளுவாள்.

நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு

மறக்கத் தெரியாதா

சினிமாப் பாட்டொன்று அவளது காதுகளில் வந்து மோதி, ஆற்றுப்படுத்தும். “குயிலி“ உன்னை நான் காதலிக்கிறேன், உன்னையே நான் திருமணம் செய்வேன் என்று எப்போதாவது அவன் எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறானா? ... இல்லையே, ..பாவி நான்தான், அவன் எனக்குரியவன் எனக் கருதி மனதில் ஆசையை வளர்த்திருக்கிறேன். அவன் தனக்கில்லை என்று ஆனபிறகும் கூட அவளால் அவன்மீது குறை பிடிக்கவோ , பழி சுமத்தவோ மனம் இடங்கொடுக்கவில்லை. இதுதான் ஆழமான உண்மைக் காதலோ?.... யாருக்குத் தெரியும்?

குயிலி இத்தனை காலமும் பிறர் நலம் கருதி எப்படி வாழ்ந்தாளோ.. அப்படியே இனிவரும் காலத்திலும் வாழப் போகிறாள். அதுதான் அவளது தீர்க்கமான முடிவு. எனினும் வழமையான இயல்பு வாழ்க்கையை அவளால் வாழ முடியவில்லை. அவளது மன அவஸ்தை வெளியில் தெரியாதவாறு

மறைப்பதே தற்போது அவள் வாழும் வாழ்க்கையாயிற்று. அதேசமயம் அம்மாவினதும் அப்பாவினதும் மனப்புழுக்கத்தை அவளால் நன்கு உணர முடிகிறது. அப்பா அவளது கழுத்தை ஊடுருவிப் பார்வையைச் செலுத்தும் போது , எங்கே உனது மாங்கல்யம்? ஏன் ? அதை அணியாமல் இருக்கிறாய்? என்று வினவுவதுபோல் இருக்கும்.

எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வேண்டியது அந்தக் கடவுள்தான். இது அவருடைய திருவிளையாடல்தான் என வேதனையுடன் மனம் சொல்லும்.

மனித மனங்களின் புலம்பலை செவிசாய்க்க மறுத்து காலம் தன் போக்கில் புரண்டு கொண்டிருக்கிறது. இதுதான் இயற்கையின் நியதியும் கூட.

***

அன்று புதன் கிழமை மறுநாள் வியாழக்கிழமை போயாநாள் என்பதால் பொது விடுமுறை தினம். எனவே குயிலி வெள்ளிக்கிழமையை யும் விடுமுறை தினமாக அறிவித்து விட்டிருக்கிறாள். இதனால் விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் தத்தமது வீடுகளுக்குப் போய்நின்று நான்கு நாட்கள் விடுமுறையைக் கழித்து விட்டுவர ஏதுவாக இருக்குமென அவள் கருதியதுதான் உண்மையான நிலைப்பாடு. பிறிதொரு சனிக்கிழமை பாடசாலையை நடத்தி இந்த மேலதிக விடுப்பு நாளைச் சமாளித்து விடலாம் எனத் தீர்மானம் எடுத்தாள்.

பாடசாலை விட்டதும் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களில் சிலர் தாமாகவே புறப்பட்டு விட்டனர். சிலரைப் பெற்றோர் வந்து அழைத்துச் சென்றனர். மாணவர் கூட்டம் கலைந்ததும் குயிலி தனது இருப்பிடத்திற்குத் திரும்பியவள் , தானும் வீட்டிற்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினாள். அவளுக்குரிய பேருந்து மாலை நான்கு மணிக்குத்தான் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும். எனவே நிதானமாக அவள் செயற்பட்டுக் கொண்டிருந்தாள்.

“மேடம்!”

அது பாடசாலைக் காவலாளியின் அழைப்புக் குரல்.

குயிலி வாசலில் வந்த எட்டிப் பார்த்தாள், காவலாளியுடன் ஒரு அம்மாவும் நின்றிருந்தார். உற்றுப் பார்த்த போதுதான் அது அவள் முள்ளியவளையில் தங்கியிருந்த வீட்டுக்கார அம்மா என்பது புரிந்தது. மகிழ்ச்சியுடன் அவவை வரவற்றாள்.

“வாங்கோம்மா வாங்கோ”

அவரது கையைப் பிடித்து வீட்டிற்குள் அழைத்துப் போனாள்.. இருவரும் அந்நியோன்யமாக உரையாடினர். அம்மா அவளுக்கென்று

சுட்டுக்கொண்டு வந்த பனங்காய்ப் பணியாரத்தை எடுத்துக் கொடுத்தார். குயிலி அதை ஆவலுடன் வாங்கி ருசித்ததைக் கண்டு அந்தத் தாயின் மனம் நெகிழ்ந்தது.

"அம்மா! நீங்களும் சாப்பிடுங்கோ"

அவவுக்கும் இரண்டு உருண்டைகளை எடுத்து ஊட்டி விட்டாள். இருவரும் குயிலி தயாரித்த தேநீரை சுவைத்துக் குடித்தனர். அம்மா தான் அவளைத் தேடிவந்த விடயத்தை எடுத்துக் கூறத் தொடங்கினார்.

"பிள்ளை! நான் உம்மை என்னுடைய இளையவளின்ரை கலியாணத்துக்கு அழைக்கத்தான் வந்தனான்"

"உண்மையாத்தானே சொல்லுறீங்கள், எனக்க நல்ல சந்தோசமாய்க் கிடக்கு"

தனது உள்ளக்கிடக்கையை அப்படியே வெளியிட்டாள் குயிலி.

"ஓம் பிள்ளை மூத்த மருமகன்தான் இந்தக் கலியாணத்தைப் பொருத்தியவர். நல்ல தங்கமான குணம் அவருக்கு, அவரைத் தேடித் தந்ததே நீர்தானே. அவர் தங்கமெண்டால் உம்மை என்னெண்டு நான் சொல்லுறது. நீர் வைரம்தான், மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வாய்விட்டுச் சிரித்தாள் குயிலி

"என்னம்மா, என்னென்னவோ எல்லாம் சொல்லுறியள்"

" எனக்குத் தெரியாது வாற முப்பதாம் திகதி கலியாணத்துக்கு நாள் குறிச்சிருக்கிறம். ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலில்தான் தாலிகட்டு. நீர் கட்டாயம் வந்திட வேணும். அதுதான் நேரிலை அழைக்க வேணும் எண்டு வந்திருக்கிறன்."

"அது சரியம்மா நீங்கள் பார்த்திருக்கிற மாப்பிள்ளையைப் பற்றி ஒண்டும் சொல்ல இல்லையே"

அவர் ஒரு மருந்துக் கடையில் வேலை செய்யிறாராம். தாய், தகப்பன் இல்லாத பிள்ளையாம். தனிக்கட்டை என்றபடியால் எங்கடை மாப்பிள்ளைக்குப் பிடித்துப் போச்சுது."

"ஓ.. நீங்கள் சொல்லுறது சரிதான், சிவபாதம் சேரும் தனிக்கட்டையாய் வாழந்து கஷ்டப்பட்டவர்தான். ஒருநாள் நான் ஸ்டாவ்ரூமில இருக்கேக்கை அவரும் அங்கை இருந்தவர். எனக்கு என்னவோ அவருடைய முகத்திலை ஒரு சோகம் இருப்பதாய் தெரிஞ்சிது. நான் மெதுவாகக் கதைகுடுத்து அவருடைய வாயைக் கிளறினன். குழலிசைக்குக் கண்டுண்ட நாகம்போல அவர் என்னட்டை சரணடைந்து விட்டார்."

"அப்ப அவருக்கு என்ன பிரச்சினை?"

"சேரும் கலியாணங்கட்டி நல்லாத்தான் வாழ்ந்தவராம்.

தலைப்பிரசவத்திலை தாயும் பிள்ளையும் செத்துப் போச்சினமாம். கவலையால் துடிச்சுப்போன மகனை அவருடைய அம்மா அணைத்து ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாமல் அவருடைய வீட்லேயே போய்த் தங்கியிருந்து அவரைக் கவனிச்சிருக்கிறா, அந்த ஆறுதலும் அவருக்கு நிலைக்கவில்லையாம். ஒரு நாள் திடீரன நெஞ்சு வலிக்குது என்று சொன்ன அம்மா கண்ணை மூடிட்டாவாம்."

"அச்சச்சோ பாவம் மனுசன் அந்தரிச்சுப் போச்சுது போல"

"ஓமம்மா அண்ணனைத் தனிய விடாமல் தம்பிக்காரன் தன்னோட கூட்க்கொண்டுபோய் வைச்சிருக்க . தம்பியின்ரை மனுசி புறுபுறுக்கத் தொடங்கி விட்டாவாம்.என்னாலை மற்றவைக்கேன் கரைச்சல் என்று நினைச்சு சேரும் அவர்களை விட்டுவிலத்தி தன்னுடைய வீட்டுக்கே வந்திட்டாராம். கடையிலை சாப்பாடு, வீட்டில தனிமை தன்னைக் கொல்லுது என்று என்னட்டைச் சொல்லி அழத்தொடங்கி விட்டார். அதற்குப் பிறகுதான் நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியுமே."

"சாய்! நல்லாத்தான் கஷ்டப்பட்டிருக்கிறார் மருமகன். அதுசரி பிள்ளை நான் உன்னட்டை ஒண்டு கேட்கணுமென்று நினைச்சன்"

"கேளுங்கோவன் வடிவாய்"

என்னத்தைத்தான் அப்படிக் கேட்கப் போறாவாக்கும் என்ற மனத்தைரியத்தோடு நின்றவள் அம்மா கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல திராணியற்றுப் போனாள்.

"நான் தெரியாமல்தான் கேட்கிறன், எல்லாருக்கும் கலியாணம் செய்து வைக்கிறதில ஆர்வமாய் இருக்கிறீர், நீர் மட்டும் ஏன் தனிமரமாய் இருக்க நினைக்கிறீர்?"

"பக்" என்றது குயிலிக்கு, சட்டென்று தன்னை நிதானித்துக் கொண்டவளாய் பதில் சொன்னாள்.

"அம்மா நீங்கள் கேட்டது நியாயந்தான், குடும்பம் என்பது சிறிய வட்டந்தான், நான் அந்த சிறிய வட்டத்திற்குள் என்னை மட்டுப்படுத்தாது, பரந்த அளவில் மற்றவர்களுக்காக என்னை அர்ப்பணித்து வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். அதுவே எனது இலட்சியமும் கூட"

"குடும்பம் என்னும் வலைக்குள் கட்டுப்பட்டால் எனது இலட்சியம் ஈடேறாது. என்னம்மா நான் சொல்வது சரிதானே?"

என்ன பதிலைச் சொல்வதென்று தெரியாமல் மௌனத்தைத் தழுவிக் கொண்டவள், குயிலியைக் கட்டாயம் திருமண வைபவத்திற்கு வந்துவிடுமாறு கட்டளை பிறப்பித்துவிட்டு புறப்பட்டாள்.

"நான் உங்களுக்காக மட்டுமல்ல எனது வார்த்தைக்குக் கட்டுப்பட்ட சிவபாதம் சேருக்காகவும் கட்டாயம் வருவேன்" என்றுகூறி வழியனுப்

பினாள். குயிலி தானும் யாழ்ப்பாண பஸ்சைப் பிடிப்பதற்காக வேகமாக இயங்கத் தொடங்கினாள்.

***

முப்பதாம் திகதி குயிலி , மல்லாவியிலிருந்து முல்லைத்தீவுக்குப் புறப் பட்ட முதலாவது பேரூந்திலேயே கிளம்பி விட்டாள். தண்ணீரூற்று சந்தியில் இறங்கியவள், நேராக ஒழுங்கையில் இறங்கி நடக்கத் தொடங கினாள். பெரிய அளவில் அலங்கார ஆரவாரம் இல்லாவிட்டாலும் அம்மா வீட்டிற்கப் போகும் பாதை களை கட்டியிருந்தது. குயிலியைப் போலவே அவர்களுக்கு வேண்டப் பட்டவர்கள் , உறவினர்கள் என பல தரப்பினரும் வந்து கொண்டிருந்தனர்.

வீட்டுக்குள் நுழைந்தவளை "குயிலி" எனப்பெயர் சொல்லி மூத்தவளும், "அக்கா" என அன்புடன் அழைத்தவாறு இளையவளுமாக அம்மாவின் பிள்ளைகள் இருவரும் ஓடிவந்து கட்டிக் கொண்டனர்.

அவர்களையும் தனது சொந்தச் சகோதரர்களாகவே கருதும் குயிலிக்கு உள்ளம் பூரித்துப் போனது. இதற்கிடையே உள்ளிருந்து வந்து எட்டிப் பார்த்த அம்மா , தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

"என்ரை பிள்ளை வந்திட்டுது"

அம்மாவின்ரை அந்த வார்த்தையைக் கேட்டதும் நிஜமாகவே குயிலி அந்த வீட்டுப் பிள்ளையாக மாறி , ஓடியாடி வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

ஊற்றங்கரையானைத் தரிசித்தபோது குயிலி தன்னை மறந்தவளாய் நெகிழ்ந்துருகத் தொடங்கி விட்டாள். "என்னப்பனே பிள்ளையாரப்பா! நீயே கதியென நம்பி உன்னிடம் சரணடைந்து, மன்றாடி நான் வைத்த கோரிக்கையை நீ நிராகரித்து விட்டாயே, உன்னைப் போலவே நானும் தனியொருத்தியாய் வாழ்ந்து முடிக்க வேண்டுமென்பதுதான் உன் வருப்பமா?" தனது மனக்கட்டுப்பாட்டை முற்றாக இழந்து விட்டவளாக குயிலி மனம் பேதலித்தபோது கண்கள் தாரைதாரையாக நீரைச் சொரியத் தொடங்கின. அப்படியே மெய்மறந்து எத்தனை நேரம்தான் நின்றாளோ?

டாங்! டாங்!! டாங்!!

காதுக்குள் ஒலித்த கோயில் மணியின் ஒலி , அவளை புறச்சூசூழலை நோக்கி சுண்டியிழுத்தது. நிதானத்துக்கு வந்தவள் தனது கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டவளாய் அங்கு அமைக்கப் பட்டிருந்த மணவறையை நோக்கித் தன் பார்வையை நிமிர்த்தினாள். அப்போதுதான் மாப்பிள்ளை வந்து அமர்ந்திருக்க வேண்டும். புரோகிதர் அவரிடம் நெற்றியில் குட்டி இறைவணக்கம் செய்யுமாறு பணித்துக் கொண்டிருந்தார்.

குயிலி ஒரு வெற்றிடத்தைத் தேடி அதில் அமர்ந்து கொண்டாள். திடீரென அவளது தோளை யாரோ தொடுவது போன்ற உணர்ச்சி, திடுக்கிட்டவளாய் திரும்பிப் பார்த்தாள். முன்னர் அவளுடன் விவேகானந்தாக் கல்லூரியில் ஒன்றாகப் படிப்பித்த ஆசிரியையான செல்வரட்ணம் ரீச்சர்.

"எப்ப மிஸ் வந்த நீங்கள்?" கேட்டவாறே அவளும் தான் இருந்த இருக்கையை விட்டு எழும்பி வந்து குயிலியின் அருகில் அமர்ந்து கொண்டாள். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? வளவளவென்று தங்களைப் பற்றிய புதினங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். இதனை அவதானித்த மற்றைய ஆசிரியர்களும் வந்து அவருடன் இணைந்து கொண்டனர். அன்றைய பொழுது குயிலிக்கு கவலையை மறந்த இனிய பொழுதாய் அமைந்தது.

திடீரென மேள தாளங்களின் அமர்க்களமான ஒலி அவர்களது கவனத்தை ஈர்த்தது. அனைவரும் நிமிர்ந்து பார்த்தனர். அங்கே...... மணவறையில் மாப்பிள்ளை எழுந்து நின்று மணமகளின் கழுத்தில் தாலியைக் கட்டிக் கொண்டிருந்தான். குயிலியின் கை தன்னையறி யாமலேயே கழுத்துப் பகுதியை தடவிக் கொண்டது. இந்தப் கழுத்து மாங்கல்யப் பாக்கியத்ததைப் பெற தகுதியற்றதாகி விட்டது. அது நான் பூர்வீகத்தில் செய்த பாவத்தின் பலன். மனதிற்குள் ஒரு நெருடல் தோன்றி மறைய மற்றவர்களுடன் தானும் மணமக்களை வாழ்த்துவதற்காக எழுந்து போனாள்.

ஒவ்வொருவரும் வெவ்வேறு வார்த்தைகளை பரிமாறி மணமக்களை வாழ்த்தினர். குயிலி அவர்களை மனமுவந்து வாழ்த்தினாள்.

" பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

என்றென்றும் இறையருள் உமக்கு காப்பரணாகட்டும்"

நன்றி செலுத்துமுகமாக மணப்பெண் அவளது கைகளை இறுகிப் பற்றிய போது குயிலியின் இதயம் மலர்ந்நது. பதிலுக்கு அவளது கன்னத்தில் தட்டிவிட்டுச் சிரித்தாள். என்ன அவர்களுக்குள் அப்படியொரு உறவு. பார்த்தவர்கள் பிரமித்தனர்

திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் அறுசுவை உணவை ஒரு பிடி பிடித்துவிட்டு பொருமிய வயிற்றை தடவியவாறு விடைபெற்றுக் கொண்டிருந்தனர். அப்போதுதான் சிவபாதம் சேர் ஓடோடி வந்து குயிலியிடம் பேச்சுக் கொடுத்தார்.

" இருண்டு போய்க் கிடந்த என்னுடைய வாழ்க்கையை திசை திருப்பி ஒளி கொடுத்தவர் நீங்கள். நான் கடவுளாக நினைக்கும் உங்களை என் வாழ் நாள் உள்ளவரை மறக்க மாட்டேன்"

உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை வீசியவரை குயிலி சமாதானப்

படுத்தினாள்.

“இதில என்ன சேர் இருக்குது. எல்லாமே அந்தக் கடவுள் செயல் தான். அவர் தான் எங்களை வழிநடத்துகிறார். இந்த உண்மையை நீங்கள் புரிந்து கொண்டால் சரி”

அவர் ஏதோ சொல்வதற்காக வாய் திறந்தார். அதற்கிடையில் அங்கு வருகை தந்திருந்த மற்றைய ஆசிரியர்களும் வந்து அவர்களை சூழ்ந்து கொண்டனர். எல்லோரிடமும் விடைபெற்ற குயிலி புறப்பட எத்தனித்த போது செல்வரட்ணம் ரீச்சர் அவளிடம் ஒரு வினாவைத் தொடுத்தாள்.

“மிஸ்! நான் உங்களை ஒன்று கேட்கலாமா?”

கேட்டவளை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் குயிலி. அவளது பார்வைக்கு பதிலடி கொடுப்பது போல் வந்தது ஒரு கேள்வி.

“எங்களோடை படிப்பிச்சவை எல்லாரும் கல்யாணச் சாப்பாடு போட்டிட்டனம். நீங்கள் எப்ப போடப் போறியள்?”

குயிலியின் முகம் கறுத்ததை அவர்களால் அவதானிக்க முடிந்தது. எனினும் சமயோசிதமாக அவள் பதிலளித்தாள்.

“எல்லாத்துக்கும் காலம் தான் பதில் சொல்ல வேணும்.”

சொல்லிவிட்டு நடந்தவளின் மனத்தில் புதிதாக ஒரு கீறல் விழுந்து ரணத்தை கிழறிவிட்டதை அவளால் உணரமுடிந்தது.ரணம் ஏற்படுத்திய வேதனையை அவளால் சகிக்க முடியவில்லை. அது கண்ணீராக உருப்பெற்று கன்னத்தில் கோடிட்டுக்கொண்டிருந்தது. அவள் தனது கைப்பையைத் திறந்த அதற்குள்ளிருந்த கைத்துவாயை எடுத்து கன்னங்களை ஒற்றிக்கொண்டால். ஒருவாறு பேருந்து மல்லாவியை வந்நதடைந்தது. காய்ந்து வறண்டு போன முகத்துடன் அவள் வீடு வந்து சேர்ந்தாள்.

என்ன அதிசயம் அவளுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

***

பரமசிவம் சாய்மனையில் சரிந்து கிடந்தார் அவருக்கு சற்றுத் தொலைவில் செல்லம் கால்களை நீட்டியவாறு சுவரில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள். இத்தனை காலமும் பிள்ளைகளால் நிறைந்திருந்த வீடு இப்போது வெறிச்சோடிக் கிடந்தது. பரமசிவம் மௌனத்தைக் கலைத்தார்.

“இஞ்சாரும் செல்லம்!”

“என்னப்பா கூப்பிட்டநீங்களே!”

“ஓமென நாச்சியார் நான் உம்மைக் கலியாணம் கட்டி இந்த வீட்டுக்குத் தான் கூட்டி வந்தனான். இது வரைக்கும் இதில தான் வாழ்ந்து கொண்டிருக்கிறம்”

“அதுக்கென்ன ஏன் இப்ப உங்களுக்கு அந்த நினைவு வருகுது.”

*“என்னவோ தெரிய இல்லையடியம்மா எனக்கு போன காலத்து நினைவுகளெல்லாம் மீண்டு வந்து கொண்டிருக்குது.”*

*“இந்த மனுசன் இப்படித்தான்”*

*வாய்க்குள் புறுபுறுத்தாள் செல்லம். மீண்டும் தொடர்ந்தார் பரமசிவம்.*

*“பிள்ளை குட்டியள் சின்னதுகளாய் இருக்கேக்க வறுமை எங்களை துரத்திச்சிது. நீர் மாடுகளை வளர்த்து கஸ்ரப்பட்டநீர். அப்ப நீர் பட்ட கஸ்டங்களை என்னால மறக்கவே முடியாது கண்டீரோ.”*

*ஏன் இப்ப அதுகளை கிளறுறியள் பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு எப்பன் நித்திரை கொள்ளுங்கோவன்.”*

*“இல்லை செல்லம் நான் உம்மோட கனக்க கதைக்க வேணும் எனக்கு மனதில நிறைய கவலையிருக்குது. எல்லாம் என்ரை பிள்ளை குயிலியால தான். வறுமையில கிடந்த எங்களை புத்திசாலியாகச் செயற்பட்டு இந்த நிலைமைக்கு கொண்டு வந்தவள் இவள் தான்.”*

*“அது எல்லாருக்கும் தெரிஞ்சது தானே.”*

*ஆமோதித்த செல்வத்தை வாஞ்சையுடன் நிமிர்ந்து பார்த்தான் பரமசிவம். பதிலுக்கு செல்லமும் அவரை பார்வையாலேயே அரவணைத்தாள்.*

*இருவரது மனக் கிடக்கையும் ஒன்று தான் என்பதை அவர்களது செய்கை எடுத்துக் காட்டியது.*

*“ஆனால் இன்றைக்கு எங்கட மற்ற இரண்டு பிள்ளைகளும் குடியும் குடித்தனமுமாக வாழ இவள் மட்டும் தனித்துப் போய் நிக்கிறதைப் பார்க்க என்ரை வயிறு பத்தி எரியுது.”*

*பரமசிவத்தின் குரல் தழதழுத்தது. செல்வத்தின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகத் தொடங்கியது. கண்ணீரைத் துடைத்தவள் கணவரைத் தேற்றினாள்.*

*“நாங்கள் என்னப்பா செய்யிறது ரகு இப்படிச் செய்வான் என்று யாருமே கனவில கூட நினைச்சிருக்க மாட்டம். தெரிஞ்சோ தெரியாமலோ அவனை இவள் மனத்தில நினைச்சிட்டாள். அந்த மனத்தை விட்டுக் குடுக்க மாட்டாமல் பிடிவாதமாய் இருக்கிறாள்.”*

*“எத்தனை பேர் வலிய வந்த எங்களிட்டை பெண் கேட்டவை எல்லாம் நல்ல நல்ல இடங்கள் ஆனால் இவள் பிள்ளை மசியமாட்டன் எண்டிட்டாளே.”*

*“ம்!............”.*

*கவலையோடு கூடிய பெருமூச்சொன்று வெளியேறி அவரை*

ஆசுவாசப்படுத்தியது.

“கவலையை விடுங்கோப்பா நாங்கள் குடுத்துவைச்சது இவ்வளவு தான்”

செல்லம் அவரை ஆற்றுப்படுத்த அவர் மெதுவாக “செல்லம்!...” என அழைத்தார்.

“இப்ப நாங்கள் இரண்டு பேரும் இருந்து கவலையைப் பங்கிட்டு கொள்ளுறம். ஒரு நாளைக்கு தனிய ஒருவராய் இருந்து கவலைப்பட வேண்டியும் வரும் கண்டீரோ”

“இப்ப ஏன்னப்பா உங்களுக்கு இப்படியான சிந்தனை வருகுது?”

“நடக்கப் போறதைத் தானே சொல்லுறன். அப்படியொரு சமயம் நீர் தனிய இருக்க வேண்டியிருந்தால் குயிலியோட போயிடும்”

“இதென்ன உங்கட கதை பிள்ளை எங்களை தனிய இருக்க விட்டிடுவாளோ?”

“அது சரி தான் இப்ப கொஞ்ச நாளாய் எனக்கு உடம்பில தெம்பு குறைஞ்சு கொண்டே வருகுது. மனமும் சோர்ந்து போகுது. அது தான் உம்மை அந்தரிக்க விட்டிடுவனோ என்று யோசனையாய்க் கிடக்கு.”

“சும்மா விசர் கற்பனைகளை விட்டுட்டு ஆறுதலாய் இருங்கோ. நான் போய் உங்களுக்கு வேர்க்கொம்பு போட்ட கோப்பி கொண்டு வாறன்.”

செல்லம் உள்ளே போனாள்.

“அப்பா!”

தன் செல்லப் பிள்ளையின் குரல் கேட்டதும் அக மலர்வுடன் சாய்மனையிலிருந்து எழுந்தவர் நிமிர்ந்து அமர்ந்து கொண்டார்.

“என்னம்மா! சொல்லாமல் பறையாமல் திடீரென்று வந்திருக் கிறாய்?”

“எல்லாம் நல்ல விசயம் தானப்பா, பொறுங்கோ அம்மாவும்” வரட்டுக்கும் சொல்லிறன். சொல்லிவிட்டு “அம்மா!” என்று உரக்கக் கூவினாள்.

செல்லம் கையில் இரு கோப்பிக் குவளைகளுடன் சமயலறை யிலிருந்து வெளியே வந்தாள். குயிலி ஓடிப்போய் அதை வாங்கி வந்து அப்பாவிடம் கொடுத்துவிட்டு அவரது காலடியில் தரையில் அமர்ந்தவாறு பருகத் தொடங்கினாள். பெற்றவர் இருவரும் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

“அப்பா! எனக்கு இடமாற்றம் கிடைச்சிருக்கு இனி நான் உங்களோடேயே இந்த வீட்டில வாழப்போறன்”

“த்ஸொ....த்ஸொ...”

*சடாரிட்டது பல்லி. தாயினதும் மகளினதும் முகம் கறுத்துப் போனது. இதை அவதானித்துவிட்ட பரமசிவம் அவர்களைத் தேற்றினார்.*

*“வடகிழக்கில யெல்லே சொன்னது எல்லாம் நல்லதுக்குத்தான்”*

*சுய நிலைக்குத் திரும்பிய குயிலி உற்சாகத்துடன் கூறினாள்.*

‘‘S.L.E.A.S *பரீட்சையில நான் பாஸ் பண்ணீட்டன். எனக்கு புரமோசன் கிடைச்சிருக்கப்பா. யாழ் கல்வி வலயத்துக்கு என்னைப் பொறுப்பதிகாரி யாக போட்டிருக்கினம்.*

*“மெய்யாகத்தானே சொல்லுறாய்?...”*

*அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர் கொப்பளித்தது. மகளைக் கண்டுவிட்ட களிப்பினால் செல்லத்தின் கைகள் அமர்க்களமாக இயங்க அறுசுவை உணவு தயாராயிற்று.*

*“தாத்தா! தாத்தா!!”*

*மழலைக் குரலொன்று அவர்களது கவனத்தை ஈர்த்தது. அது வேறு யாருமல்ல, பரமசிவத்தின் அருமைப் பேத்தி சாம்பவிதான், கூடவே புகழும் வந்திருந்தாள்.*

*“சாம்பவிக்குஞ்சு!”*

*ஓடிப்போய் குழந்தையை முத்தமிட்டாள், குயிலி.*

*“ஏனம்மா இந்த வெய்யிலுக்காலை பிள்ளையைக் கூட்டிவந்தநீ?”*

*அப்பா ஆதங்கத்துடன் வினாவினார்.*

*“இவள் என்னை இருக்கவிட்டாத்தானே, அம்மம்மா வீட்ட போவம் என்று அழத்துவங்கி விட்டாள்.”*

*“மெய்யே குஞ்சு!”*

*செல்லம் அவளை இழுத்து தன்மடியில் இருத்திக் கொண்டாள். சாம்பவி வாயிலிருந்த சொக்லேற்றை ருசித்தது மட்டுமல்ல கன்னங்களிலும் அப்பியிருந்தாள். அவளைப் பார்க்க புகழுக்கு சிரிப்பாக வந்தது.*

*“பிள்ளைக்கு யார் சொக்லேற் தந்தது?”*

*“பெரிம்மா”*

*குயிலியை சுட்டிக் காட்டியவாறு குழந்தை பதிலளிக்க குயிலிக்கு உச்சி குளிர்ந்தது. கூடவே ஒரு ஏக்கம் மனதை அரித்துக் கொண்டிருந்தது. ஒரு பெருமூச்சுக் கிளர்ந்தெழுந்து அவளது ஆற்றாமையை வெளிப் படுத்தியதை பரமசிவத்தின் கண்கள் அவதானிக்கத் தவறவில்லை.*

*வீட்டுக்குப் போகப் புறப்பட்ட புகழை செல்லம் தடுத்து நிறுத்தினாள்.*

*“பிள்ளை புகழ்! வந்ததுதான் வந்தாய். ரெண்டு வாய் சாப்பிட்டிட்டுப்*

போவன், முருங்கைக்காய் கறி வைக்கிறன். குழந்தையும் விரும்பிச் சாப்பிடும்.”

அம்மாவின் வார்த்தையைத் தட்ட முடியாமல் செயலற்று நின்றாள், புகழ். தவிர அம்மாவின் சமையல் என்றாலே அது தனி ருசிதான், நினைக்க வாய் ஊறியது. குயிலி எழுந்துபோய் எல்லோருக்கும் தட்டுகளில் உணவைப் பரிமாறினாள். எல்லோரும் சுற்றிவர அமர்ந்திருந்து உணவை உட்கொள்ளத் தொடங்கினர். சாம்பவிக்கு அம்மம்மா ஊட்டிவிட்டாள். வயிறு சிறிது நிரம்பியதும் சாம்பவிக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து திரிந்து ஒவ்வொருவர் தட்டிலும் கிடந்த முருங்கைக்காயை எடுத்து வாயில் வைத்து பற்களால் காந்தத் தொடங்கினாள். அவளது செயலை வேடிக்கை பார்த்தவாறே அவர்களும் உணவை ருசித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென குழந்தை வீரிட்டு அலறியது. திடுக்கிட்ட அனைவரும் காரணம் தெரியாமல் குழம்பிப் போயினர். குயிலி அவசரமாக குழந்தையை தூக்கிப்போய் கண்களைக் கழுவிவிட முற்பட்டாள். ஓடிவந்து அவளிடம் குழந்தையைப் பறித்தெடுத்தவாறு புகழ் சீறினாள்.

“பிள்ளையை வயிற்றில் சுமந்து பெற்றிருந்தால்தானே இவவுக்கு குழந்தையின்ரை அருமை தெரியும். பச்சைப் பாலனின்ரை கையிலை உறைப்பு முருங்கைக்காயை குடுத்திருக்கிறா. பிள்ளை அந்தக்கையை கண்ணில் பிரட்டிப் போட்டுது.”

பொரிந்து தள்ளியவள் மளமளவென்று குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு நடையைக் கட்டினாள்.

எதையும் அறியாத குயிலி அம்மாவைப் பார்த்து கைகளைப் பிசைந்தவாறு நின்றிருந்தாள். அவளது மனதில் விழுந்த கீறலை உணர்ந்து கொண்டவளாய் பெற்றோர் கை பிசைந்து நின்றனர். என்ன நினைத்தாளோ குயிலி மளமளவென்று அறைக்குள் போனவள் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். ஒருவேளை கண்ணீரால் அந்தக் கீறலை குணப்படுத்த முடியும் என நம்பினாளோ அந்தப்பேதை.

***

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம் அமைதியாக இயங்கிக் கொண்டிருந்தது. கல்வி அதிகாரியின் அறைக்குள் வருவதும் போவதுமாக அலுவலர்கள் தமது கடமையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். எத்தனை பைல்கள் கைக்கு வந்தாலும் அத்தனையையும் சரிபார்த்துத்தான் கையொப்பமிடுவார் அந்த அதிகாரி. தன்முன்னால் அடுக்கப்பட்டிருந்த ஒரு பைலை எதேச்சையாகப் புரட்டிப் பார்த்தவர் ஒரு தவறைக் கண்டு அதிருப்தி அடைந்தவராய் குறித்த அலுவலரை அழைத்து கண்டித்ததுடன் பைலையும் திருப்பி அனுப்பி விட்டார்.

அதிகாரியான அம்மாவின் மனநிலை சீரற்று இருப்பதை அறிந்து

*கொண்டவனாய் பியோன் சற்று அவதானமாக நடந்து கொண்டான். அந்த சமயம் பார்த்து ஒரு முதிய பெண்மணி அதிகாரி அம்மாவைச் சந்திக்க வேண்டும் என்று அடம்பிடித்தவாறு வந்து நின்றாள்.*

*பிடரியைச் சொறிந்தவாறே பியோன் அறையினுள் எட்டிப் பார்த்தான்.*

*என்ன? என்பதுபோல் பார்வையை நிமிர்த்தி கேள்வியை வீசினாள்.*

*"ஒரு அம்மா வந்து உங்களைப் பார்க்க வேண்டுமெண்டு அடம் பிடிக்கிறா, என்ன செய்ய?"*

*"உள்ளே அனுப்பு"*

*அனுமதி கிடைக்கப் பெற்றதும் அந்தப் பெண்மணியை உள்ளே அனுப்பி வைத்தான்.*

*"வாங்கோ அம்மா, என்ன விஷயம்?"*

*அதிகார தோரணையில் வந்தது கேள்வி*

*"குயிலி! நான் உன்னுடைய பெரியம்மா"*

*"அது வீட்டில, இது ஒவ்விஸ்"*

*"நானும் என்னுடைய பேத்தியின்ரை இடமாற்ற அலுவலாய்த்தான் கதைக்க வந்திருக்கிறன்"*

*"இடமாற்ற விசயமென்றால் அவையவையே வந்து கதைக்க வேணும். மற்றவையின்ரை சிபாரிசு இங்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது"*

*"அதில்ல பிள்ளை அவளுக்கு இது முதல் அப்பொயின்ட்மென்ற்"*

*"முதலோ கடைசியோ நான் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை. எல்லாத்துக்கும் ஒரு சட்டதிட்டம் இருக்குது. அதுக்கு அமையத்தான் நாங்கள் நடந்துகொள்ள வேண்டும்."*

*"பிள்ளை நீ மனசு வைச்சால் செய்யலாம்"*

*"அதுதான் ஒன்றும் செய்யேலாது என்று சொல்லி விட்டேனே"*

*அவளது கை மேசையிலிருந்த மணியை அழுத்தியது.*

*மணி அடித்ததும் பியோன் எட்டிப் பார்த்தான்.*

*"அம்மாவை வெளியில அனுப்பு"*

*அம்மா வெளியேறி விட்டாள். குயிலியின் மனத்தில் பலவிதமான நிகழ்ச்சி நிரல் முன்னோட்டமாக திரையேறிக் கொண்டிருந்தது.*

*எங்களை ஏழைகளென புறந்தள்ளிய பெரியம்மா , சிடுமூஞ்சியாய் அம்மாவை கரித்துக் கொட்டும் சுபாவம் . எங்களோடு உறவு வைப்பது தனக்கு கௌரவக் குறைவு எனக் கருதும் பெரியம்மா , எங்களுடைய வீட் டு நன்மை தீமைகளை புறந்தள்ளும் பழக்கம். எல்லாமே அவவுக்கு உயர்வாகத்*

தோன்றியிருக்கலாம். ஆனால் இன்று நாங்களும் மேன்மை நிலையில் தானிருக்கிறோம் என்பதை அவவும் நன்றாக உணரட்டும்.

மனம் ஒருதரம் கொதித்து அடங்கியது. மணிக்கூட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தாள். நேரம் சரியாக 12.02 ஐக் காட்டியது. மதிய இடைவேளைக்கு வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானாள். இன்று அவள் அரைநேர லீவு எடுத்திருந்தாள். அப்பாவை மூன்று மணிக்கு கிளினிக்குக்கு கூட்டிப்போக வேண்டும். இப்போது சில நாட்களாக அவருக்கு உடல்நிலை சீரில்லை. அடிக்கடி தலைச்சுற்று, சோர்வு என்று படுத்து விடுகிறார். மருத்துவர்களும் பிறஷர், கொலஸ்றோல் என புதுப்புது நோய்களின் பெயர்களை உச்சரிக்கிறார்களே தவிர அவர்கள் தரும் மருந்துகளுக்கு உடல்நிலையில் முன்னேற்றம் தோன்றுவதாகத் தெரியவில்லை.

குயிலி, தனது ஸ்கூட்டரை இயக்கியவள் அலுவலகத்திலிருந்து வெளியேறி தெருவில் இறங்கிப் போய்க் கொண்டிருந்தவளது கண்களுக்கு பெரியம்மா தெருவோரம் நடந்து போவது தென்பட்டது.

"கிறீச்!"

பிறேக் ஒலியுடன் அவளருகில் வந்த நின்றது ஸ்கூட்டர், பெரியம்மா தன்னருகில் கேட்ட சத்தத்தால் அரண்டு போனாள்.

"பெரியம்மா பயந்திட்டீங்களே?"

கேட்டவள் அத்துடன் விட்டு விடவில்லை. "எங்கை நடந்து போய்க் கொண்டிருக்கிறயள்? வாங்கோ நான் கொண்டுபோய் விட்டுவிடுறன்"

பெரியம்மாவுக்கு ஆச்சரியமாயிருந்தது. இப்போது அவள் காட்டும் கரிசனையும், கந்தோரில் காட்டிய அலட்சியமும் எல்லாமே புரியாத புதிராக இருந்தது.

"பயப்படாதையுங்கோ பெரியம்மா, நான் கவனமாய்க் கூட்டிக் கொண்டு போவன். எங்கை போகவேணுமெண்டு சொல்லுங்கோ"

சற்று தெம்பு வரப்பெற்றவளாய் பெரியம்மா வாய் திறந்தாள்.

"நாங்கள் இப்ப புதிசாய் வைமன் றோட்டிலை ஒரு வீடு வாங்கியிருக் கிறம். அங்கை போறதுக்குத்தான் பஸ்சுக்குப் போய்க் கொண்டிருக்கிறன்."

"சரி ஏறுங்கோ, நான் வீட்டிலேயே கொண்டுபோய் விட்டிடுறன்"

வீட்டில் கொண்டுபோய் இறக்கி விட்டவள், அவ எவ்வளவோ வற்புறுத்தியும் உள்ளே போகாமல் திரும்பி விட்டாள்.

அன்று குயிலி வீடு வந்துசேர சற்று தாமதமாகி விட்டது. செல்லம் வீட்டு வாசலிலேயே மகளுக்காக காவலிருந்தாள்.

"என்ன பிள்ளை! இவ்வளவு நேரமாய்ப் போச்சுது. நான் பயந்தே போயிட்டன்."

குயிலி சிரித்தாள்

"ஏனம்மா வரக்கொஞ்சம் சுணங்கினால் பயப்பிடுறதே, என்ன உங்கட பழக்கம்"

"இல்லப்பிள்ளை எனக்கு அடிக்கடி கெட்ட கனவும் வருகுது. சகுனங் களும் பிழையாய்க் காட்டுது. யாழ்ப்பாணத்திலை வாகனப் புழக்கமும் கூட. நீ சரியாய் வந்தாலும், எதிரில வாறவன் இசகு பிசகாய் வந்து அடிச் சிட்டால்… அதுதான் மனப்பயம் கண்டியோ"

"கொப்பரும் இன்னும் சாப்பிடேல்ல, பிள்ளை வரட்டும் என்று சொல்லிப்போட்டு இருக்கிறார். கெதியாய் கால்முகத்தை கழுவிப்போட்டு வா. நான் சாப்பாடு போடுறன்"

சொல்லிக்கொண்டே உள்ளே போனவள், காரியத்தில் இறங்கினாள்.

உணவுத் தட்டை செல்லத்திடமிருந்து கையில் வாங்கியவாறே பரமசிவம் சொன்னார்.

"இஞ்சாரும் செல்லம்! நான் உம்முடைய கையால எத்தனை வருசமாய் சாப்பிடுறன்?"

"இப்ப என்னத்துக்கு அதையெல்லாம், பேசாமல் சாப்பிடுங்கோ"

"இப்ப எங்கட குயிலிக்கு நாப்பத்தாறு வயது வந்திட்டுது. அப்ப உம்முடைய சாப்பாட்டைசாப்பிட்டு நாப்பத்தேழு வருடமாகுது."

"இந்த மனுசனுக்கு இண்டைக்கென்ன புதிய கணக்கெடுப்பு"

செல்லம் அலுத்துக் கொண்டாள்.

வீட்டு வாசலில் வாடகைக்கார் வந்து நின்று ஹார்ண் அடிக்கும் சத்தம் கேட்டது. மூவருமாக புறப்பட்டு வாசலை நோக்கி நடந்தனர். செல்லமும், பரமசிவமும் முன்னால் நடக்க குயிலி கதவைப் பூட்டிக் கொண்டு பின்னால் வந்தாள். வீட்டு வாசற்படியைத் தாண்டுவதற்குள் பரமசிவம் நெஞ்சைப் பொத்திப் பிடித்தவாறு தள்ளாடுவதை அவதானித்த செல்லம் அருகில் வந்து அவரைத் தாங்கிப் பிடித்தவாறே அவலக் குரலெழுப்பினாள்.

"ஐயோ! ஓடிவா பிள்ளை!"

குயிலியும் வந்து அப்பாவைக் கீழே விழ விடாமல் தாங்கிப் பிடிக்க, அவரது கண்கள் செருகிக் கொண்டன. ஒரே நொடியில் அவர் அது என அஃறிணைக்குப் போய்விட்டார்.

***

பரமசிவத்தின் வீடு சனத்திரளால் நிரம்பி வழிந்தது. பிரதான தெருவ லிருந்து வீடுவரை ஒழுங்கையெல்லாம் தோரணங்களால் நிரம்பி வழிந்தன. வீட்டு வாசலில் இரு மருங்கிலும் பருத்த மொந்தன் வாழைக்குலைகள் கட்டப் பட்டிருந்தன. நடு ஹோலில் பரமசிவம் பட்டுவேட்டி சால்வை

யுடன் மீளாத்துயில் கொண்டிருந்தார். புன்னகைத்த முகத்துடன் அவர் கண்மூடிக் கிடப்பதை பார்த்து விம்மி வெடித்தனர். அவர் பெற்றெடுத்த பிள்ளைகள். குயிலி அவரது கால் மாட்டில் தலை வைத்துக் கிடந்தாள். செல்லத்தை அவளது அக்காமார் மூவரும் தமது அரவணைப்புக்குள் வைத்துக் கொண்டனர். தான் ஆடாவிட்டாலும் தனத சதை ஆடும் என்பார்களே, அது இதுதானோ..

இளம் வயதில் பரமசிவம் குடித்தாலும் வெறித்தாலும் எவரோடும் சண்டை, சச்சரவுக்குப் போவதில்லை. தானும் தன்பாடும் என ஒதுங்கி இருந்து விடுவார். எனவே, அவருக்கு எதிரிகள் என எவருமில்லை. அனைவரும் அவரது அபிமானிகளே. பாடசாலையிலும் சரி கிராமத்து மக்களிடமும் சரி அவர் பண்பாகவே பழகுவார். எனவே அவருக்கு கிராமத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. அதைக் காட்டுவதற்கு இதுவே கடைசித் தருணம் எனக் கருதிய மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். அது தவிர குயிலியின் கந்தோர் ஊழியர்கள், முள்ளியவளை யிலிருந்து ஆசிரிய நண்பர்கள், பழகியவர்கள், மல்லாவியிலிருந்து ஒரு தொகையினர் என அனைவரும் வந்திருந்தனர். மகிழதும் அவளது கணவனதும் ஆசிரிய குழுவினர் , சந்திரனது வேலைத்தள நண்பர்கள் எனப்பலரும் வந்து அஞ்சலி செலுத்தினர்.

மலர் வளையங்களும் மாலைகளுமென பரமசிவத்தின் வெற்றுடல் மலர்களுக்குள் மூழ்கிக் கிடந்தது. இறுதிக் கிரியைகளைத் தானே செய்ய வேண்டுமென அடம்பிடித்து மொட்டையடித்துக் கொண்டு வந்து நின்ற சந்திரனைப் பார்த்து அனைவருமே திகைத்துப் போயினர்.

பரமசிவத்தின் ஈமக்கிரியைகள் யாவும் சிறப்புற நடைபெற்றன. ஈற்றில் பரமசிவம் இறுதி விடை பெற்று தகனக் கிரியைகளுக்காக சுடுகாட்டுக்குப் புறப்பட வேண்டிய நேரமும் வந்து விட்டது. பூவையும் பொட்டையும் இழந்து விட்ட செல்லத்தின் தாலியையும் பறித்துக் கொண்டவராய் பரமசிவம் புறப்பட்டபோது அழுகைக் குரலால் வீடே அதிர்ந்தது. என்ன செய்வது? இதுதானே இயற்கையின் நியதி. பிறப்பும், இறப்பும் வாழ்க்கையில் நடைபெறும் சகஜமான விடயம் தானே. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் துயரச் சுமையிலிருந்து விடுபடலாம். எனினும் காலம்தான் காயங்களை ஆற்றும் என்ற உண்மை நிலையை எவருமே மறுக்க முடியாது.

நெருங்கிய உறவினர் அனைவரும் வீட்டில் தங்கியிருந்தமையால் செல்லத்துக்கு தனிமை அவ்வளவாய் தோற்றவில்லை. சின்னக்கா மாத்திரம் எட்டுச் செலவுவரை நின்றுவிட்டு நீர்கொழும்பு புறப்பட்டுப் போய் விட்டாள். பெரியக்கா கடைக்குட்டித் தங்கையான செல்லத்தின்மீது அதிக கரிசனை காட்டியவளாய் அவளுடனேயே தங்கி விட்டாள். வருடக் கணக்கில் பிரிந்து வாழ்ந்தவர்கள் சேர்ந்ததும் தங்களது இட்டல், இடைஞ்சல் நன்மை, தீமைகளை ஒருவருக்கொருவர் எடுத்துரைத்து மன ஆறுதலைத்

*தேடிக் கொண்டனர். கீரியும் பாம்புமாய் இருந்த பெரியம்மா - அம்மா உறவு எப்படி இவ்வாறு மாறியது என குயிலியும் அதிசயப் பட்டாள். இருந்த போதிலும் அம்மாவின் மனக்கவலை பெரியம்மாவின் சகவாசத்தினால் குறைந்திருப்பது கண்டு மனம் திருப்தியடைந்தது. அதேசமயம் மானசீகமாக பெரியம்மாவின்மீது நன்றியுணர்வு பெருகியது.*

*அதுமட்டுமல்ல வீட்டில் புகழின் மகள் சாம்பவியும் , மகிழின் குழந்தைகளான பரதனும், பாரதியும் கூடிக்குலாவி நேரத்தைக் கழிப்பது மட்டுமல்லாமல் அடிக்கடி அம்மம்மாவிடம் போய் முறைப்பாடு வைப்ப தால் செல்லத்துக்கும் கவனம் அவர்கள்மீது திரும்புவதால் பொழுது சுமூகமாகக் கரைந்து போக ஏதுவாக இருந்தது. அம்மாவைச் சாந்தப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் குயிலியின் மனதை அரித்துக் கொண்டி ருந்தது. அம்மா இத்தனை காலமும் அப்பாவின் தயவில் வாழந்தவளா யிற்றே. இருந்தும் அவள் எதிர்பார்த்தவாறு அம்மா ஒன்றும் ஒரேயடியாகத் தளர்ந்து போகவில்லை. காலம் நிச்சயம் அவளது கவலையை மாற்றிவிடும் என நம்பினாள்.*

*மகிழின் கணவனும் சந்திரனும் உடன்பிறந்த சகோதரங்கள் போலவே ஒட்டி உறவாடிப் பழகிக் கொண்டனர். அதுவும் குயிலிக்கு மகிழ்வைத் தந்த போதிலும் அதில் ஒரு வெற்றிடம் இருப்பதாக மனதை உறுத்தும். ரகு தன்னை ஏமாற்றி விட்டான் என்ற காழ்ப்புணர்ச்சி தலைதூக்கும். “சே”... அவனை நான்தான் என் உயிருக்குயிராக நேசித்தேனே தவிர அவன் என்னை ஒரு பொருட்டாக மதித்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்குமா? மனம் ஏம்பலிக்கும்.*

*புகழும், மகிழும் ஒற்றுமையாகத்தான் அந்த வீட்டில் வளைய வந்தார்கள். ஆனால்.. குயிலி அவர்களிடமிருந்து சற்று விலகியே இருந்தாள். அவர்கள் இருவரும் திருமணமானவர்கள் என்பதால் அவர்களுக்குள் ஒரு ஒருங்கிசைவு இருக்கும். நானோ தனிக்கட்டை. நான் ஒதுங்கிக் கொள்வது தான் நல்லது என மனம் அறிவுறுத்தும். அவள் புகழிடத்தில் சூடுகண்ட பூனையாயிற்றே.*

***

*பரமசிவத்தின் வீட்டு முற்றத்தில் பெரிய பந்தலொன்று போடப்பட்டு அதை இரண்டு வேலையாட்கள் வேய்ந்துகொண்டிருந்தார்கள். கீழே நின்று சந்திரன் கிடுகு எடுத்துக் கோடுத்துக் கொண்டிருந்த செல்லத்துக்கு கண்களில் நீர் கொப்பளித்தது. வேயப்பட்டுக்கொண்டிருக்கும் அத்தனை கிடுகுகளையும் பரமசிவம் தானே தனது கைகளால் இழைத்திருந்தார். எப்போதும் காய்ந்த தென்னோலைகள் மரத்திலிருந்து விழுந்தால் அவற்றை வெட்டிக் கிழித்து ஊறவைத்து, பதப்படுத்தி அதை கிடுகாக உருவாக்கி விட்டுத்தான் மறு வேலையைக் கவனிப்பது அவரது வழக்கம். இப்போது அவரது கையால் இழைத்த கிடுகுகளே அவரது தேவைக்குப் பயன்படப்*

போகின்றன.

கண்ணீர் மல்க நின்ற அம்மாவைக் கவனித்துவிட்ட குயிலி அவளிடம் ஓடி வந்து அவளை ஆசுவாசப்படுத்தி உள்ளே அழைத்துப் போனாள். வறண்டு கிடந்த முகம் மெலிந்த சற்று கூன் விழுந்த உடல் வெண்பஞ்சாய் நரைத்த தலைமுடி ... இதுதான் அம்மாவின் தற்போதைய தோற்றம். ஆனால்... பெரியம்மாமார் மூவருமே ஆரோக்கியமாக நிமிர்ந்த உடல் வாகுடன் காணப்படுகின்றனர். பிள்ளைகளை வாழவைக்க வேண்டுமென்ற கடும் பிரயத்தனத்துடன் தன் உடலை வருத்தி உழைத்ததனால் இன்று அம்மாவுக்கு இந்த நிலை. அதுமட்டுமல்ல என்னைப்பற்றிய கவலையும் அவளது மனநிலையைப் பாதித்திருப்பது உண்மைதான். அதற்கு நான் என்ன செய்ய முடியும். கடவுள் போட்ட கணக்கு என்னை வாழா வெட்டியாக்கி விட்டதே.

மறுநாள் அந்தியேட்டி, கீரிமலை புனித தீர்த்த கரையில் பரம சிவத்தின் உடலை எரித்த சாம்பலையும் கடலில் கரைத்து விடப் போகிறார்கள். அவருடைய நிழற்படம் ஒன்றுதான் அவரது நினைவாக அவர்களுக்கு மிஞ் சப்போகின்றது.

சா வீட்டிற்கு வந்திருந்தவர்கள் அனைவருக்கும் வீட்டுக் கிருத்தியத் திற்கான அழைப்பிதழ் கொடுத்திருந்தார்கள். எனவே அதிகாலை இரண்டு மணிக்கே சமயற்காரர்கள் உரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கி விட்டனர். காலை பத்து மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகின. பிதிர்க்கடனை சந்திரன் முன்நின்று செய்ய, புகழும் அவனுக்கு அனுசரணையாக நின்று நிறைவேற்றினாள். பரமசிவத்தின் பெயரால் பிராமணருக்கு புண்ணிய தானம் செய்யப்பட்டது.

வெள்ளைச் சேலையில் வெற்று நெற்றியுடன் காணப்பட்ட செல்லத்தைக் கண்ணுற்ற அனைவருமே கண் கலங்கினர். எப்போதும் செல்லத்தின் நெற்றியில் ஒரு பெரிய குங்குமப் பொட்டு நிறைந்திருக்கும். அன்று அவளது முகத்தில் கணவனை இழந்து நிற்கும் வேதனை தான் குடிகொண்டிருந்தது. அம்மாவின் கோலத்தைப் பார்த்து குயிலி இடையிடையே விம்மிக் கொண்டருந்தாள்.

வந்திருந்தவர்களை பந்தலுக்குள் இருத்தி விட்டு அணி அணியாக சபை வைக்கத் தொடங்கினர். வேற்றுமையின்றி இளைஞர்கள் தாமாக முன் வந்து சீராக உணவை விநியோகித்த தோரணையைப் பார்க்க செல்லத்தின் அக்காமாருக்கு வியப்பாக இருந்தது. மனதில் பட்டதை நேராகவே செல்லத்திடம் கூறிவிட்டார்கள்.

“செல்லம்! உண்மையிலேயே நீ கொடுத்து வைத்தவள் தான். நாங்கள் வாழ் நாளெல்லாம் பணம் பணம் என்று அலைந்து பணத்தைத்தான் சம்பாதித்தோம். ஆனால் நீ.... நிறையவே மனிதரைச் சம்பாதித்து வைத்திருக்கிறாய்.”

இதனைக் கேட்ட செல்லம் ஒரு வறட்டுச் சிரிப்பை உதிர்த்தாள்.

" அக்கா! எல்லாவற்றுக்கும் எனக்குக் கிடைத்த மருமக்கள்தான் காரணம். அந்தப் பரோபகாரிகள் தேடிய பந்தம் தான் இவர்கள் எல்லாருமே. அதுமட்டுமல்ல குயிலிக்கும் அப்பாவுக்குமென நிறைய நலன் விரும்பிகள் இருக்கிறார்கள்.. அத்தனை பேருமே எனக்குப் பிள்ளைகள் தான். அது தான் நான் செய்த பாக்கியம்."

மனம் நெகிழ்ந்து கூறினாள் செல்லம்.

ஒரு புறம் மளமள வென்று பந்தி வைக்கப் பட்டுக்கொண்டிருக்க, மறு புறத்தில் வயிறார உணவு உண்டவர்கள் விடைபெற்றுக் கொண்டிருந்தனர். மதியம் மூன்று மணியளவில் மதிய போசனம் நிறைவுக்கு வந்தது.

நெருங்கிய உறவினர்களைத் தவிர அனைவரும் புறப்பட்டு போய் விட்டார்கள். குயிலியின் மனதில் பெரும் போராட்டம் சூறாவளியாக உரு வெடுத்துக் கொண்டிருந்தது. இத்தனை நாட்களும் பெரியம்மா, ஆசை யம்மா, புகழ் குடும்பத்தினர் அனைவரும் இங்கேயே தங்கியிருந்தார்கள். இனிமேலும் அவர்கள் இங்கே இருக்க முடியாது. அவர்களுக்கென ஆயிரம் அலுவல்கள் இருக்கும். அவர்கள் தத்தமது அலுவல்களைக் கவனிக்க தமது இருப்பிடங்களுக்கு போயே ஆகவேண்டும். நானும் வேலைக்கு போனால் அம்மா எப்படி தனியாக இருக்க முடியும். தனிமை அவளை வாட்டியெடுத்து விடுமே ... என் செய்யலாம் பலத்த யோசனையில் மூழ்கிப் போனாள். சடுதியாக ஒரு குரல் அவளது எண்ணத்தை திசைதிருப்பியது.

"என்ன பிள்ளை குயிலி இஞ்சை வந்திருந்து யோசிச்சுக் கொண்டி ருக்கிறாய்? அங்கை எல்லாரும் பந்தலுக்கை கூடியிருந்து கதைச்சுக் கொண்டி ருக்கினம் கொப்பரின்ர காரியமெல்லாம் ஒரு குறையுமில்லாமல் நடத்தி முடிச்சாச்சுது. பேந்தென்ன உனக்கு யோசனை?

எதேச்சையாக அந்தப் பக்கம் வந்த முள்ளியவளை அம்மா குயிலியின் நிலை கண்டு அவளை உலுப்பினாள். அவள் அந்தியேட்டிக்கு இரண்டு நாள் முன்னதாகவே கிளம்பி வந்து விட்டாள். குயிலிக்கு கைம்மாறு செய்ய கிடைத்து விட்டதில் அவளுக்கு ஒரு திருப்தி.

குயிலியை அணைத்து தலையைக் கோதி விட்டவளிடம் சரணடைந்தாள், அந்தப் பேதை.

"அம்மா! இனி எல்லாருமே தத்தமது வீடுகளிற்குப் போய் விடுவினம். அதை நான் பிழையென்று சொல்ல வரயில்ல. அம்மா என்னெண்டு வீட்டில தனியாக இருக்கப் போறா. நானும் வேலைக்குப் போகத்தானே வேணும். அதுதான் யோசனையாகக் கிடக்கு."

"எட உதுக்கேன் பிள்ளை யோசிக்கிறாய். என்ர பிள்ளையள் ரெண்டு பேரும் குடும்பகாறராகி விட்டினம். இனி நான் அவைக்கு காவல் இருக்கத் தேவையில்லை. நீரும் என்ரை பிள்ளைதானே நானும் இஞ்சையே இருந்து

*விடுறன். என்ன! நான் சொல்லுறது சரியே?*

*சடுதியாக குயிலி அவளை இறுக்கட்டிக்கொண்டாள்.*

*“என்ரை அம்மா எண்டால் அம்மாதான்”*

*மகிழ்ச்சியுடன் வந்தன வார்த்தைகள்*

***

*ஆண்டுகள் பல ஓடி மறைந்தன. இரு தாய்மாருக்கு ஒரு சேயாய் அந்த வீட்டில் வளையவந்தாள் குயிலி. அந்த மூவருமே புரிந்துணர்வுடன் செயற் பட்டதால் கருத்து வேறுபாட்டுக்கு அங்கு இடமில்லாமல் போய்விட்டது. விடுமுறை நாட்களில் முள்ளியவளைக்குப் போய்வருவாள் அம்மா. குயிலி இரு அம்மாமாருக்கும் வேண்டியதை வாங்கிக் கொடுப்பாள்.*

*ஒரு வார இறுதி நாட்களில் பிள்ளைகளைப் பார்க்க முள்ளிய வளைக்குப் போயிருந்தாள் அம்மா. இங்கு செல்லத்தின் உடல் நிலை நாளுக்கு நாள் பாதிப்படைந்து கொண்டு வந்தது. குயிலிக்கும் அது புரிந்தது. இருந்தாலும் இயற்கையின் கோலத்தை நாம் மாற்றியமைத்துவிட முடியுமா? என்ன...*

*அன்றைய தினம் செல்லம் மிகுந்த சோர்வுடன் காணப்பட்டாள். குயிலி மெதுவாக அவளது நெற்றியைத் தடவிவிட்டாள். நெற்றி சில்லென்று இருந்தது. அவளது மனத்தில் ஏதோ விபரீதமாய் தோன்றி யிருக்க வேண்டும். சாம்பவியை உடன் வருமாறு சொல்லி ஆள் அனுப்பி வைத்தாள். அவளையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த செல்லத்தின் கண்களில் இருந்து நீர் வடிந்தது.*

*“ஏனம்மா அழுகிறியள்? உங்களுக்கு ஒன்றும் ஆகாது”*

*ஆதரவுடன் அவளது கையைப் பிடித்துக் கொண்டாள். இதற்கிடையில் சாம்பவியும், அவளது கணவனும் வந்துவிட்டனர். சாம்பவி நாடியைப் பிடித்து பார்த்தாள். அவளது கணவன் கண்களை விரித்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினான். இரு டாக்டர்களும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். சாம்பவி வாய் திறந்தாள்.*

*“பெரியம்மா! அம்மம்மா எங்களை விட்டுப் போயிட்டா”*

*“அம்மா!”....*

*குயிலின் அலறல் வீட்டுச் சுவர்களில் மோதி எதிரொலிக்க அங்கு ஊரே கூடி விட்டது. இறுதி மூச்சை கணக்கிட்ட பேத்தி சாம்பவி சிலையாக விறைத்துப் போய் நின்றாள். புகழும் மகிழும் ஓடி வந்து அம்மாவின் மீது விழுந்து புரண்டனர். ஆண்டாண்டு தோறும்அழுது புரண்டாலும் மாண்டவர் வரப்போவதில்லை என்பது எமது உணர்வுகளுக்கு தெட்டத் தெளிவாகத் தெரிந்த போதிலும் உணர்வுகளின் கொந்தளிப்பே மேலோங்கி நிற்கிறது. இது தான் உண்மையான நிலைப்பாடு.*

சடலத்தின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஆசை அக்கா மட்டுமே வந்திருந்தாள். மூத்த அக்காமார் இருவரும் எப்பவோ போய்ச் சேர்ந்து விட்டார்கள். வாழ்க்கையில் முதல் முதலாக குயிலி தனிமையயை உணர்ந்தாள். தனியே இருந்து புலம்புவது அவளது வழமையாயிற்று.

"அம்மா! வாற மாதம் எனக்கு ஓய்வு கிடைக்கப் போகுது. ஓய்வு கிடைத்ததும் நான் உங்களுடன் கூடவே இருந்து உங்களை எப்படி யெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கனவுகண்டேனே. அதை எல்லாத்தை யும் பொய்யாக்கிப் போட்டு போறத்துக்கு உங்களுக்கு என்ன அவசரம் வந்தது". என்னைத் தனியே அலையவிட்டு வேடிக்கை பார்க்கிறது என்று நினைச்சிட்டிங்களா? அம்மா!... அம்மா!..."

அவளது புலம்பலைக் கேட்க யாருமில்லை. சில சமயங்களில் அவளுக்கு தற்கொலை செய்து உயிரை மாய்த்துவிட்டால் என்ன என்று தோன்றுவதுமுண்டு. அதே சமயம் மனம் பக்குவமாய் அறிவுரையை எடுத்துச் சொல்லும்.

பிரமன் படைத்த இந்த உயிரை அழிப்பதற்கு எமக்கு என்ன உரிமை இருக்கிறது. இப்போது அம்மாவின் கணக்கு முடிந்து விட்டது. எனக்கும் ஒரு நாள் கணக்கும் முடியும். அது வரை காத்திருக்க வேண்டியது தான். இது தான் விதி. மனம் தன்னைத் தானே நொந்து கொள்ளும்.

ஒருவாறு அவளது சேவைக் காலம் முடிந்து விட்டது. அவளது வாழ்க்கையின் மிக மோசமான காலமாக அந்த நாட்களை அவள் கருதினாள். வீட்டில் தனித்திருக்கப் பிடிக்கவில்லை. தனிமையைப் போக்க வாசிகசாலையை நாடினாள். தினசரிகளைப் புரட்டி புதினங்களை வாசிப்ப தும் அங்கு வருவோர் போவோரை வேடிக்கை பார்ப்பதும் முடிந்தால் சில ரோடு சம்பாஷிப்பதுமாக பொழுதைக் கழித்தாள் . மாலை வேளைகளில் முருகன் சந்நிதிக்குப் போய் அங்கு நேரம் போவதே தெரியாமல் முருகனின் திருவுருவத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாள். அப்படியான சமயங்களில் மனம் சலனமற்று இருப்பதை அவளால் உணர முடிந்தது.

ஒரு நாள் வழமைபோல் அவள் அன்றைய தினசரியை புரட்டிக் கொண்டிருந்தபோது ஒரு விளம்பரம் அவளது கண்களை உறுத்தியது. முதியோர் இல்லம் ஒன்றிற்கு நிர்வாகத்தில் தேர்ச்சியுள்ள அலுவலர் ஒருவர் தேவையென்ற விளம்பரம் போட்டிருந்தார்கள். அவள் தினமும் வணங்கும் அந்த முருகப் பெருமான் அந்தப் பதவி வெற்றிடத்தைப் அவளுக்காக ஏற்படுத்தியிருக்கின்றான் எனக் கருதியவள் உடனேயே அதற்கு விண்ணப்பத்தையும் அனுப்பி வைத்தாள். மூன்றாம் நாள் அவளை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தபோது பாலை வனமாக வறண்டு கிடந்த அவளது மனதில் ஓர் தளிர் முளை விட்டதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அவளை விட தகுதியான ஒருவரைத் தேடமுடியாதென இல்லத்தின்

நிர்வாக சபை எண்ணியது. விளைவு..... குயிலி அந்த முதியோர் இல்லத்தில் நிர்வாகப் பொறுப்பை மனம் உவந்து ஏற்றுக்கொண்டாள். அறுபது வயதில் இருபது வயதிற்கேற்ற தன்மை இவளது உள்ளத்தை ஆக்கிரமிக்க சிட்டுக் குருவியாக அவள் சிறகடித்து வேலைகளை கவனிக்கத் தொடங்கினாள். அங்கிருந்த முதியவர்கள் அனைவரும் "அம்மா!" என்று அன்பொழுக அழைக்கத் தொடங்கினார்கள்.

***

பொழுது புலர்ந்து கொண்டிருந்தவேளை அது. நான்கு புறங்களிலும் வேப்ப மரங்களால் சூழப்பட்டிருந்த அந்த முதியோர் இல்லம் அமைதி யாகக் காணப்பட்டது.

அந்த அமைதியைக் கலைத்தவாறு பெருக்கும் ஓசையொன்று குயிலியின் காதில் வந்து விழவே படுக்கையை விட்டு எழும்பியவள் மெதுவாக வந்து வெளிப்புறத்தை எட்டிப் பார்த்தாள்.

ஒரு அம்மா முன் பள்ளத்து முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். சொற்ப வேளைகளில் வேலையாட்கள் வந்து விடுதியின் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்வார்கள். அப்படியிருக்க இந்த அம்மாவிற்கு ஏன் அந்த வேலை. மெதுவாக அவளை அணுகினாள். அவள் வேறு யாருமில்லை நேற்றுத்தான் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த மங்களம் என்ற பெயரையுடைய மூதாட்டிதான் வேப்பம் சருகுகளைக் கூட்டிக் கொண்டிருந்தாள்.

"மங்களம்மா! ஏன் உங்களுக்கு இந்த வேலை? "

செல்லமாகக் கண்டித்தவளை நிமிர்ந்து பார்த்தாள் மங்களம். குயிலியின் காருணியம் நிறைந்த பார்வை அவளை அரவணைப்பதை உணர்தவளாய் வாய் திறந்தாள்.

"அம்மா இங்கை வேலை செய்ய ஆட்கள் இருக்கலாம் ஆனால் நான் என்னால் ஆனதை செய்யத்தான் வேண்டும். கை காலை சும்மா வைத்திருந்தால் அது செயல் இழந்து போய்விடும். இதுவும் ஒரு பயிற்சி தானே. "

இங்கிருக்கும் மற்றைய மூதாட்டிகளை விட மங்களம் சற்று வித்தியாசமானவள், விசயம் தெரிந்தவள் எனக் குயிலியின் மனம் கணக்குப் போட்டது. இப்படியாக பலதரப்பட்ட முதியோர்கள் இங்கு இருப்பதை அவளால் உணர முடிந்தது. அவர்களுள் சிலர் பிடிவாதக்காரர்கள். அவர்களைக் கையாள்வது சிரமம். அவர்களது வழியிலேயே போய்த்தான் அவர்களைச் சமாளிக்க வேண்டும். படிப்படியாக குயிலி தனது குணவியல்புகளை மாற்றி அவர்களுக்கு அமைவாக நடக்கக் கற்றுக் கொண்டாள். மொத்தத்தில் கசந்து போய்க்கிடந்த வாழ்வு மெல்ல மெல்ல இனிக்கத் தொடங்கியது.

வருடங்கள் இரண்டு ஓடி மறைந்தன. குயிலியின் இயல்பு மட்டுமல்ல

தோற்றமும் மாறிவிட்டது. நரைத்த தலையும் அம்மாவைப் போலவே சற்று வளைந்த உடம்புமாக செல்லத்தின் தோற்றத்ததை ஒத்தவளாக அவள் இருந்தாள். எப்போதாவது புகழ், மகிழ் அவளைப் பார்க்க வருவார்கள் . முன்னரைப் போல் குயிலி அவர்களுடன் நெருக்கமாகப் பழகுவதுமில்லை. சற்று எட்டியே நடந்து கொள்வாள். அவர்களது பிள்ளைகளைப் பற்றி விசாரிப்பாள். மகிழது மகன் பரதன், எஞ்சினியர் படிப்பு முடித்து விட்டதாக அவள் சொன்னாள். எஞ்சினியர் என்ற பதத்தைக் கேட்டதும் ரகு ஒரு தடவை மனதில் வந்து போனான். அவ்வளவு தான் எல்லாவற்றையும் பற்றற்ற நிலையில் நோக்க அவள் கற்றுக் கொண்டு விட்டாள்.

சில சமயங்களில் இரண்டு பெண்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு பிரச்சனை முற்றிவிடும். அவர்களைச் சமாளிப்பதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

அன்று ஒரு வியாழக்கிழமை. குயிலி தனது காரியாலய அறையில் அமர்ந்திருந்து ஏதோ கணக்கு வழக்குகளை புரட்டிக் கொண்டிருந்தாள்.

“அம்மா!...”

குரல் கேட்டு நிமிர்ந்தளை நோக்கி அவளது உதவியாள் கூறினாள் “அம்மா உங்களைப் பார்க்க ஒரு முதியவர் வந்திருக்கிறார்.”

“ உள்ளே அனுப்பி வை”

“ குட் மோர்னிங் மடம்”

“ குட் மோர்னிங் இருங்கோ இருந்து கொண்டே பேசலாம்”

குயிலி எந்த ஒரு ஆண் மகனையும் நிமிர்ந்து பார்ப்பதில்லை அவளது உள்ளத்தில் ஆண்களென்றாலே வெறுப்புத் தோன்றும்.

“ என்ன விஷயமாய் வந்திருக்கிறியள்?”

“என்னுடைய அம்மாவின்ரை திதி வருகுது அதுக்கு... நான் இஞ்சை இருக்கிற தாய்மாருக்கு ஒரு வேளை சாப்பாடு கொடுக்க வேணுமென்று பிரியப்படுறன்”

“நல்ல விசயம் எப்ப திதி என்று சொன்ன நீங்கள்?”

“ வாற வெள்ளிக்கிழமை”

“உணவு சமைத்துக் கொண்டு வந்து கொடுக்கப் போகிறீர்களா? அல்லது காசைக் கட்டினால் இங்கையே சமைத்துக் கொடுக்கும் வசதியும் இருக்குது”

“ சாப்பாடு சமைத்துக் கொண்டு வருவதற்கு என்னிடம் வசதி இல்லை. இங்கையே சமைத்துக் கொடுப்பது நல்லது”

“இங்கை... எங்களுடைய இல்லத்தில முதியோர், வேலை செய்யிறவை என நூற்றியிருபத்தைந்து பேர் வரையில இருக்கினம் தலைக்கு

தலா நூற்றி ஐம்பது ரூபாய்ப்படி காசு கட்டினால் போதும்"

" மேடம் ! நான் என்னுடைய அம்மாவுக்கு எதுவுமே செய்யவில்லை, ஏன்? கொள்ளிகூட வைக்கவில்லை. நான் ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் செக் தாறன். இதில அவைக்கு வேண்டியதைச் செய்யுங்கோ"

குயிலி அவனிடம் ஒரு பத்திரத்தை நீட்டினாள்.

"நீங்களே இதை நிரப்பித்தாங்கோ"

கதிரையில் நேர்த்தியாக அமர்ந்து கொண்டு தனது சட்டைப் பையிலிருந்த பேனாவை எடுத்து பத்திரத்தை நிரப்பத் தொடங்கினான், அவன் அப்போது தான் தற்செயலாக அவனது கையிலிருந்த பேனாவை அவதானித்தாள், குயிலி. அது "பாக்கர் 51" அந்தக் காலத்துப் பேனா அதைக் கண்ணுற்றதும் அவளது மனத்தில் ஒரு பொறி தட்டியது.

" சேர் ! இப்பவும் இங்க் பென் தான் பாவிக்கிறீங்கள் போல"

எழுதுவதை நிறுத்திவிட்டு உணர்ச்சி வசப்பட்டவனாய் அவன் பேசத் தொடங்கினான்.

"இந்தப் பேனா என் அன்புக்குரியவள் பல வருடங்களுக்கு முன் எனக்குத்தந்த அன்புப் பரிசு, அதை நான் பொக்கிஷமாக வைத்து பாதுகாத்து வருகிறேன். பேனாவை மட்டுமல்ல அவளையும் தான் ,என் மனச்சிறைக்குள் அடைத்து வைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்"

குயிலிக்கு ஏதோ புரிந்த மாதிரியிருந்தது. நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

ரகு அத்தான் தான் உரு மாறி இருந்தான் , நரைத்த, முன்னுக்கு சொட்டை விழுந்த தலை பரந்த முகம் ஒடுங்கி சூம்பிப் போய் இருந்தது.

ரகு பத்திரத்தையும் நிரப்பி, செக்கிலும் கையொப்பமிட்டு அவளிடம் நீட்டினான், நடுங்கும் கரங்களோடு அதை வாங்கிக் கொண்டாள், குயிலி

" தாங்ஸ் மேடம் நான் வாறன்"

ரகு அறையை விட்டு வெளியேறி இல்லத்தின் வாசலை கடந்து போய்க் கொண்டிருந்தான். அவன் போவதையே கண் கொட்டாது, பார்த்துக் கொண்டிருந்த குயிலி, "நல்ல வேளை அவன் என்னை அடையாளம் காணவில்லை" என நினைத்து ஆறுதலடைந்தாள்.

அவளது இதயமோ காற்றாகி சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது. வாய் மெட்டுடன் ஒரு பாடலை அசைத்துக் கொண்டிருந்தது.

உன் மனச்சிறைக்குள் நானிருக்கிறேன் ரகு அத்தான்

என் மன ஊஞ்சலில் வைத்து தாலாட்டுவேன் உன்னைத்தான்"

(முற்றும்)

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

1. வேர் பதிக்கும் விழுதுகள் - சிறுகதைகள் (2015)
2.மறையாத சூரியன் - நாவல்  (2016)
3.கீறல் - சிறுகதைகள் (2016)
4.மௌனத்தின் சிறகுகள் - நாவல் (2017)
5.அனலிடைப்புழு - சிறுகதைகள் (2017)
6.மலைச்சாரலின் தூவல் - நாவல் (2018)
7. காகிதப்படகு - 3 குறுநாவல்கள்(2018)
8.அப்பாவின் தேட்டம் - சிறுகதைகள்(2019)
9. பாலைவனத்து புஷ்பங்கள் - குறுநாவல்கள் (2019)
10 உயிர் சுமந்த கூடு - சிறுகதைகள் (2020)
11. அசை - சிறகதைகள் ( 2021)
12.ஒரு பிடி சாம்பல் - சிறுகதைகள் - (2021)

மலரன்னை காலத்தின்
தேவை அறிந்து தனது
படைப்புகளை
வெளிக்கொண்டு வருபவர்.
சிறுகதை, நாவல் ஆகிய இரு
ஆக்க இலக்கியத்
துறைகளிலும் தொடர்ச்சியாக
இயங்கி வருபவர்.
எமது சமூகத்திற்கு
தேவையான மறக்காமல்
மனதில் என்றும் இருத்தி
வைக்க வேண்டிய விடயங்கள்
பலவும் இவரது படைப்புகள்
மூலம் வெளிவருகின்றமை
பாரட்டிற்குரியதும்,
ஆவணமாகப் பேணுதற்கும்
உரியது. மலரன்னையின்
இந்த நாவல் வாசகர்களுக்கு
பெரு விருந்தாக அமையும்
என நம்புகின்றேன்.

– க. பரணீதரன்

ISBN 955524963-6
9 789555 249638